1104
09.01.07

வெளியீடு : 20-8-2007 Issued : 20-8-2007

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
எழும்பூர்

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஏப்ரல் 19, 2007—தொகுதி 30—எண் 1**

**Thursday; the 19th April, 2007 —Volume 30—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

227657

தமிழ்நாடு அரசு சாப்பகம்
சென்னை-600 009

19-4-2007

## உள்ளடக்கம்

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் v-x
Governor and Council of Ministers xi-xv
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xx
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

**1. வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-41

**2. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவது உறுதி என்று வந்துள்ள செய்தி 41-50

திரு. கு. பாண்டுரங்கன் 42-43

திரு. சி. ஞானசேகரன் 42,44,49,50

திரு. தி.க. ராஜா 45

திரு. வை. சிவபுண்ணியம் 46

செல்வி கே. பாலபாரதி 46

* திரு. நா. இராமகிருஷ்ணன் 47

* திரு. கு. செல்வம் 47

மாண்புமிகு திரு. துரைமுருகன் 47-50

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. **மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

227657
V 2ll,31'607
807 · 30·1

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் • துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**13. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

14. செய்தித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எ.வ. வேலு:

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Prisons** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

| | | |
|---|---|---|
| 18. Minister for Labour | - | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| 19. Minister for Hindu Religious and Charitable Endowments | - | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments |
| 20. Minister for Handlooms | - | **The Hon. Thiru NKK. P. Raaja:** Handlooms and Textiles |
| 21. Minister for School Education | - | **The Hon. Thiru Thangam Thenarasu:** School Education and Archaeology |
| 22. Minister for Commercial Taxes | - | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes |
| 23. Minister for Environment | - | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 24. Minister for Forests | - | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 25. Minister for Highways | - | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports |
| 26. Minister for Social Welfare | - | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| 27. Minister for Animal Husbandry | - | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| 28. Minister for Adi Dravidar Welfare | - | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 29. Minister for Fisheries | - | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| 30. Minister for Dairy Development | - | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| 31. Minister for Khadi | - | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan |

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

# 26-3-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம். | - குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி அ. லெற்றிஸால், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. பிரேமா, பி.காம்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி–1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. .. அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
74. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். .. மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. .. விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
90. ஸ்ரீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்றாம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்
105. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். .. முசிறி
107. செல்வராஜ், திரு. கு. .. ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

| | | | |
|---|---|---|---|
| 109. | சேகரன், திரு. கூ.ந. | .. | திருவெறும்பூர் |
| 110. | சேகர், திரு. எஸ்.வி. | .. | மயிலாப்பூர் |
| 111. | சேகர்பாபு, திரு. பி.கே. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 112. | சையது கௌஸ் பாஷா, திரு. சை. | .. | மதுரை மத்தி |
| 113. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. | லால்குடி |
| 114. | சௌந்திரபாண்டியன், திரு. அ. | .. | குன்னூர் (செ.வ.) |
| 115. | ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 116. | ஞானதாஸ், திரு. ஆர். | .. | சிவகாசி |
| 117. | டில்லி பாபு, திரு. ப. | .. | அரூர் (செ.வ.) |
| 118. | தங்கமணி, திரு. பி. | .. | திருச்செங்கோடு |
| 119. | தங்கம் தென்னரசு, திரு. | .. | அருப்புக்கோட்டை |
| 120. | தங்கவேலன், திரு. சுப. | .. | கடலாடி |
| 121. | தண்டபாணி, திரு. மா. | .. | வேடசந்தூர் |
| 122. | தமிழரசி, திருமதி ஆ. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 123. | தமிழரசு, திரு. அ. | .. | ஓமலூர் |
| 124. | தமிழ்செல்வன், திரு. சி. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 125. | தம்பிதுரை, முனைவர் மு. | .. | பர்கூர் |
| 126. | தர்மலிங்கம், திரு. எல்.பி. | .. | சத்தியமங்கலம் |
| 127. | தாமோதரன், திரு. செ. | .. | கிணத்துக்கடவு |
| 128. | தியோடர் ரெஜினால்டு, திரு. த. | .. | பத்மநாபபுரம் |
| 129. | திருநாவுக்கரசு, திரு. கே. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 130. | துரைக்கண்ணு, திரு. இரா. | .. | பாபநாசம் |



| | | | |
|---|---|---|---|
| 131. | துரை சந்திரசேகரன், திரு. | .. | திருவையாறு |
| 132. | துரைசாமி, திரு. வீ.பெ. | .. | சங்கரி (செ.வ.) |
| 133. | துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 134. | துரைராஜ், திரு. சி. | .. | சேடப்பட்டி |
| 135. | தேன்மொழி, திருமதி எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 136. | நன்மாறன், திரு. என். | .. | மதுரை கிழக்கு |
| 137. | நெடுஞ்செழியன், டாக்டர் க. | .. | கபிலர்மலை |
| 138. | நெடுஞ்செழியன், திரு. ரெ. | .. | புதுக்கோட்டை |
| 139. | நேரு, திரு. கே.என். | .. | திருச்சிராப்பள்ளி–2 |
| 140. | பதர் சயீத், திருமதி | .. | திருவல்லிக்கேணி |
| 141. | பத்மாவதி, திருமதி பி. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 142. | பரஞ்ஜோதி, திரு. மு. | .. | ஸ்ரீரங்கம் |
| 143. | பரிதி இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 144. | பலராமன், திரு. பி. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 145. | பழனிசாமி, திரு. ஆர்.எம். | .. | மொடக்குறிச்சி |
| 146. | பன்னீர்செல்வம், திரு. எம். | .. | சீர்காழி (செ.வ.) |
| 147. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. | குறிஞ்சிப்பாடி |
| 148. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. | பெரியகுளம் |
| 149. | பாண்டுரங்கன், திரு. கு. | .. | அணைக்கட்டு |
| 150. | பாபு, திரு. வி.எஸ். | .. | புரசைவாக்கம் |
| 151. | பாரதி மோகன், திரு. ஆர்.கே. | .. | திருவிடை மருதூர் |
| 152. | பாலபாரதி, செல்வி கே. | .. | திண்டுக்கல் |
| 153. | பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | - தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | - அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | - கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | - ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | - திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | - ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | - பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | - பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | - பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | - சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | - பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | - திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | - உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | - பொம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | - திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | - பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | - மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | - திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | - கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | - குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | - நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | - திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | - முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | - மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | - திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | - சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | - காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | - ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | - பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | - வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | - பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | - சேலம்–I |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | - சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | - கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | - கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | - பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | - இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | - மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | - தொட்டியம் |

200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. .. ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. .. போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. .. விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. .. போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்–2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
221. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
222. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி



223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
234. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்
235. (வெற்றிடம்) .. மதுரை மேற்கு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 6, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 19, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின்."

ஒரு செயலுக்குரிய வழிமுறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யுமிடத்து, அஞ்சாமை ஒன்றைத் தவிர, வேறு துணை தேவையில்லை.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

91—

### துணை மின் நிலையம்

***340—திரு. குத்தாலம் க. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மேக்கிரிமங்கலத்தில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ) ஆம் எனில், உடன் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மேக்கிரிமங்கலத்தில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின், 11-வது ஐந்தாண்டுப் பெருந்திட்டக் காலப் பகுதியில் மேக்கிரிமங்கலத்தில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைத்திடத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, குத்தாலம் தொகுதி, நாகை மின் வட்டம், மயிலாடுதுறை கோட்டம், கடலங்குடியில் கழக ஆட்சியில் துவக்கப்பட்டு, இன்றைக்கு நடைமுறையில் இருக்கிற துணை மின்நிலையத்தில், 4 இளநிலைப் பொறியாளர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அதனால் இயக்க முறையில் பாதிப்பு ஏற்பட்டு, மேற்படி துணை மின் நிலையம்மூலம் பயனடையும் நுகர்வோர் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். இது பற்றி நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலே நான் எழுத்துமூலமாகவும் கொடுத்திருக்கிறேன். மேற்கண்ட துணை மின் நிலையத்திற்கு இளநிலைப் பொறியாளர்களை உடனடியாக நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, அவர் எழுதிக் கொடுத்ததையொட்டி ஏற்கெனவே ஆடுதுறையிலே 110/11 கே.வி. துணை மின் நிலையம் இயங்கிக்கொண்டிருந்தாலும், பாலையூரிலே 110/11 கே.வி. துணை மின் நிலையம் [illegible]கொண்டிருந்தாலும், இந்த அரசு

[illegible stamp]





பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, 141.73 இலட்சம் செலவில், வாரிய ஆணை எண் 171, நாள் 6–9–2006 மூலம் இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு அதிகாரிகள் முயற்சி எடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஐந்து ஏக்கர் நிலம் வாங்கிக் கொடுப்பார்களேயானால், எவ்வளவு மார்க்கெட் விலையாக இருந்தாலும், அதை வாங்குவதற்கு மின் வாரியம் தயாராக இருக்கிறது. நிலம் கிடைத்த ஆறு மாதங்களுக்குள்ளாகத் துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் அமையவுள்ள இடத்தின் உரிமையாளர்கள், அந்த இடத்தை அரசு நிர்ணயம் செய்யும் விலைக்கே கொடுப்பதற்குச் சம்மதித்து, முன்னனுமதி—enter upon permission—கொடுக்கப்பட்டு, 13–9–2006-ல் மாண்புமிகு புள்ளியியல் துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேக்கிரிமங்கலத்திற்கும், அடுத்து இருக்கக்கூடிய ஆடுதுறைக்கும், 20 கிலோ மீட்டர் தொலைவில் இருந்துதான் மின்சாரம் பெறுகிறார்கள். எனவே, அந்தப் பகுதியின் பயன் கருதி, விரைந்து துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ் இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தியிலே தமிழ்நாட்டிலே ஆயிரம் மெகாவாட் குறைவாக இருப்பதாகவும், அதனால் அடிக்கடி மின் வெட்டு வருகிறது என்ற செய்தியை இன்றைய பத்திரிகையிலே பிரசுரித்திருக்கிறார்கள். அதனுடைய உண்மை நிலை என்ன என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவ

[2007 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலே வெளியிட்டிருந்த அந்தச் செய்தியை நானும் பார்த்தேன். அப்படி ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தமிழ்நாட்டிலே பற்றாக்குறையாக இல்லை. இன்றையதினம் நம்முடைய மின்சார உற்பத்தி 8,350 மெகாவாட். நம்முடைய தேவை 8,250 மெகாவாட். 100 மெகாவாட் கூடுதலாக இருக்கிறது. ஏற்கெனவே அரை மணி நேரம், 20 நிமிடங்கள் என்று shut down பண்ணிக்கொண்டிருந்ததையும் நிறுத்திவிட்டு, இரவு, பகல் என்று பார்க்காமல், விவசாயிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் முழுமையாக மின்சாரம் வழங்க வேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

*முற்பகல் 9–35*

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், எனது காவேரிப்பட்டினம் தொகுதியில் உள்ள பிக்கனஅள்ளி, மகேந்திரமங்கலம், ஜக்கசமுத்திரம், சிட்டாநல்லி போன்ற பஞ்சாயத்துக்களில் மின்னழுத்தம் மிகக் குறைவாகப் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதனால், விவசாயப் பம்புசெட்டுகள் இயங்காமலும், வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தும் மின் விளக்குகள் மின்னழுத்தம் குறைந்தும் காணப்பட்டும் உள்ளன. இது சம்பந்தமாக மக்கள் உரிய அதிகாரிகளிடம் மனு கொடுத்தும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, அந்தப் பகுதி மக்களின் மின் குறையைப் போக்க, துணை மின் நிலையம் ஒன்றை வெள்ளிச்சந்தை கிராமத்திலே அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த இடத்தில் மின்னழுத்தம் குறைவாக இருந்தால், ஒரு புதிய துணை மின் நிலையத்தை அமைத்தே தீர வேண்டும். அதற்கான இடத்தைத் தேர்வு செய்து, நிலத்தையும் வாங்கித் தருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் முயற்சி எடுத்துக்கொள்வாரேயானால், மின் நிலையம் அமைப்பதற்கு மின் வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும்.



2007 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**92—**

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***769—திரு. மா. தண்டபாணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதியில் விளையும் சூரியகாந்தி விதைகளை விற்பனை செய்ய, வேடசந்தூரிலேயே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேடசந்தூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 4–6–1986–லிருந்து செயல்பட்டு வருகிறது. எனினும், வேடசந்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாயிகள், தற்போது சூரியகாந்தி விதைகளை, வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்று வருவதால், சூரியகாந்தி விதைகள் விற்பனை செய்வதற்காகத் தனியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கத் தற்போது உத்தேசமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் பகுதியில் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், சூரியகாந்தி விதை மட்டும்தான் பயிர் செய்கிற சூழ்நிலையிருக்கிறது. வேடசந்தூரில் இருக்கிற விற்பனைக் கூடத்தில் அது கொள்முதல் செய்யப்படாத காரணத்தால், வெள்ளக்கோவிலிலே கொண்டு போய் விற்க வேண்டிய அவசியம் இருக்கிறது. கிட்டத்தட்ட 150 கி.மீ. தூரம் சென்று அதை விற்பனை செய்கிறபோது, போக்குவரத்துச் செலவும் அதிகமாகிறது; அங்கே காலமும் விரயமாக்கப்படுகிற காரணத்தால், விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, எங்களுடைய பகுதிக்கு

[2007 ஏப்ரல் 19

ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அமைத்துத் தருமாறு உங்கள்மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தற்போது 10–க்கு 10 அளவுள்ள இரு அறைகளைக் கொண்டு வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. வேடசந்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 5,200 எக்டேர் பரப்பில் சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டு, 7,329 மெட்ரிக் டன் உற்பத்தியாகிறது. வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மட்டுமே அது விற்கப்படுகிறது. வேடசந்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சூரியகாந்தி விதைகளின் வரத்து எதுவும் வருவதில்லை. இருப்பினும், வேடசந்தூர் கிராம விவசாயிகள் அருகிலுள்ள திண்டுக்கல் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அமைத்துள்ள பரிவர்த்தனைக் கூடம், கிடங்குகள் ஆகியவற்றில் தங்கள் விளைபொருட்களை இருப்பு வைக்கவும், விற்பனை செய்யவும் வாய்ப்புகள் இருக்கின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளையேற்று, வேடசந்தூரில் புதிதாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கத் தேவையில்லை. ஏற்கெனவே இருக்கின்ற அந்தக் கட்டடத்திற்குப் பதிலாக, பெரிய அளவில் கட்டடம் கட்டுவதைப் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையை ஏற்று, பரிசீலிக்கப்படும் என்று சொன்ன அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியிலே அமைக்கப்பட்டிருந்த, சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி ஆலை மூடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே அது மூடப்பட்டுவிட்டது. அதைப் புதுப்பிக்கின்ற வாய்ப்பு குறைவு.

முற்பகல் 9–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள், சூரியகாந்தி விதை வாங்கப்படுவதற்கு ஆவன செய்யப்படும் என்ற ஒரு நல்ல அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, விவசாயிகள் உற்பத்தி செய்கிற எல்லாப் பொருட்களுக்கும் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை என்ற ஓர் ஏக்கம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. நெல் கொள்முதல் செய்கிறோம். கரும்புக்கு அரசே விலை நிர்ணயம் செய்து வாங்கக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. ஆனால், இதைப்போல மக்காச்சோளம், கேழ்வரகு போன்ற பல்வேறு தானிய வகைகள், பயறு வகைகள், மஞ்சள் போன்றவற்றையெல்லாம்கூட வாங்குவதற்கு வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அண்டை மாநிலங்களான கர்நாடகா, மராட்டியம், பஞ்சாப், அரியானாபோன்ற மாநிலங்களில், எல்லா உணவு தானியங்களையும் வாங்குவதற்கு—மஞ்சள், வெங்காயம் போன்றவற்றைக்கூட வாங்கி இருப்பு வைத்து, அவற்றை விற்பனை செய்வதற்குண்டான வழிவகைகளையெல்லாம் செய்திருக்கிறார்கள். அதைப்போல, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய தானிய வகைகள், பயறு வகைகள், மஞ்சள், வெங்காயம்போன்ற எல்லா உற்பத்திப் பொருட்களையும் அரசே கொள்முதல் செய்வதற்கு இந்த வேளாண் விற்பனைத் துறைமூலம் அரசு ஆவன செய்யுமா? அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், என்னுடைய மேட்டூர் தொகுதியில் கொளத்தூர் பகுதியில் மிளகாய் அதிகமாக விளைகிறது. பருத்தி அங்கே சாகுபடி செய்யப்படுகிறது. அங்கே மிளகாயும், பருத்தியும் கொள்முதல் செய்வதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தொடங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களான, நெல், சோளம், சிறு தானிய வகைகள், பயறு வகைகள் இவைகளுக்கெல்லாம், ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள நிலைமைகளை —சாகுபடிக்கான செலவினைக் கணக்கிட்டு, ஒரு குவின்டாலுக்கு என்ன விலை நிர்ணயிக்கலாம் என்று மத்திய அரசாங்கம் விவரங்களைக் கூறி, இறுதியிலே மத்திய அரசாங்கம்தான் விலையை நிர்ணயிக்கின்றது. அப்படி நிர்ணயிக்கின்ற அந்த விலைக்குத்தான், நாம் தேவைப்பட்டால் வாங்குவோம். இப்போது நெல் கொள்முதல் செய்கின்றோம். மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கின்ற அந்த விலை கட்டுப்படியாகாது என்றுதான் தலைவர் கலைஞர் அவர்கள் வண்டிச் சத்தம் என்றும், அதேபோல ஊக்கத் தொகையாக குவின்டாலுக்கு 40 ரூபாய் என்றும் தரப்படுகின்றது. ஆகவே, இதுபோன்ற உதவிகளைத்தான் நாம் செய்ய முடியுமே தவிர, எல்லாப் பொருட்களுக்கும் மாநில அரசாங்கம் விலையை நிர்ணயிக்க வாய்ப்பு இல்லை. அது இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**93—**

## விருந்தினர் மாளிகை

***10501—திரு. ச. லட்சுமணன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதியில் விருந்தினர் மாளிகை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.



2007 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதியானது மிகவும் பின்தங்கிய முக்கியத் தொகுதியாகும். தமிழ்நாடு—கேரளா எல்லையில் அமைந்துள்ளது. போடிக்கு வருகை தரும் முக்கிய விருந்தினர்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து விருந்தினர் மாளிகை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, போடிக்கு மிக அருகில் 12 முதல் 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தேனியில் 8 அறைகளைக்கொண்ட விருந்தினர் மாளிகை இருக்கிறது. அதேபோன்று, உத்தமபாளையத்தில் 4 அறைகளைக்கொண்ட ஒரு விருந்தினர் மாளிகை இருக்கிறது. பெரியகுளத்தில் 2 அறைகளைக்கொண்ட விருந்தினர் மாளிகை இருக்கிறது. ஆக, போடிநாயக்கனூரைச் சுற்றி 10, 15 கிலோ மீட்டர் தூரத்தில் இத்தனை அறைகளைக்கொண்ட விருந்தினர் மாளிகைகள் இருக்கின்றபோது, போடியிலே தனியாக விருந்தினர் மாளிகை கட்ட வேண்டிய நிலை ஏற்படவில்லை. விருந்தினர்கள் என்று யாரை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை. அரசு அதிகாரிகள் வருகிறார்கள்; ஆய்வுக்கு வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் போகலாம். இவர்களுக்காகத்தான் நாம் விருந்தினர் மாளிகைகள் கட்டி வைக்கிறோமே தவிர, ஏலக்காய் வாங்க வருகிறவர்களுக்கெல்லாம் நாம் போடியிலே விருந்தினர் மாளிகை கட்ட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் சட்டமன்றத் தொகுதியிலே, தீர்த்தமலை அருளீஸ்வரர் கோயிலில் ஏற்கெனவே 50 இலட்சம் ரூபாய் செலவில் பெரிய அளவுக்கு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. பிற மாவட்டங்களிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்லக்கூடிய ஒரு புண்ணியத் தலமாக, சுற்றுலாத்

[2007 ஏப்ரல் 19

தலமாக அது விளங்கிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் கூறியதைப்போல், அரசு அதிகாரிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும் வந்து செல்லக்கூடிய ஒரு புண்ணியத் தலமாக இருக்கிறது. அங்கு ஒரு விருந்தினர் மாளிகை கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இப்படிப்பட்ட திருக்கோயில்கள் அருகில் அறநிலையத் துறையின்மூலம் இப்படி நற்காரியங்கள் நடத்துவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அறநிலையத் துறைக்கு இந்தக் கேள்வியை அனுப்பலாம்.

முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முகையூர் தொகுதி, திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் கோயிலுக்குச் செல்லுகின்ற வழியிலே இருக்கின்ற தொகுதி. எனது தொகுதியிலே ஒரு விருந்தினர் மாளிகைகூட இல்லை. எனவே, விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்லக்கூடிய வழியில் கண்டாச்சிபுரம் பகுதியிலே விருந்தினர் மாளிகை அமைத்துத் தா அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். விருந்தினர்கள், யாத்ரீகர்கள், திருக்கோயில்களுக்குச் செல்கிறவர்கள் இவர்களுக்கு எல்லாம் வசதி செய்து கொடுப்பதற்கு சுற்றுலாத் துறை இருக்கிறது அல்லது அறநிலையத் துறை இருக்கிறது. மிக அதிகமான பேர்கள் வந்தால் லாட்ஜ்கள் கட்டுவதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். பொதுப் பணித் துறை என்பது, ஒரு project—ஒரு திட்டம் நிறைவேறினால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது அங்கு ஓர்



2007 ஏப்ரல் 19]

ஆய்வு மாளிகை கட்டப்படும். இவையெல்லாம் வராத காலத்தில் வெள்ளைக்காரன் காலத்தில், 'முஸாபரி பங்களா' என்று பெயர் வைத்திருந்தார்கள். 'முஸாபரி' என்றால் 'தானாக வந்துவிடுகிறவர்கள்' என்று பொருள். இங்கே Travellers Bungalow என்று வைத்திருந்தார்கள். இப்போது அப்படியில்லை. பெரும் பகுதி Travellers Bungalow-வைவிட ஓட்டல்கள் மிக நன்றாக இருக்கிற காரணத்தினால், பலர் அதிலே தங்கிவிடுகிறார்கள். எனவே, பொதுப் பணித் துறை என்பது அரசு சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டும் ஆய்வு மாளிகைகளை அமைக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறைக்கு முன் காலத்திலே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, வெள்ளைக்காரர்கள் காலத்திலே, சில இடங்களிலே சில விருந்தினர் மாளிகைகளை அல்லது அவர்கள் அதிகாரிகள் தங்குவதற்கான கட்டடங்களைக் கட்டி வைத்திருந்தார்கள். சுதந்திரம் அடைந்த பிறகு, நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு பல்வேறு இடங்களிலே நல்ல வசதியான இடங்கள் கட்டிய பிறகு, அவர்கள் வைத்திருந்த அந்த இடங்கள் பயனற்றுப் போய், பாழடைந்து கிடக்கின்றன. உதாரணமாக, என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே முன்னாள் திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சார்ந்தவர்கள் அங்கே வந்து தங்குவதற்காக ஆய்க்குடி என்கிற பேரூராட்சியிலே ஒரு விருந்தினர் மாளிகை கட்டி, அது பிறகு பொதுப் பணித் துறைக்கு மாறிவிட்டது. இப்பொழுது அந்த விருந்தினர் மாளிகையிலே ஆட்களும் இல்லை. அங்கு கழுதை மேய்ந்துகொண்டிருக்கிறது. அந்த இடத்தைப் பேரூராட்சி மன்ற நிருவாகம், அவர்களுக்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். நான் பொதுப் பணித் துறைச் செயலாளரைக்கூட பார்த்துப் பேசினேன். அந்த இடம் உங்களுக்குத் தேவைப்படவில்லை, அதைப் பேரூராட்சி கேட்கிறது. ஒரு shopping complex அல்லது ஒரு திருமண மண்டபம் கட்டலாம். ஏனென்றால், நல்ல முக்கியமான சாலையினுடைய ஓரத்திலே இருக்கிறது. பொதுப் பணித் துறையினுடைய கட்டடம் மிகவும் பழுதடைந்து இடிந்து கிடக்கிறது. அங்கே எந்தவிதமான ஆள் நடமாட்டமும் இல்லை. அதைப்போன்ற இடங்களை அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவதற்குப் பொதுப் பணித் துறை முன்வருமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

[2007 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாகப் பிரிவினையில் அண்ணன், தம்பிகளுக்குள் நிலத் தகராறு வருகிறதோ, இல்லையோ, அரசாங்கத்தில் இலாகாக்கள் ஒரு பகுதியை இன்னொரு இலாகாவுக்குக் கொடுப்பதிலேதான் மிகப் பெரிய பிரச்சினை வருகிறது. பொதுப் பணித் துறை என்ற காரணத்தால், பொதுவாக எல்லோரும் எங்களுடைய இலாகாவிற்குச் சம்பந்தப்பட்டதைத்தான் எடுத்துக்கொள்ள முற்படுகிறார்கள். பொதுவாக, பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமா, ஏரியைக் கொடுத்துவிடுங்கள்; விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டுமா, ஏரியைக் கொடுத்துவிடுங்கள்; ஸ்டேடியம் கட்ட வேண்டுமா ஏரியைக் கொடுத்துவிடுங்கள்; Hospital, இப்படி எல்லாவற்றிற்கும் ஏரியைக் கொடுத்துவிடுங்கள் என்று கோரும்போது, பொதுப் பணித் துறை என்பதால், கொடுத்துவிடு என்கிறார்கள். பொதுப் பணித் துறை இருந்து காப்பாற்றி வைக்கிற காரணத்தால்தான், சில முக்கியமானவற்றிற்கெல்லாம் ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், எங்கேயாவது முக்கியமாக, அந்த உள்ளாட்சித் துறைக்கோ, பஞ்சாயத்துக்கோ தேவை என்று கருதினால், அது பொதுப் பணித் துறைக்குத் தேவையில்லை என்று கருதினால், அப்படிப்பட்டவற்றைப் பொதுப் பணித் துறை ஆலோசனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**94—**

## கலைக் கல்லூரி

***1131—திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?



2007 ஏப்ரல் 19]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரவக்குறிச்சி தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஆரம்பிக்க எந்தக் கருத்துருவும் அரசின் ஆய்வில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான்.

**திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரவக்குறிச்சி தொகுதியில் அரசுக் கல்லூரி என்பதே இல்லை. அரவக்குறிச்சி தொகுதி தமிழகத்திலே நிலப்பரப்பில் மிகப் பெரிய தொகுதி, வறட்சியான பகுதி, விவசாயிகள் அதிகமாக வாழக்கூடிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அரசுக் கல்லூரியே இல்லாத எனது தொகுதியிலும், இதுபோல் உள்ள பின்தங்கிய தொகுதிகளிலும் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகள் தனியார் கல்லூரிகள், எதுவுமே இல்லாத தொகுதிகளைப் பரிசீலிக்குமாறு தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றைப் பற்றி அரசு பரிசீலித்து, வருங்காலத்திலே படிப்படியாக அங்கே என்ன செய்யலாம் என்பதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான்.

முற்பகல் 9-50

**திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதல்வர் கலைஞர் அவர்கள் அரசு பல நன்மைகளைச் செய்து வருகிறது. எனவே, எனது தொகுதியில் மகளிர் கல்லூரியாவது அமைத்திட சிறப்பு முறையில் அரசு முயற்சி செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 19

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியைப் பொறுத்தவரையில், மகளிர் கல்லூரியாக இருந்தாலும், இரு பாலர் கல்லூரியாக இருந்தாலும், செலவு ஒன்றுதான். ஆகவே, செலவைப் பொறுத்துத்தான் இதுபோன்ற முடிவுகள் எடுக்கப்படுகின்றன. மகளிர் கல்லூரிகளைப் பொறுத்தவரை, இன்று மகளிர் கல்லூரிகள், அதைப்போல இரு பாலரும் பயில்கின்ற கல்லூரிகள்தான் பெரும்பாலும் தமிழகத்திலே வரவேற்கப்படுகின்றன. ஆகவே, வாய்ப்பு வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அரசுக் கல்லூரிக்கு மாண்புமிகு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் தயாநிதி மாறன் அவர்கள்மூலமாக 50 கம்ப்யூட்டர்கள் இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த ஆண்டு மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையில், பி.எஸ்சி. (கம்ப்யூட்டர் சயின்ஸ்) பாடத்தைத் தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வர்களையெல்லாம் வரவழைத்து, இந்த அரசு அவர்களோடு பேசியிருக்கிறது. புதிய கட்டடங்கள் கட்டுவதற்காகவும், புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்காகவும், கல்லூரிகளிலேயிருந்தும் கருத்துருக்கள் அனைத்துக் பெறப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பரிசீலித்து, வருங்காலத்திலே அவற்றை உருவாக்குவதற்கு, மானியக் கோரிக்கையிலே அவை அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**95—**

## பேருந்து வசதி

***2144—திரு. கி. ஆறுமுகம்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2007 ஏப்ரல் 19]

*(அ) கடற்கரைப் பகுதிகளில் உள்ள சுற்றுலாத் தலங்களை இணைக்கப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ)* கடற்கரைப் பகுதிகளில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்குத் தனித் தனியே பேருந்து வசதிகள் உள்ள நிலையில், ஒரே பேருந்தினைக் கொண்டு கடற்கரைப் பகுதியில் உள்ள அனைத்துச் சுற்றுலாத் தலங்களையும் இணைத்திடும் திட்டம் இல்லை.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திற்கு இயற்கை கொடுத்த வரமாக, ஏறக்குறைய 700 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மேலாக கடற்கரைப் பகுதி அமைந்துள்ளது. இந்தப் பகுதியிலே ஏராளமான சுற்றுலாத் தலங்களும், வழிபாட்டுத் தலங்களும் அமைந்துள்ளன. அதிலும் குறிப்பாக, வெளிநாட்டுப் பயணிகளும், வெளிமாநிலப் பயணிகளும் தமிழகத்திற்கு வருகிறபொழுது, கடற்கரையை ஒட்டியிருக்கிற பகுதிகளிலே சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், சென்னையிலிருந்து மகாபலிபுரம் வழியாகப் புதுச்சேரியை இணைத்தும், அதேபோன்று அதைத் தொடர்ந்து, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருச்செந்தூர் போன்ற பகுதிகளை இணைத்தும், புதிதாக சொகுசுப் பேருந்துகளை இயக்குவதற்குப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் நகருக்குக் கிழக்கேயுள்ள 16.5 கிலோ மீட்டர் தொலைவில் பிச்சாவரம் சுற்றுலா இடம் உள்ளது. பிச்சாவரத்திற்கு சிதம்பரத்திலிருந்து நகரப் பேருந்துகள்மூலம் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம், கடலூருக்குக் கிழக்கே 4.9 கிலோ மீட்டர் தொலைவில் தேவனாம்பட்டினம் 'சில்வர் லைன் பீச்' உள்ளது. அது கடலூரிலிருந்து பேருந்துகள்மூலம் இணைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 109 பேருந்துகள்மூலம் 170 நடைகள் மேற்கண்ட இடங்களுக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலமாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப அப்பேருந்து வசதிகளைப்

பயன்படுத்திக்கொள்ளலாம். அதைத் தவிர, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்மூலமாகவும் குறுகிய தூரங்களிலுள்ள இடங்களை இணைக்கும் வகையில் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, ஒட்டுமொத்தமாக சுற்றுலாத் தலங்களை இணைக்கக்கூடிய திட்டம் இப்போது அரசிடம் இல்லை.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் தற்போது இல்லை என்று சொல்கிறார்கள். எதிர்காலத்திலாவது இதுபோன்ற திட்டத்தை அமல்படுத்துவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் நமக்கு நல்ல வருவாய் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, கடற்கரையோரங்களிலே, தற்போது கிழக்குக் கடற்கரைச் சாலையெல்லாம் நன்றாக இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலே உள்ள சுற்றுலாப் பகுதிகளுக்குப் புதிய சொகுசுப் பேருந்துகளை இயக்குவதற்கு நம்முடைய அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாபலிபுரம் பகுதியிலே நீண்ட காலமாக, சென்னையிலிருந்து மகாபலிபுரத்திற்குச் செல்லக்கூடிய பேருந்துகளை நகரப் பேருந்துகளாக இயக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்து, இப்போது இந்த ஆட்சியிலே நம்முடைய முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று அமல்படுத்தப்பட்டிருக்கிறது. காரணம், 50 கிலோ மீட்டர் தூரம் வரை இயக்கலாம் என்ற புதிய சட்டம் வந்த காரணத்தினால் அப்படி இயக்கப்படுகிறது. ஒவ்வொரு இடத்திற்குமே அந்தந்தப் பகுதியிலிருந்து, குறுகிய காலத்தில் ஆங்காங்கிருக்கின்ற போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகளை இயக்கிக்கொண்டிருக்கின்றன. மேலும், இன்றைக்கு ஒரே அளவிலே, சென்னையிலிருந்து திருப்பதி செல்வதற்கு சுற்றுலாத் துறையின்மூலமாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதேபோன்று, குறிப்பிட்ட சுற்றுலாத் தலங்களை இணைக்க வேண்டுமென்று சொன்னால், உங்களுடைய கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்மூலமாக நிறைவேற்றலாம்.

*முற்பகல் 9—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.



**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியைச் சேர்ந்த பரங்கிப்பேட்டை பேரூராட்சிப் பகுதி, முஸ்லீம் மக்கள் வாழும் பகுதி. அங்குள்ள பெரும்பான்மையான மக்கள் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு வசதியாக, பரங்கிப்பேட்டையிலிருந்து சென்னைக்குப் புதிய பேருந்து இயக்குவதற்கு அரசு முன்வருமா? சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் புதிய பேருந்துகள் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். எங்களுடைய ஊருக்கும் புதிய பேருந்து வழங்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் வருகின்ற train நின்றுவிட்ட காரணத்தால், ஒவ்வொரு ஊரிலிருந்தும் புதிய பேருந்துகள் விட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் கோ.சி. மணி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கும்பகோணத்திலிருந்தும், சிதம்பரத்திலிருந்தும் சென்னையை நோக்கி E.C.R. வழியாக இப்பொழுது புதிதாகப் பத்துக்கும் மேற்பட்ட Ultra Deluxe பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. புவனகிரியிலும் பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்குமானால், புதிய Ultra Deluxe bus விரைவில் இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதிக்குட்பட்ட குன்னம் வட்டாட்சியர் தலைமை அலுவலகம், காவல் துறை அலுவலகம், அரசு மேல்நிலைப் பள்ளி போன்ற அனைத்து வசதிகளுடன்கூடிய வட்டாட்சியர் தலைமையிடமாகச் செயல்பட்டு வருகிறது. அங்கே இருக்கின்ற அரசு அலுவலர்களும், கல்லூரி மாணவர்களும் சென்னைக்கு வருவதாக இருந்தால், பெரம்பலூருக்கோ அல்லது அரியலூருக்கோ சென்று, விரைவுப் பேருந்துகளை அணுக வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். எல்லாத் தொகுதிகளுக்கும் அரசு விரைவுப் பேருந்துகள் இயக்கப்படும்பொழுது, எங்கள் வரகூர் தொகுதி, குன்னத்திலிருந்தும்

அரசு விரைவுப் பேருந்தை இயக்கி, எங்கள் பகுதியினுடைய கிராமப்புற மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், அரசு அலுவலர்கள் பயனடையச் செய்ய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதி என்பது ஒரு பெரிய தொகுதி. கிட்டத்தட்ட திட்டக்குடி பார்டரில் ஆரம்பித்து, துறையூர் பக்கத்திலே இருக்கின்ற கண்ணாபாடி வரை வருகின்ற தொகுதி. பெரம்பலூரிலிருந்து அரியலூர் செல்கின்ற main சாலையில் கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான பேருந்துகள் அந்தப் பகுதியிலே சென்றுகொண்டிருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபொழுது, குன்னத்தில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட்டது. இப்பொழுது படிப்படியாக அது கொஞ்சம் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக வந்துகொண்டிருக்கிறது. விரைவிலே, வருங்காலத்திலே அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம். ஏனென்றால், ஒரு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து அங்கு வந்து, வெறும் ஐந்து இடம், ஆறு இடம் அதிலே நிரம்பி, மீதி இடங்களை மற்ற இடங்களுக்குச் சென்று நிரப்புவது என்பதை வருவாய் அளவிலே கணக்கிட்டால், அது மிகவும் பற்றாக்குறையாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு அதிகமான அளவிற்குப் பயணிகள் ஏறுவார்கள் என்று சொன்னால், வருங்காலத்திலே பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**96—**

## தொழிற்பேட்டை

***10219—திரு. சி. துரைராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதி, பேரையூர், டி. கல்லுப்பட்டி மற்றும் சேடப்பட்டி பகுதிகளில் சிறு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதி பேரையூர், டி. கல்லுப்பட்டி மற்றும் சேடப்பட்டி பகுதிகளில் சிறு தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. துரைராஜ்.

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியில், பேரையூர், டி. கல்லுப்பட்டி மற்றும் சேடப்பட்டி பகுதிகளிலுள்ள கூலித் தொழிலாளர்கள் அன்றாடம் பிழைப்புத் தேடி வெளி நகரங்களுக்குச் செல்லக்கூடியவர்கள். குறிப்பாக, சிவகாசி, இராசபாளையம், விருதுநகர் போன்ற பகுதிகளிலுள்ள பட்டாசு கம்பெனி, தீப்பெட்டி கம்பெனிகளில் வேலை செய்யக்கூடியவர்கள். இவ்வாறு தொழில் அனுபவம் பெற்றவர்களும், அதிகப்படியான தொழிலாளர்களும் நிறைந்த பகுதியான அந்தப் பகுதியிலே தொழில் செய்யக்கூடிய ஆர்வம் உள்ளவர்களும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் அந்தப் பகுதியிலே சிறு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில்நுட்பத் திட்டங்களுடனும், தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் கணிசமான அளவில் முன்வந்தால், புதிதாகத் தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான நிலம் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரோடு கலந்தாலோசித்து, கருத்தாய்வு செய்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும். சேடப்பட்டி தொகுதியிலிருந்து 3.5 கிலோ மீட்டர் தொலைவிலே

கப்பலூரிலே தொழில் வணிகத் துறையின்கீழ் ஒரு தொழிற்பேட்டை 23.9 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது. அதிலே 201 மனைகள் ஏற்படுத்தப்பட்டு, 137 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதம் 64 மனைகள் உள்ளன. தேவைப்படும் தொழில் முனைவோர்கள் அணுகினால், அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–00

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கப்பலூர் தொழிற்பேட்டை என்பது மதுரைக்கு அருகில் உள்ளது. கிராமப்புறங்களிலே தொழில் தொடங்கி வேலைவாய்ப்பினை உருவாக்குகிற வகையிலே அந்தப் பின்தங்கிய பகுதியில் இருக்கக்கூடிய சிறு தொழில் முனைவோர்களுக்கு ஆர்வத்தை உருவாக்குகின்ற வகையிலும், அங்கு குறைந்த மதிப்பிலுள்ள விளை நிலங்கள் எல்லாம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாலும், அந்தப் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்கின்றபோது, தொழில் செய்யக்கூடிய தொழில் அதிபர்கள் நிச்சயமாக அந்தப் பகுதிக்கு வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சேடப்பட்டி–திருமங்கலம் சாலையிலும், தெற்குப் பகுதியான இராசபாளையம்–தென்காசி சாலையிலும் குறைந்த மதிப்பில் நிலம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதியிலே அவர்கள் மறுபரிசீலனை செய்து, தொழிற்பேட்டை அமைப்பதற்கு மீண்டும் மாண்புமிகு அமைச்சர் முன்வர வேண்டுமென்று தங்கள்மூலம் கேட்டுக்கொண்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழில் முனைவோர்களுடைய எண்ணிக்கையைத் தெரிவித்தால், எதிர்காலத்தில் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது, நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் தமிழக அரசின் சார்பிலே, திருப்பூர்





பகுதியில் இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பேட்டை வளாகம்—குடியிருப்பு வசதிகளோடுகூடிய தொழிற்பேட்டை வளாகம் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை அறிவித்தார்கள். தற்போது அந்த அறிவிப்பின்மீது மேற்கொள்ளப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புவதோடு, வழக்கமாக அங்கே இட நெருக்கடிப் பிரச்சினைதான் முன்னுக்கு வருகிறது. ஆகவே, அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டம், இடம் இல்லாத காரணத்தினால் தள்ளிப் போகாமல், பொங்கலூர் தொகுதிக்கும், திருப்பூருக்கும் இடைப்பட்ட பகுதியில், அங்கே இடம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதை உருவாக்கித் தர—மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய சொந்த ஊர்தான் அது; ஆகவே, அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும் சேர்த்து தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நமது மின் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் இருந்தபோது, திருப்பூர் அருகில் ஒரு பெரிய தொழிற்பேட்டை அமைக்கப் போவதாக அறிவித்தார்கள். இட நெருக்கடி காரணமாகக் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. I.T.C.O.T. நிறுவனத்திடம் அந்தத் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து அறிக்கை கோரியிருக்கின்றோம். அவர்கள் சொல்வதுபோல பொங்கலூர் பகுதியிலே 2,000 ஏக்கர் இல்லாவிட்டாலும் 500 ஏக்கரிலாவது S.E.Z. என்று சொல்லப்படுகின்ற Special Economic Zone தொழிற்பேட்டை அமைப்பதற்கு இப்போது முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் துறையின்கீழே செயல்படுகிற டான்சிக்கான இடம், மன்னார்குடியில் சுமார் 3 ஏக்கர் அளவிற்கு நிலம் டான்சி பொறுப்பிலே இருக்கிறது. அதில் தொழிற்பேட்டை அமைத்துச் செயல்பட்ட காலம் ஒன்று இருந்தது. ஆனால், அது மூடப்பட்டுப் பல ஆண்டுகளாகிவிட்டன. இப்போது அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள், தொழில் முனைவோர்கள், சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு முன்வருகிறார்கள். அப்படி அவர்கள் முன்வருகின்றபட்சத்திலே அந்த இடத்திலே அந்தத் தொழில்களைத் தொடங்குவதற்கான முயற்சியை ஏற்படுத்தி, அந்த

நிலத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினை அரசு ஏற்படுத்தித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டப் பேரவைத் தொகுதியிலே இருக்கின்ற இளைஞர்கள் எல்லாம் சுமார் 200 பேருக்கு மேல் ஓசூரில் இருக்கிற அசோக் லேலண்ட் தொழிற்சாலையிலே வேலை செய்கிறார்கள். அதேபோல, பெங்களூருக்குச் சென்று வேலை செய்கிறார்கள். எனவே, அங்கே இருக்கின்ற படித்த இளைஞர்கள் பயன்பெறுகிற வகையில் தொழிற்பேட்டை அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற பகுதிக்கு அருகில் உள்ள கிருஷ்ணகிரியில் 18.9 ஏக்கரிலும், போளுபள்ளியில் 86.44 ஏக்கரிலும் சிறு தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகளைத் தற்போது செய்து வருகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற இடங்களிலும், தேவையிருப்பின் ஏற்பாடுகளைச் செய்யலாம்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சி செய்தபோது, வள்ளியூரிலே ஒரு சிறு தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்பட்டு, அன்றைய துறை அமைச்சராக இருந்த, இப்பொழுது வருவாய்த் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. இ. பெரியசாமி அவர்கள் வருகை தந்து திறந்து வைத்து, அங்குள்ள சிறு தொழில் முனைவோருக்கு அதை ஆரம்பித்து வைத்தார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியிலே அதற்குத் தடை ஏற்பட்டு, அந்தப்



பணிகளெல்லாம் முடங்கிக் கிடக்கின்றன. மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடங்கிக் கிடக்கின்ற அந்தத் தொழிற்பேட்டையை உடனடியாக வள்ளியூரிலே ஆரம்பித்து, தொழில் முனைவோருக்கு ஊக்கம் கொடுக்க முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே 78 தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. அதிலே ஏறத்தாழ 9,175 மனைகள் மற்றும் கூடங்கள் இருக்கின்றன. இன்னும் அதிலே காலியாக 449 மனைகள் மற்றும் கூடங்கள் இருக்கின்றன. தேவை ஏற்படின், மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற இடத்திலே தொழிற்பேட்டை மீண்டும் இயக்கப்பட ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.

**97—**

## வீட்டுமனை

***11256—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி, பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருத்திய விடையை அவைக்கு அளிக்கின்றேன். குடியாத்தம் வட்டத்தைப் பொறுத்தவரை, 10 ஆண்டுகளுக்கு மேல் அரசு நிலங்களில் குடியிருப்போருக்கு வீட்டுமனை வழங்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ், 414 நபர்களின் விண்ணப்பங்கள் தகுதியுடையதாக வேலூர் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான உயர்மட்டக் குழுவால்

தேர்வு செய்யப்பட்டு, செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது. இது தவிர, 4 ஆயிரம் நபர்களின் ஆக்கிரமிப்பு கண்டறியப்பட்டு, அதிலே 500 நபர்களுக்கு நில அளவை செய்யப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளது. 30–4–2007–க்குள் வீட்டுமனைப் பட்டா பிரேரணைகள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்படவுள்ளன. மீதமுள்ள விண்ணப்பங்கள் யாவும் ஆய்வு செய்யப்பட்டு, 30–6–2007–க்குள் தலத் தணிக்கைக்குப் பின், தகுதியின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படவுள்ளது. இந்த விண்ணப்பதாரர்களில் 85 விழுக்காடு, கைத்தறி நெசவாளர்கள், தீப்பெட்டி மற்றும் பீடி சுற்றும் தொழிலாளர்கள் ஆவார்கள்.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியைப் பொறுத்தவரையில், கைத்தறித் தொழிலும், பீடித் தொழிலும் பிரதானத் தொழில்களாக இருக்கின்றன. அவற்றோடு இணைந்து இருக்கின்ற தொழிலாளர்களுக்கு வீட்டுமனை சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கருத்தைக் கூறினார்கள். இருந்தாலும், ஏறத்தாழ இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் 10 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. நகரத்தைச் சார்ந்தவர்களுக்கு இதில் வாய்ப்புகள் மிக, மிகக் குறைவாக இருக்கின்றன. அதை உருவாக்குகின்றவிதத்தில், இலவசமாக வீட்டுமனைகளை வாங்கிக் கொடுப்பதற்கான திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்றும், அதோடு பீடித் தொழில் செய்துகொண்டிருப்பவர்களுக்கு மத்திய அரசு கடனாக 40 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறது. அதற்கான அலுவலகம் ஹைதராபாத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. ஹைதராபாத்திலிருந்து வந்து, தமிழகம் முழுமையும் இந்த பீடிசுற்றும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரக்கூடிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பல ஆண்டு காலம் ஆகிறது. அது கிடப்பில் தள்ளப்படுகிறது. இந்த ஒதுக்கீட்டைத் தமிழக அரசே பெற்று, பீடிசுற்றும் தொழிலாளர்களுக்கு வீடுகளைக் கட்டித் தருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனைப் பட்டா நகர்ப்புறங்களிலே வழங்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். கிராமப்புறத்தில் இருக்கின்றவர்களுக்கு, அவர்களுடைய வருமான வரம்பு 16 ஆயிரம் ரூபாய் வரை இருக்கின்றவர்களுக்கு, வீடு கட்டுவதற்கு இலவசமாகவே அரசாங்கம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குகிறது. அதேபோல, நகரத்திலே இருப்பவர்களுக்கு, 24 ஆயிரம்



ரூபாய் வருமான வரம்பு உள்ளவர்களுக்கு இலவசமாக வீட்டு மனைப் பட்டா வழங்குகின்ற முறை நடைமுறையிலே இருந்து வருகின்றது. அதற்கு மேல் உள்ளவர்களுக்கு, அரசாங்கம் அந்த இடத்தினுடைய மதிப்பைப் பொறுத்து, Single Market Value என்ற அந்த ஒரு அளவிலே வரக்கூடிய நிலத்தின் மதிப்புக்கு ஏற்றாற்போல அவர்களுக்கு நிர்ணயம் செய்து, வழங்குகின்ற முறைதான் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வீடு கட்டித் தரப்படுமா என்று கேட்டார்கள். அவர் கேட்பது, இரண்டு விஷயங்கள். ஒன்று, இலவச வீட்டுமனைப் பட்டா நகர்ப்புறத்திலே இருப்பவர்களுக்குக் கொடுப்பதற்கும் அரசு தயாராக இருக்கின்றது. அதற்கு வருமான வரம்பு. அதே மாதிரி, அவர்களுக்கு வீடு கட்டித் தருவது. அதை வேறு திட்டத்திலேதான் கட்டித் தர முடியும். வருவாய்த் துறையில் நிச்சயமாகச் செய்ய முடியாது. அதே சமயத்திலே, இலவச வீட்டுமனைப் பட்டா என்பது, அரசாங்கம் தமிழகம் முழுக்க ஆண்டிற்கு ஏறத்தாழ 60 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டுகூட நாம் 76 ஆயிரம் பேருக்கு—இத்தனை திட்டங்கள் இருந்தாலும், 10 ஆண்டுகளுக்குமேல் குடியிருந்து வருகின்றவர்களுக்கு, அவர்கள் குடியிருக்கின்ற இடங்களை உடைமை ஆக்குகின்ற சிறப்புத் திட்டம் ஒரு பக்கம் இருந்தாலும்—ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற திட்டத்தை நிறுத்தாமல், இந்த அரசு, தலைவர் கலைஞர் அரசு மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன கருத்துகளை ஏற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில், அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கின்றவிதத்தில் அரசு இடங்களை விலை கொடுத்து வாங்கி, அதைக் கொடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எனக்கு நன்றாகப் புரிகின்றது. நகர்ப்புறத்திலே

குடியிருக்கின்றவர்களுக்கு அவர்கள் வசிக்கின்ற இடத்தை உடைமையாக்குகின்றபோது இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். அது சம்பந்தமாக அரசுக்கு நிச்சயமாக அந்த முடிவு இல்லை. ஏற்கெனவே கடந்த முறை, அவர்கள் குடியிருக்கின்ற இடத்திலே, பெரிய பணக்காரர்கள் எல்லாம் வீடு கட்டி, அடுக்கு மாடி வீடு கட்டிக் குடியிருக்கிறார்கள். மாடி வீடுகள் இருக்கின்றன; இலட்சக்கணக்கான பணம் செலுத்தி, பெரிய, பெரிய வீடுகளைக் கட்டிக் குடியிருக்கிறார்கள். ஆகவே, வசதியானவர்களுக்கெல்லாம், அவர்கள் அரசாங்கப் புறம்போக்கு நிலத்திலே குடியிருக்கிறார்கள் என்றால், இடத்தைக் கொடுக்கும்போது— —இப்போது இருக்கக்கூடிய single market value, அதை double ஆக்கக்கூட்டிப் போட வேண்டுமென்றிருக்கிறது; இருந்தாலும், நம்முடைய அரசாங்கம் அதிலேயும் சலுகைகள் காட்டுகிறது. அந்தச் சலுகைதான் காட்ட முடியுமே தவிர, இலவசமாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிச்சயமாக அரசு ஏற்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத்.

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான திருவல்லிக்கேணியில் உள்ள நீலம் பாஷா தர்கா, பி.எம். தர்காக்களில் பீடி சுற்றும் இஸ்லாமியத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். சொந்த வீடுகள் இல்லாமல், அவர்கள் தர்காக்களிலும், சுடுகாட்டுப் பகுதிகளைச் சுற்றி இருக்கும் இடங்களில் எல்லாம் வசிக்கிறார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு workshop cum residence என்று வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கும் அந்த மாதிரி வீடு கட்டித் தர இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் இலவசமாக வீடு கட்டித் தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றார்கள். அது நிச்சயமாக வருவாய்த் துறையினால் இயலாது. குறிப்பாக, அவர்கள் வசிக்கின்ற



பகுதி, எப்படிப்பட்ட புறம்போக்குகளில் அவர்கள் வசிக்கிறார்கள் என்பதை ஆய்வு செய்து, அந்த அடிப்படையில்தான் அவர்கள் வசிக்கின்ற இடங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற முறையை அரசு கடைப்பிடிக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதை அரசு ஆய்வு செய்துதான் முடிவு எடுக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து ஆண்டுகளுக்குமேல் குடியிருப்போருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா என்று அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், இப்போது சில நகர்ப்புறப் பகுதிகளிலிருந்து ஒரு சென்ட்டுக்குமேல் இடம் வைத்திருக்கக்கூடியவர்களுக்கு, அதற்குரிய, அந்த மாவட்டத்தினுடைய நில மதிப்பீட்டின் அடிப்படையில் விலை செலுத்த வேண்டும்; தொகை செலுத்த வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது மாவட்டத்திற்கு மாவட்டம், நகரத்திற்கு நகரம் வித்தியாசப்பட்டு, ஒரு குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டிருப்பதனால், இது குறித்த தெளிவான விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் சொல்வதுபோல, இலவச வீட்டுமனைப் பட்டா என்று நாம் வழங்கவில்லை. குடியிருக்கின்ற இடத்தை சிறப்புத் திட்டத்தின்கீழ் அவர்களுக்கே உடைமையாக்குவது, அவர்களுக்கே அந்த இடத்தை வழங்கி விடுவதாகும்; ஏற்கெனவே இருக்கின்ற முறைதான். அதிலே, நகராட்சிப் பகுதியாக இருந்தால், ஒன்றரை சென்ட் வரைக்கும் அவர்களுக்கு வழங்கலாம். வருமான வரம்பு 24,000 ரூபாய்க்குள் இருந்தால் அவர்களுக்கு இலவசமாகவே அந்த இடத்தை உடைமையாக்கி விடலாம். அவர்கள் ஒன்றரை சென்ட்டுக்குமேல், 3 சென்ட், 4 சென்ட், 5 சென்ட் என்று வைத்திருந்தார்கள் என்றால், கூடுதலாக அவர்கள் அனுபவிக்கின்ற நிலத்திற்கு அரசாங்கம் மார்க்கெட் மதிப்பிலே, ஒரு மதிப்பீடு அளவிற்கு நாம் கூடுதலாக வசூல் செய்ய வேண்டும். அதுதான் கடந்த காலத்திலே இருக்கின்ற முறை. இதிலே எந்தச் சந்தேகமும் இல்லை. கடந்த முறைகூட ஒரு

[2007 ஏப்ரல் 19

இலட்சத்து 96 ஆயிரம் பேருக்குமேலே இதே சிறப்புத் திட்டத்தின்கீழ் ஓராண்டு காலம் தலைவர் கலைஞர் அரசு 2000 ஆம் ஆண்டு வழங்கி இருக்கிறது. அதிலே பல பேருக்கு மதிப்பீடு செய்து அவர்களுடைய இடத்தை இந்த அரசு உடைமையாக்கி இருக்கிறது. இதிலே எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால், எல்லா உறுப்பினர்களும் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்றால், அந்த இடத்தை, கூடுதலாக இருக்கிற இடத்தையும் இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நிச்சயமாக அது முடியாது.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**98—**

## துணை சுகாதார நிலையம்

***11951—திரு. செ. சின்னச்சாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதி, வையம்பட்டி ஒன்றியம், அரசு நிலையமாகவுள்ள துணை சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மருங்காபுரி தொகுதி, வையம்பட்டி ஒன்றியம், அரசு நிலையமாகவுள்ள துணை சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தத் தற்போது சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்காபுரி தொகுதி, முழுக்க, முழுக்க கிராமப்புறங்கள் நிறைந்த தொகுதி. இந்தப் பகுதிகளில் வசித்து வருகின்ற மக்களெல்லாம் ஏழையெளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள். எனவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித் தருமாறு இந்த



2007 ஏப்ரல் 19]

அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்வது மட்டுமல்லாமல், என்னுடைய மருங்காபுரி தொகுதியைப் பொறுத்தவரையில், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே, நாய்க் கடி, பாம்புக் கடி போன்றவற்றிற்கான உயிர் காக்கும் மருந்துகளுக்குச் சில நேரங்களிலே தட்டுப்பாடு ஏற்படுகின்றது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 3 மாதங்களுக்கு முன்பு, நான் தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, என்னுடைய மகனை நாய் கடித்துவிட்டது. அருகிலுள்ள சுக்காம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஊசி போடும்படி நான் தொலைபேசியிலே அவர்களைத் தொடர்புகொண்டு சொல்லிவிட்டு, என்னுடைய சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்தேன். ஆனால், அங்கே அந்த மருந்து இல்லை என்றார்கள். பிறகு உடனடியாக மணப்பாறைக்குக் கொண்டு சென்று ஊசி போட்டார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு, துரை என்பவருடைய மகனை மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அந்த ஊசியைப் போடுவதற்காக அழைத்து வந்தார்கள். அங்கே அந்த ஊசி நேற்றுதான் தீர்ந்துவிட்டது என்று சொன்னதால், அவர்கள் சுக்காம்பட்டிக்கு மறுபடியும் சென்றார்கள். அங்கே இருப்பவர்கள் இது என்னுடைய ஏரியா இல்லை, நீங்கள் மணப்பாறையிலே நாளைக்குப் போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்கள். மூன்று நாட்களாக நாய் கடித்தவனுக்கு ஊசி போடாததால், என்னுடைய இல்லத்திற்கு அழைத்து வந்தார்கள். நான் மருத்துவமனையிலே இருக்கின்ற டாக்டர்களிடம் பேசி, எந்தப் பகுதியாக இருந்தாலும் பரவாயில்லை, நாய் கடித்து கால்கள் புண்ணாகி இருக்கின்றன; உடனடியாக ஊசி போடுங்கள் என்று கேட்டுக்கொண்டேன். அதற்குப் பிறகுதான் ஊசி போடப்பட்டது. இந்நிலையில், கிராமங்களிலே நாய்க் கடி, பாம்புக் கடி மருந்துகளை அரசு அதிகமாக வழங்கினால், அங்கிருக்கின்ற ஏழை எளிய மக்களெல்லாம் பயன்பெறுகின்ற வாய்ப்பு இருக்கும். எனவே, இந்த அரசு கிராமப்புறங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளுக்குக் கூடுதலாக அவற்றை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்வதோடு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே மணப்பாறை தாலுகா மருத்துவமனை அமைக்க ஆணை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேட்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர்.

**திரு. செ. சின்னச்சாமி:** ஒரே ஒரு கோரிக்கைதான். இதையொட்டிய கேள்விதான்.

[2007 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், பதில் சொல்லுங்கள். சின்னச்சாமி, நீங்கள் subject—லிருந்து deviate செய்து போகிறீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதி, வையம்பட்டி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இப்போது செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மொத்த ஜனத்தொகை 94 ஆயிரம் இருக்கிறது. ஆகவே, சரியான அளவு விகிதத்திலே அங்கே Primary Health Centers. இருந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் நாய்க் கடி விஷயமாகச் சொன்னார்கள். இந்த அரசாங்கம்தான் சென்ற ஆண்டு 19 கோடி ரூபாய்க்கு நாய்க் கடி மருந்துகளை வாங்கி, வழங்கியிருக்கிறது. இந்தியாவிலேயே நாய்க் கடி மருந்தை அரசு மருத்துவமனைகளிலே இலவசமாக வழங்குகின்ற ஒரே அரசு, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு ஒன்றுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, பாம்புக் கடிக்கு 2 கோடி ரூபாய்க்கு மருந்துகளை வாங்கிக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால், உறுப்பினர் குறிப்பிடுகின்ற நிகழ்வைப் பற்றி எழுதிக் கொடுப்பாரேயானால், தகுந்த நடவடிக்கையை இந்த அரசாங்கம் கட்டாயம் எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி, subject—ல் மட்டும் கேட்க வேண்டும். இதில் என்ன கொடுத்திருக்கிறீர்களோ, அதைப் பற்றித்தான் கேட்க வேண்டும்.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களிலே தட்டுப்பாடு ஏற்படுகிறது. அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மணப்பாறையில் தலைமை மருத்துவமனை அமைப்பதற்கு அரசாங்க ஆணை வழங்கப்பட்டது. அதன் கட்டுமானப் பணிகள் எப்போது தொடங்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை தலைமை மருத்துவமனையைப் புதிதாகக் கட்டுவதற்கு வேண்டிய ஆரம்பக் கட்ட வேலைகளை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.



2007 ஏப்ரல் 19]

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல மக்கள் நலத் திட்டங்களை மக்கள் நல்வாழ்வுத் துறையில் அறிவித்து, சிறப்பாகப் பணியாற்றி, கோடானு கோடி மக்களுடைய அன்பைப் பெற்று வருகின்றார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரையும் எங்கள் மாவட்டத்திற்குக் கொடுத்துப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையில், எங்கள் விருதுநகர் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்கு அனுமதியளிக்க உத்தரவிடுவார்களா என்பதைப் பணிவோடு கேட்டு, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களுக்கு ஓர் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற திட்டம் தமிழக முதல்வர் அவர்களுடைய கனிவான பார்வையிலே இருக்கிறது. நானும், உங்களுடைய கோரிக்கையை, மாவட்ட அமைச்சர் என்ற முறையில், உங்களோடு சேர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தகுந்த நடவடிக்கையை எடுப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

*முற்பகல் 10–20*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பெலாந்துறை, அதையொட்டிய முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் வாழ்கின்ற 40,000—க்கும் மேற்பட்ட மக்கள் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாமல், பெரிய அவதிக்குள்ளாகி வருகிறார்கள். ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்பதற்காக அரசாங்கத்தின் விதிகளில் குறிப்பிட்டவாறு ரூபாய் பத்தாயிரமும் மற்றும் ஏழரை ஏக்கர் நிலமும் தந்து பல ஆண்டு காலம் ஆகின்றது. இதுவரையில் அந்தப் பகுதிக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. ஆதலால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நடப்பாண்டு, அவரது துறையின் அறிவிப்பில் அந்தப் பெலாந்துறை பகுதிக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்

அமைப்பதற்கு உத்தரவிடுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை என்னிடத்திலே நேரடியாகவே சொல்லியிருக்கிறார்கள். மனுவாகவும் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலே புதிதாக P.H.C. ஆரம்பிப்பதற்காக மத்திய அரசிலே ஒரு பகுதி நிதியுதவியை நாங்கள் கேட்டிருக்கிறோம். விரைந்து வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. வருகின்ற நேரத்திலே நிச்சயமாக இந்தக் கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**99—**

## கட்டட வசதி

***532—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசபாளையம் நகரில் இயங்கும் எஸ்.எஸ். அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள் மற்றும் சோதனைக் கூடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராசபாளையம், எஸ்.எஸ். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குத் தேவையான வகுப்பறைகளும், ஆய்வகங்களும் உள்ளன. இராசபாளையம், எஸ்.எஸ். அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாகத் தேவைப்படும் மூன்று வகுப்பறைகள் 'அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்' கீழும், ஓர் ஆய்வகம் பாட நூல் கழக நிதிமூலமும் கட்டப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசபாளையம் நகரில் இயங்கும் எஸ்.எஸ். அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சோதனைக் கூடங்கள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா? அதேபோல, அங்கு படிக்கும் பெண்கள் 1,100 பேரும், அதேபோல, ஆண்கள் 987 பேரும் உள்ளனர். போதுமான வகுப்பறைகளும் கிடையாது, அதேபோல சோதனைக் கூடங்களும் கிடையாது. அவற்றை விரைவில் கட்டித் தரும்படி இந்த அரசை வலியுறுத்துகிறேன். அதேபோல, அங்கு பணியாற்றும் கம்ப்யூட்டர் ஆசிரியர்களுக்கு temporary post ஆக உள்ளது. அதை நிரந்தர Post ஆக ஆக்கித் தரும்படிப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அங்கே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்த கேள்வியைவிட ரொம்பத் தாண்டியாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, இராசபாளையம், எஸ்.எஸ். அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலே இப்போது 28 வகுப்பறைகள், ஆய்வகம் மற்றும் அலுவலக அறைகள் இருக்கின்றன. இருந்தாலும்கூட, அதிலே கூடுதலாக—நான் மூலக் கேள்விக்குப் பதில் அளிக்கிறபோது சொன்னதைப்போல, கூடுதலாக ஓர் ஆய்வகம் பாட நூல் கழக நிதியின் மூலமாகக் கட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். S.S.A. மூலமாகவும் இப்போது அங்கே ஒரு கட்டடம் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆண்கள் மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்தமட்டிலே, ஏறத்தாழ இப்போது 40 வகுப்பறைகள் இருக்கின்றன. நான் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடத்தில் நேற்று இரவு பேசுகின்றபோது, இப்போது இருக்கக்கூடிய அளவிலே அங்கே கூடுதலாகக் கட்டடங்கள் தேவையில்லை என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அந்தத் தேவை ஏற்படுகின்றபோது நிச்சயமாக அங்கே கூடுதல் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். கம்ப்யூட்டர் ஆசிரியர்களைப் பொறுத்தவரை ஒன்றைச் சொன்னார்கள். ஏற்கெனவே நான் பேரவையிலே அறிவித்து, அவர்களுக்குப் பணி நிரந்தரம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். அதை எதிர்த்துச் சிலர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே வழக்கு

[2007 ஏப்ரல் 19

நிலுவையில் இருக்கிறது. எனவே, அவற்றையெல்லாம் முடித்ததற்குப் பிறகு, அரசு தேவையானவற்றை நிச்சயமாகச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிபவர்கள் M.Phil., முடித்தவர்களுக்குப் போதுமான ஊதியம் தரவில்லை என்று சொன்னார்கள், அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தித் தரும்படி அரசை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கோரிக்கை வந்தால், நிதிநிலைக்கேற்ப அரசு உரிய வகையிலே ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி இல்லை. பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக மேல்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படும்போது, அங்கே ஏற்கெனவே இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளியிலே அதிக அளவிலே பெண்கள் படிக்கக்கூடிய சூழ்நிலை இருந்து, அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கக்கூடிய நிலை இருந்தால், முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. எனவே, இப்போது இருக்கக்கூடிய அந்த உயர்நிலைப் பள்ளியிலே அதிக அளவில் மகளிர் படிப்பதாக இருந்தால், உரிய முன்மொழிவுகள் முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து வருமென்று சொன்னால், நிச்சயமாக அரசு அதனைப் பரிசீலித்து ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.



2007 ஏப்ரல் 19]

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, பள்ளிக்கூடங்களிலே வகுப்பறைகள் பற்றாக்குறை இல்லை என்கிற அளவிற்குக் கட்டடங்கள் கட்டி வரப்படுகின்றன. ஆனால், அதே நேரத்தில், ஒரு வகுப்பறைக்கு 40 மாணவர்கள் உட்காருகிற அளவிற்குக் கட்டடங்கள் கட்டப்படுகிறபோது, அந்தப் பள்ளிக்கூடங்களில் ஒரு வகுப்பில் 60 பேர், 70 பேர், 80 பேர் படிக்கிற ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. அந்த 60 பேர், 70 பேர் உட்காருகிற வகுப்பறைகள் இல்லாத காரணத்தால், அவர்கள் சிரமப்பட்டு வெளியிலே உட்கார்ந்து படிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே, வகுப்பறைகள் கட்டப்படுகிறபோது, ஒரு வகுப்பிற்கு இத்தனை மாணவர்கள் என்ற நிலையில் கட்டுகிறபோது, அதிகமான மாணவர்கள் உள்ள பள்ளிக்கூடங்களில் கூடுதலாக வகுப்பறைக் கட்டடங்களைப் பெரிதுபடுத்திக் கட்ட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில், 60 பேர், 70 பேர் உட்கார்ந்து படிக்கக்கூடிய அளவிற்குக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிக் கட்டடங்களைக் கட்டுகிறபோது, அங்கு இருக்கக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, இவ்வளவு மாணவர்கள் அந்தப் பள்ளியிலே படிக்கிறார்கள்; எனவே, இத்தனை வகுப்பறைக் கட்டடங்கள் தேவை என்கின்ற அடிப்படையில்தான் அதைச் செய்கிறோம். பொதுப் பணித் துறையிலே அதற்காக ஒரு type design ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு, அதனுடைய அடிப்படையிலே இப்பொழுது கட்டடங்கள் கட்டப்பட்டுக் கொண்டு வருகின்றன. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஆங்காங்கே இருக்கக்கூடிய பள்ளிகளிலே இப்படி மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகிறபோது, மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளிலே நபார்டு வங்கியினுடைய உதவியோடு இருக்கக்கூடிய திட்டங்களிலும், அதைப்போல, தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளிலே S.S.A. என்கிற அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலமாகவும் இத்தகைய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வரக்கூடிய காலங்களிலே பொ

பணித் துறையுடன் கலந்து பேசி, அவர் சொல்லக்கூடிய அந்தக் கருத்திற்கேற்ப அந்த type design எந்த அளவிற்கு இருக்க வேண்டும் என்பதையும் அவர்களோடு இணைந்து, கலந்து பேசி முடிவு செய்ய இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, S.S.A. திட்டத்தின்மூலமாகப் பள்ளிக்கூடங்களில் வகுப்பறை கட்டுகிறபோது, தரைத் தளத்தில் மட்டுமேதான் கட்ட வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. ஆகவே, சில இடங்களிலே போதுமான இட வசதி இல்லாத காரணத்தினாலே, மேல் மாடியும் கட்ட வேண்டிய தேவை இருக்கிற காரணத்தினால், அந்த விதிமுறைகளைத் தளர்த்தி, S.S.A. திட்டத்தின்மூலம் கட்டப்படுகிற அந்தக் கட்டடங்களில், அந்த இடத்தின் தன்மைக்கேற்ப மேல் மாடியும் கட்டுவதற்கு அரசு அனுமதிக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறக்கூடிய கருத்து வரவேற்கக்கூடிய கருத்து. பல இடங்களிலே இடப் பற்றாக்குறை காரணமாகக் கூடுதல் கட்டடங்களைக் கட்ட முடியாத ஒரு நிலையும் இருப்பதை அரசு உணர்ந்திருக்கிறது. இது மத்திய அரசினுடைய திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களுடைய அனுமதியையும் பெற வேண்டி இருக்கிற ஒரு சூழ்நிலை. ஏற்கெனவே இதை அவர்களுடைய கவனத்திற்கு நாங்கள் எடுத்துச் சென்றிருக்கிறோம். வரக்கூடிய காலங்களிலே S.S.A. திட்டத்தின்மூலமாகக் கட்டப்படுகிற கட்டடங்களுக்கு மேல் மாடி வைத்துக் கட்டக்கூடிய அளவிலேதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, அந்த type design-லே ஏற்கெனவே மாற்றங்களைக் கொண்டு வந்து செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட தேசூர் பேரூராட்சியில் நூறாண்டு காலமாக உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு



இதுவரையில், பழங்கால ஓட்டுக் கூரையினால் கட்டப்பட்ட கட்டடங்கள்தான் உள்ளன. அவையும் பாழடைந்த கட்டடங்களே தவிர, புதிய கட்டடங்கள் ஏதும் இல்லை. அவையும் எப்போது இடிந்து விழுமோ என்று தெரியாது. மாணவர்கள் பயத்தோடு பயில்கின்ற சூழ்நிலை உள்ளது. எனவே, அந்தப் பள்ளிக்கு நபார்டு திட்டத்திலோ அல்லது வேறு எந்த வகையிலோ நிதியை ஒதுக்கி, கட்டட வசதி செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுவதைப்போல நூறாண்டு காலப் பழமையான கட்டடம் அங்கே இருக்கிறதா என்பதையும், அந்தக் கட்டடத்தினுடைய தற்போதைய அமைப்பினையும், சூழ்நிலையையும் கருத்திலேகொண்டு, அதை இடிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அனுமதி பெற வேண்டும். எனவே, அத்தகைய நடைமுறைகளையும் கருத்திலேகொண்டு, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்மூலமாக நான் உடனடியாக அதற்கான ஓர் அறிக்கையினைப் பெற்று, அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று சொன்னால், நபார்டு, பகுதி-8 திட்டத்தின்கீழ் இணைத்துக்கொள்வதற்கு முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு நான் அறிவுரை வழங்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**100—**

## இரு வழிச் சாலை

***25—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் புதுச்சுக்காம்பட்டி, சென்னகரம்பட்டி, மேலவளவு, சேக்கிப்பட்டி வழியாகச் செல்லும் சாலையை இரு வழிச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

[2007 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலிருந்து புதுச்சுக்காம்பட்டி, சென்னகரம்பட்டி, மேலவளவு, சேக்கிப்பட்டி வழியாக நத்தம் ரோட்டை இணைக்கும் ஒரு வழிச் சாலையை இரு வழிச் சாலையாக ஆக்க முடியுமா என்ற என்னுடைய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'இல்லை' என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சாலை மிக முக்கியமான சாலை. அதாவது, மேலூரிலிருந்து திண்டுக்கல் மாவட்டத்திற்குச் செல்கின்ற ஒரே சாலை, சேக்கிப்பட்டி வழியாகச் செல்கின்ற இந்தச் சாலைதான். அது மட்டுமல்லாமல், இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களிலிருந்து வருகின்றவர்களும் திண்டுக்கல், பழனிக்குச் செல்வதற்கு மேலூரிலிருந்து இந்த வழியாகத்தான் அதிக வாகனங்களிலே செல்ல வேண்டியது இருக்கின்றது. அது மட்டுமல்லாமல், சேக்கிப்பட்டி, சென்னகரம்பட்டி, மேலவளவு பகுதிகளிலே அதிக அளவில் மா, தென்னை மரங்கள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற காய்கறிகள் எல்லாம் வெளிமாநிலங்களுக்குச் செல்வதற்கு நிறைய வாகனங்களிலும், லாரிகளிலும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆர். சாமி:** அதுவும், தை, மாசி பொங்கலிலே பழனிக்கு சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் மேலூர் பகுதிகளிலிருந்து செல்கின்ற பக்தர்கள் எல்லாம் அந்த வழியாகத்தான் செல்ல வேண்டிய அவசியம் இருப்பதால், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. போகிற பக்தர்களுக்கும் இடையூறாக இருக்கின்றது. ஆகையினால், அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தச் சாலை முக்கியச் சாலையாக இருக்கின்ற காரணத்தினால், அந்த ஒரு வழிச் சாலையை, இரு வழிச் சாலையாக இந்த ஆண்டு அமைத்துத் தருவாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, சாலைக் கட்டமைப்பு வசதிகளுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்த அடிப்படையிலே, மாநில நெடுஞ்சாலைகள் இப்போது ஏறத்தாழ 9,256 கிலோ மீட்டர் உள்ளன. அவற்றிலே ஏறத்தாழ 6 ஆயிரம் கிலோ மீட்டர் இன்றைக்கு இடை வழித் தடங்களாகவும், இரு வழித் தடங்களாகவும் உள்ளன. ஏறத்தாழ மீதமுள்ள 3 ஆயிரம் கிலோ மீட்டர் படிப்படியாக எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லி நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூட நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மேலூர், புதுச்சுக்காம்பட்டி, சென்னகரம்பட்டி, மேலவளவு, சேக்கிப்பட்டி வழிகளை இணைக்கக்கூடிய சாலையானது மாவட்ட இதர சாலை. அதனுடைய நீளம் சுமார் 19 கிலோ மீட்டர் என அங்குள்ள அலுவலர்களிடமிருந்து பதில் வந்திருக்கிறது. அதனுடைய P.C.U. 1,500 அளவுதான் இருக்கிறது. ஒரு சாலையை இருவழிச் சாலையாகவோ, பல வழிச் சாலையாகவோ ஆக்க வேண்டுமென்று சொன்னால், அச்சாலையில் போதுமான போக்குவரத்துச் செறிவு தேவை. அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு தேசிய நெடுஞ்சாலைகள் நான்கு வழிச் சாலைகளாகவும், ஆறு வழிச் சாலைகளாகவும், மாநில நெடுஞ்சாலைகள் இரு வழிச் சாலைகளாகவும் ஆக்கப்பட்டு வருகின்றன. இன்றைக்கு ஏறத்தாழ 38,256 கிலோ மீட்டர் மாவட்ட இதர சாலைகள் உள்ளன. அவற்றிலே ஏறத்தாழ 1,500 கிலோ மீட்டர்தான் ஒரு வழித் தடங்களாகவும், இரு வழித் தடங்களாகவும், பல வழித் தடங்களாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலையை, நிச்சயமாகத் தென் பகுதிக்குச் செல்கின்ற நேரத்தில் விரைவில் நான் நேரில் பார்த்து, அது அப்படித் தேவையென்று கருதினால், நிச்சயமாக அரசு எதிர்வரும் காலத்திலே அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடலூர் மாவட்டம், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில், கும்பகோணம்—சென்னை சாலைக்கும், அதே மாதிரி, விரூர் என்ற பகுதிக்கும் என இரண்டு பாலங்கள் கட்டப்படும் என்று நம்முடைய அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பில் கடந்த ஆண்டு அறிவித்தார். முக்கியமான சாலை என்பதால், அங்கே அடிக்கடி விபத்து ஏற்பட்டு, தினந்தோறும் உயிர்ப் பலி ஆகிக்கொண்டிருக்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உடனடியாக டெண்டர் விட்டு இரண்டு வாகனங்கள் ஒரே நேரத்தில் கடக்கின்ற பாலமாக அதை மாற்றி அமைத்து, இந்த ஆண்டே கட்டுவதற்கு உத்தாவிடுவார்களா என்பதை—அறிவிப்பில் அறிவித்தபடி உடனடியாகப் பணியைத் தொடங்கி, அந்தப் பாலம் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை, தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், எந்த ஆண்டிலும் இல்லாத அளவிலே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சாலைக் கட்டமைப்பு வசதிக்காக, ஏறத்தாழ 3,267 கோடி ரூபாய் அளித்துள்ளார்கள். அந்த அடிப்படையிலே பல சாலைப் பணிகள் நடைபெற்றன. பாலங்களைப் புதிதாக உருவாக்குவோம் என்று சொன்னால், பொதுவாக நபார்டு போன்ற வங்கிகளுடைய கடன் உதவி பெற்று, அந்தப் பாலங்களை உருவாக்குகிறோம். அந்த அடிப்படையிலே, நபார்டு வங்கியிலிருந்து கடந்த ஆண்டு, பல்வேறு திட்டங்களுக்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, இந்த நிதியாண்டும் நிச்சயமாக முன்னுரிமை தருவோம் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வருடைய பரிந்துரையை ஏற்று, இப்போது உறுதிமொழி தந்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பாலப் பணிகளை எதிர்வரும் காலத்திலே நிச்சயமாகத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன்.

**திரு. ரா. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து சிவகாசிக்குச் செல்லும் சாலையில் உப்போடை மூன்று இருக்கிறது. அந்த உப்போடையில், மழை பெய்தால் முழுமையாகத் தண்ணீர் வந்து, ஒரு நாள் முழுவதும் அந்தப் பக்கம் பஸ் போக்குவரத்து தடைப்பட்டுவிடுகிறது. ஆகவே, அந்தப் பாலத்தைக் கட்டிக்





கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவது உறுதி என்று வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே சித்தூர் மாவட்டம், கணேசபுரத்தில் அணை கட்டுவது உறுதி என்று சொல்லப்படுவதாகப் பத்திரிகைச் செய்தி வந்துள்ளது குறித்து, பின்வரும் உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள்:

அ.இ.அ.தி.மு.க. சார்பாக, திரு. கு. பாண்டுரங்கன் மற்றும் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, ம.தி.மு.க. சார்பாக, திரு. நா. இராமகிருஷ்ணன், காங்கிரஸ் கட்சி சார்பாக, திரு. சி. ஞானசேகரன், திரு. மா. ராஜசேகரன், திரு. ஆர்.எம். பழனிசாமி மற்றும் திரு. ராம. சுப்புராம், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக, திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி.க. ராஜா, திரு. தி. வேல்முருகன் மற்றும் திருமதி பெ. கமலாம்பாள், இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக, திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன் மற்றும் திரு. கே. உலகநாதன், (குறுக்கீடு) பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக, திரு. கே.எல். இளவழகன். இது குறித்து இந்த அவையில் பல முறை விவாதிக்கப்பட்டுள்ளது. இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெற்று, இரண்டு அமைச்சர்கள் பதிலும் சொல்ல வேண்டியிருப்பதால், பொதுப் பணித்

துறை அமைச்சர் ஏதேனும் பதில் சொல்ல விரும்பினால், சொல்லாம். (குறுக்கீடுகள்) நிறைய நேரம் பேசியாகிவிட்டது. இது விஷயமாக. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நிறைய நேரம் பேசியாகிவிட்டது இல்லையா? (குறுக்கீடு) No. No. No. இரண்டு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அப்போது எல்லோர் சார்பாகவும் ஓர் உறுப்பினர் பேசுகிறீர்களா? யாராவது ஓர் உறுப்பினர் மட்டும் பேசுங்கள். திரு. சி. ஞானசேகரன் மட்டும் பேசுங்கள் (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன் மட்டும் பேசுங்கள்.

*முற்பகல் 10–35*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. Time இல்லை. (குறுக்கீடுகள்) ஒருவர் மட்டும் பேசுங்கள். அமைச்சர், பதில் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) No, nothing doing, உட்காருங்கள். (குறுக்கீடு) இது சம்பந்தமாக எத்தனை தடவை பேசி இருக்கிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள்தான் அத்தனை தடவையும் பேசி இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு எடுக்க வேண்டுமானால், அமைச்சர் மட்டும் பதில் சொல்லட்டும், இல்லாவிட்டால் இன்னொரு நாள்தான் எடுப்பேன் நான். (குறுக்கீடுகள்) அப்படியானால் இன்னொரு நாள் வைத்துக்கொள்வோம். நாளைக்கு எடுத்துக்கொள்வோம் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) சுருக்கமாக நீங்கள் யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) பேசுங்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும். நிறைய time எடுத்தால் உட்கார வைத்துவிடுவேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வருட காலமாக, தினந்தோறும் வேலூர் மற்றும் வட மாவட்ட மக்கள் செத்துச் செத்துப் பிழைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். கடந்த காலங்களிலே எல்லாம் ஆந்திர அரசினுடைய அதிகாரிகளும், அணை கட்டப்படும் என்று பேட்டி கொடுத்து வந்தார்கள். ஆனால், நேற்றைக்கு முன்தினம், ஆந்திர அரசினுடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அடுத்த வாரம் டெண்டர் விடப்படும் என்றும், அடுத்த மாதம் அடிக்கல் நாட்டப்படும் என்றும் பேட்டி கொடுத்திருக்கின்றார். எல்லாவற்றுக்கும் மேலாக, ஆந்திர



மாநிலத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கணேசபுரத்திலே பாலாற்றின் குறுக்கே கண்டிப்பாக அணை கட்டப்படும் என்று நேற்றைக்கு டெல்லியிலே பேட்டி கொடுத்து இருக்கின்றார்கள். ஆக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே, 1892 ஆம் ஆண்டு பல மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் ஒப்பந்தத்திற்கு எதிராகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்ற ஆந்திர அரசு, இதுபோன்று பேட்டி கொடுப்பது முறைதானா என்பதையும், அதோடு மட்டுமன்றி, கடந்த வாரத்தில் இது சம்பந்தமாகப் பேசப்பட்டபோது, மாண்புமிகு தமிழகப் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்களோடு டெல்லியிலே பேசியபோது, ஓரிரு நாட்களிலே அவர் ஆந்திராவிற்குச் சென்று அதற்குரிய விவரங்களைத் தமிழக அரசுக்கு அனுப்பி வைப்பதாகச் சொன்னார் என்று எடுத்துச் சொன்னார்கள். அப்படி அவர்கள் எடுத்துச் சொன்னதற்கிணங்க, ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அது சம்பந்தமான விவர அறிக்கையைத் தமிழக அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

குறிப்பாக, வேலூர் மற்றும் வட மாவட்ட மக்கள் தினந்தோறும் செத்து செத்துப் பிழைத்துக்கொண்டு இருக்கின்ற காரணத்தாலே, மாண்புமிகு அம்மா அவர்களாலே 10-2-2006 அன்று உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்குத் தொடரப்பட்டு இருக்கின்றது. அந்த வழக்கினுடைய அடிப்படையிலே இன்றைக்குத் தமிழக அரசு தடையாணை பெறுவதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'அணை கட்டுவது சம்பந்தமாக ஒரு statement கொடுத்து இருக்கிறார், அது சம்பந்தமாகச் சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டு, நீங்கள் வழக்கிற்குள்ளே எல்லாம் போகக் கூடாது. உட்காருங்கள்

**திரு. கு. பாண்டுரங்கன்:** அந்த வழக்குத் தொடர்ந்ததன் அடிப்படையிலே அரசு முனைப்போடு செயல்படுமா என்பதை நான் இந்த நேரத்திலே அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள். இராமகிருஷ்ணன், திரு. ஞானசேகரன் பேசி முடிக்கட்டும். திரு. ஞானசேகரன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சுருக்கமாக ஒரே கேள்விதான் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் இதற்கு 3 முறை பதிலளித்து இருக்கின்றார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்பொழுது கண்டிப்பாக அந்த இடத்திலே அணை கட்டப்படும் என்றும், அதற்காக 55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுவிட்டது என்றும், 25 ஆம் தேதியோ, 26 ஆம் தேதியோ டெண்டர் விடப்படும் என்றெல்லாம் ஆந்திர முதல்வர் சொன்னதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில், DPR-Detailed Project Report- ஏற்கெனவே தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட்டது என்ற ஒரு கருத்தை நிருபர்கள் மத்தியிலே டெல்லியிலே நேற்று ஆந்திர முதல்வர் சொல்லியிருக்கிறார். அப்படி DPR-Detailed Project Report— தமிழக அரசுக்கு வந்து இருக்கிறதா? அப்படி வந்திருக்கும்பட்சத்தில், அது தமிழக நலனை, குறிப்பாக வட மாவட்டங்களாக இருக்கிற எங்களுடைய வேலூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், காஞ்சிபுரம், அதேபோல சென்னை மாவட்டத்தையும் முழுமையாகப் பாதிக்கக்கூடிய ஒன்று. Inter-state River அது. அப்படி இருக்கிறபோது Inter-State River Agreement–ன்படி அவர்கள் அணை கட்ட முடியாது. எனவே, அதைத் தடுப்பதற்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்கிலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தடையாணை பெறுவதற்கு என்ன முயற்சியை எடுத்திருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல, வனத் துறைமூலமாக—வனத் துறையிலிருந்து 484 ஏக்கர் நிலத்தை அவர்கள் எடுக்கப் போகிறார்கள். அப்படி 484 ஏக்கர் வனத் துறை நிலத்தை அவர்கள் எடுக்கிறபொழுது, நிச்சயமாக சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களுடைய அனுமதியை மத்திய அரசிடமிருந்து இவர்கள் பெற்றாக வேண்டும். ஆகவே, மத்திய அமைச்சராக இருக்கிற நம்முடைய தமிழகத்தினுடைய அமைச்சர் மாண்புமிகு ராஜா அவர்களிடம் இதை உடனடியாக எடுத்துச் சொல்லி, ஆந்திர அரசு அணை கட்டுவதை அந்த வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறைமூலமாகத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா? தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் ஆந்திர முதலமைச்சரோடு பேசியாவது அல்லது நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை நேரடியாக ஆந்திர அரசிடம் அனுப்பி, அங்கே பேச்சுவார்த்தை நடத்தியாவது, அணை கட்டக்கூடிய அந்த நிகழ்வுக்கு உடனடியாக அணை போட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலப் பகுதியிலுள்ள கணேசபுரத்திலே ஆந்திர மாநிலத்தினுடைய உரிமைக்கும், வரம்புக்கும் உட்பட்டு, பாலாற்றின் குறுக்கே அணை கட்டப்படும் என்று அந்த மாநிலத்தினுடைய முதல்வர் அவர்கள் பேட்டி அளித்திருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட சித்தூர் மாவட்டத்திலே ரகுவீரா ரெட்டி அவர்கள் பேட்டி அளித்திருக்கிறார்கள். அந்தப் பேட்டியிலே 26 ஆம் தேதி டெண்டர் கோரப்பட்டு, முதலமைச்சர் அவர்களே அடிக்கல் நாட்டுகிறார் என்று அந்தப் பேட்டியிலே, சொல்லியிருக்கிறார்கள். பாலாறு என்பது வட மாவட்ட மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினை, உயிர்நாடிப் பிரச்சினை, உரிமைப் பிரச்சினை. இப்பொழுது பாலாறு பாழாகி விட்டது. நாங்கள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறோம். எதிர்காலத்திலே வட மாவட்டங்கள் பாலைவனமாகக்கூடிய சூழல் இருக்கிறது. பஞ்சம் வருகிற நிலைமை ஏற்படும். எனவே, ஏற்கெனவே ஓராண்டுக்கு முன்பே கடந்த ஆட்சியிலே, பாலாற்றின் குறுக்கே அணை வரப் போகிறது என்று நாங்கள் புலி வருகின்ற கதையாகச் சொன்னோம். வரப்போகிறது, வரப்போகிறது என்று சொன்னோம். எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள்கூட மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். எங்களுடைய தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களும், நானும் சென்று போராட்டத்தில் ஈடுபட்டோம். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், 'அங்கே அணை வராது; வரவிடமாட்டோம், தடுப்போம்' என்று சொன்னார்கள்.

நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், மத்திய அரசிலே நாம் அங்கம் வகிக்கின்றோம். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, மைய அரசோடு தொடர்புகொண்டு இந்த அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா? மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னார்கள், இதில் வழக்கு இருக்கிறது; அந்த வழக்கின்மூலமாகத் தடுத்து நிறுத்துவோம் என்று சொன்னார்கள். அந்த வழக்கின் நிலைமை என்ன என்று இந்த நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆந்திராவிலே அணை கட்டுவதை ஒருபோதும் நாம் விடக் கூடாது என்பதை வலியுறுத்தி, அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தொடர்ந்து 3 முறைகளுக்குமேலே இந்தப் பிரச்சினையைப் பேசியிருக்கிறோம். இப்பொழுது திடீரென்று ஆந்திர முதலமைச்சர் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார். 6,000 ஏக்கர் நீர்ப்பாசனம் பெறுவதற்காகவும், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்களுடைய குடிதண்ணீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் செய்யப்படுகிறது என்று சொல்கிறார். இதைப் பற்றிய நிலைமையை விளக்கித் தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் சொல்கிறார். தொடர்ந்து நமது தமிழக எல்லைப் பகுதியிலே இருக்கிற கர்நாடகம், கேரளம், ஆந்திரம், இப்படி இந்த 3 மாநிலங்களுமே நமக்குத் தொடர்ந்து தண்ணீர்ப் பிரச்சினையை ஏற்படுத்திக்கொண்டேயிருக்கின்றன. இதில் தீர்வு காண்பதற்காகச் சட்டரீதியாகப் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்றாலும், இப்படி இந்தப் பாலாற்றின் குறுக்கே அணை கட்டப்படுவதால், வேலூர் மாவட்டம் போன்ற வறட்சிப் பகுதியான மாவட்டத்தின் குடிநீர்த் தேவை மற்றும் இதர தேவைகளை நிறைவு செய்வதில் வரும் பாதிப்பு மிகப் பெரிய பாதிப்பாக மாறிவிடுகிற அபாயம் ஏற்படுகிற காரணத்தினாலே, இந்த அணையைக் கட்டுவதைத் தடுப்பதற்குரிய முயற்சியை எடுக்க மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காக, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியை நமது தமிழக அரசு மேற்கொள்ள இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பத்திரிகைகளில் வந்திருக்கக்கூடிய செய்தியின் அடிப்படையில், ஆந்திர அரசு எடுத்து வரக்கூடிய முயற்சியை எந்த வகையில் தமிழக அரசு தடுக்கவிருக்கிறது, அதற்கான திட்டம் என்ன என்பதனை அறிவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி விரும்புகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.





**• திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்பம் பகுதியில், கணேசபுரத்தில் 250 கோடி ரூபாய் செலவில் ஆந்திர அரசு அணை கட்டுவதாகத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், நேற்றையதினம் வேளாண்மைத் துறை அமைச்சர் ரகுவீரா ரெட்டி அவர்கள் அணையைப் பார்வையிட்டு, 26 ஆம் தேதி டெண்டர் விடப் போவதாகவும், அதைப்போல, நிலம் மற்றும் தண்ணீர் கொள்ளளவு ஆய்வுக்குண்டான வரைபடங்கள் தயாரிக்கவும் அந்த அரசு முற்பட்டுள்ளதாகவும், மே மாதம் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டப் போகின்றார்கள் என்றும் பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. இது முற்றிலும் வேலூர் மற்றும் திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களைக் கடுமையாக பாதிக்கக் கூடும். அந்த மக்கள் குடிநீர்ப் பஞ்சத்தால் அவல நிலைக்கு ஆளாவார்கள், அவர்களுடைய உயிர்நாடி நின்று போகும். எனவே, மத்திய அரசை வலியுறுத்தியோ, சட்ட நடவடிக்கையில் ஈடுபட்டோ பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்தை ஈர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டப் போகிறது என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன் நம்முடைய மாண்புமிகு முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நம்முடைய அமைச்சர் பெருமக்களை அனுப்பி, ஆந்திர முதலமைச்சரைச் சந்தித்துவிட்டு, அந்தச் செய்தியைச் சொல்லிவிட்டு வந்த பிறகும், இன்று இப்படிப்பட்ட ஒரு பத்திரிகைச் செய்தியிலே, ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவது உறுதி என்று வெளியாகி இருக்கிறது. வடாற்காடு மாவட்டத்தின் விவசாயிகளுக்கும், அங்குள்ள மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டப் போகிறது என்ற செய்தியின் உச்சக் கட்டமாக, ஆந்திர மாநிலத்தினுடைய மாண்புமிகு

முதல்வர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், இந்த மாமன்றத்தில் இருக்கிற பல உறுப்பினர்கள் உணர்ச்சிபூர்வமான கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த உணர்ச்சியிலும், கவலையிலும் இந்த அரசு ஒன்றி நிற்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய கருத்தில் எந்தவிதமான மாறுபாடும் இந்த அரசுக்கு இல்லை. ஆனால், இதுவரையில் பத்திரிகையிலே செய்தி வரும். ஆங்காங்கு இருக்கிற சிலர், இதைப் பற்றி அணை கட்டப்படும் என்று சொல்வார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்களே சொன்ன செய்தியை நானும் பார்த்து, எனக்கு ஆச்சரியமாகவும் இருந்தது, அதிர்ச்சியாகவும் இருந்தது.

கடந்த மாதம் 10 ஆம் தேதி நான் டெல்லியிலே பார்த்தபோது, அப்படி எந்தச் செய்தியும் இல்லை என்று சொன்னார்கள். இருப்பதாக இருந்தால், உங்களுக்கு நான் report அனுப்புகிறேன் என்று சொன்னார்கள். இங்கேகூடக் கேட்டார்கள், நமக்கு அவர்கள் Detailed Project Report-ஐ அனுப்பினார்களா என்று. நான் இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன். இதுவரையில் ஆந்திர அரசிடமிருந்து இந்த அணை கட்டுவது குறித்து எந்தவிதமான Detailed Project Report-ம் தமிழக அரசுக்கு வரவில்லை. அப்படி ஒரு முயற்சி இருக்கிறது என்பதைப் பற்றியும் அவர்கள் தெரிவிக்கவில்லை. மாறாக, ஆந்திர முதலமைச்சர் சொன்னதற்குப் பிறகு, நம்முடைய பொதுப் பணித் துறைச் செயலாளரைக் கூப்பிட்டு அனுப்புகிறேன் என்று முதல்வர் சொல்கிறார், என்ன சமாச்சாரம் என்று விசாரித்துப் பாருங்கள் என்று கேட்டுக்கொண்டதன்பேரில், அந்த ஆந்திர மாநிலத்தில் இருக்கிற நீர் வளத் துறைச் செயலாளரோடும், மற்றவர்களோடும் நம்முடைய பொதுப் பணித் துறைச் செயலாளர் தொலைபேசியின்மூலமாகப் பேசினார். அப்போதும் அவர்கள் திட்டவட்டமாக எந்தச் செய்தியையும் தெரிவிக்கவில்லை, Report அனுப்பினோம் என்றும் சொல்லவில்லை, அனுப்புகிறோம் என்றும் சொல்லவில்லை. ஆனால், இப்படி ஒரு செய்தி அவர்களுக்குப் புதியதாக இருப்பதைப்போல்தான் நம்முடைய செயலாளரிடத்திலே பேசியிருக்கிறார்கள். ஆனால், இவை எல்லாவற்றையும்விட இன்றைக்கு ஆந்திர முதல்வர் அவர்கள் தெரிவித்ததற்குப் பிறகு, நாம் இதிலே கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். கவலைகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்; நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அப்படியானால், என்ன நடவடிக்கை எடுப்பது என்றால், ஒரு சட்டபூர்வமான நடவடிக்கையைத்தான் நாம் மேற்கொள்ள முடியும். இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்தில் அது ஒன்றுக்குத்தான்



வழியிருக்கிறது. ஏற்கெனவே இது குறித்து ஒரு வழக்கை உச்ச நீதிமன்றத்திலே நாம் தொடுத்திருக்கிறோம். இங்கே இருக்கிற பல வழக்கறிஞர்களுக்குத் தெரியும், எந்தவொரு வழக்குத் தொடுத்தாலும், cause of action தேவை என்பார்கள். இன்றைக்கு அப்படி உச்ச நீதிமன்றத்தில் அதை விரைவுபடுத்துவதற்கு cause of action ஆக, ஆந்திர முதல்வர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துதான் அமையும். எனவே, இது குறித்துக் காலையிலேயே நான் பொதுப் பணித் துறைச் செயலாளரோடு பேசியிருக்கிறேன். இப்போது டெல்லியோடு அவர் தொடர்புகொண்டிருக்கிறார். இப்பொழுது, இது குறித்துத்தான் சட்ட நிபுணர்களுடனும் பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்துகொண்டு, அரசு எத்தகைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் திட்டவட்டமாக எடுக்கும், உறுதியாக எடுக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10–50*

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, whether the Government has . . .

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே. .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்தை நான் சொல்ல மறந்துவிட்டேன். வனத் துறையிடமிருந்து அவர்கள் அனுமதிபெற வேண்டும். ஆனால், மத்தியிலே இருக்கிற வனத் துறை அமைச்சர் திரு. ராஜா அவர்களிடத்திலே நான் இது குறித்துப் பேசினேன். திரு. ராஜா அவர்களுக்கும் ஆந்திர அரசிடமிருந்து எந்தவிதமான ஒரு வேண்டுகோளும் வரவில்லை என்று அவர், அவருடைய துறையிலே விசாரித்துவிட்டுத் தெரிவித்திருக்கிறார். ஆக, வனத் துறையிடத்தில் அனுமதி கேட்பதற்கும் ஆந்திர அரசு முயற்சி எடுக்கவில்லை; முனைப்புக் காட்டவில்லை. நமக்கும் 1892 agreement பிரகாரம், அவர்கள் கட்டுகிற அணையினுடைய Detailed Project Report தந்து, அது நமக்குச் சாதகமா, பாதகமா என்று நாம் சொன்ன பிறகுதான்

கட்ட வேண்டும். அந்த ஒப்பந்தத்தையும் மீறுகிற அளவுக்கு இது வந்திருக்கிறது.

**அதைத்தான்** நான் சொன்னேன். நம்மைச் சுற்றியிருக்கிற மாநிலங்களில் கொஞ்சம் இணக்கமாக இருந்தது ஆந்திர அரசுதான். இதுவரையிலும் நமக்கு இந்த நீர்ப் பிரச்சினையிலே தகராறு இல்லாமல் இருந்தது. எனவே, இது அண்டை மாநிலப் பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டுகிற அந்த நெறிமுறைகளுக்கு உட்பட்டு, நானும் பணியாற்றுவேன், இந்த அரசும் திடமான நடவடிக்கையை எடுக்கும். *(குறுக்கீடுகள்)*

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்பத் தெளிவாகச் சொன்னதற்குப் பிறகும் என்ன? *(குறுக்கீடுகள்)* திரும்பத் திரும்பக் கேட்பது சரியல்ல. Time need not be wasted. *(குறுக்கீடுகள்).*

## 3. தகவல் கோரல்

### (அ) பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு கிராமத்தில் இடி தாக்கி 7 பேர் காயமடைந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன், சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் விழுப்புரம் மாவட்டத்தில் இடி விழுந்து 7 பேர் பலியானது குறித்து நான் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு முன்னறிவிப்புக் கொடுத்திருந்தேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேல்முருகன், இந்த சப்ஜெக்ட்டுக்குள்ளே, பாலாற்றுப் பிரச்சினையிலே இருக்கின்றதா? *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள். அது என் ஆய்விலே இருக்கின்றது. உட்காருங்கள்.



**திரு. தி. வேல்முருகன்:** 7 பேர் சீரியஸாக, ஆபத்தான நிலையிலே மருத்துவமனையிலே இருக்கிறார்கள். இது அவசரப் பிரச்சினை இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்ததாக எடுத்துக்கொள்ளலாம். இந்தப் பிரச்சினை முடியட்டும், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், வேல்முருகன், உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பேச வேண்டுமென்றால், ஏதாவது ஒரு வார்த்தை *(குறுக்கீடு)* இது இல்லையா?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை, இது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது இல்லையா? உட்காருங்கள் அப்போது. *(குறுக்கீடு)* அது என்னுடைய ஆய்விலேதான் இருக்கிறது. உட்காருங்கள்.

## 4. கவன ஈர்ப்பு

### நாகப்பட்டினம் மாவட்டம், வளர்கல்விப் பணியாளர்களுக்கு ஊதிய பாக்கி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** "நாகப்பட்டினம் மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு பணியாளர்களாக மாற்றப்பட்ட வளர்கல்விப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படாதது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

[திரு. தங்கம் தென்னரசு] [2007 ஏப்ரல் 19

## அறிக்கை

நாகை மாவட்டத்தில் முதலாம் ஆண்டின் இரண்டாம் கட்ட (First year second phase) வளர்கல்வித் திட்டப் பணிகள் டிசம்பர் 2005 முதல் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்திற்கு ஒவ்வொரு தவணை நிதியும் வழங்கப்படும்பொழுது மதிப்பூதியம் ஆறு மாதங்களுக்கு மட்டுமே என மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஏனென்றால், திட்டம் ஆறு மாதங்களுக்குரியது. மேலும், மேற்படி பெறப்பட்ட நிதியில் செலவினம் மேற்கொண்டு, அச்செலவினங்கள் பட்டயக் கணக்கரால் தணிக்கை செய்யப்பட்டு, அவ்வாறு தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் மைய அரசுக்கு அனுப்பப்பட்ட பின்னரே, அடுத்த தவணை நிதி மைய அரசால் விடுவிக்கப்படும் நிலை உள்ளது. எனவே, மேற்கண்ட காரணங்களினால், திட்டப் பணியாளர்களுக்குத் தொடர்ந்து மதிப்பூதியம் வழங்க இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது.

இத்திட்டக் காலம் ஆறு மாதங்களாகும். முதல் மூன்று மாதங்களான டிசம்பர் 2005 முதல் பிப்ரவரி 2006 முடிய மதிப்பூதியம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள மூன்று மாதங்களாகிய மார்ச் 2006 முதல் மே 2006 முடிய உள்ள காலத்திற்கான மதிப்பூதியம் 14-3-2007-ல் நாகை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுவிட்டது. ஆக, மைய அரசால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து இத்திட்டப் பணியாளர்களுக்கு 1-12-2005 முதல் 31-5-2006 முடிய ஆறு மாதங்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். விவர அறிக்கையில், 2006 மார்ச் மாதம் முதல் 2006 மே மாதம் வரையுள்ள காலத்திற்கு கடந்த 14-3-2007-ல் நாகை மாவட்டத்திற்கு மதிப்பூதியம் வழங்கப்பட்டுள்ளதாக உள்ளது, முற்றிலும் உண்மை. வளர்கல்விப் பணியாளர்களும் மதிப்பூதியத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், 2006 ஜூன் மாதம் முதல் 2006 டிசம்பர் மாதம் வரையுள்ள 7 மாத காலத்திற்கு ஊதியம் வழங்கப்படவில்லை. அது எப்போது வழங்கப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

ஜனவரி 2007 முதல் வளர்கல்விப் பணியாளர்கள் 950-க்கும் மேற்பட்டவர்களைத் தன்னார்வத் தொண்டு பணியாளர்களாக மாற்றி உத்தரவிடப்பட்டுள்ளதால், வேறு எந்த ஊதியமும் வழங்காத நிலையேற்பட்டுள்ளதால், அந்தப் பணியாளர்கள், படித்து, தகுதியுடையவர்களாக இருப்பதால், அரசுமூலம் வேறு மாற்றுப் பணி வழங்கி, குறைந்த அளவு ஊதியமாவது கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 19] [திரு. எம். பன்னீர்செல்வம்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்து, நேற்று நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே நான் பேசினேன். அவர்கள் அளித்திருக்கக்கூடிய அந்த விவரத்தின் அடிப்படையிலே, 424 மையத் தொடர்பாளர்கள் மற்றும் உதவி மையத் தொடர்பாளர்கள், 47 தலைமை மையத் தொடர்பாளர்கள் மற்றும் 47 உதவி தலைமை மையத் தொடர்பாளர்கள், இவர்கள் அத்தனை பேரும் முற்றிலுமே தற்காலிக அடிப்படையில் மதிப்பூதியம்பெறும் பகுதிநேரப் பணியாளர்களாக வளர்கல்வி மையங்களிலே பணியாற்றி வந்தார்கள். அவர்களுடைய வேலை நேரம் என்பது, மாலை 6 மணி முதல் 8 மணி வரை என அந்த நேரம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டம் துவக்கப்பட்டிருக்கக்கூடிய முதல் ஆறு மாத காலம் வரை அவர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

மத்திய அரசிலிருந்து அந்த இரண்டாவது கட்ட நிதியுதவி கிடைப்பதிலே தாமதம் ஏற்பட்டிருந்த காரணத்தினாலே, அவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தற்காலிகத் தன்னார்வத் தொண்டு நிறுவன ஊழியர்களாக நியமித்து இருந்தார்கள். இப்போது மத்திய அரசின் அந்த இரண்டாவது கட்ட நிதி வரப்பெற்று அவர்களுக்கு அது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, தன்னார்வத் தொண்டு ஊழியர்களாக இருந்தவர்கள் மீண்டும் வளர்கல்விப் பணியாளர்களாக மாற்றப்பட்டு, இப்போது அவர்கள் தொடர்ச்சியாக அந்தப் பணியினை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த மதிப்பூதியம் வழங்கப்படாத அந்தக் காலக்கட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து மூன்றாவது கட்டமாக அந்த நிதியுதவி விரைவிலே வரவிருக்கின்றது; வந்தவுடன் அவர்களுக்கு அந்த மதிப்பூதியம் வழங்கப்படும். (குறுக்கீடுகள்)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) வி.வி. மினரல்ஸ் தொழிலதிபர்மீது அரசு நடவடிக்கை எடுப்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சொல்லுங்கள், என்ன? (குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகுந்தராஜன், V.V. Minerals, ஒரு பெரிய தொழிலதிபர். அந்தத் தொழில் அதிபர் தன்னுடைய தொழிலை நடத்திக்கொண்டிருக்கிறபோது அரசுத் துறையின் சார்பாக அவரைப்போன்று மூன்று தொழில் அதிபர்கள் அந்தப் பகுதியிலே அந்தத் தொழிலை நடத்தி வருகிறார்கள். ஆனால், இவர் ஜெயா தொலைக்காட்சியினுடைய முக்கியப் பங்குதாரர் என்ற முறையில் அரசே அவர்மீது சில நடவடிக்கைகளை எடுப்பதோடு, அவரைக் குண்டர் சட்டத்திலும் போடுவதற்காக முனைந்து செயலாக்கிக் கொண்டிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையிலும் நாங்கள் கேட்பது, இதேபோன்ற மூன்று தொழில்களைச் செய்துகொண்டிருக்கின்ற அந்தத் தொழில் அதிபர்கள் எதைச் செய்கிறார்களோ, அதைத்தான் இவரும் செய்துகொண்டு இருக்கிறார். ஆகவே, மூன்று தொழில் செய்கின்ற அனைவருக்கும் நீதிமன்ற விசாரணை செய்து, இவர்மீது தவறு இருந்தால் எந்த நடவடிக்கை எடுத்தாலும் எங்களுக்குக் கவலையில்லை. ஆகவே, நீதி விசாரணை வைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறதா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் ஏதோ இந்த அரசாங்கம் ஜெயா டி.வி.யிலே பங்குதாரராக இருக்கக்கூடிய வைகுந்தராஜன் அவர்களை மிரட்டுவதாகவும், அதைப்போல தொழில் செய்யக்கூடியவர்களையெல்லாம் விட்டுவிட்டதாகவும், இவரை மட்டும் மிரட்டுவதாகவும் இங்கே தெரிவித்தார்கள். ஜெயா டி.வி. இப்போது உங்களுக்குச் சொந்தமானது. அதாவது, அ.தி.மு.க.வுக்கு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் சார். அவர் raise பண்ணியிருக்கிறார். அவர் பதில் சொல்வார். உட்காருங்கள் நீங்கள். Mr. செங்கோட்டையன்தான் கேட்டிருக்கிறார்.







*முற்பகல் 11–00*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஜெயா டி.வி. உங்களுக்குச் சொந்தமோ, இல்லையோ, அப்படியொன்று தமிழ்நாட்டில் நடக்கிறது. கடந்த கால ஆட்சியிலே சன் டி.வி. நடந்துகொண்டிருந்த காலத்திலே, அதை எப்படியாவது முடக்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, அவர்கள் உயர் நீதிமன்றம் வரையிலே சென்று, தடையாணை வாங்கி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாத அளவிற்கு அவர்கள் பாதுகாத்துக்கொண்டார்கள். ஆனால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அந்த அளவிற்குக் கேவலமாக ஜெயா டி.வி.யை முடக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசிற்குக் கிஞ்சித்தும் கிடையாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஜெயா டி.வி. மாரீஷ் டாட்காம் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரிலேதான் பதிவு செய்யப்பட்டு நடந்துகொண்டிருக்கின்றது. *18–11–1998* ஆம் தேதி அது முதலிலே Private Limited ஆகப் பதிவு செய்யப்பட்டது. பிறகு, *9–9–2000* அன்று, ஒரு resolution போட்டு, *10–4–2001* அன்று Public Limited ஆக அதை மாற்றினார்கள். அதனுடைய authorized share capital *20* கோடியே *25* இலட்சம் ரூபாய். Paid-up share capital, *19* கோடியே *82* இலட்சத்து *80* ஆயிரம் ரூபாய். இதிலே எல்லோருடைய share holders list–ம் என்னிடத்திலே இருக்கிறது. இதிலே, equity share என்பது, அவர்கள்தான் முதன்முதலிலே மூலதனம் போட்டு ஒரு கம்பெனியைத் தொடங்குபவர்கள். Preference share என்பவர்கள், பிறகு share holders ஆகச் சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள். அப்படி equity share போட்டவர்கள், மொத்தம் *2* இலட்சத்து *20* ஆயிரத்து நூறு share, அதாவது *22* இலட்சத்து ஆயிரம் ரூபாய்க்கு மூலதனம் போட்டு இந்த நிறுவனத்தை ஆரம்பித்தார்கள். ஆனால், இன்றையதினம் *20* கோடி ரூபாய்க்கு authorized capital ஆக இருந்தாலும்கூட, மொத்த மூலதனம் போட்டிருப்பவர்கள் எவ்வளவு என்று சொன்னால், *19* கோடியே *52* இலட்சம் ரூபாய்க்கு மூலதனம் போட்டு, இப்பொழுது அந்த நிறுவனம் நடக்கிறது. இதிலே share holders என்று சொன்னார்களே, வைகுந்த ராஜன் அவர்களை மிரட்டுவதாகச் சொன்னார்கள் அல்லவா? அவர்கள் எவ்வளவு share வைத்திருக்கிறார்கள், மீதிப் பேர் எவ்வளவு share வைத்திருக்கிறார்கள் என்று பார்த்தால், இதிலே share வைத்திருப்பவர்கள் பெரும்பாலோர் ஜெயின்; வட நாட்டைச் சேர்ந்தவர்கள்தான்.

உதாரணத்திற்கு, அஜித்குமார் அடுகியா, அந்தப் பெயரை நாம் கேள்விப்பட்டே இருக்கமாட்டோம். ஏனென்றால், அவருக்கும்,

தமிழ்நாட்டிற்கும் சம்பந்தம் இல்லை. அதைப்போல, இந்த கம்பெனியிலே யார், யார் share holders என்று கேட்டால், இந்திரா தேவி தாக், ஜிதேந்திரா ஜெயின், திவாகர், அவர் மட்டும் இந்த ஊர்க்காரர்—பிறகு கமலேஷ் பட்வா, லலித் குமார் ஜோஷி, மது ஜெயின், மகாவீர் காந்த் சுரானா; இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வாறு இந்த மாநிலத்திற்குச் சம்பந்தம் இல்லாமல் வட நாட்டைச் சேர்ந்தவர்கள் பலர் share holders ஆக இருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்த நபருக்கு அவர் பெயரிலே நேராக share இல்லாமல், வேறொரு கம்பெனிமூலமாக share எடுத்து வைத்திருக்கிறார். அதுவும் பெரிய கோடிக்கணக்கிலேயா என்று கேட்டால், அதுவும் இல்லை. சில இலட்சக்கணக்கிலே. இப்படி 22 கோடி ரூபாய் authorized share capital என்று அறிவித்துவிட்டு, 19 கோடியே 52 இலட்சத்திற்கு share விநியோகித்திருக்கின்ற நிலையில்— இவ்வளவு பேர்களையும் விட்டுவிட்டு, வைகுந்தராஜனை மட்டும் மிரட்ட வேண்டிய அவசியம் இந்த அரசாங்கத்திற்குக் கிடையாது. அவர் என்ன தொழில் செய்கிறார் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும்.

இன்னும் சொல்லப் போனால், கடந்த தி.மு.க. ஆட்சியிலே, அவர் அந்தப் பக்கத்திலே இருக்கக்கூடிய, கடலோரத்தில் இருக்கக்கூடிய மணலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காக விண்ணப்பம் போட்டு, அதற்குப் பிறகு கடந்த தி.மு.க. ஆட்சியிலேதான் அவர் அனுமதி பெற்றார். பிறகு அ.இ.அ.தி.மு.க.விற்கு அவர் சாதகமாகக் கடந்த தேர்தலிலே பணியாற்றினார். அதற்காக இப்பொழுது நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோமா என்று கேட்டால், இதுவரையில் இல்லை. நிம்மதியாகத் தொழில் செய்துகொண்டிருக்கிறார். இன்னும் சொல்லப் போனால், அவருடைய மகன் அண்ணா பல்கலைக்கழகத்திலே மாணவராகப் படித்துக்கொண்டிருக்கிறார். எந்தவிதமான தொல்லையும் வைகுந்தராஜனுக்கோ, அவருடைய குடும்பத்தாருக்கோ இந்த ஆட்சி கொடுக்கவும் இல்லை; கொடுக்கப் போவதும் இல்லை. அப்படிப்பட்ட தலைவர் இன்றையதினம் முதலமைச்சராக இங்கே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பழி வாங்கும் மனப்பான்மை என்றைக்கும் இந்த அரசாங்கத்திற்கு கிஞ்சித்தும் கிடையாது. இன்னும் சொல்லப் போனால், ஜெயா டி.வி.யைப் பார்த்து நாங்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. சன் டி.வி.யினுடைய viewers, பார்வையாளர்கள் எவ்வளவு என்று கேட்டால், 84 சதவிகிதம் பேர். ஜெயா டி.வி.யினுடைய



பார்வையாளர்கள் எவ்வளவு என்று கேட்டால் 5 சதவிகிதம் பேர். அந்த 5 சதவிகிதத்திலேகூட 3 சதவிகிதம் பேர் எப்பொழுது பார்க்கிறார்கள் என்றால், விடியற்காலையிலே 5½ மணியிலிருந்து 6½ மணி வரையிலே பார்க்கிறார்கள். ஏனென்றால், அப்பொழுதுதான் சுப்ரபாதம் போடுகிறார்கள். திருப்பதி தேவஸ்தானத்தைக் காட்டுகிறார்கள். அதற்காகப் பெண்கள் பார்க்கிறார்கள். மீதி இரண்டு சதவிகிதம் பேர்தான் ஜெயா டி.வி.யைத் தமிழ்நாட்டிலே மட்டும் அல்ல, உலகளவில் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு டி.வி.யை பார்த்து, யாரையாவது பழி வாங்க வேண்டும் என்ற எண்ணமோ, அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும் என்ற எண்ணமோ, அதற்காக அந்த டி.வி.யை அச்சுறுத்த வேண்டும் என்ற எண்ணமோ, இந்த அரசுக்குக் கொஞ்சமும் இல்லை என்பதை நான் பணிவன்போடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக விழுப்புரம் மற்றும். . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு subject-க்குள்ளே போயாகிவிட்டது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* விரிவான பதில் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–05*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கேட்டுப் பார்த்தேன்; நீங்கள் வழமைபோல உட்கார்ந்துகொண்டு இருந்தீர்கள். திரும்ப உங்கள் பாதுகாப்புக்கு ஏதாவது கேட்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா? கேளுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த அரசுக்குப் பழி வாங்கும் எண்ணம் இல்லை என்று சொன்னார்கள். அவருடைய கம்பெனி சீல் வைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விடுமுறையில் சென்றுவிட்டு, விருதுநகருக்கு மாற்றப்பட்ட D.R.O.வை மீண்டும் அங்கேயே கன்னியாகுமரிக்கு மாற்றி, அவர்மீது குண்டர் சட்டம் பாய்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு, 6 கனிம

லாரிகள் எடுத்துச் செல்லுகிறபோது, அந்த permit–ஐக் கிழித்து எறிந்துவிட்டு, அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முனைந்திருக்கிறது. எங்களுக்கு அப்படிப்பட்ட எண்ணம் இல்லை என்று சொன்னார்கள். நீங்கள் தமிழ்நாட்டிலே இருப்பவர்களைத்தான் முடக்குகிறீர்களே தவிர, வட மாநிலங்களில் இருப்பவர்களை உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிமப் பொருட்களைக் கடத்திச் செல்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு எல்லா அதிகாரங்களும் இருக்கின்றன. அதுபோலத் தவறு செய்பவர்களைத் தண்டிப்பதிலே எந்தத் தவறும் இருக்க முடியாது. ஆனால், அவரைப் பொறுத்தவரையில், TATA நிறுவனம் மிகப் பெரிய அளவிலே பல்வேறு நபர்களுக்குத் தொழிற்சாலைகளை உருவாக்கி, இங்கேயே அதற்குரிய final product–ஐத் தயாரிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்கிற சூழ்நிலையில்கூட, அதைத் தடுப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளிலே அவர்தான் ஈடுபட்டு, கடந்த ஆண்டுகளிலே அது நிறைவேறாமலும் செய்திருக்கிறார் என்பதெல்லாம் கோப்புகளிலே இருக்கிற உண்மைகள். இவையெல்லாம் அவ்வளவும் இருக்கின்றன. அதனால், தவறு செய்தவர்களை நாம் தண்டிக்க முற்படும்போது, அதற்கு ஒரு கட்சிப் போர்வையைக் கொடுத்தோ, ஜெயா டி.வி.யில் இருப்பவர் என்றோ சொல்லித் தப்பிக்க முயலக் கூடாது. அவர் இதுபோன்ற கனிமங்களை உரிமை இல்லாமல் எடுத்துச் செல்லுகிறபொழுது அவரைத் தண்டிக்கிற அனைத்து அதிகாரமும் அரசுக்கு இருக்கிறது. அதுபோன்ற நடவடிக்கைகள்தான் எடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்மீது தவறு இருக்குமேயானால், அதுபோன்ற தொழில் செய்கின்ற மூன்று பேர்மீது விசாரணை கமிஷன் வைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறதா என்பதைக் கேட்டு, இந்த அரசினுடைய பதில்கள் எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்ற அடிப்படையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, கனிமப் பொருட்களைக் கடத்திச் செல்பவர்களுக்கு வக்காலத்து வாங்குவதற்காக வெளியேறுகிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்கும், இவர்களுக்கும் உள்ள தொடர்பு இதிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Wait, wait. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே குறிப்பிட்டதைப்போல, வைகுந்த ராஜன் அவர்கள் ஜெயா டி.வி.யிலே shareholder ஆக இருக்கிறார் என்பதற்காக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், அவரைப்போல் தொழில் செய்கின்றவர்கள்மீது, இரண்டு பேர்மீது நடவடிக்கை எடுக்கவில்லை; இவர்மீது மட்டும்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறது; இது குறித்து விசாரணை கமிஷன் வைக்கத் தயாரா, என்று மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கேட்டார்கள். முதலமைச்சர் தெரிவிக்கச் சொன்னார்; நிச்சயமாக இந்த ஆட்சியிலே அந்த மூன்று பேர்மீதும் அல்ல, யார் தவறு செய்திருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும், விசாரணைக் கமிஷன் வைப்பதற்கும் இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (அ) பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு கிராமத்தில் இடி தாக்கி 7 பேர் காயமடைந்தது—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் இடி தாக்கி,

[திரு. தி. வேல்முருகன்] [2007 ஏப்ரல் 19

விழுப்புரத்தில் 7 பேர் உயிரிழந்தனர்; பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உள்ளடங்கிய மேல்மாம்பட்டு என்ற கிராமத்தில் இரண்டு வீடுகளில் இடி விழுந்து, இடி விழுந்ததால் ஒரு வீட்டில் ஒரு மாடு அதே இடத்தில் இறந்திருக்கிறது. இன்னொரு வீட்டில் இடி விழுந்து 7 நபர்கள் மிகப் பெரிய காயத்திற்கு உள்ளாகி, உடல், கால்கள், முகம் முழுவதுமாகக் கருகி, அவர்கள் பண்ருட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு மேல் சிகிச்சை செய்ய முடியாது என்ற காரணத்தினால், அரசு பொது மருத்துவமனை, கடலூருக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

நான் பேரவைத் தலைவர் வாயிலாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, நேற்றையதினம் விழுப்புரத்தில் இடி விழுந்து 7 நபர்கள் உயிர் இழந்ததற்கு ஒரு இலட்சம் ரூபாயை சில மணி நேரங்களிலே நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அனுப்பி, அங்கு வழங்கி, அந்த மக்களுக்கு ஆதரவாக இருந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு முதலில் நான் இந்த நேரத்திலே நன்றி சொல்லுகிறேன்.

அதேபோல், எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களும் அங்கே சென்று, அந்தக் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லிவிட்டு, எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உடனடியாக அழைத்து, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு இடி தாங்கிக் கருவி நிறுவப்பட வேண்டும் என்று சொல்லி, அதற்காக நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான்கூட இதற்கு முன்பாக ஒரு பிரச்சினையை எழுப்பும்போது, மாண்புமிகு நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், நானே ஒரு இடிதாங்கி என்ற வார்த்தையை இந்த அவையிலே குறிப்பிட்டார்கள். அந்த வகையில், அடிக்கடி இடி ஏற்பட்டுப் பல்வேறு பகுதிகளில், ஒரு ஆண்டுக்கு சராசரியாக 60லிருந்து 70 நபர்கள் உயிர் இழப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. அதனால், இன்றைக்கு நவீனக் கருவிகள், வசதிகள் எல்லாம் வருகை தந்திருக்கின்றன. இனி வருங்காலங்களில் இதுபோன்ற உயிர் இழப்புகள் ஏற்படாமல் இருப்பதற்கு, அண்ணா தொழில்நுட்பக் கல்லூரியுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அனைத்துப் பஞ்சாயத்துகளுக்கும், பேரூராட்சிகளுக்கும், நகராட்சிப் பகுதிகளுக்கும் இடிதாங்கிகளை நிறுவி, இனிமேல் இடி விழுந்து மக்கள் பலி இல்லை என்கிற ஒரு நிலையை உருவாக்குவதற்கு அரசு முன்வர வேண்டும். மிகப் பெரிய அந்த விபத்துக்கு உள்ளாகி மருத்துவமனைகளிலே அனுமதிக்கப்பட்டிருக்கிற எங்களுடைய தொகுதியைச் சேர்ந்த அந்த



2007 ஏப்ரல் 19] [திரு. தி. வேல்முருகன்]

7 நபர்களில் 3 பேர் குழந்தைகள். முகம் கருகியிருக்கிறது; கால் கருகியிருக்கிறது; வயிற்றுப் பகுதியெல்லாம் கருகிய நிலையிலே இருக்கின்றார்கள். அவர்களுக்குப் போதிய சிகிச்சை அளிப்பதற்கும், அந்தக் குடும்பங்களுக்குப் போதிய அளவு நிதியுதவி வழங்குவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அங்கே இரண்டு வீடுகள் முற்றிலும் சேதமடைந்திருக்கின்றன. ஒரு மாடு அதே இடத்தில் இறந்திருக்கின்றது. வீடுகளைச் சீரமைப்பதற்கும் நிவாரணம் வழங்குவதற்கும் அரசு முன்வருமா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக முதல்வரிடத்தில் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

• **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் இரவு விழுப்புரம் மாவட்டத்திலே ஒரு கிராமத்தில் அங்காள பரமேஸ்வரி கோயிலில் அங்குள்ள பூசாரிகளும், பக்தர்களும் கூடி, இடுகாட்டுக் கொட்டகையிலே அமர்ந்து, எப்படி மறுநாள் பூஜைகளை அம்பாளுக்குச் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்த நேரத்தில், அருள்மிகு அம்பாள் கருணையாலோ அல்லது இயற்கையின் சதியாலோ இடி விழுந்து, 8 பேர் மாண்ட செய்தி கேட்டவுடன், அங்கிருந்த மக்கள் பிரதிநிதிகள் அந்தச் செய்தியை எங்களுக்கு அறிவித்துவிட்டு, குறிப்பாக, அந்த வட்டாரத்தினுடைய நண்பர்களையெல்லாம் சந்தித்து, விவரம் அறிந்து, அதிகாரிகளைக் கலந்து பேசி, அந்தக் குடும்பங்களுக்கு எவ்வளவு ரூபாய் தர வேண்டும் என்ற கணக்கைக்கூட என்னிடத்திலே தொலைபேசியிலே பேசிவிட்டு, நான் நேற்று உடல்நிலை சற்று சரியில்லாத காரணத்தினால், வர இயலாத சூழ்நிலையில், நம்முடைய அவை முன்னவர் நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களிடத்திலே செய்தியை அனுப்பி, அவர்கள் அந்தக் குடும்பங்களுக்கு உதவிப் பணம் எவ்வளவு தரப்படும் என்ற செய்திகளையெல்லாம் இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

அதைப்போல, நம்முடைய நண்பர் வேல்முருகன் அவர்களும், நேற்றையதினம் எல்லாம் செய்துவிட்டு இந்த அவையிலே வந்து பேசியதைப்போல அவரும் இந்தக் காரியங்களையெல்லாம் செய்துவிட்டு இந்த அவையிலே வந்து பேசியிருப்பாரேயானால், நான் நன்றி கூறியிருப்பேன். பரவாயில்லை. தாமதமாகச் சொன்னாலும், தக்கபடி அவை கவனிக்கப்படும் என்று நான் கூறி, இந்த அளவிற்கு என்னுடைய விளக்கத்தை வழங்க விரும்புகின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### (ஆ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

— — —

### (அ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007–2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,55,19,000/– ஆகியவற்றுக்கு மேற்பட்ட தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 326, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5350, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத். தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7303, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8826, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11157, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11393, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5252, திரு. சு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7823, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7903, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8018, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8591, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8732, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10105, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10414, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11287, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10040, திரு. எஸ். இராசசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11861, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 387, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முந்திரியாலைத் தொழிலாளர்களுக்குக் கடந்த ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட குறைந்தபட்சக் கூலிச் சட்டம், அவர்கள் வாங்கிக்கொண்டிருந்த கூலியைவிடவும் குறைந்த கூலியாக இருந்ததால், அமல்படுத்த இயலாமல் போனது. எனவே, தற்போது அவர்கள் பெற்று வரும் கூலியைக் கருத்தில்கொண்டு, அந்தக் குறைந்தபட்சக் கூலியை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1102, திரு. ஆர். ஞானதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1851, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழிலாளர் நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4597, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5213, திரு. சு. குணசேகரன்.



**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5294, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நல வாரியங்கள் செயல்பட உரிய நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5408, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகத்தில் இயங்கி வரும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்புகளில் குறைந்தது 50 சதவீதம், அங்கே வசிக்கும் இளைஞர்களுக்கு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5503, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல்லில் உள்ள தனியார் வர்த்தக நிறுவனங்கள் (ஜவுளிக் கடைகள்) பிரதி ஞாயிறு தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5649, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5742, திருமதி செல்வி ராமஜெயம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6136, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் உள்ள தொழிலாளர் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6175, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6220, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டாசுத் தொழிலில் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6294, திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6325, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6406, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் ஒரு ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6447, திரு. ல. ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6821, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் இ.எஸ்.ஐ., மருத்துவ வசதி விரிவாக்கம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7109, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திரைப்படத் துறையில் உள்ள குழந்தை நட்சத்திரங்களைக் குழந்தைத்

தொழிலாளர்களாகக் கருதி, அவர்களைப் பதிவு செய்து, அவர்களுக்கான உரிமைகளைக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7163, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அரசின் உதவித் தொகை கிடைப்பதற்குண்டான இடைப்பட்ட காலத்தில் அவர்களுடைய வேலைக்கான பயிற்சி மையம் ஈரோட்டில் துவக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7259, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிக்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7365, திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 7425, திரு. செ. பொன்னுதுரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7500, திரு. ஓ.கே. சின்னராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7653, திரு. அருள் அன்பரசு.

முற்பகல் 11–15

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோளிங்கரில் உள்ள டி.வி.எஸ். கம்பெனி மற்றும் ப்ரேக்ஸ் இந்தியா கம்பெனிகளில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7690, திரு. வீர. இளவரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7831, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த 5 ஆண்டு காலங்களில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு (2004–2005 ஆண்டுக்கானது) 26–10–2006 என்ற நாளைக் கால நீட்டிப்புச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7931, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் உள்ள தொழிற்சாலைப் பகுதியில், குறிப்பாக, மறைமலைநகர், ஆலத்தூர் மகேந்திரா சிட்டி, சிறுசேரி போன்ற பகுதிகளில் உள்ள தொழிற்சாலைப் பகுதிகளில் பணிபுரியும் தொழிற்சாலைப் பணியாளர்களை அதிக நேரம் வேலை வாங்கிக்கொண்டு, குறைந்த சம்பளம் வழங்கி வரும் தொழிற்சாலைகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7937, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் தொழிலாளர் நலத் துறை அலுவலகம் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8185, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8239, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொருளாதார வளர்ச்சியில் தொழிலாளரின் நலன் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்போன்றவற்றைக் கருத்தில்கொண்டு அரசின் செயல் திட்டங்கள் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஓதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8263, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8264, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8921, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தொழிற்சாலைகளில் பணியாற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு குறித்து விவாதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9598, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழிலாளர் நல வாரியத்தில் போதிய ஊழியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9816, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட மற்றும் பழங்குடியின ஊழியர்கள் நடத்தும் தொழிலாளர் அமைப்புகளுக்கு நிறுவன அங்கீகாரம் அளிக்கப்பட

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9857, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவேரிப்பட்டணம் தொகுதியில் பனையேறும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பில்லாத நேரங்களில் அவர்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் உதவித் தொகைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9906, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கடந்த கால ஆட்சியில் ரூ.4,000/– தொகுப்பூதியத்தில் அனைத்துத் துறைகளிலும் நியமனம் செய்த அரசு ஊழியர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கி, அவர்களுக்கும் பணிப் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10029, திரு. மா. தண்டபாணி.



**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10562, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் படித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, பல ஆண்டுகளாகக் காத்திருப்போருக்கு வேலை வழங்க, தனியார் துறைகளிலும் இட ஒதுக்கீட்டு முறைகளைக் கடைப்பிடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10737, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களை, தலைநகருக்கே தேடி வராமல் வருவாய்க் கோட்ட அளவில் 2 அல்லது 3 அலுவலகங்களை உருவாக்கி, மாணவர்களின் நேரம், பயணச் செலவைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10815, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11527, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த படித்த இளைஞர்களுக்கு நேர்காணலில் கலந்துகொள்ளப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11628, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயத் தொழிலாளர்களுக்கு விவசாய உபதொழிலுக்கான பயிற்சி மையம் நன்னிலம் பகுதியில் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11800, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கட்டடத் தொழிலாளர்களின் கூலியை அரசு நிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,55,19,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17—கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை), மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 337, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5377, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1149, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11377, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2679, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5077, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6161, திரு. ஆர். சின்னசாமி.



**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5669, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10039, திரு. எஸ். இராசசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7042, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7880, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8021, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8741, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10146, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11091, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7260, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1104, திரு. ஆர். ஞானதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1299, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3848, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஓட்டப்பிடாரம் ஒன்றியத்தில் உள்ள தெற்கு ஆவரங்காட்டில் உள்ள கைத்தறிக்கூடக் கட்டடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது; அதனைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4588, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில் ஏழை நெசவாளர்கள் அதிகமாக வாழ்வதால், அவர்களின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4801, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை நெசவாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5229, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிப்பட்டி, ஜக்கம்பட்டியில் நெசவாளர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் தொழில் செய்வதற்கு வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5449, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி நெசவாளர்கள் புதிய கூட்டுறவு அமைப்பை உருவாக்குவதற்குத் தற்போதுள்ள நிபந்தனைகளைத் தளர்த்த



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5594, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மூடப்பட்ட அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளையும் திறக்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5626, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5706, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியில் புதிய விசைத்தறி உற்பத்தியாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5756, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ. ஏ. டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர் தொகுதியில் உள்ள பணமலைப்பேட்டை, கண்டாச்சிபுரம், ஜம்பை ஆகிய கிராமங்களிலும், மேலும் சித்தாத்தூர், செங்கமேடு ஆகிய கிராமங்களிலும் வாழும் கைத்தறித் தொழிலாளர்களுக்குத் தொழிற்கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5935, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி மற்றும் துணி நூல்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை இரத்துச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6010, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் அதிகமாகக் கைத்தறி நூல் மற்றும் ஆடைகள் நெய்யப்படுகின்றன; ஆனால், அங்குள்ள நெசவாளர்கள் விற்பனைக் கூடம் இல்லாமலும், போதிய அரசு உதவி இல்லாமலும் உள்ளனர்; அரசு விற்பனைக் கூடம் அமைத்து, கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6045, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள தனியார் மில்கள் சில மூடப்பட்டுள்ளதால் அரசு மில்களை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6222, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6261, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறித் தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களுக்குக் கூடுதல் கூலி நிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6295, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் பகுதியில் விசைத்தறி மற்றும் கைத்தறித் தொழில் செய்பவர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6324, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6364, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் தொகுதி, பொன்னமராவதி ஒன்றியம், பொன்னமராவதியில் மூடப்பட்டுள்ள கைத்தறிக் கூடங்களை மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6379, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, அவர்களின் நலன் கருதி மானியத்துடன் விசைத்தறிக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6449, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெசவுத் தொழில் செய்யும் அனைத்துத் தொழிலாளர்களையும் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து, அரசு, நெசவாளர்களுக்கு வழங்கும் அனைத்துச் சலுகைகளையும் நெசவுத் தொழிலாளர்கள் பெற்றுப் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6831, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெசவாளர்கள் அதிகம் வசிக்கின்ற காஞ்சிபுரம் தொகுதியில் நெசவுத் தொழில் நலிந்துவிட்டதால், கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வீடு அடமானக் கடன் பெற்றுத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் வறுமையில் உள்ளதால், அவர்களது அடமானக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7090, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறித் துணிகளுக்கு Value Addition தருவதற்காக இந்தியாவின்

பிரபல டிசைனர்களை அழைத்துப் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7164, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொடக்குறிச்சி தொகுதி, தாண்டாம்பாளையத்தில் அமையவிருக்கும் கைத்தறிக் குழுமம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7369, திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7412, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, கள்ளியம்புதூரில் உள்ள கள்ளியம்புதூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்திற்குக் கட்டடம் மற்றும் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7480, திரு. ஆர். வைத்திலிங்கம்.



**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி நெசவாளர்கள் அனைவருக்கும் அரசு சார்பில் மானிய விலையில் நூல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7563, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7642, திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7669, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர், கல்லிடைக்குறிச்சி, புதுக்குடி, சேரன்மகாதேவி, பத்தமடை, இடைகால் போன்ற ஊர்களில் வசிக்கும் ஏழை நெசவாளர்கள், பாய் முடைவோர் துயர் துடைக்க, இலவச வீடு, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7729, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் கச்சா நூல் தட்டுப்பாடு நிலவுகிறது: அதனை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7986, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீண்ட காலமாக நெசவாளர்களுக்கு உயர்த்தப்பட வேண்டிய கூலி உயர்வு, அகவிலைப் படி உயர்வுக்கான அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8380, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் கைத்தறி நெசவாளர்களுக்குக் கைத்தறிப் பூங்கா ஒன்று ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9514, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ளவர்களுக்குப் பட்டு நெசவு செய்ய, பட்டு நெசவுப் பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9655, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் தொகுதியில் கைத்தறிப் பூங்கா மற்றும் கைத்தறி ஏற்றுமதி வளாகம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9777, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் இயங்கும் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9833, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி நெசவாளர் பயன்படுத்தும் நூலுக்கு மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10022, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் பகுதியில் சுமார் 100 நூற்பாலைகள் இயங்கி வருகின்றன; இன்னும் நூற்பாலைகள் வருவதாக உள்ளன; எனவே, வேடசந்தூரில் ஒரு நூற்பாலைப் பூங்கா உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10553, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பருத்தி அதிகமாக உற்பத்தியாவதால், அங்கு அரசு சார்பில் புதிதாக நூற்பு மில் ஒன்று தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10728, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியிலுள்ள நெடுங்குணம், வெடால், குண்ணகம்பூண்டி, பொன்னூர், சி.ம.புதூர் போன்ற பல கிராமங்களில் முழு நேரமாகப் பட்டுச் சேலை மற்றும் நாட்டு வேட்டி, புடவைகள் தயாரிக்கின்றனர்; இவர்களுக்கென இருந்த சங்கங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு, மூடப்பட்டுள்ளன. அவற்றை உரிய நிதி வழங்கி மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11205, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகரத்தில் உள்ள நெசவாளர்களுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11584, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் நலிவடைந்த நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய இயந்திரம் வாங்க

[திரு. சு.ப. வேலுமணி] [2007 ஏப்ரல் 19

மானியத்துடன்கூடிய நிதி உதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11807, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11825, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏற்கெனவே கைத்தறிக்கென ஒதுக்கப்பட்டுள்ள 22 ரகத் துணிகளை, கைத்தறியிலேயே உற்பத்தி செய்து, நெசவாளர்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.522,99,12,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2007 ஏப்ரல் 19]

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு உரிய விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்றைக்கு இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி. 15 நிமிடங்களுக்குள் பேசி முடியுங்கள்.

***திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்திலே நின்று பேசுவதற்கு வழிவகுத்துக் கொடுத்த

---

@ 187 முதல் 258 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 259 முதல் 304 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு, சிங்காநல்லூர் தொகுதியிலேயிருந்து என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த சிங்காநல்லூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய வெற்றிக்காக உழைத்த கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, தொழிலாளர் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய துணைத் தலைவருக்கும், கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை என்பது, 14 வகைப் பிரிவுகளுடன்கூடிய மிகப் பெரிய துறை. தமிழகத்திலுள்ள 2,000–க்கும் மேற்பட்ட பஞ்சாலைகளில் பணியாற்றும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான ஊதியப் பஞ்சப் படி உள்ளிட்ட இதர சலுகைகள் வழங்கும் ஒப்பந்தம் 1998 டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்துவிட்டது. 1999 ஆம் ஆண்டு கோரிக்கைகள் வைத்து, புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தக் கோரி ஆலை உரிமையாளர்கள் சங்கங்களுக்குத் தொழிற்சங்கங்கள் கோரிக்கை வைத்தன. அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வர மறுத்துவிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தியும், உடன்பாட்டிற்கு வர மறுத்துவிட்டார்கள். அதன் பின்பு, கோரிக்கை 13–9–2001 ஆம் தேதியன்று தொழில் நீதிமன்ற விசாரணைக்கு விடப்பட்டது. 19–7–2002 ஆம் தேதி, தனித் தொழில் நீதிமன்றத்திற்கு மாற்றி உத்தரவிட்டார்கள். 21–6–2006 ஆம் தேதியன்று தமிழக முதல்வர் அவர்களை மாநிலக் கூட்டு நடவடிக்கைக் குழுத் தலைவர்கள் அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து மனு கொடுத்தார்கள். அதன்மீது தொழிலாளர் நலத் துறை அமைச்சரும், அவரது அலுவலகத்தில் நான்கு முறை முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால், ஆலை உரிமையாளர்கள் பேச்சுவார்த்தைக்கு வரவும், உடன்பாடு காணவும் மறுத்துவிட்டார்கள். 4–1–2007 ஆம் தேதி, சென்னை, தொழிலாளர் துறை அலுவலகத்தில் நடைபெற்ற முத்தரப்புப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட 3 முதலாளிகள் சங்கத் தலைவர்கள், பொங்கலுக்குப் பிறகு பேச்சுவார்த்தை நடத்தலாம்; தேதி சொல்லுகிறோம் என்று கூறிச் சென்று விட்டார்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னிந்திய மில் உரிமையாளர் சங்கம், 5–2–2007 ஆம் தேதிய கடிதத்திலும், Tamil Nadu Spinners' Association தேதி குறிப்பிடாத கடிதத்திலும் பேச்சுவார்த்தை நடத்த வர இயலாது என்றும், அழைத்தாலும் வரமாட்டோம் என்றும் கடிதம் எழுதியுள்ளது. 13–3–2007 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தடையாணையும் பெற்றுவிட்டார்கள். எனவே, இதுவரை தீர்ப்பு வழங்கப்படாத நிலையில் அரசு சட்டமன்ற நடவடிக்கையின்மூலம் தீர்வு காணும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

பஞ்சாலைத் தொழிலில் நிரந்தரத் தொழிலாளர்கள் மிகவும் குறைவாக உள்ளார்கள். கோவை, திண்டுக்கல், மதுரை, சேலம் ஆகிய பகுதிகளிலும் தமிழகத்திலுள்ள பஞ்சாலைகள் அதிகமாக உள்ள பகுதிகளிலும் பணியாற்றும் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல், கூலித் தொழிலாளர்களாக, கேப்பைக் கூலித் தொழிலாளர்களாக, 12 மணி நேரம், 14 மணி நேரம், வயது வந்துள்ள பெண்களை வைத்து, ஆலைக்குள்ளேயே கொத்தடிமைகளைப்போல வைத்து வேலை வாங்குகிறார்கள். 8 மணி நேர வேலைக்குப் பதிலாக 10 மணி நேரம், 12 மணி நேரம் என்று வேலை வாங்குகிறார்கள். கோவை, பஞ்சாலையில் வேலைப் பளுவைச் சுமத்துகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் நாளொன்றுக்கு 40 ரூபாய் முதல் 60 ரூபாய் வரைதான் இருக்கிறது.

பெண்களுக்குத் திருமணத் திட்டம் என்ற பெயரில் 4, 5 ஆண்டுகள் கழித்து 50 ஆயிரம் ரூபாய் கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால், தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவதில்லை. நிரந்தரம் செய்யப்பட்ட ஒரு தொழிலாளிக்கு நாளொன்றுக்கு 295 ரூபாய் கொடுக்க வேண்டும். ஆனால், தொழிலாளர்களுக்கு 40 ரூபாய் முதல் 60 ரூபாய் மட்டுமே கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு எந்தவிதத் தொழில் பாதுகாப்பும் இல்லை. தொழிலாளர் நலச் சட்டம், தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள் உலகிலேயே, இந்தியாவில்தான் அதிகமாக உள்ளன. ஆனால், இந்தத் தொழிலாளர் நலச் சட்டங்கள், சமீப காலமாகத் தொழிலாளர்களுக்குப் பயன்படுவதில்லை. பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் மட்டுமல்ல, பன்னாட்டு நிறுவனங்கள்மூலமாக

வரக்கூடிய எந்தத் தொழிற்சாலைகளிலும் தொழிற்சங்கங்கள் அமைப்பதற்கு அனுமதிப்பதில்லை. இந்த நிலை தொடர்வதால், கடந்த காலங்களில் தொழிற்சங்கத் தலைவர்கள் போராடிப்பெற்ற உரிமைகள் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. எனவே, தமிழக அரசு தலையிட்டுத் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பைப் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம், எனது தொகுதியான சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட Pope College-லேயிருந்து விளாக்குறிச்சி ரோடு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் தொழில்நுட்பப் பூங்கா அமையவிருக்கிறது. இங்கு ஏற்கெனவே போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. அதேபோல, bye-pass ரோட்டிலுள்ள மேம்பாலம். இந்த இரண்டு மேம்பாலங்களிலும், தற்போது மாநில அரசுப் பணிகள் முழுவதும் முடிவடைந்துவிட்டன. மத்திய அரசின் இரயில்வே துறையினால் செய்யப்பட வேண்டிய பணிகள் 4 வருடங்கள் ஆகியும் முடிக்கப்படாமல் உள்ளன. பொது மக்கள் அவதிப்படுவதால், உடனடியாகப் பாலத்தின் கட்டுமானப் பணிகளை முடித்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில், போதுமான ஆய்வாளர்கள் நியமிக்கப்படாததால், இக்குறையைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைத் தொழிலாளர்கள், தேயிலை, ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், உழைக்கும் பத்திரிகையாளர்கள் என அனைவரும் தொழிலாளர் நலச் சட்டத்தில் இடம்பெறுகிறார்கள். 2001 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் பொறுப்பேற்றபோது, 1,500 ரூபாயாக இருந்த பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தை மாதம் 3,000 ரூபாயாக உயர்த்தி அம்மா அவர்கள் அரசு ஆணையிட்டது. தற்போதைய ஆட்சியாளர்கள், நலிந்த அந்தப் பத்திரிகையாளர்கள் ஓய்வூதியத்தை இரண்டு மடங்காக உயர்த்த மனமில்லாவிட்டாலும், ஓய்வூதியத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய காலக்கட்டத்தில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பது அரிதாகிவிட்டது. அதற்குக் காரணம், மூலப் பொருட்களான சிமெண்ட், கம்பி, செங்கல், மணல், ஜல்லி ஆகியவற்றின் விலைகள் உயர்வே.



எனவே, இந்தப் பொருட்களின் விலையை அரசு குறைத்து, கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறையைப் பொறுத்தளவிலே, தேர்தல் நேரத்தில் நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் என்று அறிவித்துவிட்டு, தற்போது கைத்தறிக்கு இரண்டு மாதத்திற்கு 100 யூனிட்டுகள் என்றும், விசைத்தறிக்கு இரண்டு மாதத்திற்கு 500 யூனிட்டுகள் என்றும் அறிவித்திருப்பது, நெசவாளர்களை ஏமாற்றமடையச் செய்யும் செயலாகும். விசைத்தறியைப் பொறுத்தவரை, 6 முதல் 8 விசைத்தறிகளை ஒரு நபர் ஓட்டுவார். அவருக்கு 4,000 யூனிட்டுகள் செலவாகும். ஆனால், 500 யூனிட்டுகள் மட்டுமே இலவசம் என்பது நெசவாளர்களை ஏமாற்றும் செயலாகும். கடந்த 5 ஆண்டு கால அம்மா அவர்கள் ஆட்சியில் இரண்டு முறை மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து, 2001 முதல் 2006 வரை 9 கோடியே 31 இலட்சம் ரூபாயும், ஒரு விசைத்தறிக்கு சுமார் 1,000 ரூபாய் என்ற அளவில் சலுகையையும் வழங்கினார்கள். இதனால், 66 இலட்சம் பேர் பயனடைந்தார்கள். விசைத்தறிகளுக்கு நவீன நாடா வாங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே ரூபாய் 5,000 மானியம் வழங்கப்பட்டது. அதேபோன்று, 1991 முதல் 1996 வரை 11 கோடி ரூபாய்க்கு மின்சாரச் சலுகை வழங்கப்பட்டது. 1996 முதல் 2001 வரை கடந்த கால ஆட்சியில் இரண்டு முறை மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறீர்கள். (குறுக்கீடு)

*முற்பகல் 11–30*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அவர் பேசும் நேரத்தைச் சேர்த்துக் கொடுக்கிறேன். அவர் எவ்வளவு நேரம் பேசுகிறாரோ, அந்த நேரத்தைச் சேர்த்துக் கொடுத்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவை[illegible]ணைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு இலவச மின்சா[illegible]க் கொடுத்து, அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவே[illegible]

கலைஞர் அரசுதான் என்பதனை உறுதியாக எங்கும் சொல்ல முடியும். நெசவாளர்களுடைய பிரச்சினையிலே மிகப் பெரிய போராட்டங்களை நடத்தி, நாங்களெல்லாம் குரல் கொடுத்திருக்கின்றோம். அதற்கு சென்ற முறை ஆண்ட அண்ணா தி.மு.க. அரசு எதையும் செய்யவில்லை. இந்த முறை கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அந்த இலவச மின்சாரத்தை அறிவித்தார்கள் என்பதுதான் உண்மை, உண்மை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்குத் திரு. சின்னசாமி அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்லட்டும், நான் ஒரு நிமிடம் நேரம் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் என்ன பிரச்சினை இருக்கிறது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் (கூச்சல்-குழப்பம்) அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர், ஒரு கருத்தைச் சொல்லுகிறார். அந்தக் கருத்து (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள், திரு. வேலுசாமி, உட்காருங்கள். அ.தி.மு.க.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்கிறார். அந்தக் கருத்து சரியா, தப்பா என்று சொல்வதற்கோ அல்லது அதற்கு ஒரு clarification கேட்பதற்கோ, ஒரு Point of Order கிளப்புவதற்கோ இன்னோர் உறுப்பினருக்கு உரிமையுண்டு. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். (கூச்சல்-குழப்பம்) திரு. ஜெயக்குமார், உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) No. no, உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அது எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) எனக்கும் தெரியும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் இராமன் அவர்கள் நெசவாளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இதற்காகப் பல போராட்டங்களை நடத்தியவர். மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் சொல்லுகிற கருத்து தவறு என்று மறுத்துச் சொல்வதற்கு அவருக்கு உரிமையுண்டு. அதற்காக இப்படிக் கூச்சல் போட்டால் என்ன அர்த்தம்? சத்தம் போடுவதனாலேயே ஒரு பிரச்சினை மாறிவிடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

•**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உரையில் பேசுகின்றபொழுது ஏதாவது ஆட்சேபனைகள் இருந்தால்,



சம்பந்தப்பட்ட துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லலாம். ஆனால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், அவருக்கு உரிமை இருக்கிறது என்று. அவர் பல போராட்டங்களில் கலந்துகொண்டிருக்கிறார் என்று. அவர் பேசுகின்றபோது அவருடைய வீர தீரச் செயல்களை அவர் சொல்லலாம். ஆனால், இன்னோர் உறுப்பினர் பேசுகின்றபொழுது இடைமறித்து, இவருடைய வீர தீரச் செயல்களைச் சொல்வது எந்தவிதத்திலும் நியாயமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**HON'BLE THIRU DURAIMURUGAN:** Speaker sir, every Member has got right to raise a Point of Order or Point of Clarification or Point of Information. On that basis, Hon'ble Member Mr. Raman is asking this. So, it is not a fault.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராமன், நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதை முழுமையாகக் கேட்டுவிட்டுத்தான் பேச வேண்டும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். இடையில் அவர் எழுந்து clarification கேட்டால், யாரும் அதை ஆட்சேபனை செய்யப் போவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி பேசும்போது, குற்றச்சாட்டாக ராமன் பேசிக்கொண்டிருந்தார். அதனால்தான் அவருக்கு நாங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தோமேயொழிய, ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தேவையில்லாமல் ஓர் உறுப்பினருக்கு இன்னோர் உறுப்பினர் பதில் சொல்லிக்கொண்டிருந்தால் இந்த அவையை எப்படி நடத்த முடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நாங்களும் கேட்கிறோம். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. சி... பேசுங்கள்.

227657

முற்பகல் 11–35

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** உறுப்பினர் பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. சின்னசாமி, பேசுங்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கடந்த கால ஆட்சியைப் பற்றியும், நிகழ்கால ஆட்சியைப் பற்றியும், நடந்த சம்பவங்களை இங்கே குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறேன். அது தவறு என்று சொன்னால், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் பதில் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள என்றைக்கும் தயாராக இருக்கிறோம். கடந்த ஐந்தாண்டு கால அம்மா அவர்களுடைய ஆட்சியில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சின்னசாமி, நீங்கள் ஒரு தொழிற்சங்கவாதி. சம்பந்தப்பட்ட அமைச்சர் மட்டும்தான் பதில் சொல்ல வேண்டுமென்று அரசியல் சட்டத்தில் இல்லை. யார் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். இது ஒரு collective responsibility தான். பேசுங்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு கால அம்மா அவர்கள் ஆட்சியில் 2 இலட்சம் பேர் பயனடையக்கூடிய வகையில், நெசவாளர்களுக்குப் புதிய சுகாதாரத் திட்டங்களை அறிமுகப்படுத்தியதோடு, நெசவாளர்களுக்குக் காப்பீட்டுத் தொகையாக 4 கோடி ரூபாயை, premium தொகையாக அந்த ஆண்டில் அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்தார்கள். விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை இரத்துச் செய்ததுபோல, கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியுள்ள ஏழையெளிய கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களின் கடன்களையும் இரத்துச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10 ஆண்டு காலமாக 13 ஆயிரம் பேர் மக்கள் நலப் பணியாளர்களாகப் பணிபுரிகிறார்கள். இவர்களுக்கு 1,000 ரூபாய் மட்டும் ஊதியமாகத் தரப்படுகிறது. அவர்களுக்குச் சம்பள உயர்வும், பணி நிரந்தரமும் செய்யப்பட வேண்டுமென்று இந்த ஆட்சியை நான் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாதம் 6 ஆம் தேதி, அரசூரிலே உள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழர், வெள்ளியங்கிரி அவர்களை, அந்தப் பஞ்சாயத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவரோடு, 10, 15 பேர் சேர்ந்து அடித்துக் கொலை செய்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நலப் பணியாளர்களுக்கெல்லாம் சம்பள உயர்வு மற்றும் அவர்களையெல்லாம் permanent செய்ய வேண்டுமென்று கோரிக்கையாகத் தொழிற்சங்கத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அவர்களை வேலையைவிட்டு வீட்டுக்கு அனுப்பி, அவர்கள் ஐந்தாண்டு காலம் படாதபாடுபட்டு, பலர் செத்து, உளுத்துக் கிடந்தார்கள். மீண்டும் அவர்களுக்கு வாழ்வளித்தது கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர், அ.தி.மு.க. ஆட்சியில் அவர்களை வீட்டுக்கு அனுப்பியது தவறு என்று ஒரு வார்த்தை கண்டித்திருந்தால், உங்களுக்கு மிகவும் பெருமையாக இருந்திருக்குமே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே கையெழுத்தில் மக்கள் நலப் பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பியது மட்டுமல்ல, அதில் 81 பேர் மேலேயே போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கொலைகாரர்கள்மீது—ஏற்கெனவே நாங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். ஒரு வார காலத்திற்கு மேலாகிறது. இதுவரையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்களை விட்டுவிட்டு, சம்பந்தம் இல்லாதவர்கள் யாரையோ 2, 3 பேரைப் பிடித்து வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். யார் குற்றவாளிகளோ, அவர்களைக் கைது செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவை மாவட்டத்திலே என்னுடைய சிங்காநல்லூர் தொகுதியில், வெள்ளலூர் பஞ்சாயத்திலே, மாநகரத்திலே இருக்கிற குப்பைகளையெல்லாம் கொண்டு போய் அங்கேதான் கொட்டுகிறார்கள். அந்தப் பிரச்சினைக்குப் பல முறை போராட்டங்களெல்லாம் நடத்தி, குப்பைகளை கொட்டுகிற அந்த இடத்தை மாற்ற வேண்டுமென்று பல முறை சொன்னதற்குப் பின்னாலும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியும், பேரூர் தொகுதியும்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதிலே அரசாங்கம் தலையிட்டு, உடனடியாக அந்தக் குப்பைகளைக் கொட்டுகிற இடத்தை மாற்றித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–40*

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையிலும், நேற்றையதினம் என்னை ஒரு சட்டமன்ற உறுப்பினர், துரோகி என்று பேசினார். நான் அந்த இயக்கத்திற்கு நாற்பது, ஐம்பது ஆண்டு காலமாக உழைத்திருக்கிறேன். உழைத்த உழைப்பிற்கு அந்த இயக்கம் எனக்கு என்ன பலன் அளித்தது என்பது அவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஆனாலும், என்னைத் துரோகி என்று சொன்னார்கள். என்னுடைய உழைப்பை மதித்து seat கொடுத்து, வெற்றிபெறச் செய்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நான் நன்றியோடு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) துரோகம் செய்தவர்கள் அவர்களே தவிர, இவர்கள் ஆறு முறை, ஏழு முறை, இவர்களே எம்.எல்.ஏ.களாக வருவார்கள், யாருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கமாட்டார்கள். துரோகம் செய்தவர்கள் அவர்கள் என்று சொல்லி, நன்றி சொல்வதற்கு வழிவிட்ட உங்களுக்கு—இதுவரைக்கும் எங்களை யாரையும் நீங்கள் நன்றி சொல்ல விடவில்லை, என்னை நன்றி சொல்ல விட்டதற்கு உங்களுக்கு நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. சின்னசாமி அவர்கள் நீண்ட நாள் I.N.T.U.C. இயக்கத்தில் பணியாற்றியவர். தேர்தலிலே அவருக்கு வாய்ப்பு அளிக்கவில்லை என்ற



காரணத்தினாலே—அவர் I.N.T.U.C. இயக்கத்திலே இருக்கின்றபொழுது, அங்கே தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏகமாக விமர்சித்தவர்களிலே நண்பர் திரு. சின்னசாமியும் ஒருவர் என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. ஆனால், தனக்கு இடம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக அங்கே போயிருக்கிறார். இன்னும் வெகு விரைவிலே எங்களோடு வந்துவிடுவார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுதும் அவர் I.N.T.U.C. இயக்கத்திலே அகில இந்திய துணைத் தலைவர் பொறுப்பிலே இருந்துகொண்டிருக்கிறார். அதனால், அவர் நிரந்தரமான அண்ணா தி.மு.க. உறுப்பினர் என்று யாரும் கருதிவிட வேண்டாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சின்னசாமி, ஒரே ஒரு நிமிஷம். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சின்னசாமி:** இந்தியாவிலேயே ஒரு தொழிற்சங்கத்திற்கும், ஒரு அரசியல் கட்சிக்கும் தேர்தல் உடன்பாடு ஏற்படுத்திய பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் உண்டு. (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, முடித்துவிடலாம். திரு. கோவை தங்கம் (குறுக்கீடு) மாண்புமிகு திரு. சுதர்சனம். (குறுக்கீடு)

**திரு. டி. சுதர்சனம்:** ஒரு பிளவு உண்டாக்கி—அதாவது, 1991–1996–லும் 2001–2006–லும் என்ன நடைபெற்றது என்றால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குள் ஒரு பிளவை உருவாக்குவார்கள்; அவர்களுக்கு ஆதரவாகப் பேச வைப்பார்கள். அதனாலே, இது ஒன்றும் புதிய காரியம் அல்ல. ஆட்சியில் இருப்பவர்கள் இதுபோன்ற காரியங்களைச் செய்திருக்கின்றார்கள். அதனாலே அருமை நண்பர் திரு. சின்னசாமி அவர்கள் சொல்வது எந்தவிதத்திலும் பொருத்தமுடையது அல்ல, அவர்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு முரணானது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். (குறுக்கீடு)

**திரு. போளூர் ம. வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் allow பண்ணமாட்டேன். உங்கள் தலைவர் சொல்லிவிட்டார். இப்படியே போய்க்கொண்டிருந்தால் நான் அவையை நடத்த முடியாது. (குறுக்கீடு) நான் பிறகு கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) திரு. கோவை தங்கம், உங்களுக்குப் பத்து நிமிடம்தான். வால்பாறையில் ரோடு சரியில்லை, அது, இது என்று சொல்லி நிறைய நேரம் எடுத்துக்கொள்ளக் கூடாது. பிறகு, துறைமுகம் என்றெல்லாம் கேட்கக் கூடாது. Subject மட்டும்தான்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களை வணங்கி, எங்களை வழிநடத்திச் செல்கின்ற மாண்புமிகு மத்திய அமைச்சர் அன்புத் தலைவர் அய்யா ஜி.கே. வாசன் அவர்களையும் வணங்கி, இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த எங்களுடைய C.L.P. Leader அண்ணன் திரு. சுதர்சனம் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் தெரிவித்து, சுமார் ஐம்பது ஆண்டு காலம், (குறுக்கீடு) நான் அதற்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) நானே அதற்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. போளூர் ம. வரதன், உங்கள் தலைவர் சொன்ன பிறகு திரும்பவும் அதைப் பேசுவது சரியில்லை. (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. கோவை தங்கம்:** தொடர்ந்து ஐம்பது ஆண்டு காலம் தமிழ்நாட்டிலே மனித நேயத்தோடு மக்களுக்குப் பணிபுரிந்து, இன்று இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சர் என்று பெயர்பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஐம்பது ஆண்டு காலம், பொற்காலமாக சட்டமன்றத்திலே பணியாற்றி, பொன் விழாவைக் கொண்டாடவிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுக்கு, பொன் விழா கொண்டாடுகின்ற நேரத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 11–45

நேற்று இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நேற்று ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையிலே எதிர்க்கட்சி சகோதரர் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். ஆதி திராவிட மக்களுக்கு ஒரு கல்லூரியைத் தந்தார்களா எனக் கேட்டார்கள். நான் இந்த நேரத்திலே இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். சென்ற 5 ஆண்டு காலமாக இந்தச் சட்டமன்றத்தில் வால்பாறைக்கு ஒரு கலைக் கல்லூரி வேண்டுமென்று சொல்லி நான் பல முறை வலியுறுத்திப் பேசியிருக்கின்றேன்; வற்புறுத்திப் பேசி இருக்கின்றேன்; கெஞ்சியிருக்கின்றேன்; நேரிடையாகவும் கேட்டிருக்கின்றேன், ஆதி திராவிட மக்களுக்கு வால்பாறையில் ஒரு கலைக் கல்லூரியைத் தர வேண்டுமென்று. ஆனால், சென்ற அண்ணா தி.மு.க. ஆட்சியில் எந்தவிதமான முடிவும் செய்யவில்லை. ஆனால், சென்ற 5 ஆண்டு காலமாகக் கிடைக்காத அந்தக் கலைக் கல்லூரியை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுடைய ஆட்சியில், 5 நிமிடங்கள்தான் இந்தச் சட்டமன்றத்திலே பேசினேன், வால்பாறைக்குக் கலைக் கல்லூரியைத் தந்தார்கள்.

அதேபோல, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுடைய காலத்திலேதான் நிலக்கோட்டை தொகுதி, சகோதரி பொன்னம்மாளுக்கும் கலைக் கல்லூரியைத் தந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சப்ஜெக்ட்டிற்கு வரக் கூடாது என்று ஒரு முடிவிற்கு வந்துவிட்டீர்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் அற்புதமான வரியில்லாத பட்ஜெட்டை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதோடு, மக்களுடைய அத்தியாவசியமான உணவுப் பொருட்களுக்கு எல்லாம் வரியைக் குறைத்து, ஒரு நல்ல பட்ஜெட்டை நம்முடைய பேராசிரியர், நிதி அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், 1997 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அய்யா ஆட்சியிலே இருந்தபோதுதான், வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.77 சம்பளமாக இருந்தது. அப்போது தேயிலைத் தோட்டத்

தொழிலாளர்கள் பறிக்கின்ற தேயிலை வெறும் 16 கிலோதான். 2001–ல் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. தொழிலாளர்களுடைய சம்பளத்தில் 5 ரூபாயை நிர்வாகம் பிடித்தபோது, அதை வேடிக்கை பார்த்த அரசுதான் அண்ணா தி.மு.க. அரசு என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதற்குப் பிறகு, பல முறை உண்ணாவிரதப் போராட்டம், மறியல் போராட்டம் நடத்தி, இந்தச் சட்டமன்றத்திலே பல முறை விளக்கிச் சொல்லியும் எந்தவிதமான நடவடிக்கையையும் அ.இ.அ.தி.மு.க. அரசு எடுக்கவில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளிமூலம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். இதைத் தயவுசெய்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு நாளைக்கு, ஒரு தொழிலாளிமூலம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். அதாவது குறைந்தபட்சம் 40 கிலோ தேயிலையைப் பறிக்க வேண்டும்—40 கிலோ தேயிலையைப் பறிக்க வேண்டுமென்று சொன்னால், 4 கிலோ தேயிலைக்கு ஒரு கிலோ தேயிலைத் தூள் தயாரிப்பார்கள். ஒரு கிலோ தேயிலைத் தூள் 100 ரூபாய். அப்படியென்று சொன்னால், 40 கிலோவிற்கு ஆயிரம் ரூபாய் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்மூலம் ஒரு நாளைக்கு சம்பாதிக்கிறார்கள். ஆனால், ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி பெறுகின்ற சம்பளமோ வெறும் 77 ரூபாய். அதுவும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் வெறும் 72 ரூபாயாக இருந்தது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, கடந்த ஆட்சியில் பல முறை இந்தச் சட்டமன்றத்திலே பேசியபின் சிறப்பு நீதிமன்றத்தைத் தந்தார்கள். சிறப்பு நீதிமன்றம் நான்கு ஆண்டுகளாகியும் செயல்படவில்லை. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வருத்தத்தோடு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வால்பாறைக்குத் தொழிற்சங்கத் தலைவர்கள் வருவார்கள். அங்கே சிறப்பு நீதிமன்ற நீதிபதி, 'இன்று வாய்தா, இரண்டு மாதம் கழித்து வாருங்கள்' என்று சொல்வார்கள். காரணம் என்னவென்று கேட்டால், 'அங்கேயிருக்கின்ற டைப்பிஸ்ட் இன்று வரவில்லை; ஆகவே, வாய்தா தருகிறேன்' என்று அறிவித்துவிடுவார்கள். ஒரே ஒரு சாட்சியை மட்டும் விசாரிக்க மூன்று ஆண்டு காலம்



எடுத்திருக்கிறார்கள். இதை நான் பல முறை இந்தச் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அது மட்டுமல்ல, இன்று கேரள மாநிலத்திலே, ஒரு நாளைக்கு 91 ரூபாய் 14 காசு வழங்குகிறார்கள். அங்கே வெறும் 14 கிலோ தேயிலைதான் பறிக்க வைக்கிறார்கள். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டிலே 40 கிலோ வரைக்கும் பறிக்க வைக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் வழங்குகின்ற சம்பளம் வெறும் 77 ரூபாய் என்பதை இந்த நேரத்திலே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முற்பகல் 11–50

அதோடு மட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலே இருக்கின்ற மேனேஜர்கள் யாரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல. வட நாட்டைச் சேர்ந்தவர்கள், மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே, தமிழ்நாட்டில் இருக்கின்ற நம்முடைய தமிழ் மக்களின் குறைகளை அவர்களுக்கு எடுத்துச் சொன்னால், தெரியவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுடைய ஆலோசனையின்பேரிலே, நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கோவைக்கு வந்து, சிறப்பான முறையிலே, அற்புதமான முறையிலே ஒரு பேச்சுவார்த்தையை நடத்த ஏற்பாடு செய்து, நிர்வாகத்தையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தைத் தாருங்கள் என்று பல முறை வற்புறுத்திப் பேசினார்கள். ஆனால், நிர்வாகம் அதைக் கேட்கவும் இல்லை, சம்பளம் வழங்குவதற்கு எந்தவிதமான முயற்சியை எடுக்கவுமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆளுநர் உரையிலேகூட நான் பேசுகின்றபோது, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய கஷ்டங்களை விரிவாக, விளக்கமாகப் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். அப்பொழுது நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், 10 நாட்களிலே பேசி, சம்பளப் பிரச்சினையை முடித்துத் தருவதாக இந்த அவையிலே அறிவித்தார்கள். ஆனால், அதற்குப் பிறகும், நிர்வாகத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பல முறை அழைத்துப் பேசியும், நிர்வாகம் முறையான சம்பளத்தை வழங்குவதற்கு முன்வரவில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான்

தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவேதான், நான் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இலட்சக்கணக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். தன்னுடைய குழந்தைகளைப் படிக்க வைக்க முடியவில்லை. தான் பெற்றெடுத்த வயது முதிர்ந்த பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்க முடியவில்லை. சொல்ல முடியாத துயரத்தில் இருக்கின்றார்கள். ஆகவே, இந்த நேரத்திலே நான் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், கேரள மாநிலத்தைப்போல இங்கேயும் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்து, ஒரு நாளைக்கு 100 ரூபாய் கூலியை நிலுவைத் தொகையோடு பெற்றுத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் நான் பேச ஆரம்பித்திருக்கிறேன். (குறுக்கீடு) இதோ பாருங்கள், சுமார் 5 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்குத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். நேரடியாக point-க்கு வர வேண்டும் என்று.

**திரு. கோவை தங்கம்:** 5 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். அதற்குள்ளே bell அடித்துக்கொண்டிருக்கிறீர்களே, நீங்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையெல்லாம் நீங்கள் கேட்கக் கூடாது. அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டுவிடுவேன்.

**திரு. கோவை தங்கம்:** இன்னும் நான் பேசவே ஆரம்பிக்கவில்லை, நீங்கள் சும்மா bell அடிக்கிறீர்கள். பேச வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள்; விட்டுவிட்டுப் போய்விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியென்றால், உட்கார்ந்துவிடுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவானந்தம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு சலிப்புத் தேவையில்லை. சார், 10 நிமிடம். 2 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் எங்களுடைய கஷ்டத்தையும் உணர வேண்டும்.



**திரு. கோவை தங்கம்:** நான் ஒவ்வொரு முறையும் பார்க்கிறேன். நான் பேசுகின்றபோது நீங்கள் cut பண்ணிக்கொண்டே இருக்கிறீர்கள். இது நியாயம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. (குறுக்கீடு)

**திரு. கோவை தங்கம்:** இன்னும் நான் பேசவே ஆரம்பிக்கவில்லை. 5 நிமிடங்கள்கூட ஆகவில்லை. நீங்கள்தான் குறுக்கிட்டுக் குறுக்கிட்டுப் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கு ஒன்றும் Tea Estate வால்பாறையிலே இல்லை.

**திரு. கோவை தங்கம்:** TATA கம்பெனியினுடைய இலாபம் 129 கோடி ரூபாய் என்பதை இந்த நேரத்திலே நான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவுமே வால்பாறையிலே செய்து கொடுப்பதில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 31–3–2007 ஆம் தேதி தமிழ்நாட்டிலே டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு கேட்டு, மக்களின் நலனுக்காக பந்த் அறிவித்தீர்கள். அமைதியான முறையிலே ஒரு நல்ல பந்த் நடந்தது. ஒரு கை வண்டி இழுக்கக்கூடிய தொழிலாளிகூட அன்று பணி செய்யவில்லை. ஆனால், வால்பாறையிலே இருக்கின்ற தேயிலைத் தோட்ட நிர்வாகம் மட்டும், அந்த வால்பாறையிலே தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை வற்புறுத்தி வேலை செய்ய வைத்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே முழு பந்த். ஆனால், வால்பாறை தேயிலைத் தொழிலாளர்கள் மட்டும் வேலை செய்துகொண்டிருந்தார்கள் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, நிர்வாகம் எதைச் சொன்னாலும் கேட்பதில்லை.

இன்று வால்பாறையிலே இருக்கிற TANTEA தொழிற்சாலை இலாபத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏன் வால்பாறையில் இருக்கின்ற தேயிலைத் தோட்ட நிர்வாகத்தை அரசே ஏற்று நடத்தக் கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

ஆகவே, அரசே வால்பாறையிலே இருக்கின்ற தேயிலைத் தோட்ட நிர்வாகத்தை எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பல முறை பல முயற்சிகள் எடுத்துக்கொண்டார்கள். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை முடிக்க வேண்டும் என்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அதேபோல, வால்பாறை தொகுதி, கீழ்ப்பகுதியில் இருக்கிற விவசாயிகளுடைய 15,000 தென்னை மரங்கள் இப்போது பட்டுப் போகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே ஏற்கெனவே சுட்டிக்காட்டி இருக்கின்றேன். தென்னை மரம் நீண்ட காலப் பயிர். அது பட்டுப் போனால் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தென்னை மரங்களுக்கு உயிர்த் தண்ணீரைத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வால்பாறை தொகுதியிலுள்ள பழுதடைந்துள்ள சாலைகளைப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். சோலையாறு அணை உயர்நிலைப் பள்ளி, சோமந்துறை உயர்நிலைப் பள்ளி, பெத்தநாயக்கனூர் இடைநிலைப் பள்ளி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், நீங்கள் ஒரு senior Member. இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் நடக்கிறது. அவற்றை ஒட்டித்தான் பேச வேண்டும். நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அமைச்சர்கள் எல்லாம் உங்களுக்கு நல்ல மரியாதை தருகிறார்கள். அதை எழுதிக் கொடுத்துவிடலாம். தென்னை மரங்கள், உயிர்த் தண்ணீர் என்று சொல்கிறீர்கள். உயிர்த் தண்ணீரைப் பற்றி மூன்று முறை எழுப்பி, அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நான் பேசி இங்கே பதிய வைக்கவில்லையென்று



சொன்னால், கீழ்ப் பகுதியில் இருக்கிற ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு நான் பதில் சொல்லியாக வேண்டும் என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளையும், இடைநிலைப் பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** கோவை தங்கம் இப்படிப் பேசினார் என்பதற்கு மேலும் நான் ஊர்ஜிதப்படுத்துகிறேன். அந்த உயிர்த் தண்ணீர் தர வேண்டுமென்று அவர் பேசியவுடன், அங்கிருக்கிற அதிகாரிகளோடு உடனடியாக நான் கலந்து பேசினேன். நிலைமை மோசமடையுமானால், பயிர்களைக் காப்பாற்ற வேண்டியது அரசினுடைய பொறுப்பு. உடனடியாக அவர்களிடத்திலே அறிக்கை அனுப்பக் கேட்டிருக்கிறேன். இன்றோ, நாளையோ அறிக்கை வரும். அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறேன். எனவே, தென்னை மரங்களுக்கு உயிர்த் தண்ணீர் கேட்பதிலே முனைப்பாக இருக்கிற கோவை தங்கத்திற்கு விவசாயிகள்பால் இருக்கிற பற்றுக்கு நான் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, உயிர்த் தண்ணீர் என்றால் என்ன? தெரியவில்லை எங்களுக்கு. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** உயிர் போகிற நிலையிலே விடுகின்ற தண்ணீருக்குப் பெயர் உயிர்த் தண்ணீர். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து இந்தப் பதிலைத்தான் நான் எதிர்பார்த்தேன். இந்த பதில்தான் நாளை பத்திரிகையிலே வரும். விவசாயிகள், நான் சட்டமன்றத்திலே பேசியதைத் தெரிந்துகொள்வார்கள் என்பதற்காகத்தான் அதைக் கோடிட்டேன்.

B.H.E.L. தொழிலாளர்கள் 25 ஆண்டு காலமாக அங்கே நிரந்தரம் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சுமார் 20 ஆண்டு காலமாகத் தற்காலிக அடிப்படையில் தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தமிழ்நாடு மின்சார வாரியத்திலே உள்ள. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவானந்தம். *(குறுக்கீடு)*

**திரு. கோவை தங்கம்:** ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏழு நிமிடங்கள் கொடுத்திருக்கிறோம். *(குறுக்கீடு)* மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)* வனத் துறை அமைச்சர் நிற்கிறார்கள். என்னவென்று கேட்போம்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள், ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி ஒரு நாளைக்கு 40 கிலோ இலை பறிப்பதாக இங்கே சொன்னார். தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தைப் பொறுத்தளவில், 12 முதல் 13 கிலோ அளவில்தான் அவர்கள் பறிக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அது இலாபத்திலே இயங்கி வருவதாகவும் இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த ஐந்தாண்டு காலமாக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் நட்டத்திலே இயங்கி வந்தது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த ஆண்டு மட்டும்தான் அது 2.54 கோடி ரூபாய் இலாபம் பெற்றிருக்கிறது. இருந்தாலும், கடந்த கால நட்டங்களையெல்லாம் கணக்குப் பார்த்தால், அந்தக் கழகம் இன்னும் நட்டத்திலேதான் இருக்கிறது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே உரையை முடியுங்கள் சார்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுடைய ஆட்சியிலே இலாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுச் சொன்னேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** 14 கிலோ பறிப்பதிலேயே இலாபம். ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி 40 கிலோ பறிக்கின்றபோது எத்தனை இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாயைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகத்திற்கு சம்பாதித்துத் தருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாடு மின்சார வாரியத்திலே காங்கிரஸ் பேரியக்கத் தொழிற்சங்கத்திற்கும் அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் 51 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வகையில் புதிய திட்டங்களை அறிவித்து, புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில், சென்ற ஆட்சியிலே நெசவாளர்களுக்குக் கஞ்சித் தொட்டி திறந்து வைத்ததை யாரும் மறந்துவிட முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு ** வார்த்தையைச் சொல்லி என் உரையை முடித்துவிடுகிறேன்.

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். Confrontation வருகிறது; பிரச்சினை வருகிறது. அதைப் பற்றிப் பேச வேண்டாம், மானியக் கோரிக்கையை ஒட்டிப் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* வேண்டாம், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்ல வேண்டும் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு point. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நான் expunge பண்ணச் சொல்லிவிட்டேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், உங்களுக்கு 7 நிமிடங்கள் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) Sir, நான் expunge பண்ணிவிட்டேன். Please, ஆள் ஆளுக்குப் பேச வேண்டாம்.

* **திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்காக, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி; விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்; ஏழாயிரம் கோடி விவசாயக் கடன் தள்ளுபடி; சத்துணவில் பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் 3 முட்டைகள்; அனைவருக்கும் இலவச கலர் டி.வி.; இலவச எரிவாயு இணைப்பும், அடுப்பும்; நிலமற்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலப் பட்டா; முதியோர் உதவித் தொகை மாதம் ரூ. 400/–; நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் திருமண உதவித் திட்டம் ரூ. 15,000/–; மகப்பேறு கால உதவித் திட்டம் ரூ.6,000/–; மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்தோடுகூடிய கடன்; ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை இலவசக் கல்விப் பாடத் திட்டம்; வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்தில் உயர் கல்வி வரை இலவசக் கல்விப் பாடத் திட்டம் ஆகியவற்றையும், வரியே இல்லாத பட்ஜெட்டையும், நாட்டு மக்களுக்கு வழங்கி, ஏழை எளிய மக்கள், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், நெசவாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் அனைவராலும் போற்றிப் பாராட்டப்படுகின்ற, உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களுக்கெல்லாம் தாயாக விளங்குகின்ற எங்கள் குடும்பத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சியிலே நல்லாட்சியைத் தருகின்ற எங்கள் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் அமைச்சர் பெருமக்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறி மற்றும் தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த கலைஞர் அவர்களை மீண்டும் என் தொகுதி மக்கள் சார்பாக வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிந்து சமவெளி நாகரிகத்தில் கண்டுபிடித்த பருத்திப் பயிர், மனித சமூகம் உடை உடுத்தக் காரணமாய் இருந்தது என்றும், சிந்து சமவெளி நாகரிகத்தில் மொஹஞ்சதாரோவில்தான் உலகிலேயே முதன்முதலாகப் பெண்கள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சேலை அணிந்தார்கள் என்றும் சான்றுகள் கூறுகின்றன. வான் புகழ்கொண்ட நம்முடைய வள்ளுவர் நெசவுத் தொழிலாளி என்றும், சைவத் தமிழ் பாடிய 63 நாயன்மார்களில் ஒருவரான நாயனார் என்பவர், துங்கபத்திரா நதிக் கரையில் ஜாமுடி என்ற நகரத்தில் பிறந்து அவர் சிவனடியார்கள் தினமும் உடுத்தும் ஆடையைத் தறியிலே நெய்து கொடுத்த நெசவாளி என்றும் சான்று கூறுகிறது. ஒட்டக்கூத்தரும் ஒரு நெசவாளி. சமீபத்திலே வாழ்ந்த செய்குத்தம்பி பாவலரும் ஒரு நெசவாளி. கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே, தமிழர்கள் யவனம், ரோமாபுரி, கிரேக்கம் போன்ற வெளிநாடுகளுக்குத் துணி விற்பனை செய்துள்ளனர் என்று நம் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. இந்தக் காலக்கட்டத்தில் நமது நூற்பாலைகளில் மிக மெல்லிய இழையாக 120 count அளவில்தான் தயார் செய்யப்படுகின்றது. ஆனால், 1000 ஆண்டுகளுக்கு முன்பே, தமிழகத்திலே மிக மெல்லிய இழையாக, 2,400 count அளவில் தயார் செய்யப்பட்ட ஆடைகள், பல்வேறு நாடுகளுக்கும், கிரேக்க நாடுகளுக்கும் அனுப்பப்பட்டதாகச் சான்று கூறுகின்றது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Silence. அமைதியாக இருங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** கிரேக்க நாட்டு இளவரசர்களும், அரசிகளும் இந்த ஆடைகளை உடுத்தி மகிழ்ந்தார்கள் என்றும், ஒரு சமயத்தில் அரசி உடுத்தி வந்த ஆடையை, இவ்வளவு மெல்லியதாக உடுத்தி வந்திருக்கின்றாயே, கூச்சமாக இல்லையா என்று அரசன் கேட்டதாகவும், அதற்கு அரசி, இந்தியாவிலிருந்து வந்த மஸ்லின் துணியை ஏழாக மடித்து, கவுனாகத் தைத்து அணிந்துள்ளேன் என்று கூறியதாகத் தெரிகின்றது. அந்த அளவிற்கு நம் நெசவுத் தொழில் உலக அளவில் புகழ்பெற்று இருந்துள்ளது.

இவ்வளவு சிறப்பு மிக்க இந்தத் தொழிலை மேம்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவுத் தொழிலில் பெருமளவில் மக்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். திரைப்படங்களில்கூட

'சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறிச் சேலையடி'

என்று பாடிப் பெருமை சேர்த்திருக்கின்றார்கள். 'செய்யும் தொழிலைச் சீர்தூக்கி நோக்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை'

என்று சான்றோர்கள் கூறியிருக்கின்றார்கள். பிறர் மானம் காத்து, தன்மானத்தோடு வாழும் சுய மரியாதைத் தொழில் என்று கூறுகிறார்கள்.

*பிற்பகல் 12-05*

தமிழகத்தில் சுமார் ஐந்து இலட்சம் கைத்தறிகளும், நான்கு இலட்சம் விசைத்தறிகளும் இயங்கி வருவதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் மூன்று இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவுச் சங்கங்களிலும், இரண்டு இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவுச் சங்கம் அல்லாத அமைப்பின்கீழும் உள்ளதாகத் தெரிகிறது.

கலைஞர் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறாரோ, அப்போதெல்லாம் நெசவாளர்கள் வாழ்வில் ஒளி ஏற்றியுள்ளார்கள். கைத்தறிக்கு என்று தனித் துறையையே உருவாக்கியிருக்கிறார்கள். நெசவாளர்கள் துயர் துடைக்க அண்ணாவும், கலைஞர் அவர்களும் தோள்களில் கைத்தறித் துணிகளை சுமந்து விற்பனையைத் தொடங்கி வைத்த காலங்கள் உண்டு. மேடைகளிலே மாலைக்குப் பதிலாகக் கைத்தறி ஆடைகளை அணிவிக்க வேண்டுமென்று தொடங்கி வைத்துப் பெருமை சேர்த்தவர்கள்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த நெசவுத் தொழில் கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியின் அலட்சியத்தாலும், அதிகாரிகளின் தவறான போக்கினாலும் மிகவும் சீரழிந்துவிட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலே நடத்தாமல், தன் கட்சிக்காரர்களை மேற்பார்வைக் குழுக்களாக நியமித்து, நூல் வாங்குவதிலும், கச்சா பட்டுகளைக் கொள்முதல் செய்வதிலும், ஜரிகை வாங்குவதிலும், தரமில்லாத பட்டு, ஜரிகை, நூல் ஆகியவற்றைக் கொள்முதல் செய்த காரணத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட தரமில்லாத துணிகள், பட்டுச் சேலைகள் விற்பனை செய்யப்பட முடியாமல் மிகவும் தேங்கி, நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டதால், அவர்கள் மிகவும் வறுமையான நிலையில், விவசாயம், கட்டுமானம் போன்ற கூலித் தொழிலுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது.

ஆரணியில் 21 பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 19 கூட்டுறவுச் சங்கங்களை அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சீரழித்து, கூட்டுறவு தட்டுமுட்டுச் சாமான்களைக்கூட ஏலம் போட்டு, ஏப்பம் விட்டுவிட்டார்கள்.



அப்போது ஆட்சி செய்த அ.தி.மு.க.விற்கு இந்த நிலையைச் சுட்டிக்காட்டுகின்ற கடமை, எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருந்த காரணத்தினால், ஆங்காங்கே கஞ்சித் தொட்டிகள் திறக்க வேண்டும் என்று கலைஞர் ஆணையிட, கஞ்சித் தொட்டிகள் திறக்கப்பட்டன. நெசவாளர்கள் கஞ்சி வாங்கிச் சாப்பிடுகின்ற இடத்திற்கு எதிரிலேயே அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் பிரியாணி சாப்பிட்டு நெசவாளர்களைக் கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தினார்கள் என்பதை இந்த நாடே அறியும். அ.தி.மு.க.வின் இந்த இழிவான செயலை நெசவாளர்கள் என்றும் மன்னிக்கமாட்டார்கள் என்று குறிப்பிட விரும்புகின்றேன்.

இதேபோன்று, பள்ளியிலே படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு, காமராஜர் ஆட்சிக் காலத்தில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம். எதிர்க் கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டை வாய்க்கு வந்தபடி சொல்லிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஆலோசனைக் குழு உறுப்பினராக யாரையும் நியமிக்கவில்லை. அதிகாரிகள் அளவில்தான் அந்தக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் எல்லாம் இயங்கிக்கொண்டிருந்தன. ஆனால், ஆலோசனைக் குழு உறுப்பினர்களை நியமித்து, அந்தச் சங்கங்கள் சீரழிந்து போவதற்குக் காரணம் என்கின்ற குற்றச்சாட்டை இங்கே பதிவு செய்துகொண்டிருக்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்குப் பதில் சொல்வார். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** அப்போது, அவர்கள் ஆட்சிக் காலத்தில் நியமனம் செய்தார்களா, இல்லையா? அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் சங்கத்தினுடைய நிர்வாகப் பொறுப்பிலே, குழுவில் இருந்ததுபோல் எடுத்து நடத்தியதன் காரணமாகத்தான் அந்தச் சங்கங்கள் சீரழிக்கப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, அடுத்ததற்குப் போங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** அதேபோன்று, பத்தொன்பது கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டன. அவர்களாகவே கலைத்தார்கள். அவர்களே எல்லாம் செய்தார்கள். வேண்டுமென்றால், ஆதாரம் இருக்கிறது. 19 கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்திருக்கிறார்கள். நான் பட்டியல் தரத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, அடுத்த subject க்குப் போங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** அதேபோன்று, பள்ளிகளிலே படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு, காமராஜர் ஆட்சிக் காலத்திலே மதிய உணவு அளிக்கப்பட்டது. இந்த மதிய உணவு எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் எம்.ஜி.ஆர். சத்துணவு என்று விரிவுபடுத்தப்பட்டது.

படிக்கின்ற இளம் வயதுக் குழந்தைகளுக்கு அவர்கள் ஆரோக்கியமாக வளரவும், மூளை வளர்ச்சிபெற வேண்டும் என்றும், படிக்கின்றபொழுதே இந்தச் சமுதாயம் அறிவு வளர்ச்சிபெற வேண்டும் என்றும், வல்லுனர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், டாக்டர்களாகவும் வர வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையில், அவர்களுக்குப் புரதச் சத்து அதிகமாக உள்ள முட்டையை சத்துணவிலே சேர்த்தவர் நமது தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஆவார்.

நம்முடைய கிராமங்களிலே தாய்மார்கள் வீடுகளில் கோழிகள் வளர்ப்பது உண்டு. அவைகளால் வரும் முட்டைகளை, தான் பெற்ற குழந்தைகளுக்குக்கூடக் கொடுக்க முடியாத வறுமை நிலையில், அவற்றை விற்று, வீட்டிற்குத் தேவையான உப்பு, புளி, மிளகாய் போன்ற அத்தியாவசியமான பொருட்களை வாங்கும் நிலையில் உள்ளதை உணர்ந்த நமது தாயுள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள்தான் சத்துணவில் முட்டையைச் சேர்த்தார். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவானந்தம், உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** இவர்களை ஏழை எளிய மக்கள் (குறுக்கீடுகள்) ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவானந்தம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அடுத்த உறுப்பினர் மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. வை. காவேரி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், போதும். (குறுக்கீடுகள்) அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) சுருக்கமாக உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** தமிழகத்திலே உள்ள பட்டுக் கைத்தறிச் சங்கங்களுக்கு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** தமிழகத்திலே உள்ள பட்டுக் கைத்தறிச் சங்கங்களுக்கு, நான்கில் ஒரு பாகம்தான் பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. காஞ்சிபுரத்திலே உள்ள டான்சில்க், அண்ணா பட்டு ஆகிய நிறுவனங்கள் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். நான் எல்லாவற்றையும் வாங்கிப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சிவானந்தம்:** தமிழக விவசாயிகள் மட்டுமல்லாமல், கர்நாடகத்தைச் சேர்ந்தவர்களும் வந்து விற்பனை செய்கிறார்கள். எனவே, தமிழகத்திலுள்ள விவசாயிகள் பெருமளவில் மல்பரிச் செடிகளைப் பயிரிடவும், பட்டுப் பூச்சிகளை வளர்க்கவும் உதவிட வேண்டும்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. வை. காவேரி. (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சிவானந்தம்:** சார், இருங்கள் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை சார். நேரமில்லை. (குறுக்கீடு) ஆமாம். உங்களுக்கு ஒதுக்கிய நேரத்தைவிட அதிகமாகக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். சிவானந்தம்:** தொகுதிப் பிரச்சினை. ஆரணி மற்றும் அதனைச் சுற்றியுள்ள வந்தவாசி, செய்யாறு, போளூர், பெரணமல்லூர் ஆகிய பகுதிகள் அடங்கிய திருவண்ணாமலை மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் தறிகளும், 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட விசைத்தறிகளும் உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. வை. காவேரி.

*** திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சார்பாகப் பேச எனக்கு வாய்ப்பளித்த சமூக நீதிக் காவலர், தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், எங்கள் பா.ம.க.வின் தலைவர், ஓய்வறியா உழைப்பாளி, தியாகச் செம்மல் திரு. கோ.க. மணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கெல்லாம் நல வாரியங்கள்மூலமாக அவர்கள் பல சலுகைகளை எல்லாம் வழங்கி வருகிறார்.

உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தின்மூலம் பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் 88,975 பயனாளிகளுக்கு மொத்தம் 18 கோடியே 45 இலட்சத்து 27 ஆயிரத்து 350 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பாராட்டுகிறோம்.

அதே வேளையில், கல்லுடைக்கும் தொழிலாளர்கள், கரும்பு வெட்டும் தொழிலாளர்கள், கூடை முடைவோர், பீடி சுருட்டும் தொழிலாளர்கள் போன்ற உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களுக்கும் நலத் திட்ட உதவிகளை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பீடி சுருட்டும் தொழிலாளர்களுக்கு நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய் வருகிறது. அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. காவேரி, ஒரே ஒரு second. நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவானந்தம் பேசுகின்றபொழுது, முன்னாள் முதலமைச்சர் அவர்களைப் பற்றிக் கூறிய கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. வை. காவேரி:** அமைப்புசாராத் தொழிலாளர்கள் மரணமடைந்தால், ஈமச் சடங்கிற்கு ரூபாய் 2 ஆயிரம் வழங்கப்படுகிறது. அமைப்புசார்ந்த தொழிலாளர்களுக்கு ரூபாய் 1,500 கொடுக்கப்படுகிறது. இதனையும் ரூபாய் 2,000 ஆகக் கொடுக்க வேண்டும்.



தமிழ்நாட்டில் அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள் சுமார் 56 உள்ளன. அவற்றில் 2005 ஆம் ஆண்டிலிருந்து பணிமனை உதவியாளர்கள் என்ற பெயரில் 76 பேர் ரூபாய் 2 ஆயிரம் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் I.T.I. படித்து N.T.C. மற்றும் N.A.C. சான்று பெற்றுள்ளனர். அவர்கள் 76 பேரையும் பணி நிரந்தரம் செய்து, கால முறை ஊதியம் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை முழு உடல் பரிசோதனை, நிர்வாகத்தின் செலவில் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்யப்படும்போது நோய் கண்டறியப்பட்டால், அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்க வேண்டும்.

31–3–2007 அன்றுள்ளபடி தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களுடைய எண்ணிக்கை 43 இலட்சத்து 38 ஆயிரத்து 816 பேர் எனக் கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ளது. இதனைக் குறைக்க ஒரே வழி, அனைத்துத் தனியார் தொழிற்சாலைகளிலும் ஆட்களைத் தேர்வு செய்யும்போது, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களைத் தேர்வு செய்ய வேண்டும். அப்போது சுட்டாயம் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட வேண்டும்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய இருப்பிடச் சான்று ஆவணமாக 15–7–2002 ஆம் நாளிட்ட அரசாணை எண் 66–ல் குடும்ப அட்டை ஒன்றை மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சில நேரங்களில் குடும்ப அட்டை இல்லாமல் இருக்கலாம் அல்லது பெயர் விடுபட்டு இருக்கலாம். எனவே, பத்திரம், மின் இணைப்புக் கட்டண பில், வீட்டு வரி ரசீது, பாஸ்போர்ட் போன்ற ஆவணங்களைக் காண்பித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்ய ஆவன செய்ய வேண்டும்.

நுகர்வோர் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு, முத்திரையிடப்படாத எடைகள் மற்றும் அளவைகள், இவற்றையெல்லாம் ஆய்வு செய்கிற அலுவலர்கள் முறையாக ஆய்வு செய்வதில்லை. அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மலேசியாவில் பணிபுரிய விரும்பும் இந்தியத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதுபோல், அனைத்து மேலை நாடுகளுக்குச் செல்லும் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டும்.

பத்து ஆண்டு காலம் தொடர்ந்து ஆட்டோ ரிக்ஷா ஓட்டும் ஓட்டுநர்களுக்கு permit வழங்க வேண்டும். அவர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வாங்கக் கடன் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை தற்போது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்பதை மாற்றி, முன்பிருந்ததுபோல 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை எனக் குறைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் சிக்கல் ஏற்படும் என்ற அச்சம் இருப்பதால், பாதிப்பு இல்லாமல் ஓய்வூதியம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்று பா.ம.க. சார்பில் எங்கள் தலைவர் திரு. கோ.க. மணி அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். எனவே, அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் தற்காலிகப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று பா.ம.க. உட்பட அனைத்துக் கட்சிகளுடைய தொழிற்சங்கங்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக 6 ஆயிரம் பேர்களை நிரந்தரம் செய்வதாக அறிவித்துள்ளீர்கள். மற்ற தொழிலாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். எனவே, முத்தமிழறிஞர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மற்ற தொழிலாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல், சர்க்கரை ஆலைகள், பஞ்சாலைகளில் பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அரசுப் போக்குவரத்துக் கழகம், மின்சார வாரியம் போன்ற துறைகளில் தற்காலிகப் பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட தற்காலிகப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்யும் சூழ்நிலை ஏற்பட்டு



வருகிறது. பணி நிரந்தரம் செய்யும்போது இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுவதில்லை. இது மிகப் பெரிய ஏமாற்றமும், வருத்தமும் அளிக்கிறது. இது சமூக நீதிக்கு எதிரானது. தமிழகத்தில் இப்படி சமூக நீதி புறக்கணிக்கப்படலாமா? எனவே, எல்லாவற்றிற்கும் மேலாக, இட ஒதுக்கீட்டை முழுமையாகக் கடைப்பிடிக்க அரசுத் துறைக்கு முதல்வர் அவர்கள் ஆணையிட வேண்டும். இவற்றில் மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், ஆதி திராவிடர்களுக்கு மிகப் பெரிய பாதிப்புள்ளது. தற்போது பணி நியமனம் செய்யும்போது, இதில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக் காலிப் பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்பட வேண்டும். அரசு எவ்வளவுதான் முயற்சி எடுத்தாலும், குழந்தைத் தொழிலாளர்கள் முறை இன்னும் சில இடங்களில் ஒழிக்கப்படாமல் உள்ளது. வயிற்றுப் பிழைப்புக்காக, படிக்க வேண்டிய வயதில், கல் உடைக்கவும், கட்டட வேலை செய்யவும், தறிக் கூடங்களில் வேலை செய்யவும், வீட்டு வேலைகளில் பாத்திரம் தேய்க்கவும், தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணி செய்யவும், பீடி சுற்றல்போன்ற தொழில்களிலும் குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடச் செய்வது யதார்த்த நிலை; இன்னும் கொத்தடிமையாக இருக்கும் நிலை உள்ளது. எனவே, குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் அரசு அதிகக் கவனம் செலுத்தி, குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு, அவர்களைப் படிக்க வைக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் தற்காலிகப் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்ட செவிலியர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், இவர்கள் எல்லோரையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பணி நிரந்தரம் செய்து, கால முறை ஊதியம் வழங்கியுள்ளார்கள். அதேபோல், கடந்த ஆட்சியில் ரூபாய் நான்காயிரம் சம்பளத்தில் அரசினுடைய அனைத்துத் துறைகளிலும் இளநிலை உதவியாளர்களாக சுமார் 15 ஆயிரம் பேர் பணி நியமனம் செய்யப்பட்டனர். அவர்களில் சுமார் 11,500 பேர் இப்போது பணியில் உள்ளனர். எல்லோர் வாழ்விலும் ஒளி விளக்கேற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்த இளநிலை உதவியாளர்களையும் பணி நிரந்தரம் செய்து, அவர்களுக்குக் கால முறை ஊதியம் வழங்க வேண்டும் எனப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் டாஸ்மாக்

நிறுவனத்தில் பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியக் கூட்டுறவு வங்கியில் 1972–க்கு முன்பு சுமார் 3 ஆயிரம் பேர் தமிழகம் முழுவதும் பணியமர்த்தப்பட்டனர். அவர்கள் அனைவரும் ஓய்வுபெற்றுவிட்டனர். அவர்கள் மிகவும் வறுமையில் உள்ளனர். அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

தமிழகத்தில் வாழ்வாதாரத் தொழிலான, முதன்மைத் தொழிலான விவசாயத்திற்கடுத்த பெரிய தொழிலாகவும், நிறையப் பேருக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கக்கூடிய தொழிலாகவும், உள்நாட்டு வாணிபத்தில் சிறப்புடையதாகவும், வெளிநாட்டு வாணிபத்தில் ஏற்றுமதிமூலம் வருவாய் ஈட்டித் தருவதாகவும் உள்ளது நெசவுத் தொழிலாகும். 'ஆள் பாதி, ஆடை பாதி' என்ற கூற்றுக்கேற்ப, மனித மானத்தைக் காக்கின்ற ஆடை உற்பத்தியில் சிறந்து விளங்குவது நெசவுத் தொழிலாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விசைத்தறிக்கு இலவசமாக மின்சாரம் வழங்கியுள்ளார்கள். இதனைப் பாராட்டுகிறோம். அதே வேளையில், விசைத்தறி வைத்து கூலிக்கு நூல் எடுத்துத் தொழில் செய்யும் தொழிலாளர்களிடம் நூல் பாவு கொடுக்கும் முதலாளிகள் கூலியைக் குறைத்துக் கொடுக்கிறார்கள். இதனைத் தடுக்கும்பொருட்டு, அரசு அதிகாரிகளை நியமனம் செய்து, சரியான கூலி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

தமிழகத்தில் போதிய நிதி வசதி இல்லாது மூடிக் கிடக்கின்ற அனைத்துக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதியுதவி செய்து, மீண்டும் சங்க உறுப்பினர்களுக்கு நூல் கொடுத்து, அவர்கள் தொழில் செய்ய ஆவன செய்ய வேண்டும். ஆடை வடிவமைப்பு—designing, அச்சடிப்பு, அலங்கரிப்புபோன்ற பயிற்சிகளை, நெசவுத் தொழில் அதிகம் செய்யும் பகுதிகளான காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், சேலம் மாவட்டங்களில் உள்ள இளம்பிள்ளை, வேம்படிதளம், எடப்பாடி; நாமக்கல் மாவட்டத்திலுள்ள குமாரபாளையம்; ஈரோடு மாவட்டத்திலுள்ள பள்ளிப்பாளையம், கரூர்போன்ற பகுதிகளிலுள்ள இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து, வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும். தமிழகத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1,117. இதில் நெசவுத் தொழிலாளர்களுக்குத் தேவையான அளவு நூல் கொடுப்பதில்லை. இதனால், தனியார் முதலாளிகள் கைத்தறிகளுக்கு நூல் கொடுத்து, நெசவாளர்களுக்குக் குறைந்த கூலியைக் கொடுத்து ஜவுளி உற்பத்தி செய்து நிறைய இலாபம் அடைகின்றனர். இதனைத்



தடுக்க, நெசவுத் தொழிலாளர்களுக்குப் போதுமான மூலப் பொருட்களான நூலை அரசே கொடுத்து, கிராமப்புறங்களில் உள்ள இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வை. காவேரி:** ஒரே ஒரு நிமிடம். ஈரோடு, சேலம், கரூர், கோவை போன்ற மாவட்டங்களிலும், பின்னலாடைத் தொழிலுக்குச் சிறப்பு மிக்க திருப்பூரிலும் நெசவுத் தொழிலினுடைய அங்கமாகச் செயல்படும் சாயப் பட்டறைக் கழிவினால் ஏற்படும் மாசு, இந்தத் தொழிலுக்கு பெரும் சவாலாக இருந்து வருகிறது. இந்தத் தொழில் வளர்ச்சிக்குப் பின்னடைவும் ஏற்படுகிறது. எனவே, நெசவு சாயப் பட்டறையால் அந்தப் பகுதியில் ஏற்படும் மாசு மற்றும் கழிவு முழுவதையும் அரசே சுத்திகரிப்புச் செய்து, கழிவு நீரை வெளியேற்ற வேண்டும். இப்படிச் செய்தால்தான் நெசவுத் தொழில் ஓரளவு வளர்ச்சி அடையும்.

திருப்பூர், ஈரோடு, கரூர் போன்ற பகுதிகளில் உள்ள சாயக் கழிவுகளை வெளியேற்ற சட்டமன்றத்திலே கோரிக்கை வைத்த பா.ம.க. உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளினுடைய கோரிக்கைகளையும், அனைத்துச் சங்கங்களினுடைய கோரிக்கைகளையும் ஏற்று சாயப் பட்டறைகளினுடைய கழிவு நீரை சுத்திகரிப்புச் செய்து நீண்ட தூரம் எடுத்துச் சென்று வெளியேற்ற அதற்கான ஒரு பெரும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த கூட்டத்திலே அறிவித்து இருந்ததை எங்கள் கட்சியின் தலைவர் திரு. கோ.க. மணி அவர்கள் வரவேற்றுப் பேசினார். எனவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி, நெசவுத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும். நெசவுத் தொழில் உப தொழிலாகவும் வேலைவாய்ப்பை உருவாக்கும் தொழிலாகவும், வாழ்வுப் பாதுகாப்பிற்கான தொழிலாகவும் இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வை. காவேரி:** எனவே, விவசாயத்தையே நம்பி வாழும் பகுதிகளாகவும், வேலைவாய்ப்பில்லாத பகுதிகளாகவும் உள்ள, முன்னேற்றம் இல்லாத பின்தங்கிய மாவட்டங்களான சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணாமலை, இராமநாதபுரம், கடலூர், பெரம்பலூர், திண்டுக்கல், திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை ஆகிய

மாவட்டங்களிலும், நெசவுத் தொழில் வளர்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்மூலம் வேலைவாய்ப்பை உருவாக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்தையும் பெருக்க வாய்ப்பு ஏற்படுத்தவும், நான் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் ஆங்காங்கே துணிநூல் நெசவு சம்பந்தமான பயிற்சி மையங்களை மாவட்டந்தோறும் உருவாக்கிப் பயிற்சி அளித்து, மானியத்துடன் கடனும் வழங்கித் தொழிலை விரிவாக்கம் செய்ய வேண்டும். இன்று, ஈரோடு, கரூர், கோவை, சேலம், காஞ்சிபுரம், விருதுநகர், மதுரை ஆகிய மாவட்டங்களில் நெசவுத் தொழில் மிகச் சிறப்பாக விளங்கி வருகிறது. அவ்வப்போது நெசவாளர்களுக்கு ஏற்படும் சோதனையும், வேதனையும் சொல்லி மாளாது. இவர்கள் கஷ்டத்தைப் போக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வந்தன. இதில் 13 கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் 10,000 தொழிலாளர்கள் வேலையில்லாமல் வறுமையில் வாடுகின்றனர். மூடப்பட்டுள்ள ஆலைகளின் மதிப்பு ரூ.1000 கோடி. எனவே, அவற்றையெல்லாம் திறந்து, வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுகிறேன்.

கடந்த காலங்களில் அரசு நூற்பாலைகளுக்குப் பஞ்சு சப்ளை செய்த சுமார் 300 வியாபாரிகளுக்கு இன்னும் ரூ.20 கோடி பாக்கி உள்ளது. அவர்களுக்கு அந்த ரூ.20 கோடியை வழங்கி, அவர்களுக்கும் வாழ்வளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கைத்தறித் தொழில் நலிவடைந்துவிடாமல் இருக்க, கைத்தறியில் உற்பத்தி செய்ய வேண்டிய ஜவுளி இரகம் தனியாகவும், விசைத்தறியில் உற்பத்தி செய்ய வேண்டிய ஜவுளி இரகம் தனியாகவும் பட்டியலிடப்பட வேண்டும். அப்படிப் பட்டியலிட்டால் கைத்தறித் தொழில் நலிவடையாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் குரூப்–1, குரூப்–2 தேர்வுகள் நீண்ட நாட்களாக நடைபெறாமல் உள்ளன. அவற்றை நடத்தி வேலைவாய்ப்பளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, நெசவுத் தொழில், விசைத்தறித் தொழில், அதன் உபதொழிலான ஆடை வடிவமைப்பு, சாயம் ஏற்றுதல், ஆடை அலங்கரிப்பு போன்றவற்றைக் காஞ்சிபுரம், திருவண்ணாமலை போன்ற பகுதிகளிலும், இளம்பிள்ளை, கரூர், ஈரோடு, பள்ளிப்பாளையம், குமாரபாளையம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கும் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பை அளிக்க



வேண்டுமாய்க் கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப். Sir, உங்களுக்கு 7 நிமிடங்கள் ஒதுக்கி இருக்கிறேன்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறையின் செயல்பாட்டில் நல்ல முன்னேற்றம் இந்த அரசு பொறுப்பேற்றபின் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் நசிவின் விளிம்பைத் தொட்ட துறைகளில் இதுவும் ஒன்று. அதைச் சரி செய்ய இந்த அரசு நல்ல முயற்சி எடுத்து வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதாரங்களோடு சுட்டிக்காட்டும் புகார்கள் குறித்து உயர் அதிகாரிகளை வரவழைத்து, விவாதித்து, உடனுக்குடன் தீர்வு காணும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அணுகுமுறை மிக, மிகப் பாராட்டுக்குரியது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்தத் துறையின் பணியினை மேலும் செழுமைப்படுத்தும் வகையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில விவரங்களை இப்பேரவையில் பதிவு செய்ய விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட சாமிநாதன் குழு, தொழிலாளர் துறையில் பணியிடங்களைக் குறைக்கப் பரிந்துரை செய்துள்ளது. நியதியும், நீதியும் அற்ற இப்பரிந்துரைகளை நிராகரித்து இம்மானியக் கோரிக்கைமூலம் அறிவிப்பு வெளியிட வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12–25*

பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்களைக் கண்டறியப் புகார் குழுக்களை அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு 10 ஆண்டுகளாகியும் அமலாக்கவில்லை. இதில் அரசின் உடனடித் தலையீடு தேவை. 12 புதிய நல வாரியங்கள் அமைத்து இருப்பதை வரவேற்கிறோம். எனினும் ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனி நல வாரியம் தேவை என்பதையும், நல வாரியங்களுக்கு முத்தரப்புக் குழுக்கள் அமைப்பது, காலிப் பணியிடங்கள் நிரப்புவது போன்றவற்றையும் வலியுறுத்துகிறோம்.

நல வாரியச் சலுகைகளுக்கு மனு செய்தால், அதிகபட்சம் 3 மாதங்களுக்குள்ளாக சலுகைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதுடன், தற்போது தேங்கியுள்ள சுமார் 42,000 மனுக்களை விரைவாக முடிக்க வேண்டும். 4 இலட்சத்திற்கும் அதிகமான முறைசாராத் தொழிலாளர்கள் உள்ள குமரி மாவட்டத்தில் நல வாரிய சலுகைகளுக்காக ஓராண்டுக்குமேல் காத்திருக்கும் நிலையைப் போக்க தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம் ஒன்றை அங்கே அமைக்க வேண்டும்.

கட்டுமானம் மற்றும் இதர முறைசாராத் தொழிலாளர்கள் ஓய்வூதியம்பெற 5 ஆண்டுகள் வாரிய உறுப்பினராகவும், 60 வயது நிரம்பியவராகவும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்துவதுடன், பெண் உறுப்பினர்களின் ஓய்வூதிய வரம்பை 50 ஆகக் குறைக்க வேண்டுகிறேன்.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 32–வது ஆண்டறிக்கையில் நல நிதி செலுத்திய தொழிலாளர்களின் எண்ணிக்கை 14 இலட்சத்து 37 ஆயிரத்து 39 ஆகும். ஆனால் E.S.I. மருத்துவமனைகள் வெறும் 9 மட்டும்தான். மாவட்டத்திற்கு ஒன்று என இவற்றை விரிவுபடுத்துவதுடன், அதிகத் தொழிலாளர்கள் உள்ள குமரி மாவட்டத்தில் உயர் சிகிச்சை வசதியுடன்கூடிய E.S.I. மருத்துவமனை வேண்டுமென்ற நெடுநாள் கோரிக்கையைத் தங்களின் மேலான கவனத்திற்கு மீண்டும் கொண்டு வருகிறேன்.

குறைந்தபட்ச ஊதியத்தைப் பற்றிக் கொள்கை விளக்கக் குறிப்பு இங்ஙனம் கூறுகிறது. "குறைந்தபட்ச ஊதியம் என்பது பிழைப்பு ஊதியம் போன்றதே ஆகும். அதை வழங்க மறுப்பது மனித வாழ்க்கையில் மனிதத் தன்மையையே அகற்றி விடுவது ஆகும்." இருட்டறையில் அடைபட்டு இருக்கும் மனித நேய மாண்புகளுக்கு நேராக மாண்புமிகு அமைச்சர் பாய்ச்சும் ஒளிக்கற்றைகளாக இவ்வரிகள் அமைந்துள்ளன.

குறைந்தபட்ச ஊதிய அட்டவணையில் 90 தொழில்கள் இடம்பெற்றுள்ளன. இத்தொழில்களுக்குக் குறைந்தபட்ச தினக்கூலி ரூபாய் 66 வழங்க மத்திய அரசு ஆலோசனை கூறியுள்ளது. ஆனால் நாடு விடுதலை பெற்ற 60 ஆண்டு காலத்தில் ரூபாய் 30 கூட தினக்கூலி கிடைக்காமல் வறுமையை உண்டு வாழும் ஏழை பாழைகள் இந்தியத் திருநாட்டில் எம்மாத்திரம், எம்மாத்திரம்? சில துறைகளில் வேலை



செய்யும் பெண் தொழிலாளர்களுக்கு ரூபாய் 30 தினக்கூலி கிடைப்பதே அரிதாக உள்ளது.

'மாடாய் உழைப்பார்க்கு வீடில்லை, சோறில்லை'

என்ற பாரதிதாசனின் முழக்கம் இன்றும் எதிரொலிக்கின்றது. ஒரு தோசைக்கு விலை 20 ரூபாய், ஒரு தொழிலாளியின் தினக்கூலியோ 30 ரூபாய். அதாவது, ஒரு நாளைய கூலிக்குச் சமம் 1½ தோசை. இத்தகைய நிலையை அகற்றுவதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ வலியுறுத்துகிறேன்.

சில நேரங்களில் குறைந்தபட்ச ஊதியத்தை, தற்போது தொழிலாளிகள் பெற்றுக்கொண்டிருக்கும் ஊதியத்தைவிடவும் குறைவாகவே அரசு நிர்ணயம் செய்கிறது. எடுத்துக்காட்டாக, முந்திரித் தொழிலாளர்களுக்குக் கடந்த ஆட்சி நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்தைச் சொல்லலாம். குமரி மாவட்ட முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு ஒரு கிலோ முந்திரிக் கொட்டையை உடைத்தால் அல்லது shelling செய்தால் 4 ரூபாய் 40 காசு கூலி கிடைக்கிறது. ஆனால், கடந்த ஆட்சி நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதிய விகிதப்படி 3 ரூபாய் 17 காசுதான் கூலி கிடைக்கும். 4 ரூபாய் 40 காசு தமிழகத்தில் கூலி தரும் அதே முதலாளி கேரளாவில் 13 ரூபாய் 6 காசு, 1 கிலோவுக்குக் கூலியாகக் கொடுக்கிறார். இதே நிலைதான் peeling, grading போன்ற பிரிவுகளிலும் உள்ளன. ஊதிய ஒப்பந்தம் காலாவதியாகி சுமார் ஓர் ஆண்டு தாண்டியும், புதிய ஒப்பந்தம் போடாமல் ஆலை முதலாளிகள் அடம் பிடிப்பதால் குமரி மாவட்டத்தில் முந்திரி ஆலைகளில் வேலை செய்யும் 50,000–க்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். இவ்விஷயத்தில் அரசு தலையிடுவதுடன் முந்திரித் தொழிலாளர்கள் பெற்று வரும் கூலியைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, புதிய குறைந்தபட்ச ஊதிய விகிதத்தை நிர்ணயம் செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் சங்கத்தில் உற்பத்தியாகும் ஜவுளிகள் தேங்காமல் விற்பனையாகும் விதத்தில், மாதந்தோறும் 10 தினங்கள் 30 பைசா rebate வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன். தற்போது நிலுவையில் உள்ள rebate மானியத்தை விரைந்து வழங்கவும், நெசவாளர்களுக்கு அரசு அறிவித்துள்ள இலவச மின்சாரத்தைக் காலதாமதமின்றி வழங்கவும், விலைவாசி உயர்வுக்கு ஏற்றாற்போல் நெசவாளர்களின் கூலியை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12–30

பட்டு கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலிச் சட்டம் வெளியிட்டு 6 ஆண்டுகள் ஆகியும் அமலாகவில்லை. தற்போதைய விலைவாசியை ஈடுகட்டும் வகையில் பஞ்சப் படியை இணைத்து புதிய கூலிச் சட்டம் வெளியிடுவதுடன், கணினிமூலம் உருவாக்கப்படும் புதிய பட்டு இரகங்களுக்குக் கூலி நிர்ணயம் செய்திட வேண்டும். மாநில அளவிலான கைத்தறி உயர்மட்ட ஆலோசனைக் குழுவில் சி.ஐ.டி.யு. உள்ளிட்ட பிரதான நெசவாளர் அமைப்புகளுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் சலுகைகள் தொடர்பான ஒப்பந்தம் காலாவதியாகி 8 வருடங்கள் ஆகின்றன. தொழிற்சங்க வேறுபாடின்றி Joint Action Committee அமைத்து தொழிலாளிகள் கோரிக்கை எழுப்பி வருகின்றனர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரம் காலாவதியாகிவிட்டது.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** 10 நிமிடங்கள் ஆகவில்லை. 10 நிமிடங்கள் என்று சொன்னீர்கள். 7 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன.

100 மாதங்களுக்கு மேலாக ஊதியத்தை இழந்து நிற்கும் 3 இலட்சம் தொழிலாளர்கள் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் தலையிடவும், மூடிய ஆலைகளைத் திறக்கவும் முயல வேண்டும்.

விசைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தைத் திருத்தி வெளியிடுவதுடன், கைத்தறி நெசவாளர்களுக்கு அமல்படுத்துவதுபோன்று இன்ஷூரன்ஸ் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

புதிய வேலைவாய்ப்புகளில் விளையாட்டு வீரர்களுக்கு ஒதுக்கீடு வழங்க வேண்டும். அந்த நியமனங்கள் ஒளிவுமறைவற்றதாக இருக்க வேண்டும்.

தமிழ்நாடு மின்சார வாரியப் பணியிட மாறுதல்கள் குறித்து தொழிற்சங்கங்களைக் கலந்து பேசியும், புகார்களுக்கும், அரசியல் தலையீடுகளுக்கும் இடமளிக்காமலும் செய்வதுடன், தமிழக மின் வாரியம் சிறப்பான நிலையை எய்த உழைத்த ஊழியர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள், பொறியாளர்கள் ஆகியோருக்கு இப்பொன் விழா ஆண்டையொட்டி தகுந்த சன்மானம் அளித்து ஊக்குவிக்க வேண்டும்.



டாஸ்மாக் தொழிலாளர்களின் சட்டப்படியான பணி நேரம், வார விடுப்பு, ஆண்டு விடுமுறை, பணி நிரந்தரம்போன்றவற்றில் அக்கறையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை T.V.S. Zip Fasteners Private Limited ஆலையைத் திறக்கவும், 350 தொழிலாளர்களின் குடும்பங்களைப் பட்டினியில் இருந்து மீட்கவும், காஞ்சிபுரம் மாவட்டம், போரூர் அருகிலுள்ள Orchid Chemicals தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவும் வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

இயந்திரத் தீப்பெட்டி வருகையால் கையினால் செய்யும் தீப்பெட்டித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க நடவடிக்கை எடுக்கவும், புதிய தொழில் கடன் வழங்கவும், Nib தொழிலுக்கான தகடுகளை அரசிடம் நேரடியாகக் கொள்முதல் செய்யவும், அரசு நிறுவனங்களில் Nib பேனாக்களைப் பயன்படுத்திடவும் புதிய தொழில் கடன் வழங்கிடவும் வேண்டும்.

சிவகாசி பட்டாசுத் தொழிலுக்கு முக்கிய மூலப் பொருளான செலபன்தாள் கம்பெனியைத் தமிழகத்தில் நிறுவவும், வெடி பொருட்கள் தட்டுப்பாடின்றிக் கிடைத்திடவும், வெடி விபத்தைத் தடுத்திடவும், மத்திய அரசின் 16 சதவிகித கலால் வரி விதிப்பால் அழிவின் விளிம்பிற்குச் சென்றுள்ள கை இயந்திரத்தினால் உற்பத்தி செய்யும் டின்னுக்கு ஏற்கெனவே இருந்ததுபோல் வரி விலக்கு அளிக்க மத்திய அரசை வலியுறுத்தவும் வேண்டும்.

தமிழ்நாடு தொழிலாளர் துறையில் 20 ஆண்டுகளுக்குமேலாக தினக்கூலிகளாகப் பணிபுரிந்து வரும் இரவுக் காவலர்களைப் பணி நிரந்தரம் செய்யவும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிமனை மற்றும் பண்டக உதவியாளர்களாகப் பணியாற்றுவோருக்குக் கால முறை ஊதியம் அறிவிக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்து மற்றும் மின் வாரியத் தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தக் காலத்தைக் கடந்த அரசு 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தியதை, மீண்டும் 3 ஆண்டுகளாகக் குறைப்பதுடன், பறிக்கப்பட்ட சலுகைகளை வழங்கவும், தமிழகத் தேயிலை மற்றும் காப்பி தொழிலாளர்களின் ஊதிய உயர்வை உறுதி செய்யவும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** முடித்துவிடுகிறேன், Two seconds. பீடித் தொழிலில் போடப்பட்ட ஊதிய ஒப்பந்தத்தை எதிர்த்து தென் மாவட்ட பீடி முதலாளிகள் பெற்றுள்ள உயர் நீதிமன்றத் தடையாணையை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். வாய்ப்புக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கைகள்மீது பேச அனுமதி அளித்த தங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கலைஞர் அரசு பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியிலும், பல வகையான தொழிலாளர் நல வாரியங்களையும், அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களையும் உருவாக்கியது தொழிலாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது சிறப்புக்குரியது.

*பிற்பகல் 12–35*

கடந்த ஆட்சியில் போடப்பட்ட வேலை நியமனத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்ததும், கடந்த 5 ஆண்டுகளில் வேலை நியமனத் தடைச் சட்டத்தால் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்ததைப் புதுப்பிக்காத இளைஞர்களுக்குக் கால அவகாசம் கொடுத்து, பதிவைப் புதுப்பித்துக் கொடுத்தது, அதேபோல் பதிவு செய்தவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதுபோன்ற திட்டங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

1990 ஆம் ஆண்டு உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கை அமல்படுத்தப்பட்டதற்குப் பின்னால், இந்தியா முழுமையும் வெளிநாட்டு மூலதனத்தை ஈர்ப்பது என்ற அடிப்படையில் படிப்படியாகத் தொழிலாளர்கள் பல ஆண்டுகளாகப் போராடிப்பெற்ற தொழிலாளர்கள் நலச் சட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் போனஸ் மறுப்பு, சம்பள உயர்வு, போனஸ், மகப்பேறுச் சட்டங்கள், இ.எஸ்.ஐ., பி.எஃப்., மற்றும் ஓய்வூதியங்கள் கேள்விக்குறியாக்கப்பட்டன. உதாரணத்திற்கு, 1908 ஆம் ஆண்டு செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யால்



தூத்துக்குடி, கோட்ஸ் பஞ்சாலையில் தமிழகத்தில் முதன்முதலாகப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கம் துவக்கப்பட்டது. அதிலிருந்து பல ஆண்டுகள் போராடிப் போராடி பஞ்சாலைத் தொழிலாளர்கள் பல உரிமைகளைப் பெற்றனர். ஆனால், தற்சமயம் தமிழகம் முழுவதிலும் ஆயிரக்கணக்கான பஞ்சாலைகள் கிராமப்புறத்து இளம் பெண்களைக் கொத்தடிமைகளைப்போல அடைத்து வைத்துக்கொண்டு, பல மணி நேரங்கள் வேலை வாங்குகிறார்கள். குறைந்த கூலிக்கு மூன்று, நான்கு ஆண்டுகள் என்று மொத்தச் சம்பளம் என்ற அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தொழிலாளர் நலச் சட்டத்தின் எந்த உரிமையும் கிடைப்பதில்லை. நமது அரசு கவனம் செலுத்தி, பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும்வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது அரசு, தொழிலாளர் நலன் காக்கும் அமைப்புசாராத் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள், பொற்கொல்லர்கள் மற்றும் மீனவர்கள், சிறு, குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட நல வாரியங்களை முழுமையாக வரவேற்கின்றோம்.

சென்ற ஆட்சியில் தொழிலாளர்கள், அரசு ஊழியர்களின் பாதிக்கப்பட்ட, பறிக்கப்பட்ட அரசுச் சலுகைகளை மீட்டெடுத்து, அவர்களுக்கு மீண்டும் சலுகைகளை வழங்கிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலை நியமனத் தடைச் சட்டத்தை நீக்கியது, மத மாற்றத் தடைச் சட்டத்தை நீக்கியது, வேலை இழந்த சாலைப் பணியாளர்களுக்கும், மக்கள் நலப் பணியாளர்களுக்கும் மீண்டும் வேலைவாய்ப்பு வழங்கி வாழ்வளித்த நமது அரசை மனதாரப் பாராட்டுகின்றோம்.

தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர் நீதிமன்றங்களில் பலவற்றில் நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை. இதனால் ஆயிரக்கணக்கான வழக்குகள் தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ளன. ஆகையால், நீதிபதிகளை உடன் நியமிக்க வேண்டுகிறோம்.

மோட்டார் தொழிலாளர் சட்டம், 1961–ன்கீழ் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி கொடுப்பதில்லை. குறிப்பாக, தொழிலாளர்கள் நீதிமன்றங்களில் மோட்டார் உரிமையாளர்கள் குறைந்தபட்சக் கூலி கொடுப்பது இல்லை என்று சாட்சியம் கூறுகின்றனர். இச்சட்டங்களின்

நகலினைத் தொழிலாளர் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பினாலும் நடவடிக்கை எடுப்பதில்லை.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 1984 ஆம் ஆண்டே 19 வேலைப் பிரிவுகளில் ஒப்பந்த முறை நீக்கப்பட்டது. அரசாணை எண் 950, தொழிலாளர் துறை, இனம் 20 பிரிவுகளிலும் தற்சமயம்கூட ஒப்பந்த முறை செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக, தட்டச்சர் பணியில் ஒப்பந்த முறை நீக்கப்பட்டது. ஆனால், தட்டச்சர் பணியில் ஒப்பந்த முறையின்மூலம் வேலை செயல்படுத்தப்படுகிறது.

போக்குவரத்து ஊழியர்களுக்குத் தொழிலாளர் நிரந்தரச் சட்டம், 1981 பயன்படுத்தப்படுவது இல்லை. தனியார் துறையில் பணியாற்றுபவர்களுக்கும் யாதொரு சட்டமும் பின்பற்றப்படுவது இல்லை.

பீடித் தொழிலில் 85,000 தொழிலாளர்கள் இ.பி.எஃப். திட்டத்தில் 1985–ல் இருந்தனர். தற்போது சுமார் 35,000 தொழிலாளர்களே இ.பி.எஃப். திட்டத்தில் உள்ளனர். விடுபட்டவர்களைச் சேர்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பல தொழில்களுக்குக் குறைந்தபட்சக் கூலியைத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. ஆனால், பெரும்பாலும் அமல்படுத்தப்படவில்லை. ஆனால், ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணியில் ஈடுபடுத்துவது அதிகரித்து வருகிறது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் சட்டத்தின் பலன்கூடக் கிடைக்காமல் தொழிற்சாலைகளில் 80 சதம் முதல் 90 சதம் வரை தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். பணி நேர வரைமுறைகளை மீறிக்கூட கூடுதலான வேலை நேரம் தொழிலாளர்கள்மீது சுமத்தப்படுகிறது. இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய சட்ட அமலாக்கத்தினை மீண்டும் செயலாக்கம் உள்ளதாக உயிர்ப்பிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

காவல் துறையினர் தொழிற்தகராறுகளில் நிர்வாகத்திற்குச் சாதகமாகத் தொழிலாளர்களின் சட்ட ரீதியான உரிமைகளுக்கு எதிராக எல்லை மீறி, பாரபட்சமாகக் காவல் துறை ஈடுபடுவது நிறுத்தப்பட வேண்டும்.

பல தொழில்களுக்கு நல வாரியம் அமைத்தும், வாரியங்களுக்குத் தொழிலாளர்கள் பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை என்றும் நமது அரசு எடுத்துள்ள முடிவுகளை வரவேற்றுப்



பாராட்டுகின்றோம். ஆனால், இந்த வாரியங்களில் தொழிலாளர்களைப் பதிவு செய்வதிலும், நலத் திட்ட உதவிகளைப் பெறுவதிலும் உள்ள குறைபாடுகளைப் போக்க வேண்டும். அதற்கான வகையில் அனைத்து வாரியங்களுக்கும் வட்டார அளவில் அலுவலகங்கள் உருவாக்கப்பட வேண்டும். வேண்டிய பணியாளர்களை நியமிக்க வேண்டும். இவற்றிற்கான நிர்வாகச் செலவை அரசே ஏற்க வேண்டும்.

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் நிதித் தொகுப்பை அதிகரிக்க, தொழிலாளர் நல வரியை தற்போது உள்ள 0.3 சதத்திலிருந்து 1 சதமாக உயர்த்த வேண்டும். இதற்கேற்ப நலத் திட்ட உதவிகளை அதிகரிக்க வேண்டும்.

ஓய்வூதியம் ரூபாய் 1,000 வழங்க வேண்டும். நிராகரிக்கப்பட்ட 5,000 ஓய்வூதிய விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்ய வேண்டும். இ.எஸ்.ஐ. மருத்துவத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

சென்ற அ.தி.மு.க. அரசால் முடக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை மீண்டும் கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாரியத்திற்குத் தனித் துறை அமைக்கப்பட வேண்டும். வாரியத்தில் பதிவு செய்யும் அனைவருக்கும் தனித்தனி அடையாள அட்டை வழங்க வேண்டும்.

பிற்பகல் 12–40

விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தின்மூலம் வழங்கப்படும் ஓய்வூதியம், ஆதரவற்றவர்கள் என்று இல்லாமல், 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தனியார் தொழிற்சாலைகளிலும், அமைப்புசாராத் துறைகளிலும் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை கூடுதலாகி வருகிறது. வேலைப் பளு கூடி, சம்பளம் மிகக் குறைவாக உள்ளது. பஞ்சாலைகளில் சுமங்கலித் திட்டம் என்ற பெயரில் மூன்று ஆண்டுகளுக்கு எந்தச் சட்டப் பயனுமின்றி, நவீனக் கொத்தடிமைகளாகப் பெண் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதும், ஏமாற்றப்படுவதும் தொடர்கதையாக உள்ளது. இப்படிப்பட்ட ஆலைகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். டாஸ்மாக் கடைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பணி வரன்முறை கொண்டு வர வேண்டும். தொகுப்பூதியத்திலிருந்து கால ஏற்ற முறையில் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு பென்சனை உயர்த்தி அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது. மேலும், கைத்தறிக்கு 300 யூனிட் மின்சாரம் கொடுப்பது வரவேற்கத்தக்கது. பவானியில் சமுக்காளம், மதுரையில் சுங்கடிச் சேலை, காஞ்சிபுரத்தில் பட்டு என்று உற்பத்தி செய்யப்படும் சிறப்பு இரகங்களைப் பாதுகாக்க, அவை ஊக்கப்படுத்தப்பட வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபின் தொகுப்பூதியத்தில் பணியாற்றிய ஆசிரியர்கள் பல ஆயிரம் பேருக்குக் கால முறை ஊதியம் வழங்க ஆணை வழங்கினார்கள். அரசு I.T.I.யில் 2 ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 76 பேர்கள் தொகுப்பூதியம் ரூ.2,000/- பெற்றுப் பணியாற்றுகின்றனர். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த 76 பேர்களுக்கும் கால முறை ஊதியம் வழங்க இம்மாமன்றத்தில் அறிவிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் சுமார் 6,500 பள்ளிவாசல்களில் சுமார் 30,000 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் உலமாக்கள், தொழுகை அழைப்பாளர்கள், முஸ்லிம் பெண்களுக்கு மார்க்கக் கல்வி போதிக்கும் ஆசிரியைகள் மற்றும் சந்தா வசூலிப்பவர்கள், கணக்கர்கள், இறந்தவர்கள் உடலைச் சுத்தம் செய்யும் ஆண், பெண் பணியாளர்கள், அடக்கம் செய்யக் குழி தோண்டுபவர்கள், தர்காவில் பாத்தியா ஓதுபவர்கள் என இந்தப் பணியாளர்கள் எவ்வித சமூக நலத் திட்டங்களுமின்றிப் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் தமிழ்நாடு பள்ளிவாசல் பணியாளர் சங்கம் என்று பதிவு செய்ய, கடந்த 2-6-2005 அன்று தொழிலாளர் துணை ஆணையர் திருச்சிராப்பள்ளிக்கு மனு செய்தும், இதுவரை பதிவு செய்யப்படவில்லை. உடன் பதிவு செய்து கொடுக்க மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மேலும், தமிழ்நாட்டில் பல்வேறு நல வாரியங்களை அமைத்துக் கொடுத்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், எவ்வித சமூக நலத் திட்டங்களுமின்றிப் பள்ளிவாசல்களில் பணியாற்றும் ஏழையெளியவர்களுக்கு நல வாரியம் ஒன்று அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலைத் தொழிலாளர்கள் முத்தரப்புக் குழுவைக் கூட்டிப் பேச்சுவார்த்தை நடத்திக் கூலி உயர்வு வழங்க வேண்டும். கைத்தறி இரகக் கட்டுப்பாடு தொடர்ச்சியாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.



இலவச வேஷ்டி, சேலை இரகங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும். நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு வழங்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இல்லாத நெசவுத் தொழில் செய்யும் நெசவாளர்களுக்கு பென்சன், இதர சலுகைகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களுக்குத் தறிக் கூடம் கட்டுவதற்கு வழங்கப்படும் தொகை ரூ.10,000, ரூ.7,000 என்பதை உயர்த்திக் கொடுக்க வேண்டும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய வங்கியிலிருந்து பெறும் காசுக் கடனுக்கு உரிய வட்டி இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள மில்களைத் திறக்க வேண்டும். குறிப்பாக, ஸ்ரீவில்லிப்புத்தூர் நூற்பாலையைத் திறந்து செயல்பட வைக்க வேண்டும். அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி வழங்கப்பட வேண்டும். தொழிலாளர் ஆணையரகத் துறையில் தொழிலாளர் ஆய்வாளர்களை அதிகரிக்க வேண்டும்; முறையாகச் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வந்தன. கடந்த அரசு 12 நூற்பாலைகளை மூடிவிட்டது. பத்தாயிரம் தொழிலாளர்கள் மற்றும் அவரது குடும்பங்கள் வறுமையில் வாடுகிறார்கள். தற்போது இயங்கி வரும் நூற்பாலைகளை இலாபத்தில் இயங்குவதற்கு, தமிழகத்தில் ஜவுளி உற்பத்தி நல்ல முறையில் உள்ளது. தமிழகத்தில் இயங்கி வரும் 18 கூட்டுறவு நூற்பாலைகள் இன்றைய மதிப்பு சுமார் ரூ. ஆயிரம் கோடி அரசுச் சொத்து பயனற்று உள்ளது. மீண்டும் பதின்மூன்று நூற்பாலைகளைத் திறக்க சுமார் ரூ. 50 கோடி தேவை. இதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் பத்தாயிரம் தொழிலாளர்கள் பயனடைவார்கள். நூற்பாலைகளைத் திறப்பதன்மூலம் உள்ளூர்வாசிகளுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த கால ஆட்சியின் தவறுகளைச் சரி செய்துவிட்ட இந்த அரசு நூற்பாலைகளைத் திறக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவ்வளவுதான். நன்றாக இருக்கிறது.

**திரு. கே. உலகநாதன்:** பட்டாசுத் தொழில் பல இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்துக்கொண்டு இருக்கின்றது. தற்போதைய

நிலையில், வேலைக்குச் சென்று வீடு திரும்பினால்தான் உறுதி என்ற நிலை உள்ளது. காரணம், அடிக்கடி விபத்துக்கள், உயிரிழப்புகள் என்ற நிலை அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. சென்ற மாதம்கூட விருதுநகரில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் பட்டாசு உற்பத்தியாளர்கள் மற்றும் A.I.T.U.C. உட்படப் பல தொழிற்சங்கங்கள் கலந்துகொண்டு, பல ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள்.

*பிற்பகல் 12–45*

கொடிய வெடி விபத்து நடைபெறுவதற்கு, T.E.M.S. இரசு வெடி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மணி மருந்துதான் காரணம் என்று சொல்லப்படுகிறது. எனவே, மணி மருந்தைக் கையாளுகின்ற தொழிலாளர்களுக்கு வெடி மருந்தைப் பயன்படுத்தும் முறையில் விதிமுறைகளின்படி உற்பத்தியாளர்கள் பயன்படுத்துகிறார்களா என்பதைக் கண்டறிந்து, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். விபத்து தொடர்ந்தால் T.E.M.S. இரசு வெடி மருந்துகளை உற்பத்தி செய்வதற்குத் தற்காலிகத் தடை விதிக்கலாம் என்று கூறி, மாண்புமிகு துணைத் தலைவருக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி. உலகநாதன் மாதிரி பிரச்சினையில்லாமல் பேச வேண்டும்.

**•திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை குறித்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய மக்களின் உரிமைக்காகவும், இந்திய நாட்டு உரிமையைக் காக்கவும், தமிழ் மக்களின் உரிமைக்காகவும், தமிழ்நாட்டின் உரிமையைக் காக்கவும், தேசியக் கட்சியோடும், பொதுவுடைமைக் கட்சியோடும், புயல் வீசிய நேரத்திலும், தென்றல் வீசிய நேரத்திலும் இந்த மாமன்றத்தில் புன்னகை பூத்து, அவையைக் குளிர வைத்து, 50 ஆண்டு காலம் இந்த மாமன்றத்தில் பணியாற்றி, பொன் விழாக் காணும் தமிழர்களின் தலைவராய், முத்தமிழறிஞராய் ஐந்தாம் முறையாக அரியணை ஏறிய முதல்வர் அவர்களை *(மேசையைத் தட்டும்*



*ஒலி)* இந்த எளியவன் இந்த மாமன்றத்தின் சார்பாக வாழ்த்தி, வணங்கி என் உரையைத் துவக்குகிறேன்.

தமிழக வரலாற்றில் தொழிலாளர் நலத் துறைக்கென ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். தொழிலாளர்களை வியர்வை சிந்தாமலும், கண்ணீர்விடாமலும் காப்பதுதான் தலைவர் கலைஞரின் ஆட்சி. மே தினத்தை இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்முறையாகத் தொழிலாளர் தினமாக அறிவித்து, ஊதியத்துடன்கூடிய அரசு விடுமுறை நாளாக அறிவித்தவர் தலைவர் கலைஞர் ஆவார்கள். இந்தியப் பிரதமராக திரு. வி.பி. சிங் அவர்கள் இருந்தபோது, மே தினத்தை ஊதியத்துடன்கூடிய அரசு விடுமுறை நாளாக இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் அறிவிக்கச் செய்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்.

தேசிய கீதம் தந்த கவிஞர் பெருமகன் அவர்கள் கூறியிருக்கிறார்கள்; 'ஆண்டவனைக் கோயிலிலே தேடாதே, கல்லுடைக்கும் தொழிலாளரின் கண்ணீரிலும், வியர்வையிலும் இருக்கின்றான்' என்று கூறினார். இந்தியத் திருநாட்டை உருவாக்கிய சிற்பி நேரு பெருமகனார் அவர்கள், 'தொழிற்சாலைகள்தான் என்னுடைய கோயில்கள், தொழிலாளர்கள்தான் என்னுடைய வணக்கத்திற்குரிய தெய்வங்கள்' என்று குறிப்பிட்டார்கள். அவர்களின் அந்தக் கூற்றுக்கு ஏற்பத் தொழிலாளர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

முதல்வராகப் பொறுப்பேற்ற 100 நாட்களில், மக்கள் நலத் திட்டங்களை இந்தியத் துணைக் கண்டத்திலேயே நிறைவேற்றுவதில் நான்காவது இடத்தில் இருப்பவர் தலைவர் கலைஞர் எனப் பத்திரிகைகளால் பாராட்டப்பெற்று, இன்று முதல் முதல்வராகத் திகழ்பவர் நமது கலைஞர் அவர்கள். டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய தொழிலாளர் மாநாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டபோது, அனைத்து மாநில அமைச்சர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும், Unorganised labour—அமைப்புசாராத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டவர், மாபெரும் புரட்சி செய்தவர் கலைஞர் என்று புகழாரம் சூட்டினார்கள். இது உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல. தலைவர் கலைஞர் அவர்களே ஒரு பெரிய போராளி. நங்கவரம் தோட்ட விவசாயிகள், திருச்சி பீடித் தொழிலாளர்கள், S.M.T. தொழிலாளர்கள் ஆகியோருக்காகப் போராடி, தொழிலாளர்களுக்கு உரிமை பெற்றுத் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடும்போது, அதை இரும்புக் கரம்கொண்டு அடக்கி ஒடுக்காமல், கரும்புக் கரம்கொண்டு அணைக்கும் தாயாக, (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி, உரிமைகளைத் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தொழிலாளர் துயர் துடைக்க ஏறெடுத்தும் பார்க்காத ஓர் ஆட்சி முன்பு நடைபெற்றது. பெண் ஆட்சி செய்தும் பெண்களைப் பற்றிக் கவலைகொள்ளாத முதல்வர் ஆட்சி முன்பு நடைபெற்றது. இரண்டு இலட்சம் தொழிலாளர்கள், அதில் சரி பாதி இளம் பெண்கள் . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Sir, நான் சொல்கிறேன், this is too much from your side. பெண் ஆட்சி என்று சொல்வதை unparliamentary word என்றால், I can not agree with you. குருசாமி, சொல்லுங்கள். May Day is a Pay day என்று சொல்லுங்கள். தலைவர்தான் அந்த வார்த்தையைக் கண்டுபிடித்தார். *(குறுக்கீடு)* What is this? பெண் ஆட்சி என்றுகூடச் சொல்ல முடியவில்லை என்றால், என்ன அர்த்தம்?

**திரு. செ. குருசாமி:** கேங்க் கூலி என்னும் பெயராலும், திருமணத் திட்டம் என்ற பெயராலும் மூன்றாண்டுகள் வரை கொத்தடிமைபோல் ஆலைக்குள் பூட்டி வைத்து, வேலை வாங்கி வீட்டுக்கு அனுப்பும் கொடுமை முன்பு நடைபெற்றது.

தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதும், தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி, நிலையான சட்டத்திலுள்ள மூன்றாண்டுகள் Apprentice என்று வைத்திருந்ததை மாற்றி, Apprentice காலம் ஆறு மாதங்கள்தான், அதுவும் நிரந்தரத் தொழிலாளிகளில் 10 சதவிகிதம் பேர்தான் பயிற்சியாளர்களாக இருக்க வேண்டும் என்று கொண்டு வந்ததால் தமிழக ஏழைப் பெண்கள் தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறார்கள். சில பஞ்சாலைகளில் ஐந்து பேர் நிரந்தரத் தொழிலாளர்கள், 500 Apprentices என்று வைத்து, தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சி வருகின்ற நிலையைப் போக்கிடக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12–50*

கடந்த ஆட்சிக் காலத்தில் மனிதாபிமானமே இல்லாமல் கொண்டு வந்த E.S.M.A., T.E.S.M.A., பணி நியமனத் தடைச் சட்டம்



அனைத்தையும் தலைவர் கலைஞர் அவர்கள் நீக்கி, தொழிலாளர்கள் வாழ்விலே ஒளி ஏற்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்துத் துறைகளிலும் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன. கவனிப்பாரற்றுக் கிடந்த அமைப்புசாராத் தொழிலாளர்களுக்காகப் பல வாரியங்கள் அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். கட்டுமானத் தொழிலாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள், தீப்பெட்டித் தொழிலாளர்கள், தொழிற்சாலை சங்கங்களில் இல்லாத கைத்தறித் தொழிலாளர்கள், விசைத்தறித் தொழிலாளர்கள், செங்கல் தயாரித்தல், சாயமேற்றுதல், கயிறு தயாரித்தல், பந்தல் கட்டுதல், அப்பளம் தயாரித்தல் ஆகிய தொழில்களைச் செய்வோர், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர், பனைத் தொழிலாளர்கள், இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இந்த ஏற்பாட்டை நம்முடைய முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

ஏழைக் குடும்பங்களில், படித்து வேலையற்று வாடும் இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைக்காகப் பதிவு செய்து, விரக்தியில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு விலக்களித்தும், 5 ஆண்டுகள் வயது வரம்பைத் தளர்த்தியும், வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்திட்டவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

1996–ல் பல்வேறு நல வாரியங்கள்மூலம் 1,21,596 தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்புதான் மின் வாரியம், பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகிய துறைகளில் பல ஆயிரம் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள். தற்போதுகூட, மின் வாரிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் 6 ஆயிரம் பேர் நிரந்தரம் செய்யப்படுவார்கள் எனத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

தொழில் துறை, தொழிலாளர் நலத் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவை ஒரே துறையாக இருந்ததை, தொழிலாளர் நலன் கருதி, தொழில் துறை, தொழிலாளர் நலத் துறை, கூட்டுறவுத் துறை என தனித்தனியாக உருவாக்கி, தொழிலாளர்கள் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவில் முதன்முதலாகத் தனியார் பேருந்துகள் அனைத்தையும் அரசுடைமையாக்கி, ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆனால், கடந்த ஆட்சியில் தொழிலாளர்கள் துறையில் ஐந்து அமைச்சர்கள் ஏழு முறை மாற்றப்பட்டு, நிலையற்ற நிர்வாகத்தினால் தொழிலாளர் நலன் சீரழிக்கப்பட்டும், தொழிலாளர்களும் கேலிக்கூத்தாக்கப்பட்டனர்.

தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அனைத்தையும் நிறைவேற்றிய பெருமை தலைவர் கலைஞர் அவர்களையே சாரும்.

கடந்த முறை மானியக் கோரிக்கையில் அறிவித்த அனைத்தையும் தலைவர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி இந்த 10 மாதங்களில் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, தொழிலாளர்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகளை முன்வைத்தபோது, அவற்றைப் பரிவுடன் கேட்டு நிறைவேற்றியதைத் தொழிற்சங்கங்கள் அனைத்தும் பாராட்டுகின்றன.

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் ரூ. 11,000 கோடி முதலீட்டில் 10 பெரிய தொழிற்சாலைகள் துவங்கப்பட்டு, நேரடி மற்றும் மறைமுகமாகப் பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் பணியாற்றும் தினக்கூலித் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதோடு, 1971 மற்றும் 1972–க்கு பின்பு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் வேலையில் சேர்ந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

பொற்கொல்லர், மண்பாண்டம் செய்வோர், வீட்டு வேலை செய்வோர், காலணிகள் செய்வோர், துப்புரவுத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு நல வாரியங்கள் தனித்தனியாக அமைத்துத் தரப்பட வேண்டுகிறோம். தேசியத் துப்புரவுத் தொழிலாளர் நல வாரியம் டெல்லியில் உள்ளது போலத் தமிழகத்திலும் ஏற்படுத்தி, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஆவன செய்திட வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)



சென்னை மாநகராட்சியில் 10 ஆண்டுகளுக்குமேலாக தினக்கூலி துப்புரவுத் தொழிலாளர்களாக வேலை செய்பவர்களை நிரந்தரம் செய்திட ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

"தேராட்டம் காரினிலே எங்க
தெருவோடு போறவரே!
ஏரோட்டம் நின்னு போனா
உங்க காரோட்டம் என்னவாகும்?"

என்று கவிஞர் கேட்டார்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நாம் சோற்றிலே கை வைக்க வேண்டும் என்றால், உழவன் சேற்றிலே கால் வைக்க வேண்டும். அத்தகைய விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்த பெருமை தலைவர் கலைஞர் அவர்களையே சாரும்.

நல்ல காரியங்கள் செய்யும்போது, அவற்றை நிச்சயமாக மக்கள் போற்றுவார்கள். தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய சலுகைகள், உரிமைகள், பயன்கள், உடனடியாக வந்து சேர வேண்டும். தொழிலாளர் நலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள், அவார்டுகள் அமல்படுத்தப்பட வேண்டும். தொழிலாளி இல்லையென்றால், தொழிற்சாலைகள் இல்லை. தொழிலாளி இல்லையென்றால், உற்பத்தி இல்லை. தொழிலாளி இல்லையென்றால், அன்னியச் செலாவணி இல்லை.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஊதிய ஒப்பந்தம் 31–12–2007 வரை அமலில் உள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் ஊதியக் குறைப்பு குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இருப்பினும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விடாப்பிடியாகத் தோட்டத் தொழில் அதிபர்களை அழைத்துப் பேசி, இழந்த ஊதியத்தைத் திரும்ப அத்தொழிலாளர்கள் பெற்றிட எடுத்து வரும் முயற்சிக்காகத் தொழிலாளர்கள் சார்பாகவும் அதுவும் 99 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் சார்பாகவும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். தொழிலாளர் துறையில் 700–க்கும் மேற்பட்ட இடங்கள் காலியாக உள்ளன.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. குருசாமி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) 10 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிப் பிரச்சினைகள். நான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு time இல்லை, எழுதிக் கொடுங்கள். திருமதி பெ. கமலாம்பாள், நீங்கள் பேசுங்கள்.

• **திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*'சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு.'*

அதாவது, தம் மக்களை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம்கொண்ட மன்னன் ஆட்சி செய்தால், அதற்கான காரணங்களை ஆராய்வதற்கு முன்பே அந்தத் திட்டம் நிறைவேறும் என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்கின்ற முத்தமிழ் வித்தகர் முதல்வர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) பெண்ணுரிமைக் காவலர், சமூக நீதிப் போராளி, தமிழ்க் குடிதாங்கி, மக்கள் காவலர் மருத்துவர் அய்யா அவர்களே, மாண்புமிகு மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சின்ன அய்யா அவர்களே, தியாகச் செம்மல் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன்.

ஒரு மனிதனுக்கு உணவு, உடை, இருப்பிடம், மூன்றும் தேவை. அதில் உணவும், உடையும் முக்கியமானது. ஏனென்றால், உணவில்லாமல் உயிர் வாழ முடியாது; உடையில்லாமல் மானத்தைக் காக்க முடியாது. உணவு அளிக்கின்ற விவசாயியும், மானத்தைக் காக்கின்ற நெசவாளியும் இந்த நாட்டின் இரு கண்களாகப் போற்றப்பட வேண்டும்; அவர்கள் வாழ்வை வளம் பெறச் செய்ய வேண்டும்.

ஆடை பாதி, ஆள் பாதி என்பார்கள்; ஆடை இல்லாதவன் அரை மனிதன்; இப்படி ஆடையைப் பற்றிப் பழமொழி உண்டு. மனிதனுக்குச் சரி பாதியாக ஆடையை ஒப்பிடுகிறார்கள். எங்கு சென்றாலும் ஆடையைப் பார்த்துத்தான் உயர்வு, உபசரிப்பு, மதிப்பு, மரியாதை கிடைக்கிறது. ஆனால், இந்த ஆடை நெய்யும் நெசவாளிகள்



துயரத்திற்கும், துன்பத்திற்கும் ஆளாகி, பசியோடும், பட்டினியோடும் வாடி, நொந்து நூலாகிப் போன காலத்தில், மாண்புமிகு கலைஞர் அவர்கள் கஞ்சி ஊற்றிக் காப்பாற்றியது இந்நாட்டு மக்கள் அறிந்ததே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் இப்போது நெசவாளர்களுக்காக இலவச மின்சாரம், ஓய்வூதியம், மரணம், விபத்துக் காப்பீடு, மருத்துவ வசதி, சிறப்புப் பரிசு, கல்வி, இதுபோன்ற பல திட்டங்களைக் கொடுத்தார். இந்தத் திட்டங்கள் அனைவருக்கும் போய்ச் சேரவில்லை. பதிவு செய்த நெசவாளர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. அதனால் அனைத்து நெசவாளர்களுக்கும் தடையில்லாமல் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

காஞ்சிபுரத்தில் உள்ள கைத்தறிச் சங்கத்திற்கு வர வேண்டிய, 2001 முதல் 2007 வரை உள்ள 3.5%, 4.5%, 5.5% தள்ளுபடியில் விற்பனை செய்த வகையில் இழப்பு, காஞ்சிபுரத்தில் உள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பல கோடி ரூபாய் அரசாங்கம் வழங்கப்பட வேண்டியுள்ளது. நலிவடைந்த பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களை மீட்க அரசு மானியம் அளித்து, தக்க நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரத்தில் தற்போது சி.வி.எம்., பெரியார், மாமல்லன், வள்ளலார், பாரதியார், பல்லவர் மகளிர் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களில் ஆறு மாதத்திற்கு ஒரு முறைதான் தொழில் தர முடிகிறது. அதனால், தொழிலாளர்களுக்கு மாதம் 1,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் கிடைக்கிறது. ஆகவே, தொடர்ந்து தொழில் செய்ய இந்தச் சங்கங்களுக்கு மானியம் அளித்து, நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டும். நிதிநிலை மோசமான சங்கங்கள் தற்போது நிலுவையில் உள்ள காசுக் கடனை 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் நீண்ட காலக் கடனாக மாற்றி, அனைத்துச் சங்கங்களுக்கும் புதிதாகக் காசுக் கடன் அனுமதிப்பதன்மூலம் சங்கங்கள் நிதிச் சிக்கலிலிருந்து விடுபட்டு, உறுப்பினர்கள் தொடர்ந்து தொழில் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோராவை டான்சில்க் கடனாகப் பெற்று மூன்று மாதக் காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும். பட்டு இரகங்களில் இருப்புத் தேக்கத்தைக் குறைக்க, பண்டிகை மற்றும் விழாக் காலங்களில் உச்சவரம்பின்றி 10 சதவிகிதம் தள்ளுபடி வழங்குவதன்மூலம் பெருமளவில் பட்டுச் சேலைகளை விற்பனை செய்ய முடியும். மேலும், சர்வதேச அளவில் பட்டுச் சேலைகளை ஏற்றுமதி செய்ய ஏற்றுமதி மையம் அமைக்க வேண்டும்.

[திருமதி பெ. கமலாம்பாள்] [2007 ஏப்ரல் 19

பட்டுச் சேலை உற்பத்தி செய்ய, மூலப்பொருட்கள் விலை அதிகரித்துள்ளது. அதனால் இந்தப் பொருட்களுக்கு மானியம் அளிக்க வேண்டும். கைத்தறி நெசவாளர்கள், சிறு வியாபாரிகள், கைவினைஞர்கள் ஆகியோர் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுள்ள வீடு அடமானக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும். காஞ்சிபுரத்தில் நெசவுப் பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன் கூடுதலாக 10 விழுக்காடு தள்ளுபடி வழங்கியதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்; பிறந்த நாளை நெசவாளர் தினமாக அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டத்திலே வையாவூர் காமாட்சி அம்மன் நூற்பாலை திறக்கப்பட வேண்டும். இதேபோல, 13 மாவட்டங்களில் மூடியுள்ள நூற்பாலைகளைத் திறந்து, ஏழைத் தொழிலாளிளைக் காப்பாற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதனால், 10,000 தொழிலாளர்கள் பயனடைவர்.

*பிற்பகல் 1-00*

மாநிலத்தில் உள்ள பதிவுபெற்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் பேணுதல் குறித்துத் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறைமூலமாகத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், விபத்துக்கள் சிறப்பான முறையில் குறைக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் குறைகள் சம்பந்தமான புகார்கள்மீதும் உடனுககுடன் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது குறித்துத் தமிழக அரசுக்குப் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாகத் தற்போது பல மாடிக் கட்டடங்கள் மாநிலத்தின் பல பகுதிகளில் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் சில கட்டடங்களில் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு விபத்துக்கள் ஏற்பட்டு, உயிரிழப்புகளும், சேதங்களும் ஏற்படுகின்றன. கட்டுமானப் பணிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு விதிகள் தொடர்பாகப் புதிதாக மாநில அரசால் சட்டம் இயற்றப்பட்டுள்ளதற்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



2007 ஏப்ரல் 19] [திருமதி பெ. கமலாம்பாள்]

இச்சட்டத்தினைத் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறைமூலம் அமலாக்கம் செய்ய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டுகிறோம்.

தொழிற்சாலைகள் பிரச்சினைகள் சம்பந்தமான வழக்குகள் தொழிலாளர்கள் நீதிமன்றங்களில் நீண்ட நாட்களாக நடைபெறுவதால் தொழிலாளர்கள் அலைக்கழிக்கப்படுவதுடன், இதுபோன்ற நீதிமன்றங்கள் முதலாளிக்குச் சாதகமாகச் செயல்படுவதாகப் பெரும்பாலான தொழிலாளர்கள் நினைக்க வாய்ப்புள்ளதைக் கணக்கில்கொண்டு, உடனுக்குடன் தீர்ப்புகள் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சங்கத்தின் நிர்வாகிகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்துடன் தொழிலாளர்கள் உரிமைகளை உரிமையோடு கேட்டால், நிர்வாகிகளைப் பழி வாங்கும் நிலை உள்ளது. அவர்களை ஏதாவது காரணம் காட்டிப் பணி நீக்கம் செய்கின்றார்கள். இதற்கு உதாரணம், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆலத்தூர், காஞ்சிபுரம் நிர்வாகத்தில் உள்ள நிர்வாகிகளே ஆவர்.

தமிழகப் பொருளாதாரத்தில் உள்ள மொத்தத் தொழிலாளர்களில் 92 சதவிகிதத்தினர் அமைப்புசாராத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். மீதியுள்ள 8 சதவிகிதத்தினர் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களை உள்ளடக்கிய அமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அமைப்புசாராத் தொழிலாளர்கள் எந்தப் பாதுகாப்புமின்றிப் பல பிரச்சினைகளைச் சந்தித்து, தங்கள் வாழ்வையே கேள்விக்குறியாக ஆக்கிக்கொண்டிருக்கின்றனர். இவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதன்மூலம் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரைக் கை தூக்கிவிட்டு அவர்களது நிலையை உயர்த்த வேண்டும்.

காய்கறி விற்போர், சிறு வியாபாரம் செய்வோர்போன்ற சுய தொழிலில் ஈடுபடுவோருக்கு உரிய உதவிகள் கிடைப்பதில்லை. இவர்களின் முதன்மைப் பிரச்சினை, கடன் வசதியாகும்.

ஏற்றுமதிக்கு உகந்த சாலைகள், அருகில் துறைமுகம், சாலை வசதிகள் உடைய கடலூர், விழுப்புரம், சேலம், ஈரோடு, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கரூர், அருப்புக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் நெசவுத் தொழில் பூங்காக்களை அமைத்து, வேலைவாய்ப்பைப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 100 பேர் வீதம் மகளிர் மற்றும் இளைஞர்கள் சுய உதவிக் குழுவினருக்கு உரிய பயிற்சி மற்றும் நிதி உதவி அளித்து, ஆயத்த ஆடை தயாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுகின்றேன். இவ்வாறு 100 நெசவுத் தொழில் பூங்காக்கள் அமைப்பதன்மூலமாக சுமார் 10,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனால் ஏற்படுகின்ற உயிரிழப்புகளைத் தடுத்து, சிகிச்சை அளிக்கப் போதிய மருத்துவக் கருவிகளும், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியும் உடனடியாக வழங்க வேண்டும்.

காஞ்சிபுரத்தில் 150 ஆண்டுகளுக்குமேலாக உள்ள பிரசவ வார்டு கட்டடத்தில் செடி கொடிகளெல்லாம் முளைத்து, பிரசவிக்கும் தாய், சேய்மீது எந்த நேரத்திலும் இடிந்து விழும் நிலையிலுள்ளது. இக்கட்டடத்தில் பிரசவத்திற்கு வரும் பெண்கள், எந்த நேரத்தில் இடிந்து விழுமோ என்று பயந்தபடித் தங்குகின்றனர். இக்கட்டடத்தை அகற்றி, புதிய பிரசவ வார்டு கட்டித் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

காஞ்சிபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த திருப்புட்குழி ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் குடியிருப்பு மிகவும் பழுதடைந்து, குடியிருக்கத் தகுதி இல்லாமல் உள்ளது. இதனால் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் தங்கி சிகிச்சையளிக்க இயலாத நிலை உள்ளது. ஆகவே, இதை உடனடியாகப் பழுதுபார்த்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை என்பதால், சுற்றியுள்ள 4 மாவட்டங்களிலிருந்து தினமும் 5,000 முதல் 6,000 பேர் வருகின்றனர். இவர்களுக்கு சிகிச்சையளிக்கப் போதிய மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் போதுமான கட்டடங்கள், கழிவறைகள், குடிநீர் வசதி, மின் விளக்கு, மின் விசிறிகள் ஆகியவை இல்லாத நிலை உள்ளது. ஆகவே, இக்குறைகளைப் போக்கி, போர்க்கால அடிப்படையில் செய்து கொடுக்கும்படி அன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் நகரில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு பொன்னேரிக் கரையில் சொந்தக் கட்டடம் புதிதாகக் கட்டித் தர வேண்டும். அதோடு, வெளிமாநிலங்களிலிருந்து சென்னை செல்லும் பேருந்துகளுக்குப் பொன்னேரிக் கரையில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும்.



கைத்தறித் தொழில் சம்பந்தப்பட்ட வியாபாரிகள், வியாபார சம்பந்தமாக பெங்களூர், மதுரை, ஈரோடு, சேலம், கும்பகோணம் ஆகிய ஊர்களுக்குக் காஞ்சிபுரத்திலிருந்து செல்லப் புதிய வழித்தடங்களும், காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்குக் கூடுதல் பேருந்துகளும் இயக்க ஆவன செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, காஞ்சிபுரத்தைச் சுற்றி புறவழிச் சாலை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தில் பெண்களுக்காக மகளிர் நீதிமன்றம் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மண்டலக் காவல் துறைத் துணைத் தலைவர்—D.I.G. அலுவலகம் தற்போது காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக, காவல் துறைத் துணைத் தலைவருக்குக் குடியிருப்பு மற்றும் அலுவலகம் கட்டித் தரப்பட வேண்டும்.

*பிற்பகல் 1-05*

காஞ்சிபுரம் மாவட்டக் காவல் அலுவலகத்தில் இயங்கும் ஆயுதப் படைப் பிரிவிற்குத் தனியாக அலுவலகமும், காவல் துறை அலுவலர்களுக்குக் கூட்டம் நடத்துவதற்குக் கூட்ட அரங்கமும் கட்டித் தர வேண்டும்.

காவலர் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி முடித்தவுடன் அவர்களை சொந்த மாவட்டங்களுக்கு அருகிலுள்ள T.S.P. அணிக்கு அனுப்பி பணியிடம் அளிக்க வேண்டும். ஆசிரியர்கள்போல இணையதளம்மூலம் ஒவ்வொரு வருடமும் பணியிட மாற்றம், விருப்ப இடம் அளிக்கலாம் சங்க விதிமுறைக்கு உட்பட்டு அளிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பின திரு. ஏ.கே. போஸ். (குறுக்கீடு) திரு. ஏ.கே. போஸ், சொல்லுங்கள் (குறுக்கீடு) நன்றி எல்லாம் ஒன்றும் வேண்டாம். இவ்வளவு நேர பேசியதே போதும், நன்றி. அடுத்து, திரு. ஏ.கே. போஸ், பேசுங்கள்.

*** திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இங்கே தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, கைத்தறி மற்று

துணிநூல் மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த அரசியல் இமயமாய்ப் புகழ் மணக்கும் புரட்சித் தலைவி, மாண்புமிகு அம்மா அவர்கள் காலச் சுவடுகளால் கனிவான பொன் மகள், (மேசையைத் தட்டும் ஒலி) மன உறுதி மிக்க மணிச்சுடராய், தொழிலாளர்களின் பாதுகாவலராகத் திகழும் சமூக நீதி காத்த வீராங்கனை, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக வழிநடத்திய தங்கத் தாரகை புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

சாதாரண மில் தொழிலாளியின் மகனாகிய என்னை, தமிழகத்தில் மதுரை மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அவைத் தலைவராக்கி, அதன்பின் கழகத்தினுடைய இணைச் செயலாளராகவும் ஆக்கி, அதற்குப்பின் மாவட்டக் கழகச் செயலாளராக ஆக்கி, நடந்து முடிந்த பதின்மூன்றாவது சட்டமன்றத் தேர்தலிலே, திருப்பரங்குன்றம் தொகுதியிலே என்னை வேட்பாளராக நிறுத்தி, அங்கே மதுரை மாவட்டத்திலே உள்ள 10 தொகுதிகளிலே, அதிகமான வாக்குகளைப் பெற்று, சுமார் 13,900 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த எங்கள் குல விளக்கு, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திருப்பரங்குன்றம் தொகுதியில் எனக்கு வாக்களித்த பொது மக்களுக்கும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போஸ், 15 நிமிடங்கள்தான்.

**திரு. ஏ.கே. போஸ்:** கழகத் தொண்டர்களுக்கும், அயராது அல்லும் பகலும், பாடுபட்ட தொண்டர்களுக்கும், கூட்டணிக் கட்சியைச் சார்ந்த தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆறுபடை வீடுகளில் முதல் படை வீடாகப் போற்றப்படுகின்ற திருப்பரங்குன்றம் முருகப் பெருமான் திருக்கோயிலில், கோயிலுக்குச் சொந்தமான இடங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கே வரும் பக்தர்களுக்குத் தங்கும் விடுதி கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பரங்குன்றம் தொகுதியிலே கழிவுப் பஞ்சு மில்கள், சிறு, சிறு நூற்பாலைகள் இருக்கிறபடியால், அங்கே ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



எனது தொகுதி, 43 பஞ்சாயத்துக்களும், 2 டவுன் பஞ்சாயத்துக்களும், 2 நகராட்சிகளும், மதுரை மாநகராட்சியில் 14 வார்டுகளும் உள்ள பெரிய தொகுதியாகும். ஆகவே, என்னுடைய தொகுதியின் வளர்ச்சிக்குக் கூடுதலாக அரசு நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், மதுரையில், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கள்ளர் சீரமைப்புத் துறையில், ஒரு ஐ.ஏ.எஸ்., அதிகாரியின் தலைமையில், தன்னாட்சி அதிகாரம்கொண்ட வாரியமாக உயர்த்தி, தமிழக அரசு நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்து அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கை ரேகைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், இந்தியாவில் தமிழகத்தைத் தவிர வேறு அனைத்து மாநிலங்களிலும் பழங்குடியினர் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்கள். எனவே, தமிழகத்திலுள்ள அந்த மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சட்டமன்ற நடவடிக்கைகளில், 'கள்ளத்தனமாக' என்ற சொல்லை நீக்கி, அதற்கு மாறாக, வேறு சொல்லை உபயோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு, 2006–2007 ஆம் ஆண்டு பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பிலே, 'கள்ளத்தனமாக மணல் அள்ளுகிறார்கள்' என்று அந்தக் குறிப்பிலே அந்த வார்த்தை இருந்தது. அது கள்ளர்கள் மனதைப் புண்படுத்தும்படியாக இருக்கிறது. ஆகவே, இனி வருங்காலத்திலே 'கள்ளத்தனம்' என்கிற வார்த்தையையும், 'கள்ளச் சாராயம்' என்ற வார்த்தையையும் நீக்கி, அதற்குப் பதிலாகத் 'திருட்டுத்தனமான' என்ற வார்த்தையை அல்லது வேறு ஏதாவது வார்த்தையை உபயோகப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–10*

என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே ஓடிக்கொண்டிருக்கும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின் இரு பிரிவுகளில்—ஒரு பிரிவு கண்ணபுரம் பிரிவிலிருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ள கால்வாயை அகலப்படுத்தி சீர் செய்தால், வடபழஞ்சி, முத்துப்பட்டி, காடிப்பட்டி, ஆலம்பட்டி, மேலக்குயில்குடி,

கீழக்குயில்குடியில் உள்ள விவசாயிகளுக்கு ஏறத்தாழ 2,000 ஏக்கர் நிலம் அங்கே பயன்பெறும் விதத்திலே அமையும் என்பதை மிகப் பணிவோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தப் பகுதி மக்களுக்கும், குடிநீருக்கும் பொருத்தமாக இருக்கும் என்பதால், இதைச் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் பிரதானக் கால்வாயின் மற்றொரு பிரிவு, மாவிலைப்பட்டி வழியாகத் தென்பழஞ்சி, வெள்ளை பாறைப்பட்டி, பெரியசாக்களிப்பட்டி, வேடர்புளியங்குளம், தனக்கன்குளம் வரை சுமார் 1 கிலோ மீட்டர் வரை வந்துகொண்டிருக்கும் சிறு வாய்க்காலை அகலப்படுத்தி, செப்பனிட்டுத் தந்தால் அந்தப் பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே, எனது தொகுதியில் கம்பிக்குடிக் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்பட்டு, அந்தப் பணி நடந்துகொண்டிருக்கும்பொழுது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அந்தப் பணி இப்பொழுது நடைபெறவில்லை. அதைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாநகருக்குத் தென் பகுதியிலே ஒரு நவீன மருத்துவமனை கட்டப்பட வேண்டும். ஏனென்றால், வளர்ந்து வரக்கூடியது மதுரை மாநகராட்சி. இன்றையதினம் சென்னையில், ஸ்டான்லி ஆஸ்பத்திரி, கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரி மற்றும் இங்கேயுள்ள இராயப்பேட்டை மருத்துவமனைபோன்ற மருத்துவமனைகள் உள்ளன. ஆனால், மதுரையிலே ஒரே ஒரு மருத்துவமனைதான் இருக்கிறது. அதிலும் இட நெருக்கடியால், வராண்டாவிலே பாய் விரித்துப் படுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, தென் பகுதியிலே திருமங்கலம், விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, அருப்புக்கோட்டை, இராசபாளையம்போன்ற பகுதிகளில் விபத்து ஏற்பட்டு அவசர சிகிச்சைக்கு வரும்பொழுது, மதுரை நகரைக் கடந்து, அந்த மருத்துவமனைக்குச் சென்றடைய அதிக நேரம் ஆகிறபடியால், உயிரைக் காக்க முடியாமல் போகிறது. ஆகவே, என்னுடைய தொகுதியில் மதுரை மாநகராட்சியினுடைய 65–வது வட்டத்திலுள்ள முத்துப்பட்டி அருகேயுள்ள வீரமுடையான் கண்மாய், சுமார் 40 ஏக்கர் நிலம் பாசன வசதி இல்லாமல் முட்புதராக உள்ளது. அந்தக் கண்மாயை அரசு எடுத்து, பெரிய அளவில் நவீன மருத்துவமனை கட்டினால், தென் பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.



மதுரை மாநகரிலே பொழுதுபோக்குக்கு எந்தவிதமான வசதியும் இல்லை. வருடத்திற்கு ஒரு முறை சித்திரைப் பொருட்காட்சி நடைபெறுகிறது. அதோடு, மதுரையிலே தொழில் வர்த்தகப் பொருட்காட்சியும் நடைபெறுகிறது. அது தொடர்ந்து நடைபெறுவதில்லை. ஆகவே, அங்கு நிரந்தரமாக ஒரு பொருட்காட்சியை உருவாக்குவதற்கு, வர்த்தகப் பொருட்காட்சி அமைவதற்கு, மதுரை கரும்பாலைப் பகுதிக்கும், வணிக வரி அலுவலகத்திற்கும் அருகிலே ஏறத்தாழ 10, 15 ஏக்கர் நிலம் காலியாக உள்ளது; அந்த இடத்தைத் தொழில் வர்த்தகச் சங்கத்திற்கு, அவர்களுக்குக் கிரயமாகவோ அல்லது லீசுக்கோ கொடுத்தால், அதில் ஒரு நிரந்தரப் பொருட்காட்சி அமைவதற்கு ஏதுவாக இருக்கும். மதுரை மக்களுக்குப் பொழுதுபோக்குவதற்கும் சிறந்த இடமாக அது அமையும். அதோடு, மதுரையிலே தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஆகவே, அதையும் அமைத்துக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்க சிறப்பு நீதிமன்றம், புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில்தான் கொண்டு வரப்பட்டது. தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டால் இடைக்கால நிவாரணம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா ஆட்சியில்தான் கொண்டு வரப்பட்டது. மூடிய ஆலைகளைத் திறப்பதற்கு முத்தரப்புக் குழுக்களை அமைத்து உடனே நிவாரணம் கண்டதும் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில்தான். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே, தொழிலாளர் நலத் துறையிலே ஒரே ஒரு முத்தரப்புக் குழுகூட அமைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஏ.கே. போஸ்:** புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில்தான் அதிகமான தொழிலாளர் நலச் சட்டங்கள் இயற்றப்பட்டன. தி.மு.க. ஆட்சியில் சிட்டா நூல் விலை அதிகமாக ஆகிவிட்டபடியால், இன்றையதினம் நெசவாளர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு சிட்டா நூல் நியாய விலையில் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்குக் கல்வித் தொகை அம்மா ஆட்சியில் வழங்கப்பட்டது. அது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதை மீண்டும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2007-2008 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் கைத்தறித் தொழிலாளர்களின் முதியோர் ஓய்வூதியத்தை ரூபாய் 400 ஆக உயர்த்தியுள்ளீர்கள். அதை ரூபாய் 600 ஆக உயர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா" என்ற திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் வழங்கப்பட்ட தொகைதான் இப்போதும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதை உயர்த்தி, இயற்கை மரணம் அடைந்தால் ரூபாய் 50,000 என்று இருப்பதை ரூபாய் 80,000 என்றும், விபத்தினால் மரணம் ஏற்பட்டால் ரூபாய் 50,000 என்று இருப்பதை ரூபாய் ஒரு இலட்சமாகவும் உயர்த்த ஏற்பாடு செய்து கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

கட்டுமானத் தொழிலாளர்கள் 1994 ஆம் ஆண்டு 6,32,812 நபர்களை உறுப்பினர்களாக்கி ஓய்வூதியம் வழங்கியவர்கள் அம்மா அவர்கள். 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வை அளித்தவர் அம்மா அவர்கள்.

ஊனமுற்றோர் மறுவாழ்வு. 1992 ஆம் ஆண்டு ஊனமுற்றோருக்கெனத் தனியாக ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை அமைத்து சலுகை வழங்கியவர் அம்மா அவர்கள்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பச்சைத் தேயிலைக்கு விலை உயர்வு. போராட்டம் காரணமாக மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், நீலகிரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்றது அம்மா அவர்களுடைய அரசுதான். இாப்பர் கழகத் தொழிலாளர்களுக்கு தி.மு.க அரசால் வழங்கப்படாமல் இருந்த 3½ ஆண்டு சம்பள பாக்கியை அம்மா அவர்கள்தான் வழங்கினார்கள்.

மதுரையிலே ஆவின் பாலகத்திலே தினக் கூலியாகப் பணியாற்றி வரக்கூடிய தொழிலாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்க



வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைகளில் ஏற்படுகிற பெரும் விபத்துக்களைத் தடுக்க அரசு முன்வர வேண்டும். இயங்காமல் இருக்கும் கூட்டுறவு நூற்பாலைகளை இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலவச வேட்டி, சேலைத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அனைவருக்கும் வேட்டி, சேலை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு, திருநகர் மிசோரியா மில் வளாகம் மற்றும் மேலூர், மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை வளாகத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த சட்டப் பேரவையினுடைய தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

***திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பாடம் படித்து, மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுடைய கரம் பிடித்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர், 7 நிமிடங்களுக்குள் பேச்சினை நிறைவு செய்ய வேண்டும்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுடைய தலைமையேற்று, அன்புத் தலைவர் ஐயா வாசன் அவர்கள் வழி நின்று, முத்தமிழறிஞர், பொன் விழா நாயகர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, என் உரைதனைத் தொடங்குகிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கான உயர்மட்டக் குழுவிலே என்னையும் எங்கள் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்திருக்கிற டாக்டர் இராமன் அவர்களையும் உறுப்பினர்களாக்கி அழகு பார்த்திருக்கிற பொன் விழா நாயகர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, என் உரைதனைத் தொடங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 'அட்சய திருதியை', வெள்ளை நிற வெள்ளி, பொன் நிறத் தங்கம் வாங்கினால் செல்வம் கொழிக்கும் என்று பத்திரிகையிலே வியாபார வித்தைகள் நடைபெறும் நேரத்தில், இன்றைக்கு நெசவாளர்களுக்கு உண்மையிலேயே 'அட்சய திருதியையாக' இருக்க வேண்டுமென்று வேண்டி என் உரைதனைத் தொடங்குகிறேன்.

கடந்த காலத்திலே நெசவாளர்களைக் கஞ்சித் தொட்டிக்கு அனுப்பியவர்கள் எல்லாம் இன்றைக்கு ஆட்சியை இழந்திருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். (குறுக்கீடுகள்) அருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையைச் சொன்னால் கோபம் ஏன் வருகிறது? கஞ்சித் தொட்டிக்கு அனுப்பினார்களா, இல்லையா? தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்து முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, சிட்டா நூலுக்கு வரிவிலக்கு அளித்துப் பெருமை சேர்த்தார்கள். நெசவாளர்களுடைய ஓய்வூதியத்தை உயர்த்திக் காட்டினார்கள். 100 யூனிட் வரை கைத்தறிக்கு இலவச மின்சாரத்தை அள்ளித் தந்தார்கள். விசைத்தறிக்கு 500 யூனிட் வரை இலவச மின்சாரம் தந்து, நெசவாளர்களைத் தூக்கிப் பிடித்திருக்கின்ற ஆட்சி இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–20*

மத்தியிலே அன்னை சோனியா காந்தி அவர்களின் ஆசியோடு இருக்கிற காங்கிரஸ் ஆட்சியும், இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியும் இணைந்து, கைத்தறிக்கு முத்திரைத் திட்டம், கைத்தறிக்குக் காப்பீட்டுத் திட்டம், கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 3,500 ரூபாய் வரை கல்வி உதவித் திட்டம், இப்படித் திட்டங்களை அள்ளித் தந்திருக்கிறார்கள். கஞ்சித் தொட்டிக்கு அனுப்பியவர்களையெல்லாம் மீட்டு, இன்றைக்கு உயர்த்திப் பிடித்திருக்கிற ஆட்சி நம்முடைய ஆட்சி என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப்பட்ட நல்ல பணிகளைச் செய்திருக்கிற ஆட்சியில், நெசவாளர்களுடைய சில குறைகளையும், இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். நெசவாளர்களுக்கு, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1996–லே கூலி உயர்வு அளிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, ஐந்தாண்டு காலத்திலே நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு வழங்கப்படவில்லை. கடந்த ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியிலே நெசவாளர்களுக்கு அகவிலைப் படி உயர்வு வழங்கப்படவில்லை. எனவே, மன்றாடிக் கேட்கிறேன். நெசவாளர்களுக்குக் கூலி உயர்வைத் தாருங்கள். நெசவாளர்களுக்கு அகவிலைப் படி உயர்வைத் தாருங்கள் என்று மன்றாடிக் கேட்கிறேன்.



அருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நெசவாளர்களுக்குக் குடும்ப ஓய்வூதியத் தொகை 350 ரூபாயாக இருக்கிறது. அதை 500 ரூபாயாக உயர்த்தித் தாருங்கள். கடந்த முறை இதே சட்டமன்றத்திலே நெசவாளர்களின் ஓய்வூதியம் 200 ரூபாயாக இருந்தது; O.A.P.க்குக்கூட 400 ரூபாயாகத் தந்திருக்கிறீர்கள்; அதை 500 ரூபாயாகத் தாருங்கள் என்று கேட்டோம். தலைவர் கலைஞர் அவர்கள் தந்தார்கள். நன்றி தெரிவிக்கிறோம். அதைப்போல, மறைந்த பிறகு, அந்த நெசவாளர் குடும்பங்களுக்கு 350 ரூபாய் என்று வழங்கப்படும் ஓய்வூதியத்தை 500 ரூபாயாகத் தாருங்கள் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, சிட்டா நூல் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். ஒரு மாத காலமாக 5 கிலோ கொண்ட கட்டுக்கு 290 ரூபாய் என்றிருந்த நூல் விலை இன்றைக்கு 350 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. சிட்டா நூல் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு அதிகாரிகள், கைத்தறித் துறை அதிகாரிகள் கருணையோடு, மத்திய, மாநில அரசுகள் இணைந்து, இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்து, கட்டுப்படுத்த வேண்டும். சிட்டா நூல் விலை உயர்வுக்குக் காரணம் என்னவென்று விசாரிக்கிறபோது, கச்சாப் பருத்தி ஏற்றுமதி செய்யப்படுகிறது என்ற ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். எனவே, தேவையான நூலை நெசவாளர் சங்கங்களுக்கு வழங்குவதற்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, தறியை நவீனப்படுத்துவதற்காக நெசவாளர்கள் பெற்றிருக்கிற கடனை வட்டியோடு சேர்த்துத் தள்ளுபடி செய்ய வேண்டும். கடந்த மாதத்திலே, இந்த நாட்டினுடைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள், கைத்தறி முத்திரை வழங்குகிற விழாவிலே பேசுகிறபோது, விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்ததைப்போல, நெசவாளர்கள் தறிக் கூடம் அமைப்பதற்குப் பெற்ற கடனுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறார்கள். அதைப்போல, கைத்தறி நெசவாளர்கள் பெற்ற கடனுக்கும் வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்கள் ஹட்கோ வங்கியிலே பெற்ற கடனைக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். குறிப்பாக, எனது தொகுதியில் சென்னிமலையில், ஆயிரத்துப் பத்து வீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நெசவாளர்களுக்குத் தனியாக ஒரு நகரத்தை

உருவாக்கினார்கள். அங்கேயுள்ள நெசவாளர்கள், ஹட்கோ வங்கியிலே கடன் பெற்றவர்கள் வட்டி கட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கருணையோடு இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தள்ளுபடி தருகிறார்கள். அண்ணா பிறந்த நாளிலேயிருந்து பொங்கல் வரை தருகின்ற தள்ளுபடியைப் பிரித்து, ஒரு மாதத்திற்கு ஒரு வார காலம் என்று பிரித்து, ஆண்டு முழுவதும் தள்ளுபடி வழங்கினால், இன்னும் கைத்தறித் துணிகளுடைய விற்பனை அதிகரிக்கும் என்பதைக் கருணையோடு அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அது மட்டுமல்ல, வாரத்திற்கு ஒருமுறை, கைத்தறி உடையை அத்தனை பேரும் அணிய வேண்டுமென்ற வேண்டுகோளை நமது பாரதப் பிரதமர் அவர்கள் டெல்லியிலே நடைபெற்ற கைத்தறி முத்திரை வழங்குகிற விழாவிலே அறிவித்திருக்கிறார்கள். அதை இந்த அரசும் செயல்படுத்த வேண்டும்.

கைத்தறித் துணிகளுடைய விற்பனையை அதிகரிக்க வேண்டுமென்றால், அரசு விழாக்களிலே பயன்படுத்துவதற்குக் கைத்தறித் துணிகளைக் கொடுக்கலாம். அரசு விழாக்களிலே உபயோகத்திற்கு, மத்திய, மாநில அரசுகளின் உபயோகத்திற்கு, இரயில்வே துறையின் உபயோகத்திற்கெல்லாம் கைத்தறித் துணிகளை விற்பதற்கு—இங்கே கோ–ஆப்டெக்ஸினுடைய மேலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளெல்லாம் வந்திருக்கிறார்கள்—கருணையோடு தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய, மாநில அரசுகளின் பயன்பாட்டிற்குக் கைத்தறித் துணிகளைக் கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்தால், கைத்தறியைத் தூக்கிப் பிடிக்க முடியும். கைத்தறி நெசவாளர்களுக்கு நல வாரியம் அமைத்துச் சிறப்பித்ததைப்போல, விசைத்தறி நெசவாளர்களுக்கும் ஒரு நல வாரியத்தை அமைக்க வேண்டும். ஜவுளித் துறையில் கைத்தறியை அடுத்து மிக முக்கியமான துறையாக இருப்பது விசைத்தறி. விசைத்தறி நெசவாளர்களுக்கும் ஒரு நல வாரியத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுக்கொரு முறை நெசவாளர்களுக்காக, நெசவாளர்களுடைய கருத்துகளைக் கேட்கிற கூட்டங்களை நடத்தி, அவர்களுடைய குறைகளை, நிறைகளைக் கேட்கிற ஒரு நல்ல நிகழ்வை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



ஏற்றுமதிக்கு உகந்த புதிய டிசைன்களை உருவாக்குவதற்கு பயிற்சியளிக்க வேண்டும். டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர்கள் நலவாழ்வு அறக்கட்டளையின்கீழ் உதவித் தொகை வழங்குதல் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்திலே, 74 மாணவர்கள் மட்டும் பயன்பெறுகிறார்கள் என்ற செய்தி இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே வந்திருக்கிறது. தமிழகத்திலே 74 மாணவர்கள் மட்டும்தான் அந்தத் திட்டத்திலே பயன்பெறுகிறார்கள் என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அந்தத் திட்டத்தை, ஆயிரம் மாணவர்களாவது பயன்பெறுகிற அளவிற்கு விரிவுபடுத்த வேண்டும்.

பிற்பகல் 1–25

ஒருங்கிணைந்த கைத்தறி செறிவுப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திலே சென்னிமலைப் பகுதியை இந்த ஆண்டு சேர்க்க வேண்டுமென்று நமது கைத்தறித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சென்னிமலையிலே தொழில்நுட்பப் பூங்கா அமைத்து, ஜவுளித் துணிகள் ஏற்றுமதி மையம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோ–ஆப்டெக்ஸ் மிகப் பெரிய ஒரு சாதனையைச் செய்திருக்கிறது. 1,64,492 நிறங்களில் ஒரு பட்டுச் சேலையைத் தயாரித்து, உலகத்திலே இருக்கின்ற ஏழு அதிசயங்களை அதில் இடம்பெறச் செய்து, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலையும் இடம்பெறச் செய்து உள்ளார்கள், தலைவர் கலைஞர் அவர்கள் அதற்கு "மயில் தோகை" பட்டுச் சேலை என்கின்ற பட்டத்தை இன்றைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அது guinness–ல் இடம்பெறும் செய்தியைப் பார்த்தோம். அது guinness–ல் இடம்பெற்று, தமிழகத்திற்கு, கைத்தறி, பட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்குக் காஞ்சிபுரத்திலே, சூரத்திலேயிருந்து ஜரிகை வாங்கிக்கொண்டிருக்கிறோம். ஜரிகை தயாரிக்கக்கூடிய அளவிற்குத் திறமையானவர்கள் காஞ்சிபுரத்திலே இருக்கிறார்கள். அவர்கள்மூலமாக ஜரிகை தயாரிக்க முடியுமா என்பது பற்றி கைத்தறித் துறையும், கோ–ஆப்டெக்ஸ் துறையும் இணைந்து யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல்லிலே 150–க்கும் மேற்பட்ட நூற்பாலைகள் இருக்கின்றன. திண்டுக்கல்லிலே நூற்பாலைப் பூங்கா அமைப்பதற்கு அரசு கருணையோடு பரிசீலனை செய்ய வேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். விசைத்தறியிலே இன்றைக்குப் புதுமை வந்துகொண்டிருக்கிறது. ரேப்பர், சுல்சார் ஏர்ஜெட் தறி வந்துகொண்டிருக்கிறது. இத்தறிக்கு மின் கட்டணச் சலுகை வேண்டுகிறேன். நன்றி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு)

**திரு. விடியல் எஸ். சேகர்:** சரியாக ஐந்து நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மாமன்றத்தில் எனக்கு முன்னால் என்னுடைய தந்தையை 1996-லிருந்து 2001 வரையிலும், அதன் தொடர்ச்சியாக என்னையும், இதே கைத்தறி மற்றும் துணி நூல் துறையினுடைய மானியக் கோரிக்கையைச் சமர்ப்பிக்க வைத்த எங்கள் இனத் தலைவர் அய்யா கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இனமானப் பேராசிரியர் அவர்களையும், எங்கள் வழிகாட்டி, ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களையும் வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த கைத்தறித் துறையினுடைய மானியக் கோரிக்கைமீதான விவாதத்திற்கு எனது பதிலுரையைச் சமர்ப்பிக்கிறேன்.

வாழ்கிற நெசவாளர்களை எந்த அளவிற்குத் தலைவர் கலைஞர் அரசு இந்தத் திட்டங்கள் அடிப்படையிலே பாதுகாத்துச் செயல்படுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்வது எங்களுடைய துறையினுடைய கடமை என்கிற அடிப்படையில் சில தகவல்களை, இங்கே மன்றத்திலே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் திரு. சின்னசாமி அவர்களுக்கும், திரு. போஸ் அவர்களுக்கும் சில புள்ளிவிவரங்களை இதன் அடிப்படையிலே தருவது எங்களுடைய கடமை.

நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாக மாதம் 200 ரூபாய் வழங்கி வந்ததை ரூபாய் 400 ஆக உயர்த்திக் கொடுத்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு நெசவாளர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோல, 2006-2007 ஆம் ஆண்டு அறிவித்தபடி 1-8-2006 முதல் கைத்தறி மற்றும் விசைத்தறியாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1,10,537 பயனாளிகள் இன்று வரை பயனடைந்துள்ளார்கள். இதற்கு நடப்பு நிதியாண்டில் ரூ.78.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குவதைத் தமது சமுதாயக் கடமையாகக் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், நடப்பு ஆண்டிற்கும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுவதற்கு, மூன்று கோடியே 28 இலட்சம் மக்கள் பயன்பெறுகிற வகையில், இலவச வேட்டி, சேலைத் திட்டத்திற்கு 256 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) மாமன்ற உறுப்பினர் போஸ் அவர்களுக்குச் சொல்கிறேன்; இந்த இலவச வேட்டி, சேலையையே ஒரு மூன்று ஆண்டு காலம் இந்த மாநிலத்தில் வழங்காமல் நிறுத்தி, நெசவாளர்களைக் கஞ்சித் தொட்டி என்ற சூழ்நிலைக்கு அனுப்பியதே உங்களுடைய அரசுதான் என்பதையும் இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய வேண்டியது எங்களுடைய கடமை (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற அடிப்படையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், இலவச சீருடைத் திட்டத்தின்கீழ் 58,58,142 மாணவ மாணவிகளுக்குப் பயன்படுகிற வகையில், நடப்பாண்டில் 45.61 கோடி செலவில் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலே அறிவித்தவாறு அனைத்து இரண்டு இலட்சம் கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பணி இந்தத் துறையின்மூலமாக நடந்து வருகிறது என்பதையும், கைத்தறித் துணியினுடைய விற்பனைக்கு அளித்து வரும் தள்ளுபடி மானியத் தொகை வருடத்திற்கு ஒதுக்கீட்டுத் தொகையான 102 கோடியுடன் கூடுதலாக ரூபாய் 106.19 கோடி சேர்த்து, மொத்தம் 208.19 கோடி ரூபாயை நெசவாளர்களுக்கு நிலுவையில்லாமல் தலைவர் கலைஞர் அரசுதான் இதுவரை தந்திருக்கிறது என்பதையும் இந்த மன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** கூட்டுறவு நூற்பாலைகள்: சீராக நடந்து கொண்டிருக்கிற கூட்டுறவு நூற்பாலைளில், 5 கூட்டுறவு நூற்பாலைகளை சிறப்பாக நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டு, இன்று அந்த 5 கூட்டுறவு நூற்பாலைகளும் இலாபத்திலே இயங்கி வருகின்றன. மாமன்றத்திலே பேசுகின்றபோது, தோழமைக் கட்சிகளினுடைய தோழர்கள் எல்லாம் 13 கூட்டுறவு நூற்பாலைகளைத் திறக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், எதிர்த் தரப்பிலே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் அதைப் பற்றிப் பேசவேயில்லை. தொழிலாளிகளைப் பற்றியும், நெசவாளிகளைப் பற்றியும் பேசுகிறவர்கள், அந்த 13 நூற்பாலைகளை மூடி, அதிலேயிருந்த 9 ஆயிரம் தொழிலாளர்களை வீட்டிற்கு அனுப்பி இருக்கிற ஓர் அரசுதான் அவர்களுடைய அரசு என்பதை, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மன்றத்திலே பதிவு செய்வது எங்களுடைய கடமை. நீங்கள் சொல்லுகிற சூழ்நிலையில் இந்த நிலையை எல்லாம் இங்கே சொல்லியாக வேண்டிய காரணத்திற்காகத்தான் சொல்கிறேன். அதேபோல, இந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் 9 ஆயிரம் பேர் வீட்டிற்குப் போய் இருக்கிறார்கள். ஆனால் நடந்துகொண்டிருக்கின்ற இந்த 5 நூற்பாலைகளையும் இந்த அரசு சிறப்புடன் நடத்த வேண்டுமென்று மறுசீரமைப்பிற்குக்கூட அதற்குரிய தேவைகளைத் துறையின்மூலமாக எடுத்துச் செய்துகொண்டிருக்கின்றோம் என்பதையும் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் இயங்கிட இவ்வரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் வாயிலாக 880 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்வது என்னுடைய கடமை.

நம்முடைய அண்ணன் மாமன்ற உறுப்பினர் சிவானந்தம் அவர்கள் இங்கே பேசுகிறபோது, தங்களுடைய மாவட்டத்திலே ஆலோசனைக் குழு போட்டு. அதன்மூலமாக இந்தச் சங்கங்கள் நலிவுற்றன என்று சொன்னார். அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், சங்கம் நலிவடைந்தது என்பதை ஒத்துக்கொண்டு, அது



நலிவடைந்த சூழ்நிலை, ஆலோசனைக் குழு உறுப்பினர்களால் அல்ல, அதிகாரிகளால் என்ற சூழ்நிலையை மட்டும்தான் இங்கே சொன்னார் என்ற ஒரு காரணத்திற்காக, அந்த உண்மைக்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும். உங்களுடைய ஆட்சியில்தான் (குறுக்கீடு) என்ன இருந்தது என்பதை நீங்கள் பார்த்துவிட்டுப் பேசுவது நல்லது. நெசவாளர்களுக்கென பல்வேறு நலத் திட்டங்கள் போன ஆட்சிக் காலத்திலேயிருந்தாலும், இந்த ஆட்சிக் காலத்தில், தலைவர் கலைஞர் அரசு எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்துகிறது என்பதையும், அதை நடைமுறைப்படுத்துகிற துறையும், அரசும் எந்த அளவிற்கு நல்ல முறையிலே செயல்பட்டு வருகின்றன என்பதையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கூட்டுறவின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மட்டுமே நடைமுறைப்படுத்தி வந்த மகாத்மா காந்தி நெசவாளர் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் மற்றும் நல்வாழ்வுத் திட்டம் ஆகியவை கூட்டுறவு அமைப்பிலே இல்லாத கைத்தறி நெசவாளர்களுக்கும் இந்த ஆண்டு விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

தலைவர் கலைஞர் அரசு 1971 ஆம் ஆண்டு, இந்தியாவிலேயே முதன்முதலாக அறிமுகப்படுத்திய நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ. 8 கோடி இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 76,024 நெசவாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோல, டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளைமூலமாக 10–12 வகுப்பிலே அதிக மதிப்பெண்களைப் பெறுகிற நெசவாளர் குழந்தைகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. கல்வி ஊக்கத் தொகையைத் தரவில்லை என்று தவறான தகவல்களைச் சொன்னார்கள். ஆனால், நெசவாளர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி ஊக்கத் தொகை நிறுத்தப்படவில்லை. மாறாக, ஒவ்வொரு பாடத்திற்கும் தருகின்ற பணத்திலிருந்து மேலும் 500 ரூபாய் கொடுக்கப்பட்டு, 2006–2007 ஆம் ஆண்டில், 23,176 மாணவ, மாணவிகளுக்கு கல்வி ஊக்கத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் மாணவர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு முறையே 400, 450 மற்றும் 500 ரூபாய் என மாதம் ஒன்றிற்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர,

புத்தகங்கள் வாங்குவதற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 60–ம், கல்விப் பயணப் படியாக, ரூ.200–ம் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

கைத்தறி வளர்ச்சிக்கென நடைமுறைப்படுத்தப்படும் தீன்தயாள் கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகள், வடிவமைப்பு, மேம்பாடு, விளம்பரம்போன்ற இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் சுமார் ரூ. 15.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒருங்கிணைந்த கைத்தறிப் பயிற்சித் திட்டத்தின்கீழ், நெசவு நெய்தல், சாயம் தோய்த்தல், மற்றும் வடிவமைப்பு, மேம்பாடு ஆகியவற்றிற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தில் 4,340 நெசவாளர்கள் பயிற்சிபெற்றுள்ளனர். இதற்காக ரூ. 7.31 கோடி செலவிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 1,200 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இலவச வேட்டி, சேலை இரகங்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வருவாயை உயர்த்தும் நோக்கத்துடன், புதிய வடிவமைப்பு, மேம்படுத்தப்பட்ட நெசவுப் பயிற்சி, மேம்படுத்தப்பட்ட தறிகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ.11.58 கோடி இதுவரை மத்திய, மாநில அரசுகள் நிதியை வழங்கியுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 11,137 நெசவாளர்கள் பயன்பெற்றுள்ளனர். இந்த நெசவாளர்கள் உபயோகப்படுத்துகிற தறிகளை மேம்படுத்த தறி உபகரணங்களும், மேலும், 2,096 புதிய தறிகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் பற்றிய செய்திப் படத்தினை வெளியிட ரூபாய் 30 இலட்சம் செலவில் தயாரிப்புப் பணி, தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–3.5

ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தின்கீழ் ஈரோடு, குமாரபாளையம், மதுரை, கரூர் ஆகிய இடங்களில் ரூபாய் 766.19 கோடி மதிப்பீட்டில் ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளன. மொத்தம் நம்முடைய தமிழகத்திற்கு 13 ஜவுளி சிறப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு ரூ.736.60 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, திருப்பூரில் நேதாஜி ஆயத்த ஆடைப் பூங்கா,



திருப்பூர் காற்றாலை அமைக்கும் திட்டம் ஆகியவை நிறைவேற்றப்பட்டு, இதர 11 திட்டங்கள் விரைவுபடுத்தப்படுகின்றன அதன்மூலமாக 1.15 இலட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல், ஜவுளித் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டத்தினை 11–வது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொடர்வதற்காக மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்த மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இதனால், இந்தத் திட்டம் 11–வது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொடரும் என மத்திய அரசு அறிவித்துள்ளது என இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கமான கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான இந்த அரசினுடைய நடவடிக்கையில் கொள்முதல் முறையை மாற்றி, பண்டிகைக் காலங்களில் மட்டுமின்றி, மாதந்தோறும் கொள்முதல் செய்யும் திட்டத்தை அமல்படுத்தியதால், கடந்த ஆண்டு ரூ.55.44 கோடி ஆக இருந்த சில்லறை விற்பனைக்கான கொள்முதல், நடப்பு ஆண்டில் ரூபாய் 71.31 கோடியாக உயர்ந்துள்ளது. 31–3–2007 வரை கொள்முதல் செய்யப்பட்ட அனைத்து வகைத் துணிகளுக்கும் பணப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சேலைகள் மற்றும் வீட்டு உபயோகத் துணி வகைகள், நுகர்வோரின் தேவை மற்றும் விருப்பத்தினைக் கருத்திலேகொண்டு, 525 புதிய வடிவமைப்புகள் இப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அரசு நெசவாளர் நலன் கருதி, அவர்தம் நிதிநிலை சீர்படும்விதமாக, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் சில்லறை விற்பனைக்குக் கொள்முதல் செய்யும் துணிகளுக்கு 30 நாட்களுக்குள் நெசவாளர் சங்கங்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யும் முறையை இங்கே அறிமுகப்படுத்தியுள்ளது. நடப்பாண்டு மட்டும், முந்தைய ஆண்டின் நிலுவை உள்ளிட்ட ரூபாய் 79.99 கோடி பணப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கைத்தறித் துணிகளுடைய விற்பனையைப் பெருக்கும்பொருட்டு, தேசிய கைத்தறிக் கண்காட்சியில் தமிழகத்தைச் சேர்ந்த 60 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், இதர மாநிலங்களைச் சேர்ந்த 31 நெசவாளர்கள்

அமைப்புகளும் பங்கேற்றன. இக்கண்காட்சியில் ரூபாய் 3.12 கோடி கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

அதேபோல், நம்முடைய நெசவாளர்களின் திறமையை உலகறியச் செய்ய, கின்னஸ் சாதனையைப் படைக்க இருக்கும் 1,64,492 வண்ணக் கலவைகளைக்கொண்டு கறையிலே உலகின் 7 அதிசயங்கள், முந்தியிலே மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுடன் நெய்யப்பட்ட சிறப்புமிகு பட்டுச் சேலை என்றைக்குப் பெருமைபெற்றது என்றால், 22-11-2006 அன்று "மயில் தோகை" என்று பெயரிட்டு, மாண்புமிகு தலைவர் அவர்களின் திருக்கரங்களால் வெளியிட்ட அன்றுதான் அது தன்னுடைய சிறப்பைப் பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் துறையினுடைய 2007-2008-க்கான அறிவிப்புகளை மாமன்றத்திலே அறிவிப்பதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

1. உலகமயமாக்கலின் தாக்கத்தினை எதிர்கொள்ளும்முகமாக, நெசவாளர்களின் திறனை மேம்படுத்த, கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி வழங்க வேண்டியது அவசியமாகிறது. தற்சமயம் இத்துறைக்கென தனியே பயிற்சி மையம் எதுவும் இல்லாததால், நெசவாளர்கள் அதிகம் வாழும் ஈரோடு மாவட்டத்தில் ஒரு கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம் அமைக்கப்படும். இதன் தொடர்ச்சியாக, வேறு மாவட்டங்களிலும் அதனுடைய தொடர்ச்சி இருக்கும்.

2. தற்போது வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கான வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள், வேலூர் சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநரின்மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள நெசவாளர்களின் நலனில் தனிக் கவனம் செலுத்த ஏதுவாக, திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனியே ஒரு சரக உதவி இயக்குநர் அலுவலகம் திருவண்ணாமலையில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. நெசவாளர்களுக்கு அதிக வருவாய் கிடைக்க வழிவகுக்கும் நோக்கத்துடன், விருதுநகர் மற்றும் நாகர்கோவில் பகுதிகள் ஏற்றுமதி மண்டலங்களாகத் தெரிவு செய்யப்பட்டு, அப்பகுதியில் 1,000 கைத்தறி நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்களோடு அங்கே ஒருங்கிணைக்கப்பட்டு, அவர்களுக்கு ஏற்றுமதி இரக உற்பத்தியில் தொடர்ந்து வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையில் ரூபாய் 1.23 கோடி மதிப்பீட்டிலான திட்டம் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.



பிற்பகல் 1-40

4. 60 வயதுக்கு முன்னர் இறக்க நேரிடும் கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திரக் குடும்ப ஓய்வூதியத் தொகை 1-5-2007 முதல் ரூ.350/-லிருந்து ரூ.550/- ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கிணங்க, கைத்தறி நெசவாளர்களுக்கு 1-5-2007 முதல் அடிப்படைக் கூலியில் 10 விழுக்காடு அகவிலைப் படி உயர்வு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் துறையின்மூலமாக அறிவிப்புகள் எல்லாம் அச்சடிக்கப்பட்டு, நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் கையிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்கு நல்ல வகையில் செயல்படுகிற நிலையை உருவாக்குவதற்கு உங்களுடைய ஒத்துழைப்பைக் கொடுக்கிற நிலையில், இந்த அறிவிப்புகள் புத்தகத்தில்@ உள்ளவற்றில் நேரமின்மை காரணமாக, அவையில் நான் அறிவித்த ஐந்து அறிவிப்புகள் தவிர மீதியுள்ளவற்றை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை நான் கவனமாகப் பரிசீலித்தேன். எனது உரை மாண்புமிகு உறுப்பினர்களின் வெட்டுத் தீர்மானங்களுக்குரிய பதிலாக இருக்குமென்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகளைக் கவனத்துடன் பரிசீலிக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, துறையின் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டமன்றத்தில் தன்னுடைய உழைப்பு எனும் உன்னத மூலதனத்தால் தொடர்ந்து ஐம்பது ஆண்டுகள் பணியாற்றி, ஏழையெளிய நடுத்தர மக்களுக்காக மட்டுமல்லாமல், உழைக்கும்

@ 305 முதல் 309 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மக்களுக்காகவும் சாதனைகள் பல புரிந்து, நாட்டு மக்களின் நல்வாழ்வே தனது இலட்சியம் என்று 84 வயதிலும் அயராது உழைத்து, இந்திய அரசியலில் புடம் போட்ட தங்கமாக ஜொலித்துக்கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றப் பொன் விழா நாயகர், ஜனநாயகத்தின் வழிகாட்டி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் உருவில் நடமாடும் எங்கள் அற்புதத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்தப் பொற்கால ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கையில், இரண்டாவது முறையாக உரையாற்றுகின்ற நல்ல வாய்ப்பை வழங்கிய, தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்களுடைய இளைய தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கிற முக்கியத் துறைகளில் ஒன்று, தொழிலாளர் நலத் துறை. நாட்டில் தொழில் அமைதியை ஏற்படுத்தி, தொழில் வளத்தைப் பெருக்கி, தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்குமிடையே சுமுகமான உறவு நிலவுவதற்கு இத்துறை உறுதுணையாக இருந்து வருகிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களை சந்திப்பதற்கே பேரணிகள், கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்த வேண்டிய நிலை இருந்தது. போராடுகின்ற தொழிலாளர்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை என்ற ஓர் இருண்ட கால நிலை கடந்த ஆட்சியில் இருந்ததை யாரும் மறந்துவிடவும் முடியாது, மறுக்கவும் இயலாது. ஆனால், இன்றைய கழக ஆட்சியில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை அனைவரும், எப்போதும், எந்த நேரத்திலும் சந்தித்துக் கோரிக்கைகளைத் தருகிறார்கள்.

'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்றார் ஏசு. அதைப்போல தொழிலாளர்களின் நலனில் அக்கறைகொண்டு, அனைத்துப் பிரச்சினைகளையும் தலைவர் கலைஞர் அவர்கள் உடனுக்குடன் தீர்த்து வைக்கிறார்கள்.



தொழிலாளர்கள் நிலை குறித்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் மாநில அளவில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. தொழிலாளர் துறை அலுவலர்களின் பணிகள் திறனாய்வு செய்யப்பட்டு, துறை மேலும் சிறப்பாகச் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் எந்த நிலையிலும் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படக் கூடாது, அச்சுறுத்தப்படக் கூடாது, தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய சலுகைகள், உரிமைகள், பயன்கள் உடனடியாக வந்து சேர வேண்டுமென்பதில் தொழிலாளர் நலன் காக்கும் இந்த அரசு உறுதுணையாகச் செயல்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், தொழிலாளர்களுக்கும், நிருவாகத்தினருக்கும் இடையே சுமுகமான உறவை ஏற்படுத்துவதிலும், தொழிலாளர் நலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள் கண்டிப்பாக அமல்படுத்தப்பட வேண்டுமென்பதிலும் கலைஞர் அரசு மிகவும் அக்கறை செலுத்தி வருகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, 91 சதவிகிதத் தொழிலாளர்கள் அமைப்புசாராத் தொழிலாளர்களாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கென்று எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும், நலத் திட்டங்களும் இல்லாத நிலை இருந்து வந்தது.

மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் 2000 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது, அமைப்புசாராத் தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெற வேண்டுமென்பதற்காக 9 நல வாரியங்களைத் தனித்தனியாக அமைத்தார். அதோடு மட்டுமல்லாமல், இந்த வாரியங்கள் சிறப்பான முறையில் செயல்பட வேண்டுமென்பதற்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தார். ஆனால், அதன் பின்னர் வந்த அ.தி.மு.க. ஆட்சியில் அவ்வாரியங்கள் கலைக்கப்பட்டதோடு, அவற்றை ஒரே வாரியமாக ஆக்கி, தொழிலாளர்களின் உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கை நசுக்கப்பட்டது.

தலைவர் கலைஞர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2006 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில், அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு தனித்தனி நல வாரியங்களை உருவாக்குவோம் என்று உறுதியளித்ததைப்போலவே, மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் தனித்தனி நல வாரியங்களை உருவாக்கி சாதனைகள் படைத்துத் தந்தார்.

பிற்பகல் 1-45

அ.தி.மு.க ஆட்சியில் ஒன்றாக்கப்பட்ட 9 வாரியங்களை மீண்டும் தனித்தனியாக அமைத்ததோடு மட்டுமல்லாமல், பொற்கொல்லர், மண்பாண்டம் செய்வோர் மற்றும் வீட்டு வேலை செய்யும் பணியாளர்கள் ஆகியோருக்கும் புதியதாகத் தனித்தனி நல வாரியங்களை உருவாக்கி, மொத்தம் 12 நல வாரியங்களை அமைத்துத் தந்தார்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், வாரியங்களில், பயனாளிகள் கொடுத்த, இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்கள்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல், வாரிய அலுவலகத்தில் தேங்கிக் கிடந்தன. அவையனைத்துக்கும் கலைஞர் ஆட்சியில் உடனடியாகத் தீர்வு காணப்பட்டு, பயனாளிகளுக்கு உரிய பணப் பயன்கள் வழங்கப்பட்டன.

இந்த வாரியங்கள் சரியான முறையில் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தில், 179 பணியிடங்கள் உருவாக்கப்பட்டு, அந்தப் பணியிடங்களில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். தொழிலாளர் துறையின் இதர அலுவலர்களும் இந்த வாரியங்களின் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு உறுப்பினர்கள், நல வாரியங்களில் பதிவு செய்வது, பணப் பயன்கள் பெறுவது பற்றிப் பேசினார்கள். தகுதியில்லாதவர்கள் நல வாரியங்களில் பதிவு செய்துகொண்டு, அதன் பலன்களை அடைந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில், தொழிலாளர்கள் கொடுக்கும் ஒவ்வொரு விண்ணப்பமும் ஆய்வு செய்யப்பட்ட பின்னரே பதிவு செய்யப்பட வேண்டும் என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரருக்கு 15 நாட்களுக்குள் அடையாள அட்டை வழங்கவும், பயனாளிகள் உதவித் தொகை கேட்டு மனு செய்த நாளிலிருந்து, மூன்று மாதங்களுக்குள் உதவித் தொகைகள் கிடைத்திடவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், 1996 ஆம் ஆண்டிலிருந்துதான் சிறப்பாகச் செயல்படத் தொடங்கியது. இந்த வாரியத்திற்கு கட்டடம் கட்டுபவர்களால் செலுத்தப்பட வேண்டிய நல நிதித் தொகை முழுமையும், நேரடியாகச் செலுத்தப்பட்டு, வாரியத்தின் நிதியாதாரம் வலுவாக்கப்பட்டது.



தற்பொழுது இந்த வாரியத்தின் செயல்பாடுகள் செம்மைப்படுத்தப்பட்டு, தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களின் பண உதவிகள் விரைந்து வழங்கப்படுகின்றன. முந்தைய ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் 7 இலட்சத்து 75 ஆயிரத்து 552 தொழிலாளர்கள் பதிவு செய்துகொண்டனர். ஆனால், தற்போதைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடந்த 11 மாதங்களில் மட்டும், 3 இலட்சத்து 4 ஆயிரத்து 156 தொழிலாளர்கள் பதிவு செய்துகொண்டனர்.

இதேபோன்று, முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் 66 ஆயிரத்து 323 தொழிலாளர்களுக்கு ரூ. 22 கோடியே 94 இலட்சத்து 33 ஆயிரத்து 224 உதவித் தொகையாக வழங்கப்பட்டது. ஆனால், தற்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடந்த 11 மாதங்களில் மட்டும் 39 ஆயிரத்து 189 தொழிலாளர்களுக்கு ரூ. 12 கோடியே 40 இலட்சத்து 63 ஆயிரத்து 453 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலம் முழுவதும் 5 ஆண்டுகளில் உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் 5 இலட்சத்து 13 ஆயிரத்து 468 தொழிலாளர்கள் பதிவு செய்துகொண்டனர். ஆனால், தற்போதைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடந்த 11 மாதங்களில் மட்டும், 4 இலட்சத்து 87 ஆயிரத்து 47 தொழிலாளர்கள், உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 12 நல வாரியங்களில் உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

இதேபோன்று, முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் 64 ஆயிரத்து 819 தொழிலாளர்களுக்கு ரூ. 13 கோடியே 51 இலட்சத்து 30 ஆயிரத்து 944 உதவித் தொகையாக வழங்கப்பட்டது. ஆனால், தற்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடந்த 11 மாதங்களில் மட்டும் 91 ஆயிரத்து 198 தொழிலாளர்களுக்கு ரூ.19 கோடியே 2 இலட்சத்து 57 ஆயிரத்து 85 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து, கலைஞர் ஆட்சியில் எந்த அளவிற்கு நல வாரியங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்துகொள்ளலாம். அனைத்து நல வாரியங்களும், மேலும் சிறப்பாகச் செயல்பட, மாவட்டத் தலைநகரங்களில், புதிய அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, அவையெல்லாம் கணினிமயமாக்கப்படவுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல வாரியங்களில் பதிவு செய்துகொண்ட தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதில் இருந்த குழப்பங்கள் நீக்கப்பட்டு, தொழிலாளர்களின் சின்னமான, உழைப்பாளர் சிலை ஒரு பக்கத்திலும், மறுபக்கத்தில் அரசு கோபுரச் சின்னத்துடன் வண்ணப் புதுப்பொலிவுடன் அச்சிடப்பட்டு, இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

வாரியத்தில் பதிவு செய்வதற்கான கட்டணம் மற்றும் புதுப்பிப்பதற்கான கட்டணம் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டு, கட்டணமின்றி உடலுழைப்புத் தொழிலாளர்களாகப் பதிவு செய்யப்பட்டு வருகின்றார்கள்.

அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு முதன்முதலில் 1972 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் சட்டம் கொண்டு வந்து, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தை உருவாக்கினார்கள். இந்த வாரியத்தின்மூலம் தொழிலாளர்களுக்குப் பல்வேறு உதவித் தொகைகள் வழங்கப்படுவதுடன், தொழிலாளர்கள் சுற்றுலா செல்லும்போது, குறைந்த வாடகையில் குடும்பத்துடன் தங்குவதற்கு வசதியாக, மாமல்லபுரம், குற்றாலம், வால்பாறை ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்களும், தொழிற்சங்கத் தலைவர்கள் பேச்சுவார்த்தைக்காக சென்னைக்கு வரும்போது தங்குவதற்கு வசதியாகத் தங்கும் விடுதி, ஜீவா இல்லமும் இயங்கி வருகின்றன.

தொழிலாளர் துறை அலுவலர்களின் முயற்சியால், வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்புகளின் எண்ணிக்கை மிகவும் கணிசமாகக் குறைந்துள்ளது. கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் கடந்த 11 மாத காலங்களில் 998 தொழிற்தாவாக்களில் தொழிலாளர் நலத் துறை அலுவலர்களால் சமரச ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; மற்றும் 40 வேலைநிறுத்தங்கள், 15 கதவடைப்புகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

பிற்பகல் 1–50

தொழிலாளர் உறவுகளை மேம்படுத்த, தொழிலாளர் மற்றும் நிர்வாகங்கள் இடையே நல்லுறவுகளை வளர்த்துக்கொள்வது மிகவும் அவசியம் என்பதை உணராத அ.தி.மு.க. அரசு கடந்த 5 ஆண்டுகளாகத் தமிழகத்தில் முத்தரப்புக் குழுக்களை உருவாக்கவோ அல்லது கூட்டவோ முனைந்திடவில்லை.



தொழிலாளர் உறவோ அல்லது நலனோ தேவையற்றது என்ற அ.தி.மு.க. அரசின் நிலையை மாற்றி, முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் எதையும் விவாதித்து முடிவினை மேற்கொள்ளும் அரசாக இருப்பதற்கு ஓர் உதாரணமாக, உடனடியாக முத்தரப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, விவாதங்கள் நடைபெற்று, அதன் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தோட்டத் தொழிலாளர்களின் ஊதியம் தொடர்பான பிரச்சினை, கடந்த அ.தி.மு.க. அரசால் தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விடப்பட்டது. கழக ஆட்சி அமைந்தவுடன், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணையின்பேரில், துறையின் அமைச்சர் என்ற முறையில், பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண, கடந்த 11–7–2006 அன்று கோவையிலும், 2–12–2006 அன்று சென்னையிலும், தொழிற்சங்க மற்றும் நிர்வாகத் தரப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். பின்னர், தொழிலாளர் ஆணையர் முன்பு 19–2–2007 மற்றும் 2–3–2007 ஆகிய நாட்களில் நிர்வாகங்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்பொழுது ஊதிய உயர்வு தொடர்பாக நிர்வாகமும், தொழிற்சங்கமும் தொடர்ந்து நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

மேலும், தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்று, தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வு வளம் பெறுவதற்காக, குறைந்தபட்ச ஊதியத்தைத் திருத்தி அமைக்க முத்தரப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியை இந்த அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விரைவில், குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட, தொழிலாளர் நலன் காக்கும் இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. கோவை தங்கம் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், தொழிற்சாலைகளில், குறிப்பாகப் பஞ்சாலைகளில் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் என்ற பெயரில், இளம் பெண்களைக் கொத்தடிமைகளாக நடத்தும் முறை குறித்துப் பேசினார்கள். இப்பிரச்சினை குறித்துப் பஞ்சாலைத் தொழிற்சங்கக் கூட்டு நடவடிக்கைக் குழுத் தலைவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர்

கலைஞர் அவர்களைச் சந்தித்து, பஞ்சாலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளின்மீது தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அதன்மீது, தொழிற்சங்கத் தலைவர்களுடனும், பஞ்சாலை நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். பஞ்சாலை நிர்வாகங்கள், தவறு செய்யும் பஞ்சாலைகள்மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

பெண் தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்துகின்ற முறையை ஒழிக்க வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது, இதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று வள்ளுவர் கூறியுள்ளார். தந்தையின் கடமை, மகனைச் சான்றோன் ஆக்குதல் என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால், வறுமையின் காரணமாக, பால் மணம் மாறா பாலகர்களைப் பணிக்கு அனுப்பும் கொடுமையைக் காண்கிறோம். குழந்தைத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை உருவாக்குவதில் இந்த அரசு தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை, சட்டத்தால் மட்டும் ஒழிக்க இயலாது என்பதை இந்த அரசு நன்றாக அறிந்துள்ளது. குழந்தைகளைப் பணிக்கு அமர்த்துபவர்கள்மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வீடுகள், உணவகங்கள் மற்றும் பொழுதுபோக்கு இடங்களில், 14 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளைப் பணியமர்த்துவதைத் தடை செய்து, குழந்தைத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் அறிவிக்கை வழங்கப்பட்டு, கடந்த 10–10–2006 முதல் அச்சட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. வீடுகள் மற்றும் உணவகங்களில் குழந்தைத் தொழிலாளர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்து வெளியிடப்பட்ட சட்டத் திருத்தத்தை அமலாக்கம் செய்வதற்கு செயல் திட்டம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, இந்த மாமன்றத்தில் அறிவித்தவாறு, தொழிற்சாலைகளில் தொழிலாளர் நலச் சட்டங்கள் செம்மையாக அமலாக்கம் செய்யப்படுவதற்கு உகந்த வகையில், திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு,



தொழிற்சாலைகள் இணை முதன்மை ஆய்வாளர் பதவி ஒன்று உருவாக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களைத் தடுப்பதற்காக சட்டச் செயலாக்கப் பணிகள் மற்றும் பயிற்சிப் பணிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. விபத்துக்களைத் தடுத்திட தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் பாதுகாப்புப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இத்தகைய பயிற்சி வகுப்புகள் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறைமூலம் சோதனை மற்றும் பாதுகாப்பு என்ற பெயரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்தினைத் தடுக்கவும், தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பயிற்சிகள் அளிக்கப்படும் என்று இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, துணைத் தலைமைத் தொழிற்சாலை ஆய்வாளர்மூலம், பட்டாசுத் தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

வேலை தேடுவோரை வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் பதிவு செய்து, வேலை அளிப்பவருக்குத் தேவைப்படும் பணிக் காலியிடங்களுக்கு அவர்களைப் பரிந்துரை செய்யும் பணியை வேலைவாய்ப்புத் துறை செய்து வருகிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட பணி நியமனத் தடையாணையால், இனி அ.தி.மு.க. ஆட்சியில் வேலையே கிடைக்காது என எண்ணி, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களை பதிவு செய்துகொள்ளாமலும், ஏற்கெனவே பதிவு செய்தவர்கள் தங்கள் பதிவுகளைப் புதுப்பித்துக்கொள்ளாமலும் விட்டுவிட்டார்கள். தாயுள்ளம்கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், இளைஞர்களின் எதிர்காலத்தை எண்ணி, பணி நியமனத் தடையாணையை இரத்துச் செய்து, அவர்களின் இருண்ட வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றி வைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 2004, 2005 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் புதுப்பித்துக்கொள்ள இந்த அரசு சலுகை அளித்ததன்பேரில் 1,71,488 நபர்கள் இந்த நல்லாட்சியில் பயனடைந்துள்ளனர். அதேபோல, 2001, 2002, 2003 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கும்

புதுப்பித்துக்கொள்ள, வருகிற 30–4–2007 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–55*

*"சாலை யோரத்திலே வேலையற்றதுகள்–*
*வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள்–*
*வேந்தே! அதுதான் காலக்குறி!"*

என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஆகவே, அறிஞர் அண்ணாவின் எண்ணத்திற்கேற்ப, இளைஞர்களின் மனதில் விபரீத எண்ணங்கள் ஏற்படாமல், பல இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சுமார் 10 ஆயிரத்து 500 கோடி ரூபாய் அன்னிய முதலீட்டில், 10 பன்னாட்டு தொழிற்சாலைகளைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்து நிறுவிட வழிவகுத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் சுமார் 62 ஆயிரம் இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் 64 ஆயிரம் இளைஞர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதோடு மட்டுமல்லாமல், தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு, படித்து வேலை வேண்டி, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருப்போர்களின் துயரினைத் துடைக்கும் வகையில், 10 ஆம் வகுப்புத் தேர்ச்சிபெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/–ம், மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/–ம், பட்டதாரிகளுக்கும், முதுநிலைப் பட்டதாரிகளுக்கும் மாதம் ரூ.300/–ம், வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையாக மூன்று ஆண்டுகள் வழங்க மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்து, இதுவரை 3 இலட்சத்து 18 ஆயிரத்து 89 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு இதுவரை 35 கோடியே 48 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது என்றும், இந்த உதவித் தொகைத் திட்டத்தைத் தொய்வின்றி நிறைவேற்றிட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் புதியதாக 278 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



இத்திட்டம் மேலும் சிறப்பாகச் செயல்பட இந்த நிதியாண்டில் 95 கோடி ரூபாயினை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இத்திட்டம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மத்தியிலே பெரிய வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்புக் கிடைக்கும்போது, இந்த வேலைக்கான திறன் எய்தும் பயிற்சி பெறுவதற்காக, இந்த நிதியாண்டில் 50 ஆயிரம் இளைஞர்களுக்கு அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களின்மூலமாகப் பயிற்சி அளிக்க நமது முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் நிறுவனங்களில் தேவைக்கேற்ப, முறையான தொழிற்பயிற்சியின்மூலம், பல்வேறு தொழிற்பிரிவுகளில் செயல் திறன் மிக்க பயிற்சியாளர்களை உருவாக்க, கைவினைஞர்கள் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகமெங்கும் 56 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், 605 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் உள்ளன. குறைந்த கல்வித் தகுதிபெற்றவர்களும், தொழிற்கல்விபெறும் நோக்குடன் 74 ஆயிரத்து 480 இருக்கைகள்கொண்ட 753 தொழிற்பள்ளிகளும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

2006–2007 ஆம் ஆண்டில் 6 தொழிற்பயிற்சி நிலையங்களான மதுரை, திருநெல்வேலி, வேலூர், கிண்டி, கிண்டி (மகளிர்) மற்றும் சேலம் ஆகியவை திறன்மிகு மையங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

மிகவும் பின்தங்கிய மாவட்டமான பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம்மூலம் உருவாகும் வேலைவாய்ப்புகளை அப்பகுதி இளைஞர்கள் பெற்றுப் பயனடையும் வகையில், அம்மாவட்டத்தில் 2 புதிய தொழிற்பயிற்சி நிலையங்களும், சிவகங்கை மாவட்டத்தில் ஒரு புதிய தொழிற்பயிற்சி நிலையமும் அமைக்கப்படவுள்ளன என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவல்ல ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொழிற்சாலைகளில் பயிற்சிபெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறையை நீக்கும் வகையில், ஓசூர், மதுரை, திருவண்ணாமலை,

திருநெல்வேலி மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் ரூ. 2 கோடி செலவில் பயிற்சி மையங்கள் அமைக்கப்படவுள்ளன. கலைஞர் அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, தி.மு.க.–வின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தவாறு இந்தத் துறை அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளது.

அது மட்டுமல்லாமல், 2006–2007–க்கான, தொழிலாளர் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தற்போது 2007–2008 ஆம் நிதியாண்டிற்கான பகுதி–2 திட்டத்தின்கீழ் சில முக்கியத் திட்டங்களுக்கு அனுமதியினைத் தலைவர் கலைஞா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். தற்போது தொழிற்பயிற்சி நிறுவனங்களில் புதிய தொழில் பாடப் பிரிவுகள் தொடங்குவதற்கு ரூ. 111.28 இலட்சம் செலவிடப்படவுள்ளது. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைச் சீரமைக்க ரூ.25 இலட்சம் செலவிடப்படவுள்ளது. திருக்குவளையில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.20 இலட்சம் செலவிடப்படவுள்ளது. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலை ஆய்வகத் துறையைக் கணினிமயமாக்குவதற்கு ரூ.27.43 இலட்சம் செலவிடப்படவுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அலுவலர்களுக்கு வாகனங்கள் வாங்குவதற்காக ரூ.12.17 இலட்சம் செலவிடப்பட உள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கழிப்பிட வசதி ஏற்படுத்திட ரூபாய் 10 இலட்சம் செலவிடப்படவுள்ளது.

பிற்பகல் 2–00

அதோடு மட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞருடைய ஒப்புதலோடு சில அறிவிப்புகளை இங்கே நான் வெளியிடுகிறேன். ஒன்றிரண்டை மட்டும் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) ஒவ்வொன்றிலும் ஒன்று சொல்லிவிடுகிறேன்.

நல வாரியங்கள்: தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து தொடர்ந்து 5 வருடங்களுக்குக் குறையாமல் பதிவிலிருக்கும் 60 வயதினைப் பூர்த்தி செய்த கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் நோயின் காரணமாக முடக்குமுற்று இயல்பான வேலை செய்வதற்குத் தகுதியற்ற 60 வயது பூர்த்தியடையாத தொழிலாளர்களுக்குத் தற்போது வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.300/–லிருந்து ரூ.400/–ஆக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோலவே,



கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, ரூ.300/–லிருந்து ரூ. 400/–ஆக ஆக்குகிறோம்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கொத்தனார், குழாய் பொருத்துபவர், வர்ணம் பூசுபவர், மின் பணியாளர் மற்றும் மரத் தச்சர் ஆகிய பிரிவுகளிலுள்ள தொழிலாளர்களின் வேலைத் திறனை மேம்படுத்த, அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள்மூலம் பயிற்சி அளிக்கப்படும். இவ்வாண்டு சென்னை மாவட்டத்தில் முதன்முதலாக 200 தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். வாரியம் இப்பயிற்சிக்காக ரூபாய் மூன்று இலட்சம் செலவிடும்.

கடைசியாக, E.S.I. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கோவிந்தசாமி அவர்களுக்கு அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழ்நாட்டில் சென்னை, அயனாவரம், கலைஞர் நகர், மதுரை, கோயம்புத்தூர், சிவகாசி, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஓசூர் மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. தற்போது, திருநெல்வேலி மற்றும் திருப்பூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளைத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் தொடங்க அரசு ஒப்புதல் அளிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

27 அறிவிப்புகள் உள்ளன. நேரம் இல்லாத காரணத்தினால், உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள புத்தகத்திலுள்ள அறிவிப்புகளையெல்லாம் @ நான் படித்ததாகக் கருதி பதிவேட்டிலே பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சின்னசாமி, திரு. கோவை தங்கம், திரு. சிவானந்தம், திரு. காவேரி, திரு. ஜாண் ஜோசப், திரு. உலகநாதன், திரு. குருசாமி, திருமதி கமலாம்பாள், திரு. ஏ.கே. போஸ், திரு. விடியல் எஸ். சேகர் ஆகியோர் எல்லாம் நல்ல கருத்துகளை இங்கே வழங்கியிருக்கிறார்கள். அதைப்போலவே, உறுப்பினர்கள் அனைவரும் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் படித்துப் பார்த்தேன். வருகின்ற காலங்களில், கலைஞருடைய அரசு, தொழிலாளர் நலத் துறையிலே எந்தவிதக் குறையும் இல்லாமல், எதிர்காலத்திலே அவற்றைப் போக்கிடும் என்ற

@ 309 முதல் 315 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV–ஆக அச்சிடப்பட்டுள்ளன.

உறுதியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, என்னுடைய தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு நான் அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. அறிவிப்பு

### பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 20–4–2007 மற்றும் 23–4–2007 ஆகிய நாட்களில் எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 22–காவல், மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் மானியக் கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆகியன 25–4–2007 (புதன்கிழமை) மற்றும் 26–4–2007 (வியாழக்கிழமை) ஆகிய நாட்களிலும், 25–4–2007 (புதன்கிழமை) அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் மற்றும் மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை ஆகியன நாளை 20–4–2007 (வெள்ளிக்கிழமை) அன்றும், 26–4–2007 (வியாழக்கிழமை) அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, 23–4–2007 (திங்கட்கிழமை) அன்றும் பேரவையின் அனுமதியோடு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 32 –தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை– தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 17– கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)– தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 32. (குறுக்கீடுகள்)



மணி என்ன? மணி 2–03 ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நிலைமை அப்படி ஆகிவிட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில், 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருப்பதாகவும், 62 ஆயிரம் பேர்களுக்கு நேரடியாகவும், 64 ஆயிரம் பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்றும் சொன்னார்கள். அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழ்நாட்டில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு ஏதாவது முக்கியத்துவம், சதவிகித அளவு எதுவும் இருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளிலிருந்து வருகின்ற தொழில் முதலீட்டாளர்களிடம், இந்தத் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சில குறிப்பிட்ட experts தவிர மற்றவர்கள் எல்லாம் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் அந்த நிறுவனங்களில் நியமிக்கப்படுவார்கள்.

*பிற்பகல் 2–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.362,13,28,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,55,19,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஆ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.522,99,12,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20–4–2007) வெள்ளிக்கிழமை, காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

48. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒழுங்குறை விதிகளில் (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணிகள் நடைமுறை நூல், தொகுதி–I) திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எம்)த் துறையின் 23–10–2006 ஆம் நாளிட்ட 192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

49. 2005–2006 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

50. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

92. மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

93. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு–செலவுத் திட்டச் செயலாக்கம், 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

94. மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

95. கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய செயல்முறைத் திட்டம், 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

96. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007–2008. (தமிழ்)



## இணைப்பு I

(95 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

### முன்னுரை

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மாநிலத்தில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் வேலை இல்லா இளைஞர்களின் நலனைக் கவனித்து வருகின்றது. உழைக்கும் தொழிலாளர்களின் உயர்விலும், வேலை தேடும் பல லட்சம் இளைஞர்களின் எதிர்காலத்திலும், மாநில அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. அரசின் இந்தக் கொள்கையை செயல்படுத்துவதில் இத்துறை முன்னணியில் உள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதாரம், அதன் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தே அமைகின்றது. தொழில் வளர்ச்சிக்கு, தொழில் அமைதி மிகவும் முக்கியமானதாகும். இந்த அரசின் தொழிலாளர் கொள்கை, தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே சுமுகமான உறவினை ஏற்படுத்தியும், தொழிலாளர் நலச் சட்டங்களை தீவிரமாக அமல்படுத்தியும், தொழில் அமைதியை உறுதி செய்கின்றது. தொழிலாளர் ஆணையர் தலைமையில் இயங்கும் தொழிலாளர் ஆணையரகம், தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் பிரச்சனைகளைக் கவனிப்பதுடன், தொழிலாளர்களின் உரிமை மற்றும் நலனைப் பாதுகாக்கும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களையும், சமூகப் பாதுகாப்புச் சட்டங்களையும் அமல்படுத்தி வருகிறது.

தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிப்பது, தொழிலாளர் நலக் கொள்கையின் முக்கிய அம்சமாகும். அமைப்பு சாரா பிரிவில் உள்ள தொழிலாளர்களின் நலன், அரசின் கொள்கையில் முன்னுரிமை பெறுகின்றது. அமைப்புசாராப் பிரிவில் உள்ள தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக, பன்னிரண்டு வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அமைப்புசார்ந்த பிரிவில் உள்ள

[2007 ஏப்ரல் 19

தொழிலாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கும் பல்வேறு நலத் திட்டங்களை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்படுத்துகின்றது.

குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குதல் இந்த அரசின் தலையாயக் கொள்கையாகும். வீட்டு வேலை மற்றும் உணவு நிறுவனங்கள் உள்ளிட்ட பிரிவுகளில் குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்க, தனியான செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரின்கீழ் இயங்கும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வகம், மாநிலம் முழுவதுமுள்ள பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் உடல் நலம், பாதுகாப்பு மற்றும் நலனைக் கவனித்து வருகின்றது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ், பற்பல மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்மூலம், மாநிலம் முழுவதும் அமைப்புசார்ந்த பிரிவில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் உடல் நலம் பேணப்படுகின்றது. நிதியைப் பொறுத்தவரையில், அமைப்புசார்ந்த பிரிவில் உள்ள தொழிலாளர்களின் எதிர்காலம், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் மற்றும் அதனுடன் இணைந்த திட்டங்கள்மூலம் உறுதி செய்யப்படுகின்றது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையரகத்தின் செயல்பாடுகள் இருவகைப்படும். வேலைநாடுநரை, அரசுப் பணியிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும், தனியார் துறை நிறுவனங்களிலும் பணியமர்த்தலும், வேலை இல்லா இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தலும், இந்த ஆணையரகத்தின் முக்கியப் பொறுப்புகளாகும். படித்துவிட்டு வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலைக்காக ஐந்து ஆண்டுகளாகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு புத்துயிர் ஊட்டும் வகையில், வேலைவாய்ப்பற்றோர் உதவித் திட்டத்தை அரசு ஏற்கெனவே தொடங்கி, செயல்படுத்தி வருகின்றது. அவர்களை வேலைக்குத் தகுதியுடைவர்களாக்கும் நோக்குடன், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்மூலம் அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது.

வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியிலமர்த்தும் பணியை அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் ஆற்றி வருகின்றது.

மேற்குறிப்பிட்ட, அரசின் பல்வேறு அங்கங்களின் நடவடிக்கைகள், செயலாக்கங்கள் மற்றும் சாதனைகள், வரும் அத்தியாயங்களில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன :



2007 ஏப்ரல் 19]

## அத்தியாயம்-1

### தொழிலாளர் துறை

*1.1.* தொழிலாளர் துறை, தொழில் உறவுகள் மற்றும் தொழிலாளர் நலன் தொடர்பான பொருள்களை நிர்வகித்து வருகின்றது. இத்துறை, 28 தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்கின்றது. தொழிலாளர் ஆணையர் தலைமையில் இத்துறை இயங்குகின்றது. தொழிலாளர் ஆணையரக்குத் துணையாக, இரண்டு தொழிலாளர் இணை ஆணையர்கள் உள்ளனர். மூன்று மண்டல இணை ஆணையர்களும், ஒன்பது துணை ஆணையர்களும், 28 தொழிலாளர் ஆய்வாளர்களும், தொழிலாளர் நலத் திட்டங்களைச் செயல்படுத்தியும், தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தியும் வருகின்றனர்.

### தொழில் உறவுகள்

*1.2.* உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கலுக்குப் பின்னர், தொழிலாளர் துறையின் பங்கு என்பது மிக இன்றியமையாததாகவும், முக்கியமானதாகவும் மாறியுள்ளது. தொழில் உறவுகள் குறித்த இந்த அரசின் போற்றத்தக்க அணுகுமுறை, மாநிலத்தின் வேகமான தொழில் வளர்ச்சியில் கொண்டுள்ள அக்கறை மற்றும் தொழிலாளர்கள் நலன் மீது கொண்டுள்ள நாட்டம் ஆகியவை தொழில் உறவில் ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையை, இம்மாநிலத்தில் ஏற்படுத்தியுள்ளது.

*1.3.* நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களுக்கிடையே சமரசப் பேச்சு வார்த்தைகள்மூலம் இசைவிணக்கமான உறவினை ஏற்படுத்துவதும், அதனைப் பேணிக்காப்பதும் தொழிலாளர் துறையின் முக்கியப் பங்காகும். இந்த ஆண்டில், 40 வேலைநிறுத்தங்கள் மற்றும் 15 கதவடைப்புகள் தீர்வு செய்யப்பட்டன.

*1.4.* இந்த ஆண்டில், 5,513 தொழிற் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன.

*1.5.* 2006 ஆம் ஆண்டில், போனஸ் தொடர்புடைய தொழிற்தாவாக்களை, தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்கள் மிகுந்த கவனத்துடன் கையாண்டுள்ளனர். அதன் பயனாக, போனஸ் தொடர்புடைய பெரும்பாலான பிரச்சனைகள் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டன.

[2007 ஏப்ரல் 19

## தொழிலாளர் நீதிமன்றங்கள்

1.6. தொழிலாளர்கள் சட்டரீதியான நிவாரணத்தினை விரைவில் பெறுவதற்காக, மாநிலத்தில் பத்து தொழிலாளர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. தொழிலாளர் நீதிமன்றங்கள், 1947 ஆம் வருட தொழிற்தகராறுகள் சட்ட அட்டவணை இரண்டில் விவரிக்கப்பட்டுள்ள இனங்கள்மீது தீர்ப்பு வழங்குகின்றன. மாநிலத்திலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்களின் ஆட்சி எல்லை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | தொழிலாளர் நீதிமன்றம் | ஆட்சி எல்லை |
|---|---|---|
| 1. | முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னை. | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள். |
| 2. | கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், I சென்னை. | |
| 3. | கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், II சென்னை. | |
| 4. | தொழிலாளர் நீதிமன்றம், வேலூர். | வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள். |
| 5. | தொழிலாளர் நீதிமன்றம், சேலம். | சேலம், ஈரோடு, நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| 6. | தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |
| 7. | தொழிலாளர் நீதிமன்றம், கடலூர். | கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள். |



2007 ஏப்ரல் 19]

| வ. எண் | தொழிலாளர் நீதிமன்றம் | ஆட்சி எல்லை |
|---|---|---|
| 8. | தொழிலாளர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள். |
| 9. | தொழிலாளர் நீதிமன்றம், மதுரை. | மதுரை, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் தேனி மாவட்டங்கள். |
| 10. | தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |

## தொழில் தீர்ப்பாயம்

1.7. சென்னையை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு தொழில் தீர்ப்பாயமும் இயங்கி வருகின்றது. 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்ட அட்டவணை இரண்டு மற்றும் மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள்மீது தொழில் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்க முடியும்.

## அமலாக்கம்

1.8. தொழிலாளர் துறையில் உள்ள அமலாக்கப் பிரிவு, தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் எடையளவுகள் சட்டங்கள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்ய சிறப்பாய்வுகள் நடத்தி வருகிறது. இச்சட்டங்களில் இடம் பெற்றுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தொடர்புடைய் தரப்பினரை சட்டத்திற்கு இணங்கச் செய்தல், அல்லது கடைப்பிடிக்காமைக்காக வழக்குத் தொடர்தல், தொழிலாளர் துறை அமலாக்க அலுவலர்களின் தலையாயக் கடமையாகும். இக்குறிக்கோளினை மனதில் கொண்டு, பல்வேறுதரப்பட்ட தொழிலாளர் நலச் சட்டங்களில் அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை தொழிலாளர்கள் அடைவதை உறுதி செய்ய, இத்துறை சட்டப்பூர்வ

நடவடிக்கை எடுத்து வருகிறது. தொழிலாளர் துறையினால் அமல்படுத்தப்பட்டு வரும் தொழிலாளர் நலச் சட்டங்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## தொழில் நிறுவனங்கள் (நிலையாணைகள்) சட்டம், 1946

1.9. இச்சட்டம், தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணித்தன்மைகளைக் குறித்து, வேலையளிப்போர், அவர்களின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தெரிவிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இச்சட்டத்தின்கீழ் சான்றளிக்கும் அலுவலர்களாக, இத்துறையின் மூன்று மண்டல இணை ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டம் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்தும். இச்சட்டத்தின்கீழ், வேலையளிப்போர், அவர்களது நிறுவனத்தின் நிலையாணைகள் குறித்து, சான்று பெற வேண்டும். நிலையாணைகள் சான்றிதழ் பெறப்படாத தொழில் நிறுவனங்களுக்கு, மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்திலுள்ள மாதிரி நிலையாணைகள், அத்தொழில் நிறுவனங்கள் சான்றிதத் வழங்கும் அலுவலர்களிடமிருந்து சான்றிதழ் பெறும் வரை பொருந்தும். 2006 ஆம் ஆண்டில், 305 தொழில் நிறுவனங்களின் நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

## தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

1.10 தொழிற்சங்கங்களைப் பதிவு செய்வதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டில், 873 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, ரூ. 86,100 பதிவுக் கட்டணமாகவும், ரூ. 4,500 திருத்தக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டுள்ளது. இதுவரை 10,038 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951

1.11. தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகள், தோட்டத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கவும், வேலையின் தரத்தை முறைப்படுத்தவும் வழிவகுக்கிறது. ஐந்து ஹெக்டேர் மற்றும் அதற்கு மேல் உள்ள காபி, ரப்பர், தேயிலை மற்றும் ஏலக்காய் பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்களில், 15 தொழிலாளர்களுக்குமேல் பணிபுரிந்தால், அந்நிறுவனங்களுக்கு இச்சட்ட விதிகள் பொருந்தும். ஐந்து ஹெக்டேர் மற்றும் 15 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும் உள்ள தோட்ட நிறுவனங்களில், தொழிலாளர் நலனைப் பாதுகாக்க வேண்டி, அரசாணைமூலம் மேற்படி சட்டத்தை அதுபோன்ற தோட்ட



நிறுவனத்திற்குப் பொருந்தும் வகையில் அறிவிக்கை செய்ய, அரசிற்கு அதிகாரம் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள மொத்தத் தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 61,080 ஹெக்டேர் ஆகும். மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 90,930 ஆகும். (36,116 ஆண்கள் மற்றும் 54,814 பெண்கள்) பதிவு பெற்ற மொத்தத் தோட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 689 ஆகும். 2006 ஆம் ஆண்டில் 4,780 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 101 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ. 36,500 அபராதம் விதிக்கப்பட்டது.

## உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் இதர பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணிநிபந்தனை மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955

1.12. இச்சட்டம், உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரியும் இதர தொழிலாளர்களின் பணியமைப்பை முறைப்படுத்த ஏற்படுத்தப்பட்டதாகும்.

## மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961

1.13. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் அனைத்தும், இச்சட்டத்தின்கீழ் பதிவுச் சான்று பெறவேண்டும். 2006 ஆம் ஆண்டின் இறுதியில், பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை 2,014 ஆகும். அந்நிறுவனங்களில் 1,18,170 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ரூ. 3,41,538 பதிவுக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களாக வசூலிக்கப்பட்டுள்ளது. அவ்வாண்டில், 4,808 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 245 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு ரூ. 74,705 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

1.14. இச்சட்டம், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்த உருவாக்கப்பட்ட சட்டமாகும். மாநிலத்தில் மொத்தம் 3,26,033 கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. 2006 ஆம் ஆண்டில், 3,07,905 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தம் 26,217 வழக்குகள் முடிக்கப்பட்டன. அவற்றுள், 25,364 வழக்குகளில், இணக்கக் கட்டணத் தொகையாக ரூ. 16,71,995 துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 853 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு ரூ. 54,030/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 19

## தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

1.15. இச்சட்டம், உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பினை முறைப்படுத்த ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும். மாநிலத்தில் மொத்தம் 25,039 உணவு நிறுவனங்கள் உள்ளன. 2006 ஆம் ஆண்டில், வேலையளிப்பவர்களிடமிருந்து ரூ. 10,70,981/- பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. அவ்வாண்டில், 37,879 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 2,976 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ. 2,93,705/- இணக்கக் கட்டணத் தொகையாக துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 312 வழக்குகளில், நீதிமன்றங்களால் ரூ. 23,650/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

1.16. இச்சட்டம், தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள் அளிக்க இயற்றப்பட்டது. 2006 ஆம் ஆண்டில், மொத்தம் 1,06,387 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 5,911 வழக்குகள் முடிக்கப்பட்டு, அவற்றுள் 5,534 வழக்குகளில், ரூ. 3,12,550/- இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களால் முடிக்கப்பட்ட 377 வழக்குகளில், ரூ. 20,625/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936

1.17. இச்சட்டத்தின் நோக்கம், தொழிலாளர்களுக்கு உரிய காலத்தில் ஊதியம் வழங்குவதும், ஊதியத்திலிருந்து அங்கீகரிக்கப்படாத பிடித்தங்கள் செய்வதைத் தடுப்பதும், கேட்பு மனுக்கள் விரைவில் தீர்க்கப்படுவதை உறுதி செய்வதுமாகும். 2006 ஆம் ஆண்டில், சம்பளப் பட்டுவாடாச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட கேட்பு மனுக்களில், 34 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ. 50,43,558/- பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970

1.18. சில தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை வரைமுறைப்படுத்தவும், சில தொழில்களில், அவற்றின் தன்மையைப்



2007 ஏப்ரல் 19]

பொறுத்து, இம்முறையினை நீக்கவும், இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டில், 2,787 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 253 நிறுவனங்கள் முதன்மை வேலையளிப்பவர்களாகப் பதிவு செய்யப்பட்டன. 423 ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன.

## தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1981

1.19. தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, நிரந்தர அந்தஸ்து வழங்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 2006 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட 215 மனுக்கள் முடிக்கப்பட்டன. இதன் காரணமாக, 423 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## குறைந்தபட்ச ஊதியங்கள்

1.20. 1948 ஆம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்டம் என்பது ஒரு திருப்பு முனைச் சட்டமாகும். இச்சட்டம், தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதை உறுதி செய்கிறது. குறைந்தபட்ச ஊதியம் என்பது பிழைப்பூதியம் போன்றதேயாகும். அதை வழங்க மறுப்பது, மனித வாழ்க்கையில் மனிதத்தன்மையையே அகற்றி விடுவதாகும். குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் 90 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்படி, குழு முறை அல்லது அறிவிக்கை முறையினைப் பின்பற்றி, குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை அரசு, நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்திட வேண்டும். தொழில் அட்டவணையில் உள்ள எந்தத் தொழிலுக்கும், தேசிய குறைந்த அளவு ஊதியம் 01-02-2004 முதல், நாள் ஒன்றுக்கு ரூ. 66/-க்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு ஆலோசனை கூறியுள்ளது.

1.21. 2006 ஆம் ஆண்டில், அகர்பத்தி தயாரித்தல் மற்றும் தீப்பெட்டித் தயாரித்தல் ஆகிய தொழில்களுக்கு, குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1.22. 'நூற்பாலைகள் தொழில்' குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணை பகுதி-I-ல், அரசாணை எண் 1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜே2) துறை, நாள் 03-01-2007 மூலம் சேர்க்கப்பட்டுள்ளது.

1.23. குறைந்தபட்ச ஊதியச் சட்டப் பிரிவு 20(1)-ன்படி, கேட்பு மனுக்கள்மீது விசாரணை செய்ய, 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள், உரிய அதிகாரம் பெற்றவர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

## சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள்

### போனஸ் பட்டுவாடாச் சட்டம், 1965

1.24. இச்சட்டம், 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும். போனஸ் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களில், தொழிலாளர்கள் எண்ணிக்கை, அதன் பின்னர் 10-க்குக் குறையும் நேர்வுகளிலும், நிறுவனங்கள் தொடர்ந்து போனஸ் வழங்க வேண்டும். நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கினாலும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச போனஸ் 8.33 சதவீதம் வழங்க வேண்டும். இச்சட்டம் ஒரு நிறுவனம் இலாபத்தில் இயங்கும்போது வழங்க வேண்டிய போனஸ் குறித்த வரைமுறை ஒன்றை வகுத்துள்ளது. இச்சட்டத்தின்கீழ், அதிகபட்சமாக வழங்கப்பட வேண்டிய போனஸ், 20 சதவீதம் ஆகும்.

### பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், 1972

1.25. ஐந்து வருடம் தொடர்ச்சியாகப் பணிபுரிந்த தொழிலாளர்கள், பணியிலிருந்து ஓய்வு பெற்றாலோ அல்லது வேலை நீக்கம் செய்யப்பட்டாலோ, அவர்களுக்குப் பணிக்கொடை வழங்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டில், 1,077 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, ரூ.3,07,96,174/- மனுதாரர்களுக்கு பட்டுவாடா செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

### வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், 1923

1.26. தொழிலாளர்கள் பணியிலிருக்கும்பொழுது விபத்து ஏற்படும் நேர்வில், தொழிலாளர்களுக்கு அவர்கள் வருவாய் ஈட்டும் தகுதி இழப்புக்கு ஏற்ப, இழப்பீடு வழங்க இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. 2006 ஆம் ஆண்டில், வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ், 3,453 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. முந்தைய ஆண்டுகள் நிலுவையுடன் சேர்த்து, 2,936 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு, கேட்பு மனுதாரர்களுக்கு ரூ.27,83,67,686/- இழப்பீட்டுத் தொகை பட்டுவாடா செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.



### மகப்பேறு நலச் சட்டம், 1961

1.27. இச்சட்டத்தின்படி, மகப்பேறு காலங்களில் குழந்தைப் பேற்றிற்காக 12 வாரங்கள் ஊதியத்துடன்கூடிய விடுப்பு, (அதாவது குழந்தை பிறப்பதற்கு முன் 6 வாரங்களும், குழந்தை பிறந்த பின்னர் 6 வாரங்களும்), மருத்துவச் சான்றிதழின்பேரில் ஒரு மாத மருத்துவ விடுப்பு, கருச்சிதைவிற்காக 6 வார விடுப்பு முதலிய சலுகைகள் உள்ளன. மேலும், பேறுகாலத்திற்கு முந்தைய மற்றும் பேறுகாலத்திற்குப் பிந்தைய கவனிப்பை நிர்வாகம் இலவசமாக அளிக்கவில்லையெனில், ரூ.250/- மருத்துவப் போனசாக வழங்க சட்டம் வழிவகை செய்கிறது.

### சம ஊதியச் சட்டம், 1976

1.28. 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம், ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு, சம வேலைக்கு சம ஊதியம் வழங்குதல், வேலைவாய்ப்புத் தொடர்புடைய இனங்களில் பாலியலின் அடிப்படையிலான வேற்றுமையைத் தடுத்தல், பெண் தொழிலாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்புப் பெற்றுத் தருதல் ஆகியவற்றிற்கு வழிவகை செய்கிறது. 2006 ஆம் ஆண்டில், 8,914 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 9 வழக்குகள் போடப்பட்டன.

### தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

1.29. பணியிலிருந்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு, வேலை நீக்கத்தில் இருக்கும் காலத்திற்கு வேலையளிப்பவர் பிழைப்பூதியம் வழங்க இச்சட்டம் இயற்றப்பட்டது. 2006 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் 200 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, ரூ.20,81,857/- கேட்பு மனுதாரர்களுக்கு பட்டுவாடா செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

### மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம்

1.30. இந்த வாரியம், வேலையளிப்போர், தொழிலாளர்கள் மற்றும் அரசு அலுவலர் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஓர் உயர்மட்ட முத்தரப்புக் குழுவாகும். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரைத் தலைவராகக் கொண்ட இவ்வாரியம், தொழிலாளர் பிரச்சினைகள் மற்றும் சட்டம் மற்றும் விதிகளுக்குத் திருத்தம் குறித்து விவாதிக்கிறது.

## அத்தியாயம்-2

## தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல்

*2.1.* தமிழ்நாடு அரசு, குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் முழுமையான முனைப்புடனும், தீவிர ஈடுபாட்டுடனும், முறையாகச் செயல்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குவதற்காக, விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குழந்தைத் தொழிலாளர் முறையினைத் தடை செய்யும் சட்டங்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தவும், குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து, அவர்களை மீட்டு மறு வாழ்வு அளித்து, அவர்களுக்குக் கல்வி புகட்டி, முறையான பள்ளிகளில் அவர்களைச் சேர்க்கவும், திடமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேவையான நிறுவன ஏற்பாடுகள், ஒருங்கிணைந்த அணுகுமுறைகள் மற்றும் பங்கேற்பாளர்களின் பொறுப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

### சட்ட அமலாக்கம்

*2.2.* குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்யும் பல்வேறு சட்டங்களை, தொழிலாளர் மற்றும் தொழிற்சாலை ஆய்வர்கள் அமல்படுத்தி வருகின்றனர். 2006 ஆம் ஆண்டில், 2,02,413 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 636 முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, குழந்தைத் தொழிலாளர் முறையினைத் தடைசெய்யும் சட்டங்களின்கீழ், 603 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவ்வாண்டில், ஏற்கெனவே நிலுவையில் இருந்த வழக்குகளையும் சேர்த்து, முடிக்கப்பட்ட 623 வழக்குகளில், ரூ.19,77,400/- அபராதம் வசூலிக்கப்பட்டது. மேலும், 20 வழக்குகளில், 2 முதல் 6 மாதங்கள் வரை சிறைத் தண்டனையும், 2 வழக்குகளில் சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்பட்டது.

*2.3.* மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில், மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள், குழந்தைத் தொழிலாளர்களை மீட்பதற்காக, அமலாக்கப் பணியைத் துரிதப்படுத்தி, தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. குழந்தைத் தொழிலாளர்களை மீட்கவும், மறுவாழ்வு அளிக்கவும், குழந்தைத் தொழிலாளர் முறை தடுப்புக் குழுக்கள், திடீர் மற்றும் கூட்டாய்வுகள் நடத்துகின்றன.





### விழிப்புணர்வு உருவாக்குதல்

*2.4.* 2006 ஜூன் 12 ஆம் தேதி, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் தமிழகமெங்கும் கடைப்பிடிக்கப்பட்டது. "குருத்து" என்னும் தமிழ் இதழின் சிறப்பு இதழ் வெளியிடப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்த, துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் ஸ்டிக்கர்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. 2007 ஜனவரி முதல் மார்ச் வரை, சென்னையில் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், விளம்பரப் பலகைகள், ஒலிபெருக்கி விளம்பரங்கள் மற்றும் பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

### தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்

*2.5.* சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, தேனி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்பட்டு வருகிறது. தற்போது, மீட்கப்பட்ட 16,000 குழந்தைத் தொழிலாளர்கள் 397 சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயில்கின்றனர். சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு பாடப்புத்தகங்கள், எழுதுபொருட்கள், சீருடை, இலவச பயண அட்டை மற்றும் மதிய சத்துணவு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும், மாதந்தோறும் ரூ.100/- உதவித் தொகை வழங்கப்படுகிறது. சுகாதாரத் துறையின் ஒத்துழைப்புடன், மாணவர்களுக்கு முறையான உடல் பரிசோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும், சிறப்புப் பள்ளியிலிருந்து மாணவர்கள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். குழந்தைத் தொழிலாளர் குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படும் அனைத்து மாவட்டங்களிலும், குழந்தைத் தொழிலாளர்கள் அன்னையரை உள்ளடக்கிய 735 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*2.6.* முன்னர் ஐந்து மாவட்டங்களில் மட்டும் நடைமுறையில் இருந்த இலவசப் பேருந்துப் பயணச் சலுகையினை, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் 'இண்டஸ்' குழந்தைத் தொழிலாளர் திட்டம் நடைமுறையில் உள்ள 17 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி அரசாணை (டி) எண் 93, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 01-09-2006-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

[2007 ஏப்ரல் 19

**'இண்டஸ்' குழந்தைத் தொழிலாளர் திட்டம்**

2.7. 'இண்டஸ்' குழந்தைத் தொழிலாளர் திட்டம், இந்திய அரசு மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தொழில் துறை கூட்டுறவுத் திட்டமாகும். இத்திட்டம், காஞ்சிபுரம், நாமக்கல், திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் அமல்படுத்தப்படுகிறது. குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து மீட்டல், இடைமாற்றுப் பள்ளிகளில் சேர்த்தல், குழந்தைத் தொழிலாளர் குடும்பங்களில் வருமானத்தைப் பெருக்க வழிசெய்தல், குழந்தைத் தொழிலாளர்களின் கல்வித் திறனை மேம்படுத்துதல், குழந்தைத் தொழிலாளர்களைத் தொடர்ந்து கண்காணித்தல், சமூக ஈடுபாட்டினை உருவாக்குதல், தேசிய, மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நிர்வாக நிலையங்களின் திறமையை வளர்த்தல், அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்தப்படும் குழந்தைத் தொழிலாளர்களை அங்கிருந்து அகற்றுதல் குறித்த ஆர்வத்தினை வளர்த்தல், அறிவு மேலாண்மை போன்றவற்றை 'இண்டஸ்' குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படுத்தி வருகிறது.

**வீடுகள், உணவு நிறுவனங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் பணிபுரியும் குழந்தைத் தொழிலாளர்களை நீக்குவதற்கான செயல்திட்டம்**

2.8. வீடுகள், சாலையோர உணவகங்கள், உணவு நிறுவனங்கள், தேனீர் கடைகள் மற்றும் பொழுதுபோக்கு இடங்களில், 14 வயதுக்குக்கீழ் உள்ள குழந்தைகளைப் பணிக்கமர்த்துவதைத் தடை செய்து இந்திய அரசு அறிவிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அது 10-10-2006-ல் நடைமுறைக்கு வந்துள்ளது. அரசாணை (2டி) எண் 7, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 6-2-2007-ல், வீடுகள் மற்றும் பொழுதுபோக்கு இடங்களில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கமர்த்துவதை நீக்கும் செயல்திட்டம் ஒன்று ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

2.9. இந்தப் பிரிவுகளில் குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குவதற்கான வழிமுறைகள், கண்டறிதல், மீட்பு மற்றும் பாதுகாப்பு, முறையான பள்ளிகளில் சேர்த்தல், அமலாக்கம், சமூக ஈடுபாடு, சமுதாயப் பங்கேற்பு, பல்வேறுபட்ட துறைகளின் ஒருங்கிணைப்பு, ஆகியனவாகும். குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குவதற்கான



2007 ஏப்ரல் 19]

அரசின் செயல் திட்டத்தில், வீட்டு வேலை மற்றும் உணவகங்கள் மட்டுமன்றி, அனைத்து விதமான தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைகளை, வீடுகள் மற்றும் நிறுவனங்களில் தீவிர கணக்கெடுப்பின்மூலம் அடையாளம் காணுதல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கான முறையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் ஆகியவை அடங்கும்.

**கருத்தரங்குகள்**

2.10. வீட்டுத் தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களை அமர்த்துவதைத் தடை செய்து, மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்ட அறிவிக்கையின் அடிப்படையில், மாநில அளவிலான ஒரு கருத்தரங்கு, தொழிற்சங்கங்கள், அரசு சாரா நிறுவனங்கள், அரசு அலுவலர்கள், குடியிருப்போர் நலச் சங்கங்கள், ஓட்டல் உரிமையாளர் சங்கங்கள் மற்றும் வேலையளிப்போர் சங்கங்கள் ஆகியோருக்கு நடத்தப்பட்டது. குழந்தைகளின் உரிமை மற்றும் குழந்தைத் தொழிலாளர் சட்டங்கள் குறித்தான இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்று, 2006 ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில், நீதித் துறை மற்றும் சட்ட அமலாக்க அலுவலர்களுக்கு நடத்தப்பட்டது.

## அத்தியாயம்-3

### நல வாரியங்கள்

3.1. அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா பிரிவுகளில் உள்ள தொழிலாளர்களின் நலனுக்கு தொழிலாளர் துறை முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளிக்கிறது. அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்படுத்தி வருகின்றது. அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்கள், பல்வேறு தனித்தனி நல வாரியங்களால் செயல்படுத்தப்படுகின்றன.

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

3.2. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972-ன்கீழ், ஏற்படுத்தப்பட்டு, 1975 முதல் செயல்பட்டுவரும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், அமைப்பு சார்ந்த தொழிலாளர்களின் நலனைப் பேணிக் காத்து வருகின்றது.

### தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி

3.3. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், கடைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களிடமிருந்து ஆண்டு ஒன்றிற்கு ரூ.5/-ம், வேலையளிப்பவர்கள் பங்கு ரூ.10/-ம், தொழிலாளர்களின் பங்குக்கு ஈடாக அரசின் பங்கினையும், தொழிலாளர் நல நிதியாகப் பெறுகின்றது.

3.4. இது தவிர, தொழிலாளர் சட்டங்களை மீறும் நிறுவனங்களுக்கு நீதிமன்றங்களால் விதிக்கப்படும் அபராதத் தொகை மற்றும் தொழிலாளர் சட்டங்களை மீறும் நிறுவனங்களிடமிருந்து தொழிலாளர் துறையினரால் வசூலிக்கப்படும் இணக்கக் கட்டணம் ஆகியவை தொழிலாளர் நல நிதியின் முக்கிய வரவினங்களாகும்.

3.5 தமிழகம் முழுவதும், இவ்வாரியம் 71 இடங்களில் தொழிலாளர் நல மையங்களை நடத்தி வருகிறது.

### செயல்படுத்தப்படும் திட்டங்கள்

3.6. கீழ்க்கண்ட நலத் திட்டங்கள், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றன:—



### தையற் பயிற்சி மையங்கள்

3.7. அனைத்துத் தொழிலாளர் நல மையங்களிலும், தொழிலாளர்களைச் சார்ந்துள்ள பெண்களின் நலனுக்காக, ஓராண்டு தையற் பயிற்சி நடத்தப்படுகின்றது.

3.8. பயிற்சிக்காலத்தில், பயிற்சியாளருக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. முன்னர் மாதம் ரூ.80/- ஆக இருந்த இந்த உதவித்தொகை, அரசாணை (டி) எண் 604, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11-09-2006-ல், மாதம் ரூ.150/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

3.9. பயிற்சி முடித்து, தேர்வுக்குச் செல்லும் மாணவிகளுக்கு, தேர்வுக் கட்டணம் வாரியத்தால் வழங்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு மையத்திலும், தையற் தேர்வில் கீழ்நிலை மற்றும் மேல்நிலைகளில் முதல் மதிப்பெண் பெற்று தேர்ச்சிபெறும் மாணவிகளுக்கு, புதிய தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. இதுவரையில், இத்திட்டத்தின்மூலம் 8,362 பயிற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர். ரூ.18,47,463/- இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது. மேலும், முதல் மதிப்பெண் பெற்ற 387 மாணவிகளுக்கு தையல் இயந்திரங்கள் பரிசாக வழங்குவதற்காக ரூ.9,19,941/- செலவிடப்பட்டுள்ளது.

### குழந்தைகள் காப்பகம்

3.10. தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக, குழந்தைகள் காப்பகங்கள், நல மையங்களில் நடத்தப்படுகின்றன. இதுவரையில், தொழிலாளர்களின் 2 முதல் 5 வயது வரை உள்ள 4,782 குழந்தைகள், இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளார்கள். குழந்தைகளுக்கு மதிய சத்துணவு மற்றும் பால் தினமும் வழங்கப்படுகிறது. வாரம் இருமுறை முட்டை மற்றும் பழம் வழங்கப்படுகிறது. மேலும், குழந்தைகளுக்கு ஆண்டிற்கு 2 ஜோடி டெரிகாட்டன் சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது. இதைத் தவிர, மருத்துவர்களால் மாதம் இருமுறை குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும், குழந்தைகளுக்கு, பயிற்சி பெற்ற பாலசேவிகாக்களால் அடிப்படைக் கல்வி கற்றுத் தரப்படுகிறது. இதுவரையில், இத்திட்டத்திற்காக ரூ.17,68,777/- செலவு செய்யப்பட்டுள்ளது.

### படிப்பகங்கள்

3.11. ஒவ்வொரு தொழிலாளர் நல மையத்திலும், தொழிலாளர்கள் படித்துப் பயன்பெறுவதற்கென, படிப்பகத்தில் இரண்டு தமிழ் தினசரி மற்றும் இரண்டு வார இதழ்கள் வழங்கப்படுகின்றன.

[2007 ஏப்ரல் 19

## கல்வி உதவித்தொகை

3.12. தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வி பயில்வதற்காக, கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படுகிறது:—

### ஆண்டு ஒன்றுக்கு

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவப் பட்டப் படிப்பு | ரூ.2,400/- |
| 2. | பொறியியல் பட்டப் படிப்பு | ரூ.2,400/- |
| 3. | சட்டப் பட்டப் படிப்பு | ரூ.2,400/- |
| 4. | விவசாயப் பட்டப் படிப்பு | ரூ.2,400/- |
| 5. | தொழிற் பயிற்சிக் கல்வி | ரூ.1,000/- |
| 6. | மேல்நிலைக் கல்வி | ரூ.1,200/- |
| 7. | பொறியியல் பட்டயக் கல்வி | ரூ.1,440/- |
| 8. | மருத்துவப் பட்டயக் கல்வி | ரூ.1,440/- |

3.13. இத்திட்டத்தின்மூலம், 2006 மே முதல் 2007 மார்ச் வரையில், பொறியியல், மருத்துவம், சட்டம், விவசாயம் ஆகியவற்றில் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு பயிலும் 136 மாணவர்களுக்கு, ரூ.2,58,240/- வாரியத்தால் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

3.14. மேலும், 2006 மே முதல் 2007 மார்ச் வரையில், தொழிற் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி பயிலும் 135 மாணவர்களுக்கு, ரூ.1,58,400/- உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## கல்வி ஊக்கத் தொகை

3.15. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1000/-மும், இரண்டாம் மதிப்பெண் பெறும் குழந்தைகளுக்கு ரூ.500/-ம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம், 2006 மே முதல் 2007 மார்ச் வரையில், 71 குழந்தைகளுக்கு ரூ.60,500/- வழங்கப்பட்டுள்ளது.

## புத்தக உதவித் தொகை

3.16. இத்திட்டத்தின் மூலம், 2006 மே முதல் 2007 மார்ச் வரையில், 74 குழந்தைகளுக்கு ரூ.17,565/- உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 19]

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி பெற, 6 மாணவ, மாணவிகளுக்கு, ரூ.1,780/- உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## அடிப்படைக் கணினிப் பயிற்சிக்கு உதவி

3.17. தொழிலாளர்களும், அவர்கள் பிள்ளைகளும், அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் அடிப்படைக் கணினிப் பயிற்சி பெற, வருவாய் மாவட்டத்திற்கு 5 பேர் என்ற கணக்கில், ஒவ்வொருவருக்கும் ரூ.1,000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

## மூக்குக் கண்ணாடி உதவித் தொகை

3.18. மூக்குக் கண்ணாடி வாங்கிய செலவுத் தொகையாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.400/- வரை ஈடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 2006 மே முதல் 2007 மார்ச் வரையில் 621 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக ரூ.2,28,734/- செலவிடப்பட்டுள்ளது.

## காதுகேட்கும் கருவி, மூன்று சக்கரவண்டி மற்றும் செயற்கை உறுப்பு

3.19. காது கேளாத தொழிலாளர்களுக்கு, காது கேட்கும் கருவி வாங்க, உதவித்தொகை ரூ.1000/- வழங்கப்படுகிறது.

## ஈமச்சடங்கு உதவித் தொகை

3.20. தொழிலாளி பணிக்காலத்தில் மரணமடைந்தால், அவரது வாரிசுதாரருக்கு, ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.1,500/- வழங்கப்படுகிறது. 2006 மே முதல் 2007 மார்ச் வரையில், 99 தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.1,48,500/- வழங்கப்பட்டுள்ளது.

## காசநோய்ப் பிரிவு

3.21. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், தாம்பரம், ஆசாரிப்பள்ளம், திருப்பூர், ஆஸ்டின்பட்டி மற்றும் கீழ்பெண்ணாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனைகளில், தொழிலாளர்களுக்காக, படுக்கை வசதியுடன் தனிப் பிரிவுகளைக் கட்டியுள்ளது.

## ஓய்வில்லங்கள்

3.22. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், மாமல்லபுரம், குற்றாலம், வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் குடும்பத்துடன் தங்குவதற்கு வசதியாக, மிகக் குறைந்த வாடகையில்,

ஓய்வில்லங்களைக் கட்டியுள்ளது. 2006 மே முதல் 2007 மார்ச் வரையில், 4,556 தொழிலாளர்கள் இதன்மூலம் பயனடைந்துள்ளனர்.

3.23. சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில், தொழிற்சங்கப் பணி நிமித்தம் சென்னை வரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்காக, 'ஜீவா இல்லம்' என்ற ஓய்வில்லம் கட்டப்பட்டுள்ளது. 2006 மே முதல் 2007 மார்ச் வரையில், இவ்வில்லத்தில், 5,472 தொழிற்சங்க நிர்வாகிகள் தங்கிப் பயனடைந்துள்ளனர்.

## தொழிலாளர்களுக்கான பருவ வெளியீடு

3.24. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால், "உழைப்பவர் உலகம்" என்ற மாத இதழ் தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் படித்துப் பயன்பெறும் வகையில் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் நீதிமன்றத் தீர்ப்புகள், தொழிலாளர் சட்டம், வினா - விடை, விலைவாசிக் குறியீடுகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. தற்போது, 4,752 சந்தாதாரர்கள் இதனைப் படித்துப் பயன்பெறுகின்றனர்.

## அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கான நல வாரியங்கள்

3.25. அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது தொழிலாளர் துறையின் மிக முக்கியப் பணியாகும். உடலுழைப்புத் தொழிலாளர்களுக்காக 12 தனித்தனி நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்

3.26. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம், 17-03-1999 அன்று தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982 பிரிவு 6-ன்படி, மேற்படி சட்டத்தின்கீழ் அட்டவணையிடப்பட்ட தொழில்களில் ஈடுபட்டுவரும் உடலுழைப்புத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்காகவும், நலனுக்காகவும் உருவாக்கப்பட்டது.

3.27. பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில், தற்போது இயங்கிவரும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும்



நல வாரியத்துடன், கீழ்க்கண்ட நல வாரியங்கள் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன:—

(1) தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா/வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம்
(2) தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்
(3) தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்
(4) தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்
(5) தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம்
(6) தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம்
(7) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு தொழிலாளர் நல வாரியம்
(8) தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியம்
(9) தமிழ்நாடு ஓவியர் நல வாரியம்
(10) தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்
(11) தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்
(12) தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம்

3.28. 2006-2007 ஆம் ஆண்டிற்கு, ரூ. 476.04 இலட்சம் நல வாரியங்களுக்கு மானியமாக அரசு வழங்கியது. தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியத்திற்காக, 2006-2007 ஆம் ஆண்டிற்கு, ரூ.37 இலட்சம் அரசு வழங்கியது.

3.29. இவ்வாரியங்களில் பதிவு செய்துகொண்ட தகுதியுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்/இயலாமைக்கான ஓய்வூதியம், பிரதி மாதம் ரூ.300/- 01-09-2006 முதல் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 60 வயது முடியப்பெற்று பதிவினைப் புதுப்பிக்காத உடலுழைப்புத் தொழிலாளர்கள், தங்கள் பதிவினை 31-03-2007 வரையில் புதுப்பித்து ஓய்வூதியப் பயனைப் பெறலாம் என அரசு சலுகை வழங்கியுள்ளது.

3.30. பதிவு செய்யப்பட்ட பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மகப்பேறு உதவித்தொகையினை, 01-09-2006 முதல் ரூ.4,000/-லிருந்து ரூ. 6000/- ஆக அரசு உயர்த்தியுள்ளது.

3.31. 01-09-2006 முதல் பதிவுக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

3.32. இவ்வாரியங்களின் பணிகளுக்காக, 62 கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

3.33. 2006 மே மாதம் முதல் 2007 மார்ச் வரையில், பதிவு செய்யப்பட்ட மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 4,40,454 ஆகும்.

3.34. 31-03-2007 வரை, இவ்வாரியத்தின் பங்களிப்புத் தொகையாக ரூபாய் 3,69,64,400/- பெறப்பட்டுள்ளது.

**3.35. வாரியங்களினால் அமலாக்கப்பட்டுவரும் நலத் திட்டங்கள்:**

(மே 2006 முதல் மார்ச் 2007 வரை பயனடைந்தோர் விவரம்)

| வ. எண் | உதவித் தொகை விவரம் | தொகை ரூ. | பயனடைந்தோர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | விபத்து காப்பீடு திட்டம் | | | |
| | (அ) விபத்து மரணம் | 1,00,000 | 34 | 17,82,000 |
| | (ஆ) விபத்து ஊனம் | ஊனத் தன்மையைப் பொறுத்து | | |
| 2 | இயற்கை மரணம் | 15,000 | 391 | 47,75,000 |
| 3 | ஈமச்சடங்கு செலவுகள் | 2,000 | 612 | 12,84,000 |
| 4 | கல்வி உதவித்தொகை | | | |
| | (அ) 10 ஆம் வகுப்பு படிக்கும் மகன் | 1,000 | | |
| | (ஆ) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் அல்லது மகள் | 1,000 | | |



| வ. எண் | உதவித் தொகை விவரம் | தொகை ரூ. | பயனடைந்தோர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை. ரூ. |
|---|---|---|---|---|
| | (இ) 11 ஆம் வகுப்பு படிக்கும் மகள் | 1,000 | | |
| | (ஈ) 12 ஆம் வகுப்பு படிக்கும் மகள் | 1,500 | | |
| | (உ) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் அல்லது மகள் | 1,500 | | |
| | (ஊ) முறையான பட்டப் படிப்பு விடுதி வசதியுடன் | 1,500<br>1,750 | | |
| | (எ) முறையான பட்ட மேற்படிப்பு விடுதி வசதியுடன் | 2,000<br>3,000 | 52,706 | 6,30,00,000 |
| | (ஏ) தொழிற்கல்வி பட்டப்படிப்பு விடுதி வசதியுடன் | 2,000<br>4,000 | | |
| | (ஐ) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு விடுதி வசதியுடன் | 4,000<br>6,000 | | |
| | (ஒ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு விடுதி வசதியுடன் | 1,000<br>1,200 | | |
| 5 | திருமண உதவித் தொகை | 2,000 | 12,066 | 2,41,32,000 |
| 6 | மகப்பேறு உதவித் தொகை | | | |
| | (அ) பிரசவத்திற்கு மாதம் ரூ.1000/— வீதம் | 6,000 | 22,684 | 8,89,00,000 |
| | (ஆ) கருக்கலைப்பு / கருச்சிதைவு | 3,000 | | |
| 7 | மூக்குக் கண்ணாடி செலவினம் ஈடு செய்தல் | 500 | 122 | 60,350 |
| 8 | ஓய்வூதியம் | பிரதி மாதம் 300 | 330 | 5,94,000 |

பல்வேறு நலத் திட்டங்களின்கீழ், 88,975 பயனாளிகளுக்கு, மொத்தம் ரூ.18,45,27,350/- வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்

**3.36.** அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்காக, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம் என்ற விரிவான ஒரு சட்டத்தை தமிழ்நாடு அரசு இயற்றியுள்ளது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், 1994 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

**3.37.** இவ்வாரியத்தில், பங்களிப்புத் தொகையாக ரூ.163,89,30,107/- பெறப்பட்டுள்ளது.

**3.38.** 2006 மே மாதம் முதல் 2007 மார்ச் மாதம் வரையில், இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள மொத்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை 2,94,976 ஆகும்.

**3.39.** இதுவரையில், தொழிலாளர் செலுத்திவந்த பதிவுக் கட்டணம் ரூ.25/- மற்றும் பதிவு புதுப்பித்தல் கட்டணம் ரூ.10/- ஆகியவை 01-09-2006 முதல் அரசால் இரத்து செய்யப்பட்டுள்ளது.

**3.40.** தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியம், 01-09-2006 முதல், ரூ. 200/-லிருந்து ரூ. 300/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**3.41.** தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மகப்பேறு உதவித் தொகை, 01-09-2006 முதல் ரூ.4000/-லிருந்து ரூ.6000/-, ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



**3.42. வாரியத்தினால் அமலாக்கப்பட்டு வரும் நலத் திட்டங்கள்: (மே 2006 முதல் மார்ச் 2007 வரை பயனடைந்தோர் விவரம்)**

| வ. எண் | உதவித் தொகை விவரம் | தொகை ரூ. | பயனடைந்தோர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | குழு விபத்து காப்பீடு திட்டம் விபத்து மரணம் இழப்பு | | | |
| | (அ) இரு கைகள் | 1,00,000 | | |
| | (ஆ) இரு கால்கள் | | 65 | 66,30,000 |
| | (இ) ஒரு கை மற்றும் ஒரு கால் | | | |
| | (ஈ) குணம் அடையாத அளவிற்கு இரு கண்கள் பார்வை இழப்பு | | | |
| | ஒரு கை, ஒரு கால் அல்லது ஒரு கண்பார்வை இழப்பு | 50,000 | | |
| | நிரந்தர பகுதி ஊனம் | மருத்துவர் மதிப்பீடு செய்யும் விழுக்காட்டின்படி | 18 | 7,72,000 |
| 2 | இயற்கை மரணம் | 15,000 | 3,544 | 5,62,18,000 |
| | ஈமச்சடங்கு செலவுகள் | 2,000 | | |
| 3 | கல்வி உதவித் தொகை | | | |
| | (அ) 10 ஆம் வகுப்பு படிக்கும் மகள் | 1,000 | 3,115 | 31,15,000 |
| | (ஆ) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் அல்லது மகள் | 1,000 | 6,540<br>2,088 | 65,40,000<br>20,88,000 |
| | (இ) 11 ஆம் வகுப்பு படிக்கும் மகள் | 1,000 | 2,488 | 37,32,000 |
| | (ஈ) 12 ஆம் வகுப்பு படிக்கும் மகள் | 1,500 | 4,278 | 64,17,000 |
| | (உ) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் அல்லது மகள் | 1,500 | | |

| வ. எண் | உதவித் தொகை விவரம். | தொகை ரூ. | பயனடைந்தோர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|
| | (ஊ) முறையான பட்டப்படிப்பு | 1,500 | 5159 | 76,02,650 |
| | விடுதி வசதியுடன் | 1,750 | | |
| | (எ) முறையான பட்ட மேற்படிப்பு | 2,000 | | |
| | விடுதி வசதியுடன் | 3,000 | | |
| | (ஏ) தொழிற்கல்வி பட்டப்படிப்பு | 2,000 | | |
| | விடுதி வசதியுடன் | 4,000 | | |
| | (ஐ) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | 4,000 | | |
| | விடுதி வசதியுடன் | 6,000 | | |
| | (ஒ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000 | | |
| | விடுதி வசதியுடன் | 1,200 | | |
| 4 | திருமண உதவி | 2,000 | 7,982 | 1,59,64,000 |
| 5 | மகப்பேறு உதவி | | | |
| | (அ) பிரசவம் மாதம் ரூ. 1000 வீதம் | 6,000 | 734 | 28,57,000 |
| | (ஆ) கருச்சிதைவு மற்றும் கருக்கலைப்பு | 3,000 | | |
| 6 | மூக்குக் கண்ணாடி செலவினம் ஈடு செய்தல் | 500 | 939 | 4,37,504 |
| 7 | ஓய்வூதியம் | 300 பிரதிமாதம் | 904 | 71,21,349 |

இவ்வாரியத்தின்மூலம், பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் 37,854 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.11,94,94,503/- வழங்கப்பட்டுள்ளது.



*3.43.* தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் பணிகளுக்காக, 15 புதிய மண்டல அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவைகளுக்காக, 90 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், தற்போது இயங்கி வரும் 15 மண்டல அலுவலகங்களுக்கு, 60 கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

**மென்பொருள் ஆளுமை**

*3.44.* ஆயிரக்கணக்கான அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகளை தாமதமின்றி வழங்குவதற்கு ஏதுவாக, அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்களின் அனைத்து அலுவலகங்களும் கணினிமயமாக்கப்படும்.

## அத்தியாயம்–4

## பீடித் தொழிலாளர்களின் நலன்

4.1. பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள பீடித் தொழிலாளர்களின் நலன், இத்துறையின் கவனத்தில் உள்ளது. நலச் சட்டங்கள்மூலம் பீடித் தொழிலாளர்களுக்கு பல்வேறு பயன்கள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு குறைந்த செலவில் குடியிருப்புகள் வழங்குவதற்காக பீடித் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம், மத்திய அரசின் மானியத்துடனும், மாநில அரசின் பங்களிப்புடனும், நன்முறையில் செயல்படுத்தப்படுகின்றது.

### திருத்தப்பட்ட ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்களின் வீட்டு வசதித் திட்டம்

4.2. தமிழ்நாட்டில் திருத்தப்பட்ட ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்களின் வீட்டு வசதித் திட்டம், மத்திய அரசின் ஆதரவு திட்டமாகும். இத்திட்டத்தின்படி ஒரு வீட்டின் கட்டுமான செலவினத் தொகை ரூ.45,000 ஆகும். இதில், மத்திய அரசின் மானியத் தொகை ரூ.40,000 ஆகும். பயனாளிகளின் பங்களிப்பான மீதத் தொகை ரூ.5,000-ஐ மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. வீடுகள் கட்டும் பணி, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4.3 2006-2007 ஆம் ஆண்டிற்கு, திருநெல்வேலி மாவட்டத்தில் 500 வீடுகளும், தூத்துக்குடி மாவட்டத்தில் 59 வீடுகளும் கட்டுவதற்கான விண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. 559 வீடுகள் கட்டுவதற்கான நிர்வாக ஒப்புதலை மத்திய அரசு வழங்கியுள்ளது. மேலும் 50 விழுக்காடு மத்திய அரசு மானியத் தொகையான ரூ.111.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 559 பயனாளிகளுக்கு மாநில அரசின் மானியத் தொகையான ரூ. 2,95,000-க்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

### பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966

4.4. பீடித் தொழிலாளர்களுக்கு பீடி மற்றும் சுருட்டு சட்டம் மற்றும் விதிகளின்கீழ் இடம் பெற்றுள்ள சலுகைகள் சென்றடைய வேண்டும்





என்ற நோக்கத்துடன், இச்சட்டம் மற்றும் விதிகளை இத்துறை தீவிரமாக அமலாக்கம் செய்து வருகின்றது. அதன் காரணமாக, வேலையளிப்பவர்கள் அவற்றைக் கடைப்பிடித்து வருகின்றனர். மாநிலத்தில் 693 பீடி நிறுவனங்கள் உள்ளன. இவற்றில், 2,48,163 தொழிலாளர்கள் உள்ளனர். 2006 ஆம் ஆண்டில், 4,360 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலுவையிலிருந்த வழக்குகளையும் சேர்த்து 718 வழக்குகளுள், 408 வழக்குகள் நீதிமன்றங்களால் முடிக்கப்பட்டு, ரூ. 85,450 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-5

## எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) சட்டம், 1985

*5.1.* எடைகள் மற்றும் அளவைகளில், பொருட்களின் துல்லியமான அளவை உறுதி செய்யும் பல்வேறு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களை தீவிரமாக செயல்படுத்துவதன்மூலம், நுகர்வோர் நலனை இத்துறை பாதுகாக்கின்றது. எடைகள் மற்றும் அளவைகளின் துல்லியத்தை தொடர்ந்து நிலைநிறுத்தும் வகையில், சரிபார்த்தலும், மீண்டும் சரிபார்த்தலும், துறை ஆய்வர்களால் காலமுறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

*5.2.* தரப்படுத்தப்படாத எடைகள் மற்றும் அளவைகள், முத்திரையிடப்படாத எடைகள் மற்றும் அளவைகள், வியாபாரம் மற்றும் தொழிற்சாலைகளில் உற்பத்திப் பிரிவில் பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்ட இச்சட்டம், திடீராய்வுகள் மற்றும் காலமுறைக் கூட்டாய்வுகள்மூலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. 2006 ஆம் ஆண்டில், 3,61,704 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 17,700 வழக்குகள் முடிக்கப்பட்டன. இவற்றுள், 17,645 வழக்குகளில், ரூ.10,25,250 இணக்கக் கட்டணமாகத் துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 55 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ.52,900 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## எடைகள் மற்றும் அளவைகள் தரம் (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 1977

*5.3.* நுகர்வோர் நலனை அடிப்படையாகக் கொண்ட இவ்விதிகள், திடீராய்வுகள் மற்றும் காலமுறைக் கூட்டாய்வுகள்மூலம் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. 2006 ஆம் ஆண்டில், 1,51,797 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 7,645 வழக்குகளில், இணக்கக் கட்டணமாக ரூ.14,34,504 துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 29 வழக்குகள் நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டு, ரூ.22,150 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.





## அத்தியாயம்-6

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

*6.1.* தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், 1973 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. 1978-ல் முதல்தரக் கல்வி நிலையமாகத் தகுதி உயர்த்தப்பட்டது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட உயர்மட்ட ஆட்சிமன்றக் குழு, இந்நிலையத்தின் நிர்வாகத்தினை நிர்வகித்து வருகிறது. இக்கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:—

* தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்புடைய அறிவுரைகளை, பிரசுரங்கள் வாயிலாகப் பரப்புதல் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.
* தொழிலாளர் மேலாண்மைத் துறையில் பட்டதாரிகளை உருவாக்குதல்
* ஆரோக்கியமான தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்குதல்
* நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே இணக்கமான மனப்பான்மையினை ஏற்படுத்துதல்
* தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல்

*6.2.* பொதுத் துறை மற்றும் தனியார் துறை தொழிலகங்களில் பணியாற்றும், மேற்பார்வை/நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்கள் ஆகியோருக்கு காலமுறையில் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள், புத்தாக்கப் பயிற்சிகள் மற்றும் புத்தறிவுப் பயிற்சிகள் ஆகியனவற்றை இக்கல்வி நிலையம் நடத்தி வருகிறது.

*6.3.* ஒட்டுமொத்தமாக, இந்நிலையம் 20 கருத்தரங்கங்கள்/பயிற்சி வகுப்புகள் நடத்தியுள்ளது. இதன் காரணமாக, 2006 மே முதல் 2007 மார்ச் வரையில், தொழிலாளர் துறை அலுவலர்கள் உட்பட, 619 பேர் பயனடைந்துள்ளனர்.

6.4. பணியாளர் மேலாண்மை மற்றும் தொழிலாளர் நலன் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்வது இக்கல்வி நிலையத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும். இதனை நிறைவேற்ற, மத்திய தொழிலாளர் அமைச்சகத்திலிருந்தும், நொய்டாவிலுள்ள, வி.வி. கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிலையத்திலிருந்தும் பெறப்படும் ஆராய்ச்சித் திட்டங்களை ஏற்று, ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

6.5. இக்கல்வி நிலையம், சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, ஓராண்டு பகுதிநேர தொழிலாளர் நிர்வாக முதுநிலைப் பட்டயப் படிப்பும் (பிஜிடிஎல்ஏ), முழுநேர இளங்கலைப் பட்டப் படிப்பும் (பிஏ)-தொழிலாளர் மேலாண்மை) மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்பும் (எம்ஏ)-தொழிலாளர் மேலாண்மை) நடத்தி வருகிறது. இக்கல்வி நிலையம், முழுநேர மற்றும் பகுதிநேர முனைவர் ஆராய்ச்சி (பி.எச்.டி) நடத்துவதற்கு, சென்னைப் பல்கலைக்கழகத்தால், ஓர் ஆராய்ச்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

6.6. மலேசியாவில் பணிபுரிய விரும்பும் இந்தியத் தொழிலாளர்களுக்கான அறிமுகப் பயிற்சியை, இந்தியாவில் நடத்திட, இக்கல்வி நிலையம் மட்டுமே பயிற்சி மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மலேசியாவில் வேலைக்குச் செல்ல விரும்பும் இந்தியத் தொழிலாளர்களுக்கு, இந்த அறிமுகப் பயிற்சியை நடத்துவதற்கு, இக்கல்வி நிலையத்தைத் தமிழக அரசு தேர்ந்தெடுத்து, அனுமதித்துள்ளது. இதுவரை 71 பயிற்சி அணிகள் முடிக்கப்பட்டு, 4,201 பங்கேற்பாளர்கள் பயனடைந்துள்ளனர்.



## அத்தியாயம்-7

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம்

7.1. உழைக்கும் வர்க்கத்திற்கு, சமூகப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன், மத்திய அரசு, 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டத்தினை இயற்றியது.

7.2. கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள், மேற்கண்ட சட்டங்களின்கீழ் வகுக்கப்பட்டு, தற்போது நடைமுறையில் உள்ளன.

1. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952
2. தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995
3. தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976

### தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952

7.3. 1-11-1952 முதல் இத்திட்டம் அமலுக்கு வந்தது. 1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டம், குறிப்பிட்ட 181 தொழில்கள்/தொழிற் பிரிவுகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்குப் பொருந்தும். அறிவிக்கப்பட்ட தொழிற்சாலை/தொழில் நிறுவனங்களின் வகையைச் சார்ந்த 20 மற்றும் அதற்கு மேலும் தொழிலாளர்களைக் கொண்ட, எந்தவொரு பணிபுரியும் எந்த ஒரு தொழிற்சாலையும், அது அமைக்கப் பெற்ற நாளிலிருந்து இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். மாதம் ரூ.6,500/- வரை ஊதியம் பெறும் தொழிலாளர்கள் அனைவரும், இத்திட்டத்தில் உறுப்பினராவதற்குத் தகுதியுடையவராவர்.

7.4. சென்னை மண்டலத்தில், இச்சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை 25,848 ஆகும். 31-03-2007 அன்றுள்ளபடி, உறுப்பினர்களின் எண்ணிக்கை 28,17,530/- ஆகும்.

7.5. இத்திட்டத்தின்கீழ் உறுப்பினராக உள்ள ஒருவருக்கு, அவரது கணக்கில் நிலுவையில் உள்ள சந்தாத் தொகைக்கு (வேலையளிப்போர் பங்கு உட்பட) ஆண்டு வருமானப் பங்கீட்டுப் பயன், வட்டியாக வழங்கப்படுகிறது. 1952-1953-ல், ஆண்டுக்கு 3 சதவீதமாக இருந்த வட்டி வீதம், தற்போது 8.5 சதவீதமாக வழங்கப்படுகிறது.

## தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995

7.6. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டம் 1952-ன்கீழ், 16-11-1995 அன்று வகுக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 16-11-1995 முதல், ஊதியத்தில் 8.33 விழுக்காடு வேலையளிப்போரிடமிருந்து பங்கீடாகப் பெறப்படுகின்றது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கிடைக்கக் கூடிய பயன்கள் வருமாறு:—

* வயது முதிர்வு ஓய்வூதியம்
* குறைக்கப்பட்ட ஓய்வூதியம்
* இயலாமை ஓய்வூதியம்
* விதவை-குழந்தைகள் ஓய்வூதியம்
* அனாதை ஓய்வூதியம்
* நியமனதாரர் ஓய்வூதியம்
* நியமனதாரரின் தந்தைக்கும் தொடர்ந்து தாய்க்கும் ஓய்வூதியம்
* இயலாமையுற்ற குழந்தைகளுக்கான ஓய்வூதியம் (குடும்பத்திலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் வயது எதுவாயினும்)

**7.7.** நிறுவனம் ஒன்றை விட்டுச் செல்லும் உறுப்பினர்களுக்கு, ஓய்வூதியப் பயன்களுடன், திட்டச் சான்றிதழ்கள் வழங்கவும், 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் வகை செய்கிறது. வேறொரு நிறுவனத்தில் பணியில் சேரும்போது, அவர்களுடைய ஓய்வூதிய உறுப்பினர் தகுதியும் தொடரும்.

## தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976

**7.8.** இத்திட்டம், 1-8-1976 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டம் பொருந்தக் கூடிய அனைத்துத் தொழிற் சாலைகள் மற்றும் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கும், இத்திட்டம் பொருந்துகிறது.

**7.9.** காப்புறுதி நிதிக்கு தொழிலாளர்கள் சந்தாத் தொகை செலுத்த வேண்டியதில்லை. வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களின் ஊதியத்தில் 0.5 சதவீதம் என்ற கணக்கில், வேலையளிப்போர் சந்தாத் தொகை செலுத்த வேண்டும். மத்திய அரசும் இந்தக் காப்புறுதி நிதிக்கு சந்தா செலுத்துகிறது. இது வேலையளிப்போர் சந்தாத் தொகையில் பாதிக்கு சமமான தொகையாக இருக்கும்.



*7.10.* தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினராக இருக்கும் ஒருவர் பணியில் இருக்கும்போது இறந்துவிடும் நேர்வில், இத்தொகையைக் கோரும் நபருக்கு, இறந்து விட்டவரின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் முந்தைய 12 மாத கால அளவில் இருப்பில் இருந்த சராசரித் தொகைக்கு சமமாக கூடுதல் தொகை வழங்கப்படும். இது அதிகபட்சமாக ரூ.60,000/- ஆகும்.

## சமூகப் பாதுகாப்பு எண் (எஸ்.எஸ்.என்.) ஒதுக்கீடு

*7.11.* தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கு பங்களிக்கும் ஒவ்வொரு பங்களிப்பாளரையும் தனித்தனியாக இனங்காட்டும், தன்னேரில்லா ஏற்பாடு இதுவாகும். பதினான்கு இலக்கங்கள் கொண்ட எண்ணாக அது வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில், மூன்று இலக்கங்கள் புலனாய்வு தொடர்பானவை. ஒரு இலக்கம் சரிபார்ப்புக்குரியது. இந்த வடிவமைப்பு, ஓர் எண் ஒன்றுக்கு மேற்பட்ட பங்களிப்பாளருக்கு ஒதுக்கப்படாமலும், ஒரு பங்களிப்பாளருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட எண்கள் ஒதுக்கப்படாமலும் இருப்பதை உறுதி செய்கிறது. எஸ்.எஸ்.என். ஒதுக்கீட்டை செயல்படுத்துவதற்காக, விவரக்குறிப்பு சேகரிக்கும் முகமை ஒன்று நியமிக்கப்பட்டு, விவரக்குறிப்பு சேகரிக்க தங்கல்கள் ஏற்பாடு செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டது. அத்தங்கல்களில், பங்களிப்பாளர்களிடமிருந்து படிவங்கள் வாங்கப்பட்டு, விவரக்குறிப்புகள் மின்னணு மூலம் சேகரிக்கப்பட்டன. படிவ விவரக்குறிப்பு ஐ.சி.ஆர். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியும் சேகரிக்கப்பட்டது. பெறப்பட்ட விவரக்குறிப்பின் மெய்த்தன்மையை உறுதிப்படுத்த, இவ்விரு நிலைகளும் ஒத்துப்பார்க்கப்பட்டன. அதன்பின்னர், எஸ்.எஸ்.என். விவரக்குறிப்பு எஸ்.எஸ்.என். மென்பொருள் வழியே செயல்முறைப்படுத்தப்பட்டு, தனித்தன்மை வாய்ந்த எண்கள் பங்களிப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டன. எண்கள் ஒதுக்கப்பட்டவர்களுக்கு, எஸ்.எஸ்.என். அட்டைகள் வழங்கப்பட்டன. எஸ்.எஸ்.என். விவரக்குறிப்பு சேகரிப்பு முதலில் முன்னோடியாக 6 அலுவலகங்களில் மட்டுமே நடைமுறையில் இருந்தது. பின்னர், அதன் செயல்வரம்பினை அதிகரிக்கும் வகையில், பிற அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

## குறைகளைக் களைதல்

*7.12.* இந்நிறுவனம் தனது உறுப்பினர்கள் மற்றும் பயனீட்டாளர்களின் நலன் மீது தனது கடமைகளையும் பொறுப்பினையும் எப்பொழுதும் உணர்ந்து செயல்படுகிறது. சென்னை மண்டலம் மற்றும் துணை மண்டல அலுவலகங்களில், உறுப்பினர்களின் குறைகளைக் கவனிப்பதற்காக, மக்கள் தொடர்பு அலுவலர்கள், அனைத்து வேலை நாட்களிலும் உள்ளனர்.

*7.13.* மேலும், மண்டல ஆணையர் மற்றும் துணை மண்டல அலுவலர்களும் அனைத்து வேலை நாட்களிலும் உறுப்பினர்களின் குறைகளைக் கேட்டறிந்து உடனடியாக அவர்கள் குறைகளுக்குத் தீர்வு காண ஆவன செய்கின்றனர்.

*7.14.* உறுப்பினர்களுக்குத் துரிதமான சேவை செய்யும் நோக்குடன், கணினி மையம் ஒன்று மண்டல மற்றும் அனைத்து துணை மண்டல அலுவலகங்களில் உள்ள மக்கள் தொடர்பு அலுவலர்கள் பிரிவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அலுவலகத்தில் பெறப்படும் எந்த ஒரு கோரிக்கையாயினும், அதன் நிலை என்னவென்பதும், அதற்கான தீர்வு என்னவென்பதும், உடனடியாக கணினியில் பார்க்க இயல்வதுடன், அதற்குரிய அச்சு நகலும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. இதன் காரணமாக, உறுப்பினர்கள் மிகுந்த திருப்தி அடைகின்றனர்.





## அத்தியாயம்-8

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

*8.1.* தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தில் உள்ளபடி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் எனும் கூட்டாண்மை அமைப்பினால் நிர்வகிக்கப்படுகிறது. இந்திய அரசின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது, அமைப்புச் சார்ந்த துறைகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் ஒருங்கிணைந்த திட்டமாகும். தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஏற்படும் நோய்கள், மகப்பேறு, மரணம், பணியின்போது ஏற்படும் விபத்து, காயம் காரணமாக ஏற்படும் இயலாமை போன்ற நிகழ்வுகளில் இத்திட்டம் அவர்களுக்கு மருத்துவ உதவி, உடல் நலமின்மை உதவி, பேறுகால உதவி, இயலாமை உற்றோருக்கான உதவி, சார்ந்துள்ளோர் நல உதவி, உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி, உயர்த்தி வழங்கும் உடல் நலமின்மைக்கான உதவி, தற்காலிக இயலாமையுற்றோருக்கான உதவி நிரந்தர இயலாமையுற்றோருக்கான உதவி மற்றும் இறுதிச் சடங்கிற்கான உதவிகளை வழங்கி வருகிறது.

*8.2.* இத்திட்டத்தினால் கவரப்பட்டுள்ள நிர்வாகங்கள் மற்றும் அமைப்புகளில் பணிபுரியும், ரூ.10,000/- வரை ஊதியம் பெறும் பணியாளர்கள், இந்தப் பல நோக்கு சமூகநலப் பாதுகாப்பு பயன்களைப் பெறுகின்றனர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்போர் பங்களிப்பினால் பெறப்படும் நிதியைக் கொண்டுள்ளது. இந்நிதியில், தொழிலாளர்கள் ஊதியத்தில் 1.75 சதவீதம் தொழிலாளர்கள் பங்காகும். 4.75 சதவீதத்திற்கு ஈடான தொகை வேலையளிப்போர் பங்காகும்.

*8.3.* தமிழ்நாட்டில் 183 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், 9 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள், 5 நடமாடும் மருந்தகங்கள், 2 பயனீட்டு மருந்தகங்கள்மூலம் மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது. மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 2,363 ஆகும்.

[2007 ஏப்ரல் 19

*8.4.* மருத்துவ வசதிகளுக்காகும் செலவினை முதலில் மாநில அரசு ஏற்றுக் கொள்கின்றது. செலவினத்தில் 7/8 பங்கினை, உச்சவரம்பிற்குட்பட்டு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக்கழகம் மாநில அரசுக்கு திரும்பச் செலுத்துகின்றது. முன்னர், காப்பீட்டாளர் ஒருவருக்கு ரூ.900/- ஆக இருந்த உச்சவரம்பு, 01-04-2007 முதல் ரூ.1,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## பயனீட்டு மருந்தகங்கள்

*8.5.* பயனீட்டு மருந்தகங்கள், வேலையளிக்கும் நிறுவனத்தினால் நடத்தப்படுகின்றன. இம்மருந்தகங்களில் அளிக்கப்படும் மருத்துவ வசதிகள், மாநில அரசால் நடத்தப்படும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் வழங்கப்படும் மருத்துவ வசதிகளுக்கு இணையாக இருக்க வேண்டும். நிறுவனத்திற்கு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக்கழகம் நிர்ணயித்துள்ளபடி, தலைவீதக் கட்டணம் செலுத்தப்படுகின்றது. தற்போது, தலைவீதக் கட்டணம் ஆண்டு ஒன்றிற்கு, ஒரு காப்பீட்டாளருக்கு ரூ.60/- ஆகும். தமிழ்நாட்டில் தற்போது இரண்டு பயனீட்டு மருந்தகங்கள் உள்ளன.

1. பயனீட்டு மருந்தகம், டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், டால்மியாபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2. பயனீட்டு மருந்தகம், ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.

## புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்

*8.6.* கீழ்க்கண்ட இடங்களில், இரண்டு மருத்துவர் வகை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | மருந்தகத்தின் பெயர் | மாவட்டம் | திறக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 1-8-2006 |
| 2. | கேளம்பாக்கம் | காஞ்சிபுரம் | 1-9-2006 |
| 3. | கருங்கல் | கன்னியாகுமரி | 16-11-2006 |



2007 ஏப்ரல் 19]

## திட்டம் விரிவுபடுத்தப்பட்ட புதிய பகுதிகள்

*8.7.* 2006-2007-ல், கீழ்க்கண்ட இடங்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை விரிவுபடுத்தி, அவ்விடங்களின் அருகேயுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | விரிவுபடுத்தப்பட்ட இடங்கள் | இணைக்கப்படும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் | தொடங்கப் பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | பேகம்பூர் புறநகர் | பேகம்பூர் | 1-10-2006 |
| 2. | முனிச்சாலை புறநகர் | முனிச்சாலை | 1-12-2006 |
| 3. | கோவில்பட்டி புறநகர் | கோவில்பட்டி | 1-12-2006 |
| 4. | தென்காசி புறநகர் | தென்காசி மற்றும் சங்கரன்கோவில் | 1-12-2006 |
| 5. | ஸ்ரீவில்லிபுத்தூர் புறநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர் | 1-2-2007 |

## சித்த மருத்துவம்

*8.8.* சித்த மருத்துவப் பிரிவு, ஏற்கெனவே தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகின்றது. 2006-2007 ஆம் ஆண்டில், மதுரை, வேலூர் மற்றும் சேலம், ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சித்தப் பிரிவு தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது.

## யோகா

*8.9.* அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில், யோகா பிரிவு 24-11-2006-ல் தொடங்கப்பட்டது.

## சுழற்சி நிதி

*8.10.* காப்பீட்டாளர், தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சைக்காகச் செலவிடும் தொகையை, தாமதமில்லாமல் திரும்பப் பெறுவதற்காக, சுழற்சி நிதி உருவாக்கப்பட்டது. அச்சுழற்சி நிதியிலிருந்து காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் சிறப்பு மற்றும் உயர் சிறப்புப் பிரிவில் சிகிச்சை பெற்றதற்கான செலவினம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தினால் திரும்ப வழங்கப்படுகிறது.

*8.11.* காப்பீட்டாளர்கள், சிகிச்சைக்காக செலவழித்த பணத்தை விரைவில் திரும்பப்பெறும்வண்ணம், நிதி அதிகாரம் கீழ்க்கண்டவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் | ரூ. 1,50,000/- |
| மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர் | ரூ. 25,000/- |
| தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத் தலைமை மருத்துவ அலுவலர் | ரூ. 2,000/- |

*8.12.* 2006-2007 ஆம் ஆண்டில், இருதய அறுவைச் சிகிச்சைகள், சிறுநீரகம், நரம்பியல் தொடர்பான சிகிச்சைகள், முதுகுத்தண்டு தொடர்பான சிகிச்சை மற்றும் புற்றுநோய் ஆகிய பல்வேறு சிகிச்சைகளுக்காக காப்பீட்டாளர்கள் செலவழித்த தொகையான ரூ.2,12,29,784/- திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

## செறிவுத் திட்டம் (Package Deal)

*8.13.* காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு சிறந்த சிகிச்சை அளிப்பதற்காக, இலவச செறிவுத் திட்டம் (Package Deal) ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், சிறப்பு மற்றும் உயர்சிறப்புச் சிகிச்சைக்காக, 44 தனியார் மருத்துவமனைகள் சேர்க்கப்பட்டுள்ளன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளால் குறிப்பிட்டு அனுப்பப்படும் காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்ப அங்கத்தினர்கள், தனியார் மருத்துவமனைகளில், பணம் செலுத்தாமலே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். சிகிச்சைக்காக காசோலைகள், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தினால், சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன. 2006-2007-ல் இத்திட்டத்தின்கீழ் மேற்படி தனியார் மருத்துவமனைகளுக்கு, 367 நேர்வுகளில் ரூ.1,91,23,150/- ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.



# அத்தியாயம்-9

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

### நிர்வாகம்

*9.1.* தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை, தமிழ்நாட்டில் உள்ள பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல், தொழிலாளர்களின் உடல் நலன் பாதுகாத்தல், தொழிலாளர்களுக்கு முறையான நல வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற பணிகளை செயல்படுத்துவதில் முக்கியப் பங்கினை வகிக்கிறது. இத்துறை தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் 13 இதர தொழிலாளர் சட்டங்களை மாநிலத்தில் செயல்படுத்தி வருகிறது.

*9.2.* தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் நிர்வாகமும், பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் செயலாக்கமும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரின் முழுப்பொறுப்பில் உள்ளன. கூடுதல் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர், தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள், தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் மற்றும் தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள் உள்ளிட்ட 131 அலுவலர்களால், மேற்குறிப்பிடப்பட்ட தொழிலாளர் நலச் சட்டங்கள், தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

### ஊறுவிளைவிக்கும் செயல்முறை தொழிற்சாலைகள்

*9.3.* 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் முதல் அட்டவணையின்படி 29 வகையான தொழில்கள், ஊறுவிளைவிக்கும் தொழில்களாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழில்களில் தனிக் கவனம் செலுத்தப்படாவிடில், இத்தொழில்களில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களால், தொழிலாளர்களின் உடல் நலத்திற்கும், சுற்றுச்சூழல் தூய்மைக்கும் பாதிப்பு ஏற்படும். இத்தகைய தொழிற்சாலைகளுக்கென தொழிற்சாலைகள் சட்ட, விதிகளில் சிறப்பு பாதுகாப்பு வழிவகைகள் வகுக்கப்பட்டுள்ளன. இப்பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைப்பிடித்து, தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை உறுதி செய்யப்படுகின்றனவா என்பது குறித்து இத்துறை, கூரிய கவனத்துடன் ஆய்வுகள் மேற்கொள்கிறது.

9.4. 1988 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட "பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தடுப்புக் குழு", பெரும்விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளை ஆய்வு செய்து, பேரபாயத்தைத் தடுக்கக் கூடிய வழிமுறைகளை நிர்வாகத்தினர் கடைப்பிடிக்குமாறு பரிந்துரைக்கிறது. இத்தொழிற்சாலைகள், அவசர நிலையினை சமாளிக்கும் பொருட்டு, அவசரநிலை உள்ளிருப்பு ஆயத்தத் திட்டத்தினை தயாரித்து வைத்திருக்க வேண்டும். 2006 ஆம் ஆண்டு வரை, 150 பெரும்விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளிலிருந்து உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் பெறப்பட்டு, 127 திட்டங்கள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அவர்களால் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளன. 23-04-1998 தேதியிட்ட, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, அரசாணை (நிலை) எண் 109-ல், மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நெருக்கடி நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பேரபாயத் தொழிற்சாலைகளில் பெரும் விபத்துக்கள் மற்றும் பேரழிவுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும், கட்டுப் படுத்துவதற்கும் தேவைப்படும் வழிவகைத் திட்டங்களை உருவாக்க அரசுக்கு இக்குழுக்கள் உதவுகின்றன.

9.5. அபாய நிலை அவசர காலக்கட்டத்தில் உரிய முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் மற்றும் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தேவைப்படும் பயிற்சியினை அளிப்பதற்காக, "மாதிரி ஒத்திகைகள்" (Mock Drills) பெரும்விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளில், இத்துறை அலுவலர்களின் மேற்பார்வையில், அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. 2006 ஆம் ஆண்டில், 92 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக, பெரும்விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளிலிருந்து பாதுகாப்பு அறிக்கைகள் (Safety Reports) கோரப்பட்டு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

9.6. புதிதாகத் துவங்கப்படவிருக்கும், இடர்தரு தொழிற்சாலைகளின் அமைவிடத்தை மதிப்பீடு செய்து, அரசுக்கு உரிய பரிந்துரைகள் வழங்கும் பொருட்டு, "மனை மதிப்பீட்டுக் குழு" (Site Appraisal Committee) தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 41-A-யின்படி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, நிர்வாகத்தினரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து, மனைப் பொருத்தம் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகள் குறித்து பல்வேறு நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கும் வகையில் ஒப்புதல் அளிக்க, அரசுக்கு ஆலோசனை வழங்கி வருகிறது.



## மாநில அளவிலான பாதுகாப்பு தணிக்கைக் குழு

9.7. பாதுகாப்புத் தணிக்கைக் குழு, பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளிலிருந்து ஆண்டுதோறும் பெறப்படும் பாதுகாப்புத் தணிக்கை அறிக்கைகளை (Safety Audit Reports) கூர்ந்தாய்வு செய்து, மேற்குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்கி வருகிறது.

9.8. 2006 ஆம் ஆண்டில், இக்குழு 14 கூட்டங்களை நடத்தியுள்ளது. 14 பெரும்விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளில் இருந்து பெறப்பட்ட பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்து, பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அப்பரிந்துரைகள், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டு, தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் முக்கிய செயல்பாடுகள்

9.9. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் இரு முக்கியச் செயல்பாடுகள் வருமாறு:

1. முறைப்படுத்தும் செயல்பாடுகள் (தொழிலாளர் நலச் சட்டங்கள் அமலாக்கம்)

2. உடல் நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள்.

## முறைப்படுத்தும் செயல்பாடுகள்

### ஆய்வுகள்

9.10. 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டத்தின்மூலம் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில், தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல் நலம், நல வசதிகள் போன்றவை உறுதி செய்யப்படுகின்றன. அபாய செயல்முறைகள் இல்லாத, சிறு தொழில் நிறுவனச் சான்று பெற்ற தொழிற்சாலைகள், (தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து புகார்கள் ஏதும் பெறப்பாடாத நிலையில்), ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டும் ஆய்வு செய்யப்படுகின்றன. அபாய செயல்முறைகள் அடங்கிய தொழிற்சாலைகள், சிறு தொழில் நிறுவனச் சான்று பெற்றிருந்தாலும், பாதுகாப்பு மற்றும் உடல் நலம்

[2007 ஏப்ரல் 19

ஆகியவற்றைக் கண்காணிக்கும் பொருட்டு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் உள்ள அபாயத்தைக் கருத்தில் கொண்டும், குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கமர்த்துதலை அறவே நீக்கிடவும், இத்தொழிற்சாலைகள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. இதைத் தவிர, உடல் நலம், நலவசதி போன்றவற்றை உறுதி செய்வதற்காக, சிறப்பு ஆய்வுகள், விடுமுறை நாள் ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறாக, தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சுமுகமான பணிச் சூழலை இந்த ஆய்வகம் உறுதிப்படுத்துகிறது.

## பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கான குழு ஆய்வுகள்

9.11. பெரும்பாலான பட்டாசுகள், தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. அதிக உற்பத்திச் செயல்பாடுகள் காரணமாக, வெடிவிபத்துக்கள் நிகழ்வுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, தீபாவளிப் பண்டிகைக் காலத்தில், வழக்கமான ஆய்வுகள் தவிர, பட்டாசுத் தொழிற்சாலைகளின் பாதுகப்பான பணிநிலைமையையும் வேலை முறையையும் கண்காணித்து சீர்படுத்துவதற்காக சிறப்புக் குழு (Special Squads) ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பு விழிப்புணர்வுக் குழு

9.12. பட்டாசுத் தொழிற்சாலைகளில் நிகழும் வெடி விபத்துக்களைக் கட்டுப்படுத்தி, உயிர் இழப்பினைத் தடுத்திடும் நோக்கில், தொழிலாளர்களிடையே பாதுகாப்புப் பிரச்சாரத்தைத் தொடர்ச்சியாகச் செய்திட, மதுரை, தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் அலுவலக தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் (பதிவு), தலைமையில், ஒரு தொழிற்சாலைகள் ஆய்வாளர் மற்றும் தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் ஆகியோரைக் கொண்ட "பாதுகாப்பு விழிப்புணர்வுக் குழு" ஒன்று, அரசு ஆணை (நிலை) எண் 130, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (எம் 2) துறை, நாள் 20-9-2006-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, காலமுறையில் பட்டாசுத் தொழிற்சாலைகளுக்குச் சென்று, இத்தொழிலில் உள்ள அபாயங்கள் குறித்தும், பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுவது பற்றியும், தொழிலாளர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் பிரச்சாரங்கள் மேற்கொண்டு வருகின்றது. இக்குழு, 2006 செப்டம்பர்



2007 ஏப்ரல் 19]

மாதத்தில் செயல்படத் தொடங்கி, 31-03-2007 வரையில், 36 பிரச்சார முகாம்கள் நடத்தியுள்ளது. அதன் காரணமாக, 3,714 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## விபத்துகள்

9.13. தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதிலும், பாதுகாப்பு அளவீடு மற்றும் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள்போன்ற பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வருவதால், விபத்து நிகழ்வுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

2004-2005 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் நிகழ்ந்த விபத்துகள் விவரம்:—

| வருடம் | பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை | தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை | மரண விபத்து | மரணமற்ற விபத்து |
|---|---|---|---|---|
| 2004 | 31,520 | 12,70,599 | 10 | 1,838 |
| 2005 | 36,867 | 13,20,613 | 50 | 1,515 |
| 2006 | 38,976 | 13,69,376 | 18 | 1,198 |

## தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

9.14. தமிழ்நாட்டில், தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக, தொகுதி தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு, விபத்து காரணமாக, பார்வை, கை, கால், இழப்பு அல்லது இறப்பு நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதிப் பயன், தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துகளுக்கு மட்டுமின்றி, 24 மணி நேர அடிப்படையில் மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இறப்பு நேரிட்டால் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 2006 ஆம் ஆண்டு வரை 1,78,211 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 2006 ஆம் ஆண்டில், ஈட்டுத் தொகையாக தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும், ரூ.11,95,000/- வழங்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 19

## குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குதல்

9.15 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் பல்வேறு சட்ட விதிமுறைகளுள் ஒன்றான பிரிவு 67-ன்படி, தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணிமுறையை நீக்குதல் தொடர்பாக இத்துறை மிகவும் சீரிய முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி, சட்ட விதிகளை கடைப்பிடிக்கத் தவறிய தொழிற்சாலை நிர்வாகங்கள்மீது, தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 92-ல் விதிக்கப்பட்ட தண்டனையைவிடக் கடுமையானதாகக் கருதப்படும். குழந்தைத் தொழிலாளர் சட்டப் பிரிவு 14 மற்றும் 15-ன்கீழ் தண்டனை விதிக்கும் வகையில் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2006 ஆம் ஆண்டு, தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 67-ன்படி, 30 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அபராதமாக ரூ.4,28,650/- வசூலிக்கப்பட்டுள்ளது. இது தவிர, ஒவ்வொரு மாதமும் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதைத் தடுக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இக்குழு ஆய்வுகள் தற்போது அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்கள், 2006 ஆம் ஆண்டில் மொத்தம் 7,905 ஆய்வுகள் மேற்கொண்டுள்ளன.

### புகார் விசாரணை

9.16. தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, குறைபாடுகளுக்குத் தீர்வு காணும் வகையில், உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2006 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 593 புகார்கள் அனைத்தும் விசாரிக்கப்பட்டு, தீர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளரால் சென்னையிலும், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் மாவட்டங்களிலும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டங்களில் எழுப்பப்படும் குறைபாடுகள் குறித்து தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## 1948 ஆம் ஆண்டைய குறைந்தபட்ச ஊதியச் சட்டச் செயலாக்கம்

9.17. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய நிலையினைப் பாதுகாக்கும் வகையில், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படாமைக்கு



2007 ஏப்ரல் 19]

கேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதுடன், சட்ட விதிகளைப் பின்பற்றத் தவறிய நிர்வாகங்கள்மீது வழக்குகளும் தொடரப்படுகின்றன. 2006 ஆம் ஆண்டில், 95 நீதிமன்ற வழக்குகளும், 4 கோரிக்கை மனுக்களும் இச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டன.

## இதரச் சட்டங்கள் அமலாக்கம்

9.18. மேற்குறிப்பிட்ட சட்டங்களைத் தவிர, சம்பளப் பட்டுவாடாச் சட்டம், தேசிய பண்டிகை மற்றும் விடுமுறைச் சட்டம், தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம், பிழைப்பூதியச் சட்டம், ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (நிரந்தரத் தகுதி வழங்குதல்) சட்டம், மகப்பேறு நலச் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையினால் அமலாக்கம் செய்யப்படுகின்றன.

## உடல் நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள்

### உடல் நல மேம்பாடு செயல்பாடுகள்

9.19. இரசாயனம் மற்றும் இதர அபாயகரமான தொழிற்சாலைகளில் கையாளப்படும் இரசாயனப் பொருட்களின் நச்சுத் தன்மையால், தொழிலாளர்களின் உடல் நலப் பாதிப்பை கட்டுப்படுத்தவும், உடல் நலம் மற்றும் சுகாதார மேம்பாடு குறித்து கண்காணித்து அவற்றை சீர்படுத்தவும், இத்துறையில் மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவ அலுவலர்கள், தொழிற்சாலைகளில் சுகாதார அளவீடுகள் மேற்கொண்டு, அதன் மூலம் தொழிலாளர்களின் உடல்நல மேம்பாடு குறித்து தக்க ஆலோசனைகளைப் பரிந்துரைத்து, அவர்தம் நல மேம்பாட்டு வழிவகைகளையும் செய்து வருகிறார்கள்.

9.20. இத்துறையில் இயங்கி வரும் தொழில் நலவியலகம், நச்சுத் தன்மையுள்ள இரசாயன வாயுக்கள் தொழிற்கூடங்களில் கசிந்திருக்கும் அளவினைக் கண்காணிக்கிறது. நச்சுத் தன்மை வாய்ந்த இரசாயனப் பொருட்களினால் ஏற்படக் கூடிய உடல் நலம் மற்றும் சுகாதாரக் கேடுகளைக் கண்டறிந்து, தேவையான தீர்வு ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன், ஒலி, தூசு மற்றும் வெப்பம்போன்ற பௌதீகக் காரணிகளால் உண்டாக்க கூடிய உடல் நல பாதிப்புகள் குறித்தும் இந்தத் தொழில் நலவியல் ஆய்வகம் ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

9.21. தொழிற்சாலைகளில் ஏற்படும் அதிகப்படியான இரைச்சல் காரணமாக, அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களது காதுகள் செவிடாகும் வாய்ப்பு ஏற்படுவதுடன், அவர்களின் மனநிலை பாதிக்கப்படுவதைத் தடுத்திடும் வகையில், சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென ஆய்வாளர்களுக்கு "ஒலி அளப்பான்" கருவிகள் வழங்கப்பட்டு, அவற்றின்மூலம் ஒலி அளவினைக் கண்டறிந்து, தொழிலாளர்களை அந்த இரைச்சலிலிருந்து பாதுகாக்க, நிர்வாகத்தினருக்கு வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

## அழுத்தக்கலன் சோதனை

9.22. தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்கள் பாதுகாப்புடன் செயல்படும்விதத்தில், அவற்றின் செயல்பாட்டு வழிமுறைகளை உறுதி செய்வதும், இத்துறையின் முதன்மைப் பணிகளில் ஒன்றாகும். காற்று அழுத்தத்திற்குமேல் (above atmosphere pressure) செயல்படும் அனைத்து அழுத்தக் கலன்களும் (இந்திய கொதிகலன்கள் சட்டத்தின்கீழ் வரும் நீராவிக் கொதிகலன்களைத் தவிர்த்து) ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வெளிப்புறச் சோதனையும், ஆண்டுக்கு ஒருமுறை உட்புறச் சோதனையும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நீரழுத்தச் சோதனையும், நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலிச் சோதனையும் செய்யப்படுகின்றன.

## மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்குதல்

9.23. தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, விபத்துக்களைக் குறைக்கும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு ஆண்டுதோறும் பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. தொழிற்சாலைகள் செயல்பட்ட மனித நேரங்களின் அடிப்படையில், தொழிற்சாலைகள் 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, முந்தைய ஆண்டினை ஒப்பிடுகையில், விருது வழங்கும் ஆண்டில் பணிபுரிந்த மனித நேரங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட விபத்து நிகழ்வு எண்ணிக்கை விகிதம் குறைவு, நடப்பு ஆண்டில் ஏற்பட்ட குறைவான விபத்து நிகழ்வு எண்ணிக்கை, மிக அதிகமாக விபத்து நிகழா மனித நேரங்கள் போன்ற காரணிகளின் அளவீடுகளைச் சீர்தூக்கி, இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், முதல் பரிசாக, ரூ.2,500 மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும், இரண்டாம் பரிசாக, ரூ.1,500 மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.



9.24. மேலும், விபத்துத் தடுப்பு நடவடிக்கையில் முக்கியப் பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டும் "தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைப் பற்றி பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு, இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

9.25. 11-09-2006 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில், 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளுக்கான, மாநில பாதுகாப்பு விருதுகள் மற்றும் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் வெவ்வேறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் 73 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன. பாதுகாப்பு விருதுகள் 131 தொழிற்சாலைகள் நிர்வாகத்தினருக்கு வழங்கப்பட்டன.

## பாதுகாப்புப் பயிற்சிப் பணிகள்

9.26. தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புச் செயல்பாட்டு முறை குறித்தப் பயிற்சி வகுப்புகள், தொழிற்சாலை வளாகத்திலேயே, இலவசமாக நடத்தப்படுகின்றன. 01-01-2006 முதல் 31-03-2007 வரையிலான காலத்தில், 177 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்ட 9,545 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## தமிழ்நாடு கட்டட மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006

9.27. தற்போது "தமிழ்நாடு கட்டட மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006" உருவாக்கப்பட்டுள்ளன. இவ்விதிகளின் மூலம், கட்டட மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடற் சுகாதாரம் மற்றும் இதர நலன்களை உறுதி செய்திட, சட்ட அமலாக்கம் விரைவில் இத்துறையால் மேற்கொள்ளப்படவுள்ளது.

[2007 ஏப்ரல் 19

## அத்தியாயம்-10

## வேலைவாய்ப்பு மற்றும் பயற்சித் துறை

### வேலைவாய்ப்புப் பிரிவு

10.1 வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் தலைமையில் இயங்குகின்றது. அவருக்கு உதவியாக, இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (வேலைவாய்ப்புத் திட்டங்கள்) மற்றும் இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு) ஆகிய மூன்று இணை இயக்குநர்கள் உள்ளனர். சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில், மண்டலத் துணை இயக்குநர்கள் கட்டுப்பாட்டில் நான்கு மண்டல அலுவலகங்கள் உள்ளன. மண்டலத் துணை இயக்குநர்கள், ஏழு முதல் எட்டு மாவட்டங்களில், அவரவர் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள்/சிறப்பு அலுவலகங்களின் பணிகளைக் கண்காணிக்கின்றனர். தமிழ்நாட்டில் 30 வருவாய் மாவட்டங்களிலும், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செயல்படுகின்றன.

10.2. மாவட்ட அளவில், உதவி இயக்குநர்கள் அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் கட்டுப்பாட்டில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. வேலை நாடி பதிவு செய்ய வருவோர்க்கு, தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் இதர சேவைகளை, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வழங்கி வருகின்றன.

10.3. மேற்குறிப்பிடப்பட்டவை தவிர, பின்வரும் சேவைகளைச் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அளிக்கின்றன:—

* தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சாந்தோம், சென்னை- தொழிற்கல்வித் தகுதிகள் மற்றும் முதுகலைப் பட்டக் கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ள மனுதாரர்கள் இவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்படுகின்றனர்.

* மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்) அடையாறு, சென்னை.

* உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சாந்தோம், சென்னை.



2007 ஏப்ரல் 19]

* மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில்நுட்பப் பணியாளர்கள்) சென்னை மற்றும் கோயம்புத்தூர்.

* ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையம், கடலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர்.

* பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் நிலையம், உதகமண்டலம்.

### வேலைவாய்ப்பகங்களின் பணிகள்

10.4. அந்தந்த மாவட்டங்களில் வசிக்கும் பதிவுதாரர்களைப் பதிவு செய்தலும், அவர்தம் பெயர்களை வேலையளிப்போர் அறிவிக்கும் பணிக்காலியிடங்களுக்கு பரிந்துரைப்பதும், வேலைவாய்ப்பு அலுவலகங்களின் அடிப்படைப் பணிகளாகும். இளைஞர்கள் ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் பெரிதும் உதவி புரிகின்றன. மேலும், தொழில்நெறி வழிகாட்டல் மூலமாக, இளைஞர்கள் சுயவேலைவாய்ப்புகளைப் பெறவும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உதவுகின்றன. வேலை நிலவரத் தகவல் குறித்த புள்ளிவிவரங்களைச் சேகரித்து வெளியிடுதல், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்குத் தொழில்நெறி வழிகாட்டுதல் போன்ற பணிகள் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் இதர முக்கியப் பணிகளாகும்.

### 2006–2007 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்புப் பணிகளின் செயல்பாடுகள்

10.5. பதிவுதாரர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் மற்றும் வேலையளிப்போருக்கு பட்டியல் அனுப்புதல் போன்ற அனைத்துப் பணிகளும் வேலைவாய்ப்பகங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

10.6. 01-01-2006 முதல் 31-03-2007 வரை, 11,21,413 மனுதாரர்கள் தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர். 15,525 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 31-03-2007 அன்றுள்ளபடி, உயிர்ப்பதிவேட்டில் உள்ள பதிவுதாரர்களின் எண்ணிக்கை 43,38,816 ஆகும்.

### பதிவைப் புதுப்பித்துக்கொள்ளச் சலுகை

10.7. அரசாணை (நிலை) எண் 71, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 17-06-2006-ல், வேலைவாய்ப்பகங்களில் பதிவு

[2007 ஏப்ரல் 19

செய்து, 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு, பதிவினைப் புதுப்பித்துக்கொள்ள சலுகை வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. அதன்பின்னர், அரசாணை (நிலை) எண் 22, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 01-02-2007-ல், 2001, 2002, 2003 ஆகிய ஆண்டுகளில் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு, புதுப்பித்துக் கொள்ளச் சலுகை வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிட அறிவித்தல்) சட்டம் 1959-ஐ அமல்படுத்துதல்**

10.8. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிட அறிவித்தல்) சட்டம் 1959-ன்படி வேலையளிப்போரிடமிருந்து வேலை நிலவரத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

**மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டல் சேவைகள் புரிதல்**

10.9. தொழில்நெறி வழிகாட்டல், மாணவர்கள் மற்றும் வேலை நாடுநர்களுக்கு இக்காலத்திற்குத் தேவையானதாகும். இளைஞர்களின் வழிகாட்டுதலுக்காக, 17 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் செயல்படுகின்றன. பதிவின்போது வழிகாட்டுதல், தனித்தனியாக தகவல் அளித்தல், மூத்த பதிவுதாரர்களை ஆய்வு செய்தல், குழு விவாதங்கள் நடத்துதல், தொழில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல், தொழிற் பழகுநர் அமர்த்தம், பயிற்சிகளில் அமர்த்தல், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொழில்நெறிச் சொற்பொழிவாற்றுதல், வேலையளிப்போரிடம் தொடர்பு ஏற்படுத்துதல், தொழில்நெறிக் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல் போன்றவை தொழில்நெறி வழிகாட்டல் செயல்பாடுகளில் அடங்கும்.

10.10. 01-01-2006 முதல் 31-03-2007 வரை, 168 மனுதாரர்கள் பயிற்சியில் அமர்த்தப்பட்டனர். மேற்குறிப்பிட்ட காலத்தில் 966 தொழில் நெறிச் சொற்பொழிவுகளும், 92 தொழில்நெறிக் கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.

10.11. அனைத்து மாவட்டங்களிலும், ஆண்டிற்கொருமுறை தொழில்நெறி வழிகாட்டல் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. முன்னர், வெவ்வேறு மாவட்டங்களில், வெவ்வேறு



2007 ஏப்ரல் 19]

தேதிகளில், தொலைதூரக் கிராமங்களில் இவை நடத்தப்பட்டதால் பொதுமக்களின் கவனத்தை இவை ஈர்க்கவில்லை. எனவே, அனைத்து மாவட்டங்களிலும், ஒரு குறிப்பிட்ட நாளினைத் தொழில்நெறி வழிகாட்டல் நாளாகத் தேர்வு செய்து, அந்த நாளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து பல்வேறு துறைகளைச் சார்ந்த பெருமக்கள் பங்கேற்புடன், தொழில்நெறிக் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள், பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

**சுய வேலைவாய்ப்பு**

10.12. மே 2006 முதல் மார்ச் 2007 வரை, சுயவேலை வாய்ப்புக்களுக்காக 1,845 மனுதாரர்களுக்கு, பல்வேறு வங்கிகளிலிருந்து, வெவ்வேறு நிறுவனங்கள் மூலம், ரூ. 1,005.43 இலட்சம் கடன் உதவியாகப் பெற்றுத்தர வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உதவி செய்தன.

**உடல் ஊனமுற்றோருக்கான பணியமர்த்தல்/மறுவாழ்வு**

10.13. சென்னை, சாந்தோமில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உதகமண்டலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோருக்கான 13 சிறப்புப் பிரிவுகள், ஊனமுற்றோருக்கு ஏற்ற வகையிலான பணியமர்த்தல் / மறுவாழ்வுக்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

10.14. 1-1-2006 முதல் 31-3-2007 வரை, 588 கண்பார்வையற்றோர், 668 செவிப்புலனிழந்தோர் மற்றும் 5,586 உறுப்புநலம் குன்றியோர் பதிவு செய்துள்ளனர். 31-03-2007 நிலவரப்படி, 80,189 உடல் ஊனமுற்றோர் பதிவு செய்து, வேலைக்காக உயிர்ப்பதிவேட்டில் காத்திருக்கின்றனர். அவர்களுள் 8,698 கண்பார்வையற்றோர், 7,255 செவிப்புலனிழந்தோர் மற்றும் 64,236 உறுப்புநலம் குன்றியோர் அடங்குவர். 2006-ல், 991 உடல் ஊனமுற்ற பதிவுதாரர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2007 ஆம் ஆண்டில் 31-03-2007 வரை, 423 உடல் ஊனமுற்றோர் பணியமர்த்தம் செய்யப்பட்டனர்.

## பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்கும் திட்டம்

10.15. இத்திட்டத்தின்கீழ், 2006-2007ஆம் ஆண்டில், ரூ.39.31 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1,067 மனுதாரர்கள் பயன் அடைந்துள்ளனர்.

## பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்கள்

### சிறப்பு தொழில் முறை வழிகாட்டும் மையங்கள்

10.16. பழங்குடியினர், குறிப்பாக பழங்குடி இளைஞர்கள் முன்னேற்றத்திற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. உதகமண்டலத்தில் பழங்குடியினருக்காக, சிறப்பு வழிகாட்டி மையம் இயங்கி வருகிறது. இம்மையத்தின் முக்கிய செயல்பாடுகள் வருமாறு:

- தொழில்கள் மற்றும் பயிற்சிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, தொகுத்து, பழங்குடியினருக்கு வழங்குதல்.
- பழங்குடியினத்தைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு வழிகாட்டுவதற்காக, காலாண்டு இடைவெளியில் தொழில் தகவல் கையேடுகளை வெளியிடுதல்.
- பெருவாரியான அளவில் பழங்குடியின மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் மற்றும் தங்கும் விடுதிகளுக்குச் சென்று தொழில்நெறி வழிகாட்டுதல், சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், உயர் கல்வி, தொழிற்கல்வி, பயிற்சி வசதிகள், வெளிநாடுகளில் கல்வி, கல்வி உதவித் தொகை குறித்த விவரங்கள் மற்றும் ஆட்பற்றாக்குறை ஏற்படுகின்ற தொழில்களில் (உதாரணம் சுருக்கெழுத்து தட்டச்சர், இடைநிலை ஆசிரியர்) வேலைவாய்ப்புகளைப் பற்றிய விவரங்களை அளித்தல்.
- பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில், ஆட்பற்றாக்குறை காணப்படும் பணிக் காலியிடங்களை இனம் கண்டு, அப்பணிக் காலியிடங்களை நிரப்புவதற்கு, உரிய பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல்.
- பழங்குடியினர் வசிக்கும் இடங்களுக்குச் சென்று, வேலைநாடுநர்களைப் பதிவு செய்தல்.



- பழங்குடியினரை சுய வேலைவாய்ப்பிற்கு ஊக்கப்படுத்தி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெற்றுத்தருதல்.

## சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்கள்

### பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்

10.17. தமிழ்நாட்டில், கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய 5 இடங்களில் ஆதி திராவிட/பழங்குடி இன மனுதாரர்களுக்கு, தொழில்நெறி வழிகாட்டுவதற்காக, பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

- ஆதி திராவிட/பழங்குடி இனத்தைச் சேர்ந்த வேலைநாடுநர்களுக்கு, தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் தொழில் தகவல்கள் பற்றிய விவரங்கள் அளித்தல்.
- ஆதி திராவிட/பழங்குடியின மனுதாரர்களுக்கு தன்னம்பிக்கையூட்டுகின்ற மற்றும் தொடர்புடைய திட்டங்களை வகுத்துச் செயலாக்குதல்.
- பணி மேம்பாட்டுத் திட்டங்களை அமைத்து நடத்துதல்.
- ஆதி திராவிட/பழங்குடியின வேலை நாடுநர்களுக்கு சுருக்கெழுத்து / தட்டச்சுப் பயிற்சி பெற வசதிகள் ஏற்படுத்துதல்.
- உள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு, குறிப்பாக ஆதி திராவிட/பழங்குடியின மனுதாரர்களுக்கு இவை போன்ற பிற தொழில்நெறி வழிகாட்டுதல் பணிகளை மேற்கொள்ளுதல்.

10.18. மேற்குறிப்பிட்ட ஆலோசனைப் பணிகள் தவிர, பல்வேறு தேர்வுக் குழுக்களால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் இந்து ஆதி திராவிட/பழங்குடியின மனுதாரர்களுக்கு அரசால் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்போது, காலமுறையில் பயிற்சி வகுப்புகள் நடத்தும் பணியினையும், இம்மையங்கள் ஆற்றி வருகின்றன. இத்தகைய பயிற்றுவிப்பு வகுப்புகள், ஆதி திராவிட/பழங்குடியின மனுதாரர்களின் வெற்றி வாய்ப்பிற்கு உறுதுணைபுரிகின்றன.

[2007 ஏப்ரல் 19

10.19. சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ், இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து, பயிற்றுவித்தல் மற்றும் வழிகாட்டும் மையங்களின் மூலமாகப் பயனடைந்த ஆதி திராவிட/பழங்குடியின பயனாளிகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு—

| வரிசை எண் | செயல்பாடுகளின் விவரங்கள் | 2006 ஆம் ஆண்டில் | 1-1-2007 முதல் 31-03-2007 வரை |
|---|---|---|---|
| 1. | தொழில்நெறி மற்றும் பயிற்சி பற்றிய தகவல்கள் வழங்கப்பட்ட ஆதி திராவிட/பழங்குடியின பதிவுதாரர்களின் எண்ணிக்கை | 11,062 | 1,180 |
| 2. | ஆதி திராவிட/பழங்குடியின பதிவுதாரர்களுக்காக நடத்தப்பட்ட தன்னம்பிக்கையை வளர்க்கும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 171 | 133 |
| 3. | வேலைவாய்ப்புச் சொற்பொழிவுகளின் எண்ணிக்கை | 183 | 84 |
| 4. | சுயவேலைவாய்ப்பிற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 216 | 122 |

## தன்னார்வப் பயிலும் வட்டங்கள்

10.20. பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் போட்டியிடும் திறனை அதிகரிக்கும்பொருட்டு, அனைத்து மாவட்ட தலைநகர்கள் (தருமபுரி மாவட்டம் நீங்கலாக) மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் இயங்கி வருகின்றன. பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுக்குத் தயார் செய்ய, பயிற்சி வகுப்புகளை நடத்துவதுடன், போதுமான பாடப்புத்தகங்கள், மாத/வார இதழ்கள், நாளிதழ்கள், பாடக் குறிப்புகள் ஆகியவற்றை, தன்னார்வப் பயிலும் வட்டங்கள் மனுதாரர்களின் பயன்பாட்டிற்காக அளிக்கின்றன. தன்னார்வப் பயிலும் வட்டங்களின் மூலமாக இதுவரை 2,321 பேருக்கு வேலை கிடைத்துள்ளது.



2007 ஏப்ரல் 19]

## வேலை நியமனத் தடை நீக்கம்

10.21. வேலை நியமனத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களில் பணி நியமனங்கள் மேற்கொள்ளப்பட அரசு ஆணைகள் வழங்கப்பட்டதன் அடிப்படையில், மே, 2006 முதல் மார்ச், 2007 வரை தமிழ்நாட்டில் 2,033 வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்கள் பல்வேறு பொதுத் துறைகளில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## தனியார் துறையில் பணியமர்த்தல்

10.22. பொதுத் துறை நிறுவனங்களில் பணியமர்த்தல் குறைந்து வரும் நிலையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மனுதாரர்களுக்கு, தனியார் துறையில் பணியமர்த்தம் பெறுவதை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இலக்காகக் கொண்டுள்ளன. தனியார் துறை வேலையளிப்போர் மற்றும் வேலைநாடும் மனுதாரர்கள், பிரதிமாதம், குறிப்பிட்ட ஒரு நாளில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் சந்திக்கின்றனர். அன்றையதினமே வேலையளிப்பவர் பணி நியமனம் வழங்குகிறார். வேலையளிப்போருக்கு, தேர்வு செய்வதற்கான செலவினம் மற்றும் கால விரயம் தவிர்க்கப்படுகின்றது. 1-1-2006 முதல் 31-3-2007 வரையில் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களாலும், 2,628 மனுதாரர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டனர். தனியார் துறையில் பணியமர்த்தலை ஊக்குவிக்க இணையதளம் அமைத்தல்.

10.23. தனியார் துறையில் வேலையளிப்போர், அவர்களது தேவைக்கேற்ப மனுதாரர்களைத் தேர்வு செய்வதற்கு ஏதுவாக, மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் மற்றும் செயல் கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ள, 3.26 இலட்சம் மனுதாரர்களின் பதிவு விவரங்கள் அடங்கிய விவர வங்கி (Data Bank) இணையதளத்தில், சேர்க்கப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தில், சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ள பதிவுகளைப் புதுப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் (http://www.employment.tn.gov.in) மூலம், உயர்கல்வி வசதிகள், போட்டித் தேர்வுகள் குறித்த விவரங்கள் போன்ற தொழில்நெறி வழிகாட்டல் தொடர்புடைய அனைத்து விவரங்களும், மனுதாரர்களின் பயன்பாட்டிற்காக அளிக்கப்பட்டு வருகின்றன.

## வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம்

10.24. படித்துவிட்டு, வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களின் துயரினைத் துடைக்கும் வகையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களின் உயிர்ப் பதிவேட்டில் ஐந்து ஆண்டுகளுக்குமேல் காத்திருக்கும் இளைஞர்களுக்கு, எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 150/- ரூபாயும், +2/மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு 200/- ரூபாயும், பட்டதாரிகள் மற்றும் முதுகலைப் பட்டதாரிகளுக்கு 300/- ரூபாயும், வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வுதவித்தொகை, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினராயின் 45 வயது வரையிலும், ஏனையோருக்கு 40 வயது வரையிலும், அல்லது மூன்றாண்டு காலம் இவற்றில் எது முன்னரோ, அதுவரையில் வழங்கப்படும். இத்திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11-11-2006 அன்று திருச்சியிலும், மாண்புமிகு அமைச்சர்களால் இதர மாவட்டங்களிலும் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24-2-2007 அன்று கோயம்புத்தூரிலும், பிற மாவட்டங்களில், 25-2-2007 அன்று மாண்புமிகு அமைச்சர்களாலும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 3,18,089 நபர்கள் பயனடைந்துள்ளனர். செப்டம்பர் 2006 மற்றும் மார்ச் 2007 ஆகிய இரண்டு காலாண்டிற்கு ஆன மொத்தச் செலவினம் ரூ.35,48,19,000/- ஆகும். இத்திட்டத்திற்கு, வரும் நிதியாண்டில் ரூ.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பயனடைந்தோர்**

| | மற்றவை | ஆ.தி.(ம) ப.கு. | மொத்தம் |
|---|---|---|---|
| ஆண்கள் | | | |
| 10வது | 40,344 | 22,996 | 63,340 |
| +2 | 39,608 | 20,726 | 60,334 |
| பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகள் | 24,828 | 13,109 | 37,937 |
| மொத்தம் | 1,04,780 | 56,831 | 1,61,611 |
| பெண்கள் | | | |
| 10வது | 41,446 | 19,381 | 60,827 |
| +2 | 48,966 | 18,700 | 67,666 |
| பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகள் | 20,545 | 7,440 | 27,985 |
| மொத்தம் | 1,10,957 | 45,521 | 1,56,478 |



## இளைஞர்களுக்கு திறன் எய்தும் பயிற்சி

10.25. அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் பயனாக, மாநிலத்தில் வேலைவாய்ப்புகள் பெருகி வருகின்றன. தமிழ்நாட்டின் இளைஞர்கள் இதன் பயனைப் பெற வேண்டுமெனில் அவர்கள் விரும்பும் வேலைகளில் அவர்களுக்கு திறன் எய்தும் பயிற்சி அளிக்க வேண்டும். எனவே, வேலையில்லா இளைஞர்களுக்கு மாத உதவித் தொகை வழங்குவது மட்டுமின்றி, பொருத்தமான பயிற்சிகள்மூலம் அவர்களை வேலைக்குத் தயார்படுத்தவும் வேண்டும், அதற்காக, 50,000 இளைஞர்களுக்கு, அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம், 2007-2008-ல், ரூபாய் 8 கோடி செலவில், திறன் மேம்பாடு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

[2007 ஏப்ரல் 19

## அத்தியாயம்-11

## தொழிற்பயிற்சிப் பிரிவு

*11.1.* வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவில், கீழ்க்கண்ட 3 முக்கிய திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

- கைவினைஞர் பயிற்சித் திட்டம்.
- தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்.
- தொழிற்பள்ளிகள்.

### கைவினைஞர் பயிற்சித் திட்டம்

*11.2.* நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அதன் தொழில் வளர்ச்சியைச் சார்ந்துள்ளது. தொழில் நிறுவனங்களுக்கு, நவீன தொழில் முன்னேற்றத்திற்கேற்ப, பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்ற மனித ஆற்றல் தேவைப்படுகிறது. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில், பலதரப்பட்ட தொழில் பிரிவுகளில், முறையான தொழிற் பயிற்சி மூலம் திறமை வாய்ந்த கைவினைஞர்களை உருவாக்கி, தொழிற்சாலைகளுக்கான மனித ஆற்றலைத் தருவதில், கைவினைஞர் பயிற்சித் திட்டம் முக்கியப் பங்காற்றுகிறது.

*11.3.* கைவினைஞர் பயிற்சித் திட்டம் பின்வரும் முதன்மையான மற்றும் நீண்ட காலக் குறிக்கோள்களைக் கொண்டுள்ளது.

- ✦ பள்ளிக் கல்வி கற்ற ஏழை, எளிய இளைஞர்கள் பயனடைய, வேலைவாய்ப்புகள் பெறும் வகையில் தொழிற்பயிற்சி அளித்தல்.
- ✦ திறமையை வளர்க்கும் பயிற்சித் திட்டத்தை அளிக்க சரியான உள்ளமைப்பை உருவாக்குதல்.
- ✦ தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப பல்வேறு தொழிற்பிரிவுகளில் சிறந்த பணியாளர்களை உருவாக்குதல்.
- ✦ ஊரக இளைஞர்கள் தொழில் திறமையைப் பெற்று, வேலைவாய்ப்புப் பெறவும், சுய வேலைவாய்ப்புப் பெறவும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தோற்றுவிப்பதை ஊக்குவித்தல்.



2007 ஏப்ரல் 19]

- ✦ தொழிற்சாலைகள்-பயிற்சியாளர்கள் ஆகிய இரு தரப்பினரின் பயன் கருதி, பணிமனைகளில் ஒருவருக்கொருவர் தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவத்தைப் பரிமாற்றம் செய்ய, தொழிற்சாலைகளுக்கிடையே நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்துதல்.
- ✦ பணிபுரியும் தொழிலாளர்களின் கருத்தியியல் பாடம் மற்றும் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தப் பயிற்சி அளித்தல்.
- ✦ தொழிற்பயிற்சி இல்லாத நபர்களின் திறமையினை ஊக்குவிக்க, கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் செயல்படுத்தப்படாத சில தொழிற்பிரிவுகளில் அடிப்படைப்பயிற்சி அளித்தல்.
- ✦ தொழில் முன்னேற்றத்தில் அதிக அளவில் மகளிரைப் பங்கேற்கச் செய்தல்.

### அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

*11.4.* தமிழ்நாட்டில், கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ், 19,384 இருக்கைகளுடன், 56 தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 2 அடிப்படைப் பயிற்சி மையங்கள் உள்ளன. தொழில்நுட்ப மனிதத் திறனை உயர்த்துவதற்கு, சுய வேலைவாய்ப்பு மற்றும் எளிதில் வேலைவாய்ப்புகள் கிடைக்கக்கூடிய 36 பொறியியல் மற்றும் 14 பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுள், மகளிர் நலனுக்கென்று 12 தொழிற்பயிற்சி நிலையங்களும், ஆதி திராவிடருக்கென சிதம்பரத்தில் ஒரு நிலையமும், மலைவாழ் மக்களுக்கென சங்கராபுரத்தில் ஒரு நிலையமும் இயங்குகின்றன. இதைத் தவிர, அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஓசூர், இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூரில் மகளிர் பிரிவுகள் இயங்கி வருகின்றன. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், 2006-2007 ஆம் ஆண்டு வருடாந்திர சேர்க்கையின் எண்ணிக்கை 13,731 ஆகும். தொழிற்பயிற்சி நிலையங்களில், தொழிற்பிரிவுகள் மற்றும் பாடத் திட்டங்கள் அகில இந்திய அளவில் ஒரே சீராக இருக்கும் வகையில், தேசிய தொழிற் நெறிக் கல்வி பயிற்சித் திட்டம் குழுவினால் வடிவமைக்கப்பட்டு, பயிற்சியாளர்கள் தேசிய அளவில் நடத்தப்படும் அகில இந்திய தொழிற் தேர்வு மற்றும் அகில இந்திய திறனாய்வுப் போட்டியில் பங்கேற்கும் வகையிலும், நாட்டின் எப்பகுதியிலும் வேலைவாய்ப்புப் பெறும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

11.5. தொழிற்பயிற்சி நிலையத்தில் சேருவதற்கு, குறைந்தபட்ச கல்வித் தகுதி, எட்டாம் வகுப்பு தேர்ச்சி ஆகும். அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில், இட ஒதுக்கீட்டு முறைக்கு உட்பட்டு, மதிப்பெண் தகுதி அடிப்படையில், ஆண்டுதோறும் மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்படுகின்றனர். அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் பயிற்சி துவங்கும்.

11.6. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், பயிற்சிக் காலத்தில், பயிற்சியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (அ) | ஆதி திராவிடர்களுக்கு | : ரூ.150 மாதந்தோறும் |
| (ஆ) | பழங்குடியினத்தவருக்கு | : ரூ.175 மாதந்தோறும் |
| (இ) | சீர்மரபினருக்கு | : ரூ.140 மாதந்தோறும் |
| (ஈ) | பர்மா/இலங்கை/வியட்நாம் அகதிகளுக்கு | : ரூ.175 மாதந்தோறும் |
| (உ) | பெற்றோர் வருமானம் ஆண்டிற்கு ரூ.16,100/-க்கு மிகாமல் இருக்கும், மொத்தப் பயிற்சியாளர்களில் 1/3 பகுதியினருக்கு | : ரூ.50 மாதந்தோறும் |

பயிற்சியின் முடிவில், அகில இந்திய அளவில் ஜூலை மாதம் தொழிற்தேர்வுகள் நடத்தப்பட்டு, அதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு, தேசிய தொழிற்சான்றுகள் வழங்கப்படுகின்றன.

## நவீன தொழிற் பிரிவுகள்

11.7. மாறுபட்டு வரும் தொழில்நுட்பத்தில், தொழிற்சாலைகளில் நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பயன்பாட்டிற்கேற்ப தேவைப்படும் மனித சக்தி தேவைகளைப் பூர்த்தி செய்ய, புதிய தொழிற் பிரிவுகளான தொழில் மின்னணுவியல் (கம்மியர்), மின்னணுவியல் (கம்மியர்), இயந்திர கருவிகள் பராமரிப்பு, தகவல் தொழில்நுட்பம் (மின்னணுவியல்) கணினி வன்பொருள், கைவினைஞர் உணவு உற்பத்தி (பொது), லித்தோ ஆப்செட் மெஷின் மைண்டர், மின்னணுவியல் நிழற்பட கலைஞர், ஓட்டுநர் மற்றும் கம்மியர் போன்ற நவீன தொழிற் பிரிவுகள், பல்வேறு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் உள்ள தொழிலகங்கள்-



தொழிற்பயிற்சி நிலையங்களின் கூட்டு நடவடிக்கையை முன்னேற்றவும், பயிற்சி மற்றும் மனித ஆற்றலை மேம்படுத்தவும், இந்திய தொழிற் கூட்டமைப்புடன், "புரிந்துணர்வு உடன்படிக்கை" ஒன்றை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை செய்துள்ளது. தொழிற் பயிற்சி நிலையத்திற்கும் தொழில் நிறுவனங்களுக்கும் இடையே மற்றொரு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை நீங்கலாக, தொழிற்பயிற்சி நிலையங்கள் சிறந்த முறையில் இயங்குவதற்கும், தொழிலாளர் சந்தைக்கும், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கிடையே நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ளவும், நிறுவன மேலாண்மைக் குழு (Institute Managing Committee) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## திறன்மிகு மையங்கள்

11.8. இந்தியா முழுவதும், 500 தொழிற்பயிற்சி நிலையங்களைத் தரம் உயர்த்தி, ஆண்டுக்கு 100 வீதம் 5 ஆண்டுகளில், திறன்மிகு தொழிற்பயிற்சி மையங்களாக உருவாக்க, மத்திய அரசு ஒரு திட்டம் வகுத்துள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், புதிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தி, அதற்குத் தேவையான உள்ளமைப்பு வசதிகள், கருவிகள் மற்றும் பாடத் திட்டங்களை அளிப்பதாகும். இதற்கான செலவினத்தை, மத்திய மற்றும் மாநில அரசுகள், 75 : 25 என்ற விகிதத்தில் பங்களித்து செலவு மேற்கொள்கின்றன. தமிழ்நாட்டில், அம்பத்தூர், கோயம்புத்தூர், ஓசூர் மற்றும் திருச்சி ஆகிய நான்கு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள், ஏற்கெனவே திறன்மிகு தொழிற்பயிற்சி மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.160.00 இலட்சம் வீதம். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.640.00 இலட்சம் ஆகும். மேலும் கிண்டி (மகளிர்), மதுரை, திருநெல்வேலி (பேட்டை), கிண்டி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள 5 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை, திறன்மிகு மையங்களாகத் தரம் உயர்த்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. முதல் வருடமாகிய 2006-2007 ஆம் ஆண்டிற்கு, ரூ. 201.49 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## புதிய பயிற்சி மையங்கள்

11.9. அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவல்ல ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொழிற்சாலைகளில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறையை நீக்கும் வகையில், ஓசூர், மதுரை, திருவண்ணாமலை, திருநெல்வேலி மற்றும் தருமபுரியில் ரூபாய் 2 கோடி செலவில் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

## அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள்

11.10. தொழிற்சாலைகளுக்குத் தேவையான கைவினைஞர்களை உருவாக்கும் அரசின் முயற்சிக்கு, அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் உறுதுணையாய் உள்ளன. இந்த முயற்சியின் காரணமாக, தமிழ்நாட்டில் 56,684 பயிற்சியாளர் இருக்கை வசதிகள் கொண்ட 605 தனியார் தொழிற்பயிற்சி மையங்கள், தேசிய தொழில் நெறிக் கல்வி பயிற்சித் திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் 50 விழுக்காடு இருக்கைகள், கல்வித் தகுதி மற்றும் நடைமுறையிலுள்ள இட ஒதுக்கீடு சுழற்சியின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படுகின்றன.

## தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்

11.11. தொழிற்பழகுநர் சட்டம் 1961-ன் சட்டவிதிகளின்படி, மாநில தொழிற்பழகுநர் ஆலோசகரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழிற்பழகுநர்களுக்கு, தேர்வு செய்யப்பட்ட தொழிற்பிரிவுகளில், நிறுவனங்களால் பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். சீரான முறையில் தொழிற்பயிற்சியை இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தி, தொழிற் சாலைகளின் தேவைக்கேற்ப தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். அத்தொழில் நிறுவனங்களில் செய்முறைப் பயிற்சியும், அரசினர் தொடர் அறிவுரை மையங்களில், கருத்தியல் தொடர் அறிவுரை வகுப்பும் நடத்தப்படுகிறது. இத்தொழிற்பழகுநர் பயிற்சி காலம் 6 மாதங்கள் முதல் 4 வருடங்கள் வரை, தொழிற் பிரிவுகளைப் பொறுத்து அமைகிறது. இத்தொழிற் பழகுநர் சட்டத்தை அமலாக்கம் செய்ய, இத்துறையின்கீழ் 11 தொடர் அறிவுரை மையங்களும், 3 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் செயல்படுகின்றன. 31-12-2006 நிலவரப்படி, 16,161 தொழிற்பழகுநர்கள், 2,164 தொழில் நிறுவனங்களில் தொழிற்பழகுநர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

11.12. தொழிற்பழகுநர் பயிற்சியின்போது, தொழிற்பழகுநர்களுக்கு மாதந்தோறும் ரூ.820/- முதல் ரூ.1,230/- வரை உதவித்தொகையாக, சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களால் வழங்கப்படுகின்றது. பயிற்சியின் முடிவில், அகில இந்திய அளவில் தொழிற்தேர்வு ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதத்தில் இத்துறையால் நடத்தப்பட்டு, தேர்வு முடிவுகள் அரசின் இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. தேர்ச்சி பெற்ற தொழிற்பழகுநர்களுக்கு, தேசிய தொழிற்பழகுநர்



சான்றிதழ் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும், சுமார் 12,800 தொழிற் பழகுநர்கள் அகில இந்திய தொழிற் தேர்வில் கலந்து கொள்கின்றனர்.

11.13. தொழில் நிறுவனங்களால் புதிதாக அமர்த்தப்படும் தொழிற் பழகுநர்களுக்கு, அடிப்படை பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மேலும், கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் இடம் பெறாத தொழிற் பிரிவுகளுக்கான அடிப்படைப் பயிற்சி, தொழிற்பழகுநர் திட்டத்தின்கீழ் உள்ள அடிப்படைப் பயிற்சி மையங்களாகிய, அம்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டையில் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## தொழிற்பள்ளிகள்

11.14. தமிழ்நாட்டில், 75,480 இருக்கைகள் கொண்ட 753 தொழிற் பள்ளிகள் இயங்குகின்றன. இத்தொழிற்பள்ளிகளில், 60 நீண்ட காலத் தொழிற் பிரிவுகளையும், 50 குறுகிய கால தொழிற் பிரிவுகளையும் உள்ளடக்கிய 110 தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. தொழிற் பள்ளிகள் துவக்கப்பட்டதன் முக்கிய நோக்கம், 8 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு படித்த நகர மற்றும் கிராமப்புற ஏழை மாணவ/ மாணவியர், ஆதாவற்ற மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு தொழில் நெறிப் பயிற்சி அளிப்பதாகும். இத்தொழிற் பள்ளிகளில், உணவு தயாரித்தல், தையற்கலை, கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள், அழகுக் கலை மற்றும் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம், 45 நாட்கள் முதல் 3 ஆண்டுகள் வரை ஆகும். குறைந்தபட்சக் கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு ஆகும். ஜூலை மாதத்தில், இப்பயிற்சியில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இப்பயிற்சியாளர்களுக்கு, மாநில அளவில் ஆண்டுதோறும் ஜூன் மாதம் தேர்வு நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில அரசால் சான்று வழங்கப்படுகின்றது. 753 தொழிற் பள்ளிகளுள், 46 பள்ளிகள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஒரு கோடி மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

## ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடியினர் நலத் திட்டம்

11.15. விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் பழங்குடியினருக்கென்று, சிறு தொழில் பயிற்சி நிலையம் ஒன்று உள்ளது. ஆதி திராவிடர்களுக்கென்று கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் சிறு தொழில் பயிற்சி நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது. வேலை வாய்ப்புக்

[2007 ஏப்ரல் 19

கிடைக்கக்கூடிய பல்வேறு தொழிற் பிரிவுகளில் தொழிற்பயிற்சி வழங்கி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக, இத்திட்டம் துவங்கப்பட்டது. ஒவ்வொரு நிலையத்திலும், மூன்று தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

11.16. இதைத் தவிர, மற்ற அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும், 18 விழுக்காடு இருக்கைகள் ஆதி திராவிட வகுப்பினருக்காகவும், 1 விழுக்காடு இருக்கைகள் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## மின்கம்பி உதவியாளர் தகுதிகாண் தேர்வு

11.17. மின்சார ஒப்பந்ததாரரிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் குறைந்தது 5 வருடம் பணியாற்றிய முன் அனுபவத்துடன் 21 வயதை அடைந்தவர்கள் இத்தேர்வுக்குத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்தேர்வு, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு, வெற்றி பெற்றோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இத்தேர்வு 2006 ஆம் ஆண்டு கடைசியாக நடத்தப்பட்டது.

## கைவினைஞர்களுக்கு சான்றிதழ் வழங்குதல்

11.18. குழாய் பொருத்துநர், கட்டடம் கட்டுபவர், சமையல் கலைஞர் ஆகிய துறைகளில் தொழில் செய்து மூன்று ஆண்டுகள் அனுபவம் மற்றும் 21 வயது நிரம்பிய கைவினைஞர்களுக்கு, இரண்டாண்டுகளுக்கொரு முறை தேர்வு நடத்தி, அரசு சான்றிதழ் வழங்க, அரசாணை (நிலை) எண் 108, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 6-9-2006-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## அகில இந்திய திறனாய்வுத் தேர்வு

11.19. பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களின் போட்டியிடும் திறமையை வளர்க்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய திறனாய்வுப் போட்டிகள், 14 தொழிற்பிரிவுகளில் நடத்தப்பட்டு, ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் வெற்றி பெறும் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும், ரூ.10,000/- ரொக்கத் தொகையும், நற்சான்றிதழும், மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன. இதுவரை முடிவுகள் அறிவிக்கப்பட்ட 41 அகில இந்திய திறனாய்வுப் போட்டிகளில், தமிழ்நாடு இணையற்ற சாதனை புரிந்து, "சிறந்த மாநிலம்" என்ற பெருமையை 20 முறை பெற்று "இந்தியக் குடியரசுத் தலைவர் சுழல் கேடயத்தை" வென்றுள்ளது.



2007 ஏப்ரல் 19]

## மாண்புமிகு முதலமைச்சர் விருது

11.20. அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன், மாநில அளவில், 18 தொழிற்பிரிவுகளில் திறனாய்வுப் போட்டிகள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு தொழிற்பிரிவிலும் தேர்ச்சி பெறும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு "மாண்புமிகு முதலமைச்சர்" விருதாக ரொக்கப் பரிசு ரூ.5,000/-மும், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றது. சிறந்த பயிற்சியாளரை உருவாக்கக் காரணமாக இருந்த பயிற்றுநர்களுக்கும் ரொக்கப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவது இடம் வகிக்கும் பயிற்சியாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

11.21. பயிற்சியாளர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சியளித்து, தனித்து விளங்கும் பயிற்றுநர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 10 பயிற்றுநர்கள் (பயிற்சி அலுவலர்-2, உதவிப் பயிற்சி அலுவலர் - 4, இளநிலைப் பயிற்சி அலுவலர்-4) மற்றும் இரு முதல்வர்கள் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.500/-க்கான கிசான் விகாஸ் பத்திரமும், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

## பயிற்றுநர்களுக்குப் பயிற்சி

11.22. மத்திய அரசினால் நடத்தப்படும் மத்திய பயிற்சி நிலையங்கள்/ மேம்பட்ட பயிற்சி நிலையங்கள் போன்ற பல்வேறு நிலையங்களுக்கு, பயிற்றுநர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும், 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் மத்திய பயிற்சி நிலையம்/ மேம்பட்ட பயிற்சி நிலையத்திற்கு, பயிற்சிக்காக அனுப்பப்பட்டு வருகின்றனர். இப்பயிற்சியின் காலம் ஓர் ஆண்டு ஆகும். இப்பயிற்சி, பயிற்றுநர்கள் தங்களது செயல்திறன் மற்றும் நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்த உதவுகின்றது. இளநிலைப்பயிற்சி அலுவலர் பதவியில் 5 வருட பணிக்காலம் முடித்தவர்களுக்கு, கிண்டி மத்திய பயிற்சி நிலையத்தில் "கற்பிக்கும் தத்துவம்" என்னும் பயிற்சி 3 மாத காலத்திற்கு அளிக்கப்படுகிறது.

[2007 ஏப்ரல் 19

11.23. பயிற்றுநர்கள் பயிற்சித் திட்டத்தின்கீழ், இளநிலைப் பயிற்சி அலுவலர், உதவிப் பயிற்சி அலுவலர்களுக்கு ஒலி, ஒளி சாதனங்களை உபயோகித்தல், வகுப்பறை மேலாண்மை, கல்வி கற்பிக்கும் நுணுக்கம் போன்றவற்றில் இரு வார காலப் பயிற்சி, அம்பத்தூர், அரசினர் தொழில் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. இந்த மறு பயிற்சி, அவர்களது கல்வி கற்பிக்கும் திறனை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. இப்பயிற்சி, தொழிற்பயிற்சி நிலையப் பயிற்சியாளர்களுக்கு ஒப்பற்ற பயிற்சி அளிப்பதற்கு உபயோகமாக உள்ளது.



2007 ஏப்ரல் 19]

## அத்தியாயம்-12

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

12.1. அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம், 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது 30-11-1978 அன்று பதிவு செய்யப்பட்டது. இந்நிறுவனம், முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதாகும்.

12.2. இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம், வேலை தேடும் இந்தியத் தொழிலாளர்கள், அயல் நாடுகளில் தகுந்த பணியமர்த்தங்களைப் பெற உதவி புரிவதாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும். வழங்கப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் ஆகும்.

12.3. இலாபம் ஈட்டும் நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். 01-04-2006 முதல் 31-03-2007 வரையிலான காலத்திற்கு, இந்நிறுவனத்தின் மொத்த இலாபம் ரூ.55.86 இலட்சமாகும். இந்நிறுவனம், தொடங்கப்பட்ட நாள் முதல் 31-03-2007 வரை, 6,068 பதிவுதாரர்களுக்கும், நடப்பு ஆண்டில் 68 மனுதாரர்களுக்கும் வெளிநாட்டில் வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தந்துள்ளது. பயன் பெற்றோர்களில் பெரும்பாலோர், முழுத் திறன்படைத்த அல்லது ஓரளவு திறன்படைத்த பணியாளர்களும் மற்றும் மருத்துவத் துறையைச் சார்ந்தோர்களும் ஆவர்.

12.4. தன் செயல்பாடுகளைப் பலமுனைப்படுத்தும் நோக்கில், இந்நிறுவனம் பின்வரும் பணிகளையும் செய்து வருகிறது:—

### பன்னாட்டு விமானப் பயணச் சீட்டு விற்பனை

12.5. இந்நிறுவனம், பன்னாட்டு விமானப் போக்குவரத்துக் கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. பன்னாட்டு விமானப் பயணச் சீட்டுகளைக் கையிருப்பில் வைத்துள்ள இந்நிறுவனம், வெளிநாட்டு விமானப் பயணச் சீட்டுகளைக் கணினிமூலம் பதிவு செய்யும் வசதியைப் பெற்றுள்ளது.

### வெளிநாடுவாழ் தமிழருக்கான சமூக காப்புறுதித் திட்டம்

12.6. இந்நிறுவனம், அயல்நாட்டில் வாழும் தமிழருக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றினை செயல்படுத்தி வருகிறது. ஒரு முறை மட்டுமே எளிய பிரிமியத் தொகை செலுத்துவதன்மூலம், காப்பீட்டாளரும் அவர்தம் குடும்பத்தினரும் விபத்து, மருத்துவம் ஆகிய

நேர்வுகளில் 5 ஆண்டுகளுக்குக் காப்பீடு பெற, இத்திட்டம் வகை செய்கிறது. 31-3-2007 நிலவரப்படி, 391 வெளிநாடுவாழ் தமிழர்கள் இத்திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து காப்பீட்டுறுதி பிரிமியத் தொகையாக ரூ.12.89 இலட்சம் பெறப்பட்டுள்ளது. அதன்மூலம், இந்நிறுவனம், ரூ. 2.68 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

## மலேசிய நாட்டுக்கு வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கான அறிமுகப் பயிற்சி

12.7. மலேசிய நாட்டுக்கு வேலைக்குச் செல்லும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள், மலாய் மொழி, ஆங்கில மொழி, மலேசிய கலாச்சாரம் மற்றும் மலேசிய நாட்டுச் சட்டம் ஆகியனவற்றில் அடிப்படை அறிவினைப் பெறுவதற்காக, கட்டாய அறிமுகப் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும். இதற்கான வகுப்புகளை நடத்துவதற்கு, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை ஒருங்கிணைப்பாளராகவும், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தை பயிற்சி மையமாகவும், தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. பயிற்சியின் முடிவில், மலேசிய பயிற்சி அளிப்பவர் தேர்வினை நடத்தி தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு, மலேசிய அரசு தகுதிச் சான்றினை வழங்குகின்றனர். இந்தச் சான்று தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு விசா வேண்டி விண்ணப்பம் செய்ய, வேலையளிப்போருக்கு உதவியாகின்றது. 31-3-2007 அன்று உள்ளபடி, பயிற்சி பெற்ற 4,378 பேர்களுள், 4,231 பேருக்கு தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## அயல் நாட்டு செவிலிய ஆணையம் (CGFNS/IELTS) நடத்தும் தேர்வில் பங்குபெறும் செவிலியர்க்குப் பயிற்சி வகுப்பு

12.8. இந்நிறுவனம், இந்திய செவிலியர், அமெரிக்கா மற்றும் மேலைநாடுகளில் வேலைவாய்ப்புப் பெறத் தகுதியடைவதற்காக, அயல்நாட்டு செவிலியர் பட்டதாரிகளுக்கான ஆணையம் (Commission on Graduates of Foreign Nursing School) மற்றும் பன்னாட்டு ஆங்கில மொழித் தேர்வு அமைப்பு (International English Language Testing System) நடத்தும் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. நடப்பாண்டில் நடத்தப்பட்ட 45 நாள் பயிற்சியில், அயல்நாட்டு செவிலியர் பட்டதாரிகளுக்கான ஆணையம் நடத்தும் தேர்வில் கலந்து கொள்ள, 39 செவிலியர் பயிற்சி அளிக்கப்பட்டனர். பன்னாட்டு ஆங்கில மொழித் தேர்வு அமைப்பு நடத்தும் தேர்வுக்காக 3 செவிலியருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.



# அத்தியாயம் - 13

## 2007–2008 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட புதிய திட்டங்கள்

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தொழிலாளர் துறையின் மின் ஆளுகை முறையை ஏற்படுத்தல் மற்றும் கணினிமயமாக்கல் | 21.40 |
| 2. | 6 மண்டல தொழிலாளர் துணை ஆணையாளர் அலுவலகங்களுக்கு நகலெடுக்கும் இயந்திரங்கள் வழங்குதல். | 3.30 |
| 3. | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி 10 வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறைகலன்கள் வழங்குதல் | 2.50 |
| 4. | 5 வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதிகள் அளித்தல் | 1.55 |
| 5. | 18 வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு ஒலிபெருக்கிகள் வாங்குதல் | 1.62 |
| 6. | திருச்சி மற்றும் சென்னை மண்டல துணை இயக்குநர்களுக்கென வாகனங்கள் வாங்குதல் | 8.10 |
| 7. | வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கழிப்பிட வசதி அமைத்தல் | 10.00 |
| 8. | அரசினர் தொழிற்பயிற்சிப் பிரிவு, அடிப்படைப் பயிற்சி மையம் மற்றும் மாநில எந்திரப் பராமரிப்பு பணிமனை ஆகியவற்றுக்கு தொலைபேசி வசதி அளித்தல் | 0.44 |
| 9. | தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய தொழில் நுட்ப பாடப் பிரிவுகள் தொடங்குதல் | 111.28 |
| 10. | ஆணையரகத்திற்கு அதிகத் திறன்வாய்ந்த ஒளிநகலி எந்திரங்கள் வாங்குதல் | 1.05 |
| 11. | அரசுத் தொழில் பயிற்சி நிலையங்களைச் சீரமைத்தல் | 25.00 |
| 12. | தொழிற்சாலைகள் ஆய்வகம் விருதுநகர், தஞ்சாவூர் 2—வது வட்டம் / திருநெல்வேலி, அரியலூர் 1—வது வட்டம்/ ஈரோடு 1—வது வட்டம் மற்றும் சென்னை 2,3,4,5—வது வட்டங்கள் ஆகியவற்றிலுள்ள தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் அலுவலகங்களுக்கு 9 கணினிகள் வாங்குதல் | 6.03 |

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 13 | தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் கடலூரில் அமைந்துள்ள 30 ஆண்டு கால பழையக் குடியிருப்புகளை உடனடியாக பழுதுபார்த்து சீரமைத்தல் | 4.90 |
| 14 | விருதுநகர், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரின் அலுவலகத்திற்குப் புதிய வாகனம் ஒன்று வாங்குதல். | 4.07 |
| 15 | பின்வரும் புதிய திட்டத்திற்கும் ஏற்பளிக்கப்பட்டது. திருக்குவளை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுதல் | 20.00 |
| | மொத்தம் | 221.24 |



# இணைப்பு II

*(95ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 17 – கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

### 1. முன்னுரை

கைத்தறி, விசைத்தறி, நூற்புத் தொழில், பதனிடுதல், ஆடை மற்றும் பின்னலாடைத் தொழில் ஆகியன துணித் தொழிலின் பல்வேறு பிரிவுகளாகும். தமிழ்நாட்டின் கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பெருமளவு வேலைவாய்ப்பு வழங்குவதில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிக முக்கியமானத் தொழிலாக துணித் தொழில் விளங்குகிறது. மாநில பொருளாதாரத்தில் வருவாய் ஈட்டுவதற்கு துணித் தொழில் உதவுவதுடன் ஏற்றுமதியின்மூலம் கணிசமான அந்நியச் செலாவணியையும் ஈட்டுகிறது.

கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவும், அனைத்துப் பிரிவுகளின் நலனுக்காகவும் குறிப்பாக, நெசவாளர்கள் மற்றும் ஜவுளித் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடுவதும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முதன்மை நோக்கமாகும்.

மாநிலத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், துறையின்கீழ் இயங்கும் இதர கூட்டுறவு அமைப்புகளுக்கும் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் செயற்பதிவாளராக செயல்படுகிறார். இதற்காக தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் 1988 ஆம் வருடத்திய விதிகளின்கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் “மாநில துணிநூல் அதிகார ஆணைக் குழு”வாகச் செயல்படுவதன் வாயிலாக நூற்பாலைகள், துணிநூல் ஆலைகள், பதனிடும் ஆலைகள், பின்னலாடை, கைத்தறி மற்றும் விசைத்தறிப் பிரிவுகள் சீராக செயல்படத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொதுவான பொறுப்பும் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையருக்கு உள்ளது. இத்தொழிலின் அனைத்துப் பிரிவுகளுக்கும்

[2007 ஏப்ரல் 19

தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதும், நூல் மற்றும் துணியினை நியாயமான விலையில் உற்பத்தி செய்வதுடன், உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளின் விற்பனையின்ன மேம்படுத்துவதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதும் இத்துறையின் பொறுப்புகளாகும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல் மற்றும் இதர மூலப்பொருட்களை விநியோகிப்பதும், உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமும், லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள், சங்கத்தின் சொந்த காட்சியறைகள் மற்றும் மாநிலத்திலுள்ள மற்றும் மாநிலத்திற்கு வெளியே உள்ள இதர விற்பனை நிலையங்கள்மூலமும் விற்பனை செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தும் தனிப்பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது.

நெசவாளர்களின் சமூக, பொருளாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களின் நலனுக்கென உருவாக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் 18 சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள்/ உதவி இயக்குநர்கள் மூலமாக செயல்படுத்தும் பணியினையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை மேற்கொண்டு வருகிறது.

இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:-

* 1,117 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
* 127 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
* 18 கூட்டுறவு நூற்பாலைகள் (தற்போது 5 கூட்டுறவு நூற்பாலைகள் அதாவது, அண்ணா (தேனி), பாரதி (தூத்துக்குடி), புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி ஆகிய கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன)
* தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ-ஆப்டெக்ஸ்), சென்னை
* தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்
* தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை
* தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு
* தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்
* தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், (டான்ஸ்பின்) சென்னை



2007 ஏப்ரல் 19]

## 2. துணிநூல் தொழிலின் பல்வேறு பிரிவுகளின் தற்போதைய நிலை

### 2.01 கைத்தறித் தொழில்

1995-1996 ஆம் வருடத்திய கைத்தறி கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் மொத்தமுள்ள 34.86 இலட்சம் கைத்தறிகளில் தமிழ்நாட்டில் 4.13 இலட்சம் கைத்தறிகள், 6.08 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 4.13 இலட்சம் கைத்தறிகளில், 2.19 இலட்சம் கைத்தறிகள், 1,117 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும், எஞ்சியுள்ள 1.94 இலட்சம் தறிகள் கூட்டுறவு அல்லாத அமைப்பின்கீழும் உள்ளன.

கைத்தறி நெசவாளர்களுக்கென மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள் அனைத்தும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நெசவாளர்களைச் சென்றடைகின்றன. பெரும்பாலான கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமம் மற்றும் புறநகர் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் 2005-2006 ஆம் ஆண்டில் ரூ. 1,800 கோடி மதிப்பிற்கு கைத்தறித் துணி விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் ரூ. 719.63 கோடி மதிப்பிலான கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் சராசரியாக ஆண்டொன்றுக்கு ரூ.875 கோடி மதிப்பிலான கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவற்றில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் ரூ. 264.36 கோடி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

சந்தையில் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் எளிதில் விற்பனையாகக் கூடிய இரகங்களையும் / ஏற்றுமதி இரகங்களையும் உற்பத்தி செய்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை இத்துறை ஊக்குவித்து வருவதோடு, இதன்மூலம் விற்பனையை அதிகரித்து இலாபம் ஈட்டும் வகையில் தகுந்த செயல்திட்டங்களையும் சங்கங்களுக்கு அளித்துள்ளது. மேலும் இரக மாற்றம், வடிவமைப்பு மேம்பாடு போன்ற நடவடிக்கைகளிலும் சங்கங்களை ஈடுபடுத்த துறை தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

[2007 ஏப்ரல் 19

துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலமாக 2005-2006 ஆம் ஆண்டில் 760 ஆக இருந்த இலாபம் ஈட்டும் சங்கங்களின் எண்ணிக்கை 2006-2007 ஆம் ஆண்டில் 850 ஆக உயர்ந்துள்ளது.

**2.02 விசைத்தறித் தொழில்**

இந்தியாவில் 19.03 இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் உள்ளன. அவற்றில் தமிழ்நாட்டில் 3.66 இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் உள்ளன. அவற்றில் 33,504 விசைத்தறிகள் தமிழ்நாட்டில் உள்ள 127 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்பட்டு வருகின்றன. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலும் இலவச சீருடை வழங்கும் திட்டம் மற்றும் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்குத் தேவைப்படும் துணி வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் விசைத்தறித் தொழில் மூலம் 9.14 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள விசைத்தறிகளின் உற்பத்தி பெரும்பாலும் பருத்தி இரகத்தினைச் சார்ந்ததாகும். மொத்தமுள்ள 3.66 இலட்சம் விசைத்தறிகளில், சுமார் 5,000 விசைத்தறிகள் நவீன தொழில்நுட்பம் வாய்ந்தவையாகும்.

2006-2007 ஆம் ஆண்டில் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் ரூ. 159.50 கோடி மதிப்புள்ள 1,041 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ. 159.28 கோடி மதிப்புள்ள விசைத்தறி துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**2.03 துணித் தொழில்**

**(i) துணிநூல் ஆலைகள்**

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு துணிநூல் ஆலைகள் முதுகெலும்பாக உள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவை தனியாரைச் சார்ந்ததாகவும், பருத்தி நூற்பாலைகளாகவும் உள்ளன. இந்தியாவில் உள்ள 3,039 பெரிய, நடுத்தர மற்றும் சிறு துணிநூல் ஆலைகளில் 1,850 ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. இதில், 18 கூட்டுறவு நூற்பாலைகள், 8 தேசிய ஜவுளிக்கழக ஆலைகள் மற்றும் 20 கூட்டு ஆலைகளும் அடங்கும். தமிழ்நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளானது 17.92 மில்லியன் கதிர்களுடன் 2.42 இலட்சம் தொழிலாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு சுமார் 1,261.98 மில்லியன் கிலோ நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இது நாட்டின் மொத்த நூல் உற்பத்தியில் 38 விழுக்காடு ஆகும்.



2007 ஏப்ரல் 19]

**(ii) கூட்டுறவு நூற்பாலைகள்**

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான தரமான சிட்டா நூலினையும், விசைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான கூம்பு நூலினையும் நியாயமான விலையில் தங்குதடையின்றி வழங்கும் நோக்கத்திற்காகவும் 1958 முதல் 1985 வரை 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.70 இலட்சம் கதிர் திறனுடன் நிறுவப்பட்டன.

தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளும், குவிந்த நட்டத்தில் உள்ளன. அவற்றில் 13 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்காமலும், கீழ்க்கண்ட 5 கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது இயங்கிக் கொண்டும் வருகின்றன :

1. பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம், (தூத்துக்குடி மாவட்டம்).
2. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, (தேனி மாவட்டம்).
3. தருமபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை, (கிருஷ்ணகிரி மாவட்டம்).
4. புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி
5. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி.

கைத்தறி நெசவாளர்களின் சிட்டா நூல் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் மேற்கண்ட 5 கூட்டுறவு நூற்பாலைகள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

தற்போது இயங்கி வரும் 5 கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, உபயோகிப்புத் திறனை அதிகரித்தல், உற்பத்தியினை மேம்படுத்துதல், மூலப்பொருட்களின் விலையைக் குறைத்தல் போன்ற நிர்வாகச் சீர்திருத்தங்களை துறை மேற்கொண்டது. மேற்காண் நடவடிக்கைகளின் விளைவாக, செயல்பட்டுவரும் அண்ணா, பாரதி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தருமபுரி ஆகிய 5 கூட்டுறவு நூற்பாலைகளும் செப்டம்பர் 2006 முதல் இலாபத்தில் இயங்கி வருகின்றன.

### 2.04 ஆடை உற்பத்தித் தொழில்

ஜவுளித் தொழிலில் வேகமாக வளர்ந்து வரும் தொழிலாக ஆடை உற்பத்தித் தொழில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் பெரும்பாலான ஆடை உற்பத்தி அலகுகள் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. மாநிலத்தில் சுமார் 600 ஆடை உற்பத்தி நிலையங்கள் அமைந்துள்ளன. இவை சுமார் 2 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் ஆடைத் தொழில் ரூ. 2,500 கோடி அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றது.

### 2.05 பின்னலாடைத் தொழில்

இந்தியாவில் சுமார் 6,000 பின்னலாடை உற்பத்தி ஆலைகள் உள்ளன. அவற்றில் 3,000 ஆலைகள் கோவை மாவட்டத்திலுள்ள திருப்பூரில் அமைந்துள்ளன. இவ்வாலைகள் சுமார் 3 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. பின்னலாடைத் தொழிலை பொறுத்தவரையில் திருப்பூரில் உற்பத்தி செய்யப்படும் பின்னலாடை துணிகளின் மதிப்பு ரூ. 10,250 கோடி ஆகும்.

### 2.06 பதனிடும் தொழில்

துணித்தொழிலில் பதனிடும் பணி முக்கியமான மதிப்புக்கூட்டும் அங்கமாக உள்ளது. இந்தியாவில் 10,397 கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் 2,614 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. மேலும், இந்தியாவில் உள்ள மின் விசையால் இயக்கப்படும் 2,510 பதனிடும் நிறுவனங்களில், 985 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. மின் விசையால் இயக்கப்படும் 985 பதனிடும் நிறுவனங்களில், 713 நிறுவனங்கள் திருப்பூர் பகுதியில் அமைந்துள்ளன.

மாநிலத்தில் பதனிடும் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, கடலூரில் துணிநூல் பதனிடும் பூங்கா அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

## 3. 2006–07 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் 2007–08 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்கள்

### 3.01 இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டம்

2006-07 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, ஏழை மக்களுக்கு இலவச சேலைகள் மற்றும்



வேட்டிகள் வழங்கும் திட்டம் 2006-07 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. விநியோகத்திற்குத் தேவைப்படும் சேலைகள் மற்றும் வேட்டிகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, விநியோகத்திற்காக வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டன. விநியோகத்திற்குத் தேவையான மொத்த துணிகளும் துறையால் உரிய நேரத்தில் வழங்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், வழக்கமாக ஜனவரி 14 ஆம் தேதி அன்று விநியோகத்தினை துவக்குவதற்குப் பதிலாக ஜனவரி முதல் தேதியில் முதன் முறையாக விநியோகம் துவக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி 158.91 இலட்சம் சேலைகளும், 162.21 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டன.

இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தினை 2007-08 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளதோடு, 2008 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகை விநியோகத்திற்குத் தேவைப்படும் 164 இலட்சம் சேலைகளும், 164 இலட்சம் வேட்டிகளும் உற்பத்தி செய்ய ரூ. 256 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டம் சுமார் 50,000 கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருவதோடு, சுமார் 3.28 கோடி ஏழை மக்களின் துணித் தேவையினையும் பூர்த்தி செய்கின்றது.

### 3.02 பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம்

2006-07 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம் 2006-07 ஆம் கல்வியாண்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ரூ.45.61 கோடி மதிப்புள்ள 137.16 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகத்திற்காக சமூக நலத் துறைக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் 58,58,142 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

இது தவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைகளுக்குத் தேவையான 22.36 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு, 2006-07 ஆம் கல்வி ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை 2007-08 ஆம் ஆண்டு கல்வியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளதோடு, சீருடைத் துணிகள் உற்பத்தி செய்வதற்கென ரூ.45.61 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. மொத்தத் தேவையான 159.52 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு, அதாவது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சமூக நலத் துறை, மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைகளுக்கு வழங்கப்படும்.

## 3.03 கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல்

2006-07 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதத்திற்கு ஒருமுறை 100 யூனிட்டுகள் வரையிலும், விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதத்திற்கு ஒருமுறை 500 யூனிட்டுகள் வரையிலும் 1-8-2006 முதல் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் 1,35,440 விண்ணப்பங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. இத்திட்டத்தின் கீழ் 31-3-2007 தேதியில் 1,10,537 கைத்தறி நெசவாளர்களின் வீடுகளும், விசைத்தறி தொழிலாளர்களின் 94,153 மின் இணைப்புகளும் பயன்பெற்று வருகின்றன. கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்கென 2006-07 ஆம் ஆண்டுக்கு அரசு ரூ.62.68 கோடி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினை 2007-08 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1.50 இலட்சம் கைத்தறி நெசவாளர்களின் வீடுகளும், 1.00 இலட்சம் விசைத்தறி தொழிலாளர்களின் மின் இணைப்புகளும் பயன்பெறும் அளவிற்கு பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த 2007-08 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.78.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.04 தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா

கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்கென மைய அரசால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த விரிவான இத்திட்டமானது 1-4-2000



முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியினை மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் வழங்குகின்றன.

இத்திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகள், வடிவமைப்பு மேம்பாடு, விளம்பரம், கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல் போன்ற பல்வேறு இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

2006-07 ஆம் ஆண்டில் அரசு முந்தைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை ரூ.907.78 இலட்சத்தை (மைய அரசு பங்கு ரூ. 535.37 இலட்சம் + மாநில அரசு பங்கு ரூ. 372.41 இலட்சம்) ஒப்பளிப்பு செய்துள்ளது.

2007-08 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.1,525.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.05 தள்ளுபடி மானியத் திட்டம்

கைத்தறித் துணிகளின் விற்பனையினை மேம்படுத்தும் பொருட்டு அரசு தள்ளுபடி மானியம் வழங்கி வருகின்றது. இத்திட்டம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கைத்தறித் துணி விற்பனைக்கு உதவிகரமாக உள்ளது. இத்திட்டம் ஆலை மற்றும் விசைத்தறித் தொழில்களால் ஏற்படும் கடுமையான போட்டியிலிருந்து கைத்தறித் தொழிலை காப்பாற்ற வழிவகுக்கின்றது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது பருத்தி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.100/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை, அதே போன்று பட்டுத் துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.200/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை, என்ற வரையறைக்குட்பட்டுத் தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது. மாநில அரசின் கொள்கையின்படி, தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் திட்டத்தின் விற்பனை ஊக்குவிப்பு இனத்தின்கீழ் மத்திய அரசினால் வழங்கப்படும் தொகையினை விட கூடுதலாக ஏற்படும் செலவினத்தினை மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது.

2004-05 மற்றும் 2005-06 ஆம் ஆண்டுகளுக்கான தள்ளுபடி மானிய நிலுவைத் தொகைகளை வழங்கவேண்டும் என்ற நோக்கத்துடன்,

2006-07 ஆம் ஆண்டுக்கு ரூ. 102 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீட்டினை திருத்திய மதிப்பீட்டில் ரூ. 208.19 கோடியாக அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், 2006-07 ஆம் ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு தள்ளுபடி மானியமாக மொத்தம் ரூ. 208.19 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2007-08 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.118 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.06 கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் / மைய சிக்கன நிதித் திட்டம்

நெசவாளர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினை 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு முதல் மைய அரசும் இத்திட்டத்தில் பங்கு பெற்று மைய சிக்கனத் திட்டத்தின்கீழ் மைய அரசின் பங்கினை வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்கு சந்தாவாக செலுத்துவார்கள். நெசவாளர் ஈட்டும் கூலியில் மாநில அரசு தனது பங்காக ரூபாய்க்கு 4 பைசாவும், மைய அரசு நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 4 பைசாவும் மைய சிக்கன நிதித் திட்டத்தின்கீழ் வழங்கி வருகின்றது. அதனடிப்படையில், மொத்த சந்தாத் தொகை 16 பைசாவும் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு, இதற்கு மாநில அரசு 9.5 விழுக்காடு வட்டி வழங்குகிறது. இவ்வாறு பெறப்படும் 9.5 விழுக்காடு வட்டியில், 6.5 விழுக்காடு நெசவாளர்கள் கணக்கில் வரவு வைக்கப்படுவதோடு, எஞ்சிய 3 விழுக்காடு வட்டித்தொகை நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டம் மற்றும் குடும்ப ஓய்வூதிய திட்டம் போன்ற கைத்தறி நெசவாளர்களின் நலத் திட்டங்களை செயல்படுத்தவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 31-03-2007 ஆம் தேதியில் 76,024 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் 2006-07 ஆம் ஆண்டில் மாநில அரசு பங்காக ரூ.371.55 இலட்சம் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளதோடு, அதற்கு இணையாக மைய அரசு பங்காக ரூ.371.55 இலட்சம் மைய அரசால் வழங்கப்பட்டுள்ளது.





இதற்கென 2007-08 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.800 இலட்சம் (மைய அரசு ரூ.400 இலட்சம் + மாநில அரசு ரூ. 400 இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.07 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்காக மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு 01-04-1997 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து 60 வயது பூர்த்தியான நெசவாளர்கள் மாதந்தோறும் ரூ.200/- வீதம் முதியோர் ஓய்வூதியமாக பெற தகுதிப் பெறுகின்றனர். சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 சதவிகித வட்டி தொகையிலிருந்து முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 13,083 கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்குவதெற்கென 2006-07 ஆம் ஆண்டில் மாநில அரசு ரூ.329 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

முதியோர் ஓய்வூதியம் பெறும் கைத்தறி நெசவாளர்களின் நீண்டநாள் கோரிக்கைக்கிணங்க, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையினை 2007-08 ஆம் ஆண்டு முதல் ரூ. 200/-லிருந்து ரூ.400/-ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளதோடு, 2007-08 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.289 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.08 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

நெசவாளர்களுக்கென "தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்" என்ற நலத் திட்டத்தினை 01-01-1992 முதல் அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் உள்ள உறுப்பினர் 60 வயதிற்கு முன் இறக்க நேரிட்டால் அவரது வாரிசுக்கு நெசவாளர் இறந்த தேதியிலிருந்து மாதம் ரூ.350/- வீதம் 10 ஆண்டுகளுக்குக் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. குடும்ப ஓய்வூதியத் தொகையானது சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 சதவிகித வட்டித் தொகையிலிருந்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 919 கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றன.

[2007 ஏப்ரல் 19

குடும்ப ஓய்வூதியத் தொகை வழங்குவதெற்கென 2006-07 ஆம் ஆண்டில் மாநில அரசு ரூ.39.79 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டம் 2007-08 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.47 இலட்சம் செலவினம் ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**3.09 மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா (கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்)**

"மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா" என்ற புதிய காப்பீட்டுத் திட்டம் 2004-05 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகாத்மா காந்தி புங்கர் பீமா திட்டத்தின் கீழ் ஒரு நெசவாளருக்கு ஒரு வருடத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த காப்பீட்டுக் கட்டணம் ரூ330/-ல், ரூ.150/-ஐ மைய அரசும், ரூ.100/-ஐ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமும் மற்றும் ரூ.80/-ஐ நெசவாளர் சார்பாக மாநில அரசும் செலுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள நெசவாளர்கள் சார்பில் காப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்தும் சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

"மகாத்மா காந்தி புங்கர் பீமா" திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை விவரங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| இயற்கை மரணம் | ரூ. 50,000/- |
| விபத்தினால் ஏற்படும் மரணம் | ரூ. 80,000/- |
| விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் | ரூ. 50,000/- |
| விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் | ரூ. 25,000/- |

கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மட்டுமே இதுவரை செயல்படுத்தப்பட்டு வந்த காப்பீட்டுத் திட்டமான "மகாத்மா காந்தி புங்கர் பீமா" திட்டத்தின்கீழ் கூட்டுறவு அமைப்பில் இல்லாத அனைத்து கைத்தறி நெசவாளர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசு 2006-07 ஆம் ஆண்டு முதல் தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளது. 2006-07 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி புங்கர் பீமா திட்டத்தின்கீழ் 75,000 நெசவாளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.



2007 ஏப்ரல் 19]

தற்போது 1,92,220 கைத்தறி நெசவாளர்கள் (கூட்டுறவு அமைப்பில் = 1,25,054 மற்றும் கூட்டுறவு அமைப்பில் இல்லாதவர்கள் = 67,166) இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு, மேற்படி நெசவாளர்கள் சார்பில் காப்பீட்டுக் கட்டணமாக ரூ.95,16,600 இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு மாநில அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2007-08 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.10 நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்**

கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு செறிவுத் திட்டத்திற்குப் பதிலாக மைய அரசு நெசவாளர்களுக்கான புதிய நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தினை 2005-2006 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் ஐசிஐசிஐ லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டுக் கட்டணத் தொகையாக ஐசிஐசிஐ லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனத்திற்கு ஒரு நெசவாளருக்காக ஆண்டொன்றுக்கு ரூ.1000/- செலுத்தப்படவேண்டும். அதில், மத்திய அரசுப் பங்காக ரூ. 800/-ம், நெசவாளர்கள் பங்காக ரூ.200/-ம் செலுத்தப்பட வேண்டும். தமிழ்நாட்டில் நெசவாளர்கள் பங்காக செலுத்தப்படவேண்டிய காப்பீட்டுக் கட்டணத் தொகை ரூ.200/-ஐ மாநில அரசே செலுத்தி வருகிறது.

நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளர் குடும்பத்தில் 4 நபர்களுக்கு அதாவது கணவன், மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுக்கு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணம் ஏதும் செலுத்தாமல் ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.15,000/- வரை மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மட்டுமே இதுவரை செயல்படுத்தப்பட்டு வந்த நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் கூட்டுறவு அமைப்பில் இல்லாத அனைத்து கைத்தறி நெசவாளர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் 2006-07 ஆம் ஆண்டு முதல் தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கும் இத்திட்டத்தினை அரசு விரிவுபடுத்தியுள்ளது. 2006-07 ஆம் ஆண்டில் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 68,441 தனியார் நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

[2007 ஏப்ரல் 19

தற்போது 2,00,000 கைத்தறி நெசவாளர்கள் (கூட்டுறவு அமைப்பில் = 1,31,559 மற்றும் கூட்டுறவு அமைப்பில் இல்லாதவர்கள் = 68,441) இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, மேற்படி நெசவாளர்கள் சார்பில் காப்பீட்டுக் கட்டணமாக ரூ.4.00 கோடி ஐசிஐசிஐ லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனத்திற்கு மாநில அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 73,582 கோரிக்கைகள் ஐசிஐசிஐ லோம்பார்டு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, அவற்றில் 42,419 கோரிக்கைகளுக்கான தொகை ரூ.7.45 கோடி வழங்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள ரூ.2.80 கோடி அளவிலான 31,163 கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன.

இத்திட்டத்திற்கென 2007-08 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் ரூ.500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.11 தறிக்கூடத்துடன்கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம்

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்குத் தறிக்கூடத்துடன்கூடிய வீடுகள் கட்டும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு முதல் மைய அரசும் இத்திட்டத்தின்கீழ் பங்கு பெற்று வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் வீடு ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

(ரூபாயில்)

| ஆதாரம் | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| மாநில அரசு மானியம் | 7,000 | 7,000 |
| மைய அரசு மானியம் | 18,000 | 20,000 |
| ஹட்கோ கடன் | 40,000 | 40,000 |
| பயனாளியின் பங்கு | 3,000 | 5,000 |
| **மொத்தம்** | **68,000** | **72,000** |

2006-07 ஆம் ஆண்டில் அரசு முந்தைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை ரூ.26.96 இலட்சம் (மைய அரசு பங்கு ரூ.19.50 இலட்சம் + மாநில அரசு பங்கு ரூ.7.46 இலட்சம்) ஒப்பளிப்பு செய்துள்ளது.



2007 ஏப்ரல் 19]

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கென 2007-08 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### 3.12 தறிக்கூடம் அமைக்கும் திட்டம்

நெசவாளர்களுக்கு நல்ல பணிச் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் மைய அரசு நெசவாளர்களின் வீடுகளுக்கு தறிக்கூடம் கட்ட நிதியுதவி வழங்குகிறது. தறிக்கூடம் அமைக்கும் திட்டமானது 1997-98 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டத்தின் கீழ் ஒரு தறிக்கூடம் அமைப்பதற்கு தற்போது வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் கீழ்வருமாறு:—

(ரூபாயில்)

| ஆதாரம் | கிராமப்புற தறிக்கூடம் | நகர்ப்புற தறிக்கூடம் |
|---|---|---|
| மைய அரசின் மானியம் | 7,000 | 10,000 |
| பயனாளியின் பங்கு | 2,000 | 4,000 |
| **மொத்தம்** | **9,000** | **14,000** |

2006-07 ஆம் ஆண்டில் அரசு முந்தைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை ரூ.489.48 இலட்சம் (மைய அரசு பங்கு மட்டும்) ஒப்பளிப்பு செய்துள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த 2007-08 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.660 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.13 டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர்கள் நலவாழ்வு அறக்கட்டளையின்கீழ் உதவித்தொகை வழங்குதல்

நெசவாளர்களின் குழந்தைகளை மேற்படிப்பு பயில ஊக்குவிப்பதற்காக அவர்களின் மேற்படிப்புக்காக உதவித் தொகை வழங்கும் பொருட்டு "டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நலவாழ்வு அறக்கட்டளை" 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகியவற்றின் பொதுநிதி மற்றும்

பொதுநல நிதியிலிருந்து பெறப்பட்ட நன்கொடைகளைக் கொண்டு இந்த அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. மேற்படி நன்கொடைத் தொகை, நிரந்தர வைப்பு நிதியில் இட்டு வைக்கப்பட்டு, அதிலிருந்து பெறப்படும் வட்டியிலிருந்து உதவித் தொகைக்கான செலவினம் மேற்கொள்ளப்படுகிறது. தற்போது, 29 பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கும், இந்திய ஆட்சிப் பணி / இந்திய காவல் பணி தேர்விற்காக தனிப் பயிற்சி பயில்பவர்களில் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நலவாழ்வு அறக்கட்டளை மூலம் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையினை அனைத்துப் பாடப் பிரிவுகளுக்கும் ஏற்கெனவே வழங்கப்படும் தொகையுடன் ரூ.500/- உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுவரும் கல்வி உதவித் தொகையின் விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண் | பாடத் திட்டம் | ஏற்கெனவே வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ. | மாற்றி அமைக்கப்பட்ட உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மருத்துவ பட்டப் படிப்பு | 3,000 | 3,500 |
| 2 | பல் மருத்துவ பட்டப் படிப்பு | 3,000 | 3,500 |
| 3 | பொறியியல் பட்டப் படிப்பு | 3,000 | 3,500 |
| 4 | தொழில்நுட்பவியல் பட்டப் படிப்பு | 3,000 | 3,500 |
| 5 | கால்நடை மருத்துவ பட்டப் படிப்பு | 3,000 | 3,500 |
| 6 | விவசாயம் / தோட்டக் கலை | 2,500 | 3,000 |
| 7 | மருந்தியல் பட்டப் படிப்பு | 2,500 | 3,000 |
| 8 | செவிலியர் பட்டப் படிப்பு | 2,000 | 2,500 |
| 9 | முதுகலைப் பொறியியல் | 3,000 | 3,500 |
| 10 | முதுகலைத் தொழில்நுட்பம் | 3,000 | 3,500 |
| 11 | முதுகலை மருத்துவம் | 3,000 | 3,500 |



| வ. எண் | பாடத் திட்டம் | ஏற்கெனவே வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ. | மாற்றி அமைக்கப்பட்ட உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 12 | முதுகலை அறுவை சிகிச்சை | 3,000 | 3,500 |
| 13 | முதுகலை வணிகவியல் | 3,000 | 3,500 |
| 14 | முதுகலை கலை | 3,000 | 3,500 |
| 15 | முதுகலை அறிவியல் | 3,000 | 3,500 |
| 16 | முதுகலை வணிக நிர்வாகம் | 3,000 | 3,500 |
| 17 | முதுகலை கணினிப் பிரயோகம் | 3,000 | 3,500 |
| 18 | இளங்கலை | 2,000 | 2,500 |
| 19 | இளங்கலை (அறிவியல்) | 2,000 | 2,500 |
| 20 | இளங்கலை (வணிகவியல்) | 2,000 | 2,500 |
| 21 | இளங்கலை (வணிக நிர்வாகம்) | 2,000 | 2,500 |
| 22 | இளங்கலை (வணிக மேலாண்மை) | 2,000 | 2,500 |
| 23 | இளங்கலை (கணினிப் பிரயோகம்) | 2,000 | 2,500 |
| 24 | இளங்கலை (கணினி அறிவியல்) | 2,000 | 2,500 |
| 25 | பல் தொழில்நுட்பக் கல்வி | 2,000 | 2,500 |
| 26 | இந்திய ஆட்சிப் பணி /இந்திய காவலர் பணி /வங்கி அலுவலர்கள் தேர்வு | 2,000 | 2,500 |
| 27 | உணவக நிர்வாகம் மற்றும் உணவாக்கத் தொழில் | 2,000 | 2,500 |
| 28 | அகவிலை கணக்கியல் | 3,000 | 3,500 |
| 29 | +2 வகுப்பில் அதிக மதிப்பெண் | 2,000 | 2,500 |
| 30 | பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் | 1,500 | 2,000 |

இது தவிர, முடநீக்கியல் (Physiotherapy Course) மற்றும் கைத்தறி தொழில் நுட்பவியல் (Handloom Technology Course) பாடப் பிரிவுகளுக்கும் 2006-2007 ஆம் கல்வி ஆண்டு முதல் கல்வி உதவித் தொகை வழங்கும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தற்சமயம் 74 மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெற்று வருகின்றனர். இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.14 இந்திய கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உதவித் தொகை

சேலத்திலுள்ள இந்திய கைத்தறித் தொழில் நுட்பப் பயிலகத்தினால் நடத்தப்படும் 3 ஆண்டு கைத்தறித் தொழில் நுட்பப் பட்டயப் படிப்பிற்கு மாணவ, மாணவியர்களைத் தேர்வு செய்யும்போது நெசவாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தமிழக அரசு மாணவ, மாணவியர்களுக்குக் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கி வருகிறது.

| | |
|---|---|
| முதலாம் ஆண்டு | ரூ.400/- மாதமொன்றுக்கு |
| இரண்டாம் ஆண்டு | ரூ.450/- மாதமொன்றுக்கு |
| மூன்றாம் ஆண்டு | ரூ.500/- மாதமொன்றுக்கு |

இதனைத் தவிர, அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் புத்தகம் வாங்குவதற்கென மாதமொன்றுக்கு ரூ.60/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவியர்களுக்குச் சுற்றுலா செல்வதற்கு ஆண்டொன்றுக்கு ரூ.200/- அளிக்கப்படுகிறது. தற்போது, இந்தக் கல்வி உதவித் தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

கடாக் (கர்நாடகம்) மற்றும் வெங்கடகிரி (ஆந்திர மாநிலம்) ஆகிய இடங்களிலுள்ள இந்திய கைத்தறித் தொழில் நுட்பப் பயிலகங்களில் படித்து வரும் தமிழக மாணவ, மாணவியர்க்கும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது இத்திட்டத்தின்கீழ் 78 மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெற்று வருகின்றனர். இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.





### 3.15 சிக்ஷா சஹியோக் யோஜனாவின்கீழ் கல்வி உதவித் தொகை வழங்குதல்

சிக்ஷா சஹியோக் திட்டமானது மகாத்மா காந்தி புங்கர் பீமா திட்டத்தின்கீழ் ஒரு அங்கமாகும். மகாத்மா காந்தி புங்கர் பீமா திட்டத்தில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு அல்லது 12 ஆம் வகுப்பு முடிக்கும் வரை இதில் எது முன்னரோ, அக்காலம் முடிய வருடத்திற்கு ரூ. 1,200/- வீதம் (2 குழந்தைகளுக்கு மட்டும்) கல்வித் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2006-2007 ஆம் ஆண்டில் 23,176 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.49 கோடி அளவிற்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.16 ஒருங்கிணைந்த கைத்தறி செறிவுப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

கைத்தறி தொகுதிகளின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கென "ஒருங்கிணைந்த கைத்தறி செறிவுப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்" என்ற திட்டம் மைய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் தறி மேம்பாடு, தறியில் மாறுதல்கள் செய்தல், தறி மற்றும் தறி உபகரணங்கள் கொள்முதல் செய்தல், சாயமிடும் அலகு உருவாக்குதல், பொது வசதி மையம் நிறுவுதல், காட்சியறை நிறுவுதல், பொருட்காட்சி நடத்துதல், விளம்பரம் மற்றும் வடிவமைப்பு ஆகிய பல்வேறு இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பகுதிக்கும் அதிகபட்ச உதவித் தொகையாக ரூ.200.00 இலட்சம் அளிக்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதால் இப்பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் ஒட்டுமொத்த சமுதாய பொருளாதார நிலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த கைத்தறி செறிவுப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை திருச்சி, குறிஞ்சிப்பாடி (கடலூர் மாவட்டம்) மற்றும் திருவண்ணாமலை ஆகிய 3 பகுதிகளில் ரூ. 6 கோடி மதிப்பீட்டில் (செறிவுப் பகுதி ஒன்றுக்கு ரூ. 2 கோடி) செயல்படுத்துவதற்கு மைய அரசின் ஒப்புதலை இவ்வரசு பெற்றுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் முகவர் நிறுவனங்களான ஜவுளிக் குழு மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகியவை மேற்படி செறிவுப் பகுதிகளில் திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதுதவிர, மேலும் 10 பகுதிகளில்

ரூ.5 கோடி மதிப்பீட்டில் (பகுதி ஒன்றுக்கு ரூ.50 இலட்சம் வீதம்) ஒருங்கிணைந்த கைத்தறி செறிவுப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த மைய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு, இத்திட்டம் கைத்தறி மற்றும் துணிநூல் துறையால் செயல்படுத்தப்படவுள்ளது.

### 3.17 ஒருங்கிணைந்த கைத்தறி பயிற்சித் திட்டம்

மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கைத்தறி பயிற்சித் திட்டம் 2003-2004 ஆம் ஆண்டு முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களின் திறனை மேம்படுத்துவதற்கு ஏதுவாக அவர்களுக்கு நெசவு நெய்தல், சாயம் தோய்த்தல் மற்றும் வடிவமைப்பு ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி பயிற்சி பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் சேவை மையங்கள் மற்றும் கைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள அரசு சாரா அமைப்புகள்மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் மேலாளர்களுக்கு மேலாண்மைப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த கைத்தறி பயிற்சித் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டுக்கு 60 பயிற்சிகள் வழங்குவதற்கான ஒப்புதலை அரசு மைய அரசிடம் பெற்றுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,200 கைத்தறி நெசவாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் மைய அரசின் நிதியுதவி பெற்று 2007-2008 ஆம் ஆண்டில் 1,200 நபர்களுக்குப் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.18 பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கான சிறப்புத் திட்டம்

தமிழகத்தில் 1,117 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 250 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் குறைந்த மதிப்புடைய இலவச வேட்டி, சேலை இரக உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களது நெசவுத் திறனையும், வருவாயையும் உயர்த்த வேண்டியது அவசியம் என்பதால், பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கான ஒரு விரிவான சிறப்புத் திட்டம் ரூ.25.30 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதுடன், புதிய



வடிவமைப்புகளை உருவாக்குதல், நெசவுத் திறன் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு, அடிப்படை கட்டமைப்பு மேம்பாடு மற்றும் விற்பனை போன்றவற்றிற்கு உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த அரசு இதுவரை ரூ.11.58 கோடி (மத்திய அரசின் பங்கு ரூ. 8.69 கோடி + மாநில அரசு பங்கு ரூ. 2.89 கோடி) வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 11,137 நெசவாளர்களுக்குப் பயிற்சியளிக்கப் பட்டுள்ளதுடன், 25,300 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு, அவ்வடிவமைப்பின் மூலம் சேலைகள், துணி வகைகள், சட்டைகள், படுக்கை விரிப்புகள், திரைச் சீலைகள், சமையல் அறையில் பயன்படுத்தும் துணி வகைகள், தரை விரிப்புகள் போன்ற இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தறிகளை சொந்தமாகக் கொண்டுள்ள ஒவ்வொரு நெசவாளருக்கும் தறி உபகரணங்கள் புதிதாக வழங்கப்பட்டு உயர் இரகத் தறிகளாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2,096 புதிய தறிகள் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, 11,137 தறிகளுக்கு தறி உபகரணங்கள் வழங்கி அவை மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் பற்றிய ஒரு செய்திப் படம் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூ.30.00 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 3.19 சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்

கைத்தறித் துணி வகைகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் அயல் நாட்டுச் சந்தையில் கைத்தறித் துணி விற்பனையை விரிவுப்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 50,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.50,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 19

### 3.20 புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

புதிய வடிவமைப்பினை ஊக்குவிக்கும் வகையில் புதிய வடிவமைப்பினை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறந்த வடிவமைப்புக்குக் கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது :

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ. 5,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ. 3,000/- |
| மூன்றாம் பரிசு | ரூ. 2,000/- |

சந்தையில் எளிதாக விற்பனையாவதற்கும், ஏற்றுமதியாவதற்கும் ஏதுவாக புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு இத்திட்டம் உதவிடும். இத்திட்டத்திற்கான செலவினம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் "கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி"யிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

2007-2008 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.21 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும் விசைத்தறியின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985-ல் மத்திய அரசினால் இயற்றப்பட்டு, அனைத்து மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய 11 இரகங்களை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை முனைப்புடன் தமிழ்நாட்டில் செயல்படுத்த பிரத்தியேகமாக அமலாக்கப் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர்/அமலாக்க அலுவலர் அலுவலகமும், சரக அளவிலான 5 அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டில் 50,000 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில், 66,407 விசைத்தறிகள் அமலாக்கப் பிரிவினால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.



2007 ஏப்ரல் 19]

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை பிரபலப்படுத்தவும், கைத்தறித் தொழிலை பாதுகாக்கவும், 2007-2008 ஆம் ஆண்டில் விசைத்தறிகள் அதிகம் உள்ள பகுதிகளில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படுவதோடு, 70,000 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்படும்.

## 4. நெசவாளர்களின் நலன் மற்றும் கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

### 4.01 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்றுமதி

கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் அளித்து, நெசவாளர்களை ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தி வருகிறது. தற்போது 400 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 29,000/-க்கும் மேற்பட்ட தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. சங்கங்களின்மூலம் படுக்கை விரிப்புகள், திரைச்சீலைகள், சமையலறை துணி வகைகள், மேசை விரிப்புகள், ஏப்ரன், கை உறைகள், டர்க்கி துண்டுகள், சிறு கைத்துண்டுகள் போன்ற இரகங்கள் தயார் செய்து ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி (Deemed Export) செய்யப்படுகிறது. ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுவதன்மூலம் நெசவாளர்கள் அதிக அளவில் கூலி பெறுகின்றனர்.

2006-2007 ஆம் ஆண்டில் ரூ.276.38 கோடி மதிப்பிற்கு கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் ஆண்டில் அதிக அளவு நெசவாளர்களை ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடுத்தி ஏற்றுமதி விற்பனையினை ரூ. 300 கோடி அளவிற்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.02 வடிவமைப்பு மேம்பாடு

அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு வடிவமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, காஞ்சிபுரம், ஆரணி, ராசிபுரம் மற்றும் மன்னார்குடி பட்டு இரகங்களில் 500 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இப்புதிய வடிவமைப்புகள் 2007 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்படும்.

[2007 ஏப்ரல் 19

### 4.03 கைத்தறி நெசவாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

நெசவாளர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் சாயமிடுபவர்களின் செயல்திறனை மேம்படுத்தும் முக்கிய நோக்கோடும், அவர்களின் ஊதியத்தினை உயர்த்தும் வகையிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள காந்திகிராம ஊரக நிறுவனம் மற்றும் சேலத்திலுள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் உதவியோடு ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் 1,000 கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பயிற்சித் திட்டத்தில் வடிவமைப்புக்கான அடிப்படை பாடங்கள், நெசவுக்குத் தேவையான வடிவமைப்புக் கருவிகள், கணினி உதவியுடன் ஜவுளி வடிவமைப்புகள், சாயமிடல், அச்சிடல் மற்றும் ஜவுளி விற்பனை போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 4.04 "கைத்தறி முத்திரை" திட்டத்தினைச் செயல்படுத்துதல்

கைத்தறி இரகங்களுக்கென பிரத்தியேக அடையாளம் வழங்கி அதனை விளம்பரம் செய்து விற்பனையினை மேம்படுத்திட தமிழ்நாட்டில் "கைத்தறி முத்திரை" யினை அறிமுகப்படுத்த துறை தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கைத்தறி முத்திரையினை பிரபலப்படுத்த காஞ்சிபுரம், திருவண்ணாமலை, குறிஞ்சிப்பாடி, மதுரை, ஈரோடு, கும்பகோணம் ஆகிய 6 செறிவுப் பகுதிகளில் (Clusters) விழிப்புணர்வுக் கூட்டங்கள் ஜவுளிக் குழுவால் நடத்தப்பட்டது.

மேலும் இத்திட்டத்தின்கீழ் 1,000 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 710 விண்ணப்பங்கள் ஜவுளிக் குழுவிடம் பெறப்பட்டு, அனைத்து நிறுவனங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) மற்றும் பெரும்பாலான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கைத்தறி முத்திரையினைப் பெற்றுள்ளன.

இத்திட்டத்தினை மேலும் பிரபலப்படுத்தவும், கைத்தறி முத்திரையினைப் பயன்படுத்தி கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்க துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 4.05 கைத்தறி இரகங்களை பூகோள குறியீடுச் சட்டம், 1999-ன்கீழ் பதிவு செய்தல்

கைத்தறி இரகங்களின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் சேலம் பட்டு, ஆரணி பட்டு மற்றும் கோவை கோரா காட்டன் ஆகிய பாரம்பரிய கைத்தறி இரகங்களை பூகோளக் குறியீடுச் சட்டம்,



2007 ஏப்ரல் 19]

1999-ன்கீழ் பதிவு செய்ய துறை பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பூகோளக் குறியீடு பதிவு அலுவலகத்தால் கோரப்பட்டுள்ள வரலாற்றுக் குறிப்புகள் மற்றும் இதர விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதற்கான பத்திரங்கள் தயார் செய்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்ட பிறகு, விண்ணப்பம் விரைவில் தாக்கல் செய்யப்படும்.

### 4.06 சந்தை நிலவர ஆய்வு மேற்கொள்ளல்

சந்தை நிலவர ஆய்வை மேற்கொள்வதற்காக கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 2 கோடி வழங்கக் கோரி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு முன்மொழிவு துறையால் அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திடமிருந்து இதற்கென நிதி உதவியினை பெற துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.07 கைத்தறி நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்களின் பயன்கள் கிடைக்க ஏதுவாக கூட்டுறவு அமைப்பிலுள்ள அனைத்துக் கைத்தறி நெசவாளர்களுக்கும் ரூ. 45.93 இலட்சம் செலவில் அடையாள அட்டைகள் வழங்க துறை தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கென தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஏற்கெனவே ரூ. 25 இலட்சம் விடுவித்துள்ளது. இதுவரை, கூட்டுறவின்கீழ் உள்ள 1.60 இலட்சம் நெசவாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 4.08 புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்வதற்கான தடை ஆணையினை இரத்துச் செய்தது

கைத்தறி நெசவாளர்களை பெருமளவில் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன், புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்வதற்கான தடை ஆணையினை நீக்கி அரசு ஆணையிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, 9 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் (பரமக்குடி-4, மதுரை-1, திருச்செங்கோடு-3, திருநெல்வேலி-1) பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் புதிய சங்கங்கள் பதிவு செய்வதற்கென 130 விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. மேற்படி நடவடிக்கையின்மூலம் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள நெசவாளர்களின் எண்ணிக்கை 2,36,112 ஆக உயர்ந்துள்ளது.

[2007 ஏப்ரல் 19

## 4.09 கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்கவும், சரக்கிருப்பினைக் குறைக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்கும் நோக்கத்தோடு ரூ.1,001-க்கு மேல் விற்பனை மதிப்புள்ள பருத்தித் துணி வகைகளுக்கும், ரூ.2001-க்கு மேல் விற்பனை மதிப்புள்ள பட்டுத் துணி வகைகளுக்கும் 2006-2007 ஆம் ஆண்டில் பண்டிகைக் காலங்களில் 128 நாட்களுக்கு உச்சவரம்பின்றி 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கி விற்பனை செய்ய பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியினைப் பயன்படுத்தி ரூ. 77.26 கோடி மதிப்புள்ள பட்டுத் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இது தவிர, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன் கூடுதலாக 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி அதாவது பருத்தி மற்றும் பட்டுத் துணி வகைகளுக்கு முறையே அதிகபட்சமாக ரூ. 150/- மற்றும் ரூ. 300/- வழங்கி விற்பனை செய்ய 2006-2007 ஆம் ஆண்டில் 139 நாட்களுக்கு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு அரசு அனுமதி வழங்கியது. கூடுதல் 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியைப் பயன்படுத்தி, ரூ. 185.11 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 796.18 கோடி மதிப்பிற்கு கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மாவட்ட அளவில் பல்வேறு பகுதிகளில் துறையால் நடத்தப்பட்ட 44 கண்காட்சிகள்மூலம் ரூ. 10.35 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

துறையின் மேற்கண்ட நடவடிக்கைகளினால் பருத்தி மற்றும் பட்டு இரகத் துணிகளின் சரக்கிருப்பு கணிசமாகக் குறைந்துள்ளது.

## 4.10 சிட்டா நூலுக்கான விற்பனை வரி விலக்கு

2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, சிட்டா நூலுக்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த 2



2007 ஏப்ரல் 19]

விழுக்காடு விற்பனை வரி முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிக்கை 22-7-2006-ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பின்மூலம் சுமார் 6.08 இலட்சம் நெசவாளர்கள் பயன்பெறுகின்றனர். இந்த நடவடிக்கையானது கைத்தறித் தொழிலை ஊக்குவிப்பதோடு, கைத்தறித் தொழிலை நம்பியுள்ள பெரும்பாலான நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வழி வகுக்கின்றது. இதன்மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.56 கோடி வருவாய் இழப்பு ஏற்படும்.

## 4.11 ஜவுளிப் பூங்காக்கள்

ஆயத்த ஆடை ஏற்றுமதித் திட்டம், ஜவுளித் தொழில் மையங்களுக்கான உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டு முடிய தமிழ்நாட்டிற்கு மொத்தம் ரூ. 470.41 கோடி திட்ட மதிப்பீட்டில் 9 ஜவுளி சிறப்புத் திட்டங்களுக்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட திட்டங்களில் திருப்பூரில் நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா மற்றும் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் பகுதியில் திருப்பூர் காற்றாலை அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு, இதர திட்டங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2006-2007 ஆம் ஆண்டில் ஈரோடு, குமாரபாளையம் (நாமக்கல் மாவட்டம்), மதுரை, கரூர் ஆகிய 4 பகுதிகளில் ரூ. 266.19 கோடி மதிப்பீட்டில் ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்திற்கு மைய அரசின் ஒப்புதலை இவ்வரசு பெற்றுள்ளது. மேற்கண்ட 13 சிறப்பு ஜவுளித் திட்டங்களின்மூலம் சுமார் 1.15 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் மத்திய அரசின் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்தினை 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் தொடர்வதற்கு, புதிய 10 பூங்காக்கள் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தில் ஒதுக்கீடு செய்யவும் கேட்டு 26-8-2006 அன்று கடிதம் அனுப்பினார். அதனடிப்படையில் நடப்பாண்டில் (2007-2008) மத்திய வரவு செலவுத் திட்டத்தில் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டம் 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் (2011-2012 முடிய) தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 19

### 4.12 துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல்

துறை அலுவலர்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, 2006-2007 ஆம் ஆண்டில் பல்வேறு பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்பட்ட பயிற்சிகளுக்கு துறை அலுவலர்கள் அனுப்பப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு உள்ளனர். மேற்படி பயிற்சிகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சி நிறுவனத்தின் பெயர் | பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 | அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையம், சென்னை | 6 உதவி இயக்குநர்கள் |
| 2. | முழுமையான தர மேலாண்மை | அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையம், சென்னை | 2 உதவி இயக்குநர்கள் |
| 3. | கிராமிய கைத்தறி வளர்ச்சிக்குத் தேவையான தொழில்நுட்ப மாற்றம் கொண்டுவருதல் | தேசிய கிராமப்புற வளர்ச்சி நிலையம், ஐதராபாத் | 1 இணை இயக்குநர் |
| 4. | அறிவுசார் போட்டியுடைமையின் மேலாண்மை வளர்ச்சி | இந்தியன் மேலாண்மைப் பயிற்சி நிலையம், கோழிக்கோடு | 2 இணை இயக்குநர்கள் |
| 5. | கைத்தறி வகைகளின் தொடர் விற்பனைக்கான மேலாண்மைப் பயிற்சி | தேசிய கிராமப்புற வளர்ச்சி நிலையம், ஐதராபாத் | 1 இணை இயக்குநர் 1 உதவி இயக்குநர் |



2007 ஏப்ரல் 19]

## 5. பகுதி–2 திட்டங்கள், 2007–2008

2007-2008 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டத்தின்கீழ், பின்வரும் 2 திட்டங்கள் அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது:

1. ரூ. 1.50 இலட்சத்தில் எல்சிடி. புரொஜெக்டர் மற்றும் மடி கணினி ஒன்று தேவையான துணை பாகங்களுடன் கொள்முதல் செய்தல் மற்றும்

2. சென்னை கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்திற்கு ரூ. 1.00 இலட்சத்தில் டிஜிட்டல் ஒளி நகலி ஒன்று வாங்குதல்.

## 6. துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### 6.01 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிட் (கோ–ஆப்டெக்ஸ்)

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறி தொழிலின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு, 1935 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல் விநியோகம் செய்வதையும் சங்கங்கள் உற்பத்தி செய்யும் இரகங்களை விற்பனை செய்ய உறுதுணையாக இருப்பதையும், முக்கிய பணியாகக் கொண்டு கோ-ஆப்டெக்ஸ் இயங்கி வருகிறது. தலைமைச் சங்கமான கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் உறுப்பினராக உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கொள்முதல் செய்து, அவற்றை 206 விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்து வருகிறது. அவற்றுள், இம்மாநிலத்தில் 136 விற்பனை நிலையங்களும், வெளி மாநிலங்களில் 70 விற்பனை நிலையங்களும் உள்ளன.

**கோ–ஆப்டெக்ஸின் பணிகள்:**

* அரசின் இலவச வேட்டி சேலைத் திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தேவைப்படும் சேலைகள் மற்றும் வேட்டிகளைக் கொள்முதல் செய்து விநியோகிக்கும் பணியினை நிறைவேற்றும் முகமை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. அரசின் திட்டமான பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தவும் இந்நிறுவனம் உதவிகரமாக உள்ளது.

[2007 ஏப்ரல் 19

* வீட்டு உபயோகத்திற்குத் தேவையான துணி வகைகளான தேங்காய்பூ துண்டுகள், திரைச் சீலைகள், படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகள், சிறு துண்டுகள், கைலிகள், சட்டைத் துணிகள், சமையலறை உபயோகிப்புகளான மேலாடைகள், கையுறைகள் போன்ற இரகங்களை கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி செய்து வருகிறது.
* சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் வகையில், இயற்கை சாயம் மற்றும் இரசாயன கலப்பில்லாத பருத்தியைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் ஏற்றுமதி இரகங்கள் அறிமுகப்படுத்தப் பட்டது.
* சமீபத்தில், கோ-ஆப்டெக்ஸ் ஆண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆயத்த ஆடைகள் விற்பனையைத் துவக்கியுள்ளது.
* கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.288.87 கோடி மதிப்பிற்கு கைத்தறி மற்றும் விசைத்தறி துணி இரகங்களை தமிழகத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து, ரூ.371.40 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது. இதில் ஏற்றுமதியின் மதிப்பு ரூ.4.41 கோடியாகும்.

**கோ-ஆப்டெக்ஸின் 2006-2007 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்**

* நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பண்டிகைக் காலங்களில் மட்டும் கொள்முதல் செய்துவந்த கொள்முதல் திட்டத்தினை மாற்றியமைத்து மாதந்தோறும் கொள்முதல் செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன்காரணமாக, 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.55.44 கோடி யாக இருந்த சில்லரை விற்பனைக்கான கொள்முதல், நடப்பு ஆண்டில் ரூ.71.37 கோடியாக உயர்ந்துள்ளது.
* 2006-2007 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்களின் இரசனைக்கேற்ப, கைத்தறி இரகங்களில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 525 புத்தம் புதிய வடிவமைப்புகளை சேலைகள் மற்றும் வீட்டு உபயோக துணி இரகங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது.
* பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நிதி நிலைமையை சீர்படுத்தும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் சில்லரை விற்பனைக்காக கொள்முதல் செய்யும் சரக்குகளுக்கு 30 நாட்களுக்குள் பணப் பட்டுவாடா செய்து வருகிறது. நடப்பு ஆண்டில் சில்லரை விற்பனைக்காக கொள்முதல் செய்த சரக்குகளுக்கு ரூ.79.99 கோடி பணப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 19]

* நடப்பாண்டில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அதிசய பட்டுச் சேலை ஒன்றினை 1,64,492 வண்ணங்களை உள்ளடக்கி, கரையில் உலகில் ஏழு அதிசயங்களையும், முந்தியில் மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலையும் வடிவமைத்து உருவாக்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இந்தப் பட்டுச் சேலைக்கு "மயில் தோகை" பட்டு சேலை எனப் பெயரிடப்பட்டு, 22-11-2006 அன்று வெளியிட்டுள்ளார்கள். இந்த அதிசய பட்டுச் சேலை, கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறுவதற்காக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
* அழகிய வடிவமைப்புகளுடன் கூடிய பழைய பட்டுச் சேலைகளின் தொகுப்பினைச் சேகரித்து, அதன் மூலம் வடிவமைப்பு வங்கியினை மேம்படுத்தியும், சுய உதவிக் குழுக்கள் உதவியுடன் கூடுதல் மதிப்பு பொருட்களான பைகள், குழந்தைகளுக்கான ஆடைகள், ஆயத்த ஆடைகள் போன்ற இரகங்களை புதிய வடிவமைப்புகளுடன் உற்பத்தி போன்ற பல புதுமையான முயற்சியினை கோ-ஆப்டெக்ஸ் மேற்கொண்டுள்ளது.
* சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கும் வகையில், அக்குழுக்கள் தயார் செய்யும் பொருட்களை கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்து அதனால் அக்குழுக்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பும், வருமானமும் கிடைத்திட கோ-ஆப்டெக்ஸ் உறுதுணையாக செயல்படுகிறது.
* 2006-2007 ஆம் ஆண்டில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது பணியாளர்களை ஊக்குவிக்க பல நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டது. 4 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, 17 சதவிகிதம் அகவிலைப் படியினை தனது பணியாளர்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் வழங்கியுள்ளது குறிப்பிடப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் இத்தகைய முயற்சியினால், 132 விற்பனை நிலையங்கள் நடப்பாண்டில் இலாபத்தில் இயங்கி வருகின்றன.

**தேசிய கைத்தறி கண்காட்சி - எக்ஸ்போ 2007**

தேசிய கைத்தறி கண்காட்சியை சென்னையில் நடத்தும் பொறுப்பினை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடம் மத்திய ஜவுளி அமைச்சகம் ஒப்படைத்தது. சென்னை, கோ-ஆப்டெக்ஸ் கைத்தறிக் கண்காட்சித் திடலில், இந்தக் கைத்தறிக் கண்காட்சி 15.03.2007 முதல் 02-04-2007 வரை

[2007 ஏப்ரல் 19

நடைபெற்றது. இக்கண்காட்சியில், தமிழகம் உள்ளிட்ட இதர மாநிலங்களிலிருந்து 91 நிறுவனங்கள் பங்கேற்றன. நெசவாளர் சேவை மையம் ஒரு பிரத்தியேக செயல்முறை கண்காட்சிக் கூடத்தை அமைத்து, அதில் நமது நாட்டின் பாரம்பரியமிக்க இரகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. எக்ஸ்போ 2007 கண்காட்சியினை பிரபலப்படுத்தத் தேவையான விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இக்கண்காட்சியில், நலிந்த 18 பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது துணிகளை காட்சிக்கும் விற்பனைக்கும் வாடகை ஏதுமின்றி அரங்கங்கள் வழங்கப்பட்டது ஒரு சிறப்பு அம்சமாகும். இக்கண்காட்சியில் ரூ.3.12 கோடி விற்பனை மேற்கொள்ளப்பட்டது.

### கைத்தறி இரகங்களுக்கு வியாபார சந்தையில் விற்பனை வாய்ப்பை அதிகரித்தல்

2007-2008 ஆம் ஆண்டில், கீழ்க்காணும் நவீன செயல் திட்டங்கள் மூலம் ரூ.125 கோடி விற்பனையை எய்த, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

(அ) கைத்தறி இரகங்களின் விற்பனையை அதிகரிக்க காஞ்சிபுரம், ஆரணி மற்றும் கோயம்புத்தூர் பகுதிகளில் உற்பத்தியாகும் பட்டுச் சேலைகள், சேலம், ஜெயங்கொண்டம், பரமக்குடி பகுதிகளில் உற்பத்தியாகும் பருத்திச் சேலைகள், ஈரோடு மற்றும் கரூர் பகுதிகளில் உற்பத்தியாகும் வீட்டு உபயோகத் துணி ஆகிய இரகங்களில் அதிகளவில் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தகுதிவாய்ந்த தன்னார்வ வடிவமைப்பாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி, மேற்கண்ட இடங்களில் உள்ள நெசவாளர்களுக்கு, சந்தை நிலவரத்துக்கு ஏற்ற இரகங்களை உற்பத்தி செய்ய தேவையான பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) சட்டை இரகங்கள், குழந்தைகளுக்கான ஆயத்த ஆடைகள், சட்டைக்கான துணி வகைகள் போன்ற ஆயத்த ஆடை இரகங்களை அதிகரித்தல்.

(இ) சேலைகள் மற்றும் சட்டைத் துணி வகைகளில், பட்டு x பருத்தி, பருத்தி x பாலியஸ்டர், பட்டு x பாலியஸ்டர் கலப்பிழைகளில் புதிய இரகங்களை உருவாக்குதல்.

(ஈ) தமிழகத்தில் மட்டுமின்றி பிற மாநிலங்களிலும் 2007-2008 ஆம் ஆண்டில் 200 கண்காட்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 19]

### 6.02 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் தனது செயல்பாட்டினை 1964 ஆம் ஆண்டில் துவக்கி, கூட்டுறவு அமைப்பின்கீழ் இல்லாத நெசவாளர்களுக்குக் கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் துணிகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காகக் கடனுதவி வழங்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது.

இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.429.23 இலட்சமாகும். இதில் தமிழக அரசின் பங்கு ரூ.267.00 இலட்சம் ஆகும். மீதி மூலதனமான ரூ.162.23 இலட்சம் அங்கத்தினர்களால் செலுத்தப்பட்டதாகும். இக்கழகம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளான பாரத ஸ்டேட் வங்கிமூலம் ரூ.330 இலட்சமும், பாரத பாட்டியாலா வங்கிமூலம் ரூ.220 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.550 இலட்சம் அளவிற்கு காசுக் கடன் வசதி பெற்றுள்ளது.

தற்போது தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தில் 11,846 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 2006-2007 ஆம் ஆண்டில் 621 உறுப்பினர்களுக்கு ரூ.237.26 இலட்சம் அளவிற்கு கடனுதவி வழங்கியுள்ளது.

இக்கழகம் 2007-2008-ல் கடன் அளவினை ரூ.400 இலட்சம் அளவிற்கு உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.

### 6.03 தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம்

தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம் ISO 9001 சான்றிதழ் பெற்ற ஓர் அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சரிகையை உற்பத்தி செய்து விநியோகம் செய்து வருகின்றது. இதனைத் தவிர நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சூரத் சரிகை உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து பெறப்படும் சரிகை மாதிரிகளைத் தரப் பரிசோதனை செய்யும் பணியினையும் மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்மூலம் சரிகை மற்றும் பட்டு இரகத் துணிகளில் உள்ள சரிகையை எவ்வித சேதாரமுமின்றி தரப்பரிசோதனை மேற்கொண்டு வருகின்றது. இந்தத் தரப்பரிசோதனை வசதியின்மூலம் வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் பயன்பாடு அடைந்து வருகின்றனர்.

கும்பகோணம் பகுதியின் சரிகை தேவையினைப் பூர்த்தி செய்ய வேண்டி தமிழ்நாடு சரிகை நிறுவனம் 1999 ஆம் ஆண்டில் கும்பகோணத்தில் கிளை நிறுவனம் நிறுவப்பட்டது. அந்நிறுவனம் ஆண்டொன்றிற்கு 18,000 மார்க் சரிகை உற்பத்தி செய்யும் திறனுடன் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றது.

இந்நிறுவனம் சூரத் சரிகை உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து பெற்ற 1,894 மார்க்கினை தரப்பரிசோதனை செய்துள்ளது. மேலும் எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரத்தின் மூலம் சரிகை மற்றும் பட்டு இரகங்களின் 19,285 மாதிரிகளை பரிசோதனை செய்து அதற்கு கட்டணமாக ரூ.6.39 இலட்சம் வசூலித்துள்ளது.

இந்நிறுவனம் 2006-2007 ஆம் ஆண்டில் 48,529 சரிகை மார்க்குகள் உற்பத்தி செய்து 49,507 சரிகை மார்க்கினை விற்பனை செய்து ரூ.90.63 இலட்சம் உத்தேச இலாபம் ஈட்டியுள்ளது.

## தமிழ்நாடு சரிகை ஆலையின் 2007–2008 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்கள்

* 2007-2008 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் பல்வேறு இரகங்களை உள்ளடக்கிய 96,000 மார்க்கு சரிகையினை உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிட்டுள்ளது.
* இந்நிறுவனம் பாலியஸ்டர் இரக சரிகையினையும் சந்தை இரக சரிகையினையும் இந்த வருடம் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.
* சூரத் சரிகைக்கு இணையாக வண்ணம் மற்றும் பளப்பளப்பு அதிகரிக்கும் வகையில் இந்நிறுவனம் மின்னாற்பகுப்பு முறையில் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது.
* இந்நிறுவனம் வெள்ளி இழை உற்பத்தியில் பொறியியல் தொழில் நுட்பத்தினை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

## 6.04 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, வெளுத்தல், சாயமிடல், மெர்சிரைசிங், அச்சிடல் மற்றும் பருத்தி மற்றும் செயற்கை இழை நூலினைப் பதனிடுதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு





வருகிறது. இவ்வாலை ஒரு மாதத்தில் சுமார் 18.00 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது. இவ்வாலை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சர்வோதயா சங்கம், மத்தியச் சிறைச்சாலை, கேரள மற்றும் கர்நாடகா கைத்தறி வளர்ச்சிக் கழகங்கள், தனியார் ஏற்றுமதியாளர்கள் ஆகியோர்களால் வழங்கப்படும் துணிகளைப் பதனிட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 11.88 கோடி மதிப்பிற்கு விற்பனை மேற்கொண்டு, ரூ.2.12 கோடி (உத்தேசமாக) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிலும் பதனிடும் பணி பெறப்படும் நோக்கத்தில், தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையின் தகவல்கள் தெரிந்துகொள்ளும் வகையில், ஆலையில் இணைய தளம் (Website) அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 6.05 தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோவை

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகமானது 1969 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. நலிவுற்று மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்தி அதன் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல், துணித்தொழிலுக்குப் புத்துயிரூட்ட சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட குறிக்கோள்களுடன் இக்கழகம் உருவாக்கப்பட்டது. தற்சமயம் இக்கழகத்தின்கீழ் இரண்டு விசைத்தறிக்கூடங்கள் உள்ளன. இவை முறையே தலா 96 விசைத்தறிகளைக் கொண்டுள்ள அருப்புக்கோட்டை மற்றும் சிவகிரி கூடங்கள் ஆகும். இவை தவிர கோவை, குறிச்சி பகுதியில் 12 தானியங்கி தறிகளைக் கொண்ட தறிக்கூடம் ஒன்றும் இக்கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. பாலியஸ்டர் துணிவகைகளை குறிச்சி தானியங்கிக் கூடம், சிவகிரி மற்றும் அருப்புக்கோட்டை விசைத்தறிக் கூடங்களில் உற்பத்தி செய்து பல்வேறு அரசு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு பஞ்சாலைக் கழகமானது வழங்கி வருகிறது. மேலும் அரசின் இலவச சீருடைத் துணி வழங்கும் திட்டத்திற்காக வெள்ளை நிற சட்டைத் துணி, நீலநிற தாவணி மற்றும் காக்கி டிரில் ரக துணி போன்றவைகளையும் இக்கழகம் உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

[2007 ஏப்ரல் 19

இக்கழகமானது 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.18.75 கோடி அளவிற்கு வியாபாரம் செய்து, ரூ.68.25 இலட்சம் (உத்தேசமாக) இலாபம் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் 2007-2008 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டங்கள்:—

* பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்திற்கு தேவைப்படும் 2133 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளை உற்பத்தி செய்து வழங்கவும், ரூ.752.88 இலட்சம் அளவிற்கு அரசு நிறுவனங்களின் துணித் தேவையை நிறைவு செய்யவும் இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

* 2007-2008 ஆம் ஆண்டில் அரசு நலத் திட்டங்களுக்காக ரூ.1864.07 இலட்சம் மதிப்புள்ள 78.65 இலட்சம் மீட்டர் வெள்ளை நிற சட்டைத் துணியை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து வழங்கவும் இக்கழகம் உத்தேசித்துள்ளது.

**6.06 தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்)**

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்) கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினைச் சீராக்கும் பொருட்டு டிசம்பர் 1994 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இவ்விணையத்தின் உறுப்பினராகவுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை நியாயமான விலையில் நாடு முழுவதும் உள்ள பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் கொள்முதல் செய்து விநியோகிப்பதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக தமிழக அரசு பங்கு மூலதனமாக ரூ.25 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ.2.07 கோடியும் ரொக்கத்திற்கு பஞ்சு வாங்கும் பொருட்டு இணையத்திற்கு வழங்கியுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில் டான்ஸ்பின் நிறுவனம் ரூ.7.58 கோடி மதிப்புள்ள 8938 பேல்கள் பஞ்சினை கொள்முதல் செய்து உறுப்பினராக உள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்கு விற்பனை செய்துள்ளது. இது தவிர, நூற்பாலைகளுக்குத் தேவையான கட்டுப் பொருட்களை ரூ.19.38 இலட்சத்திற்கு கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.



2007 ஏப்ரல் 19]

டான்ஸ்பின் நிறுவனம் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.7.58 கோடி அளவிற்கு வியாபாரம் செய்து, ரூ.10.38 இலட்சம் (உத்தேசமாக) இலாபம் ஈட்டியுள்ளது.

## 7. 2007-2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

"கைத்தறி மற்றும் துணிநூல்" மானியக் கோரிக்கை எண்.17-இன்கீழ், 2007-08 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.52,299.13 இலட்சம் பின்வரும் விபரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் / இனத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2007—2008 |
|---|---|---|
| 1. | இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டம் (கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்படும் கையாளும் தொகை உட்பட) | 27150.00 |
| 2. | கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல் | 1120.00 |
| 3. | விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல் | 6684.00 |
| 4. | கைத்தறித் துணி விற்பனைக்குத் தள்ளுபடி | 4000.00 |
| 5. | தீன்தயாள் ஹத்கர்கா ப்ரோட்சஹான் யோஜனா திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்குவிப்பு/தள்ளுபடி | 7800.00 |
| 6. | மகாத்மா காந்தி புங்கர் பீமா திட்டத்தின்கீழ் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 100.00 |

[2007 ஏப்ரல் 19

| வ. எண் | திட்டம் / இனத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2007—2008 |
|---|---|---|
| 7. | கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் | 400.00 |
| 8. | கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் | 500.00 |
| 9. | கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கான முதியோர்ஓய்வூதியத் திட்டம் | 289.00 |
| 10. | பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ்-க்கு வட்டி மானியம் | 0.01 |
| 11. | மைய சிக்கன நிதித் திட்டம் | 400.00 |
| 12. | நல்வாழ்வு செறிவுத் திட்டம் | 0.01 |
| 13. | அமலாக்கப் பிரிவின் நிர்வாகச் செலவு | 136.63 |
| 14. | தறிக்கூடம் அமைக்கும் திட்டம் | 660.00 |
| 15. | புங்கர் பீமா யோஜனா திட்டம் - விளம்பர இனம் | 0.01 |
| 16. | நெசவாளர் தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டம் | 50.00 |
| 17. | கைத்தறி கண்காட்சி விற்பனைக்குத் தள்ளுபடி | 0.01 |
| 18. | தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டம் (இதர இனங்கள்) | 1525.01 |
| 19. | ஜவுளித் தொழில் மையங்களுக்கான உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு திட்டத்தைச் செயல்படுத்துதல் | 0.01 |



2007 ஏப்ரல் 19]

| வ. எண் | திட்டம் / இனத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2007—2008 |
|---|---|---|
| 20. | உயர் தொழில்நுட்ப விசைத்தறி நெசவுப் பூங்காக்கள் அமைக்கும் திட்டம் | 0.01 |
| 21. | விசைத்தறிக் கணக்கெடுப்பு (ஈரோடு விசைத்தறி சேவை மையத்திற்கான வாடகை) | 0.25 |
| 22. | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகைக் கடன் | 0.01 |
| 23. | தலைமைச் செயலகப் பொருளாதாரப் பணிகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் உட்பட) | 130.37 |
| 24. | நிர்வாகச் செலவுகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள் உட்பட) | 1,353.80 |
| | **மொத்தம்** | **52,299.13** |

[2007 ஏப்ரல் 19

## இணைப்பு-1

### தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி செறிவுப் பகுதிகள்

| வ. எண் | சரகத்தின் பெயர் மற்றும் செறிவுப் பகுதி | உற்பத்தி செய்யப்படும் இரகங்கள் |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | |
| | (அ) ஆர்.கே. பேட்டை<br>(ஆ) பள்ளிப்பட்டு<br>(இ) திருத்தணி<br>(ஈ) எல்லப்புரம் | இலவச வேட்டி, சேலை திட்டத்திற்கான சேலைகள், காஞ்சி காட்டன் சேலைகள் |
| 2. | சேலம் | |
| | (அ) அம்மாபேட்டை | பட்டு வேட்டி, அங்கவஸ்திரம், பட்டு சேலை, துண்டு, பருத்தி சேலை, கால் மிதி, ஜமக்காளம் |
| | (ஆ) கொண்டலாம்பட்டி | பட்டு சேலை (அசல் மற்றும் ஆப்-பைன் சரிகை சேலை) |
| | (இ) ஆட்டையாம்பட்டி | பருத்தி வேட்டி, இலவச வேட்டி, சேலை மற்றும் சீருடைத் துணி |
| | (ஈ) வனவாசி | பட்டு சேலை, பருத்தி சேலை |
| | (உ) பாப்பாரப்பட்டி | சட்டைத் துணி, துண்டு, இலவச வேட்டி சேலை, சீருடை துணி |
| 3. | நாகர்கோவில் | |
| | (அ) வடசேரி<br>(ஆ) குளச்சல்<br>(இ) கருங்கல்<br>(ஈ) பள்ளியாடி | பருத்தி வேட்டி, துண்டு, சேலை, போர்வை |



2007 ஏப்ரல் 19]

| | | |
|---|---|---|
| 4. | திருச்செங்கோடு | |
| | (அ) இராசிபுரம் | பட்டு சேலை, பருத்தி சேலை |
| | (ஆ) மல்லசமுத்திரம் | வேட்டி |
| | (இ) குமாரபாளையம் | காடாத் துணி, ஜமக்காளம், துண்டு |
| | (ஈ) இடப்பாடி | ஜமக்காளம், ஏற்றுமதி இரகத் துண்டு |
| 5. | திருவாரூர் | |
| | (அ) அம்மையப்பன் | |
| | (ஆ) மன்னார்குடி | பட்டு சேலை |
| 6. | விருதுநகர் | |
| | (அ) அருப்புக்கோட்டை | செயற்கை பட்டு சேலை, பருத்தி சேலை, கைலி, துண்டு |
| | (ஆ) சுந்தரபாண்டியம்<br>(இ) ஸ்ரீவில்லிபுத்தூர்<br>(ஈ) இராசபாளையம் | இலவச வேட்டி சேலை, பருத்தி சேலை, துண்டு |
| 7. | ஈரோடு | |
| | (அ) சென்னிமலை | படுக்கை விரிப்பு, போர்வை, திரைச் சீலை |
| | (ஆ) பவானி | ஜமக்காளம், போர்வை, துண்டு |
| | (இ) கோபி | கோரா சேலை |
| | (ஈ) ஈரோடு, காஞ்சிக்கோவில் | இலவச வேட்டி சேலை, போர்வை, துண்டு |

[2007 ஏப்ரல் 19

| | | |
|---|---|---|
| 8. | கரூர் | |
| | (அ) கரூர் | போர்வை, படுக்கை விரிப்பு, திரைச்சீலை, தலையணை உறை, சிறு கைத்துண்டு |
| 9. | காஞ்சிபுரம் | |
| | (அ) காஞ்சிபுரம் | பட்டு சேலை |
| | (ஆ) பள்ளிப்பட்டு | இலவச வேட்டி சேலை |
| | (இ) பொன்னேரி | காஞ்சி காட்டன் சேலை |
| 10. | பரமக்குடி | |
| | (அ) பரமக்குடி | செயற்கை பட்டு சேலை, பருத்தி சேலை |
| | (ஆ) எமனேஸ்வரம் | செயற்கை பட்டு சேலை, பருத்தி சேலை |
| | (இ) காரைக்குடி | லுங்கி, துண்டு, பருத்தி சேலை |
| 11. | திண்டுக்கல் | |
| | (அ) பழனி | டை x டை (Tie & Dye சேலை, கோரா சேலை, பருத்தி சேலை, லுங்கி |
| | (ஆ) சின்னாளப்பட்டி | செயற்கை பட்டு சேலை, கோரா சேலை, பாலியஸ்டர் சட்டைத் துணி, பாலிகாட் சேலை, படுக்கை விரிப்புகள் |
| 12. | வேலூர் | |
| | (அ) வேலூர் | லுங்கி, பருத்தி சேலை, இலவச வேட்டி வேலை |
| | (ஆ) குடியாத்தம் | லுங்கி |
| | (இ) ஆரணி | பட்டு சேலை |
| | (ஈ) திருவண்ணாமலை | லுங்கி, துண்டு, இலவச வேட்டி சேலை |



2007 ஏப்ரல் 19]

| | | |
|---|---|---|
| 13. | மதுரை | |
| | (அ) மதுரை | கோடம்பாக்கம் சேலை, பருத்தி சேலை, வேட்டி |
| | (ஆ) ட்டி. குன்னத்தூர் | லுங்கி, துண்டு, திரைச் சீலை, சிறு கைத்துண்டுகள் |
| | (இ) ஆண்டிப்பட்டி | பருத்தி சேலை, வேட்டி |
| 14. | கடலூர் | |
| | (அ) குறிஞ்சிப்பாடி | லுங்கி |
| | (ஆ) புவனகிரி | பட்டு சேலை, லுங்கி |
| | (இ) விழுப்புரம் | பட்டு சேலை, லுங்கி |
| 15. | திருச்சி | |
| | (அ) உறையூர் | உறையூர் சேலை |
| | (ஆ) மணமேடு | வேட்டி, அங்கவஸ்திரம், ஏற்றுமதி இரகம் |
| 16. | கும்பகோணம் | |
| | (அ) கும்பகோணம் | பட்டு சேலை |
| | (ஆ) திருபுவனம் | பட்டு சேலை |
| | (இ) ஜெயங்கொண்டம் | வெங்கடகிரி சேலை, பருத்தி சேலை, ஏற்றுமதி இரகம் |
| 17. | கோயம்புத்தூர் | |
| | (அ) கோயம்புத்தூர் | கோரா சேலை |
| | (ஆ) சிறுமுகை | பட்டு சேலை, கோரா சேலை, பருத்தி சேலை |
| | (இ) பொள்ளாச்சி | பருத்தி சேலை, கோரா சேலை, ஏற்றுமதி இரகம் |

[2007 ஏப்ரல் 19

| | | |
|---|---|---|
| 18. | திருநெல்வேலி | |
| | (அ) கல்லிடைக் குறிச்சி | லுங்கி, துண்டு |
| | (ஆ) சங்கரன்கோவில் | லுங்கி, பருத்தி சேலை, இலவச வேட்டி சேலை |

## இணைப்பு-2

### தமிழக ஜவுளித் தொழில் விபரம்

| இனம் | இந்தியா | தமிழ்நாடு | தமிழகத்தின் நிலை |
|---|---|---|---|
| **நூற்புத் தொழில்** | | | |
| நடுத்தர மற்றும் பெரிய ஆலைகளின் எண்ணிக்கை | 1808 | 877 | 1 |
| வேலையாட்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 8.54 | 2.08 | 1 |
| கதிர்களின் எண்ணிக்கை (மில்லியன்) | 35.43 | 14.60 | 1 |
| சிறு நூற்பாலைகளின் எண்ணிக்கை | 1231 | 973 | 1 |
| வேலையாட்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 0.40 | 0.34 | 1 |
| கதிர்களின் எண்ணிக்கை (மில்லியன்) | 3.84 | 3.32 | 1 |
| விசைத்தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 19.03 | 3.66 | 2 |
| நெசவாளர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 47.57 | 9.14 | 2 |
| **கைத்தறித் தொழில்** | | | |
| கைத்தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 34.86 | 4.13 | 2 |
| கைத்தறித் துணி உற்பத்தி (பில்லியன் ச.மீ) | 6.00 | 0.7 | 1 |
| மதிப்பு (ரூ.கோடியில்) | 18000 | 2500 | 1 |
| நெசவாளர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 65.50 | 6.08 | 2 |
| **இதர தொழில்கள்** | | | |
| மின் விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்கள் | 2510 | 985 | 1 |
| கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்கள் | 10397 | 2614 | 1 |
| பின்னலாடை மற்றும் ஆடை நிறுவனங்கள் | 8000 | 4000 | 1 |



2007 ஏப்ரல் 19]

## இணைப்பு-3

### 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறப்புத் திட்டங்கள் (2002-07)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | மொத்த முதலீடு (ரூ. கோடியில்) | பணி முடிவடையும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா, திருப்பூர் | 17.62 | 300.00 | நிறைவு பெற்றது |
| 2. | இருங்காட்டுக் கோட்டை ஆயத்த ஆடை பூங்கா, சென்னை | 26.70 | 300.00 | செப்டம்பர் –2007 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) | மொத்த முதலீடு (ரூ. கோடியில்) | பணி முடிவடையும் நாள் |
|---|---|---|---|---|
| 3. | ஜவுளித் தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு திட்டம் | 21.81 | 21.81 | செப்டம்பர் 2007 |
| 4. | காற்றாலைத் திட்டம், திருப்பூர் | 25.00 | 25.00 | நிறைவு பெற்றது |
| 5. | காவேரி உயர் தொழிற் நுட்பப் நெசவுப் பூங்கா | 33.32 | 76.66 | ஏப்ரல் 2007 |
| 6. | வைகை உயர் தொழிற்நுட்பத் திட்டம் | 33.16 | 63.05 | மார்ச் 2008 |
| 7. | செங்கப்பள்ளி ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, ஈரோடு மாவட்டம் | 149.45 | 418.05 | மார்ச் 2008 |
| 8. | பதனிடும் பூங்கா, கடலூர் | 120.00 | 475.00 | மார்ச் 2008 |
| 9. | உயர் தொழிற்நுட்பப் பூங்கா, பல்லடம் | 43.35 | 161.34 | ஏப்ரல் 2007 |
| 10. | உயர் தொழிற்நுட்பப் பூங்கா கொமாரபாளையம் | 34.82 | 125.66 | மார்ச் 2008 |
| 11. | உயர் தொழிற்நுட்பப் பூங்கா, ஈரோடு | 46.37 | 127.60 | ஏப்ரல் 2008 |
| 12. | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, மதுரை | 87.00 | 205.00 | ஜூன் 2008 |
| 13 | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர் | 98.00 | 204.00 | ஜூன் 2008 |



# இணைப்பு-III

(169 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 17 – கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

### அறிவிப்புகள் - 2007-2008

6. நெசவுத் தொழிலுக்கான அடிப்படை வசதிகளை உருவாக்கி, நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்ய, ஒருங்கிணைந்த கைத்தறி செறிவுப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் நடப்பாண்டில் 15 பகுதிகளில் ரூபாய் 9 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

7. கைத்தறி இரகங்களின் பயன்பாடு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, பருத்தி மற்றும் பட்டுத் துணிகளின் விற்பனையினை மேம்படுத்த நடப்பாண்டில் ரூபாய் ஒரு கோடி செலவில் மாநிலத்திலும், வெளிமாநிலங்களிலும் பரவலாக விளம்பரங்கள் மேற்கொள்ளப்படும்.

8. கைத்தறி நெசவாளர்களின் பணிச் சூழலை மேம்படுத்தும் நோக்குடன் கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதிகளான சென்னிமலை, அருப்புக்கோட்டை, எமனேஸ்வரம், சின்னாளப்பட்டி, குறிஞ்சிப்பாடி, மதுரை, ஆரணி ஆகிய பகுதிகளில் சமுதாயக்கூடம் / பொதுவசதி மையங்கள் ரூபாய் 70 இலட்சம் செலவில் (தலா ரூபாய் 10 இலட்சம்) அமைத்துத் தரப்படும்.

9. கைத்தறி துணிகளின் விற்பனையினை அதிகரித்து, கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக வருவாய் கிடைக்கும் நோக்கத்துடன், பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் 1000 புதிய வடிவமைப்புகள் ரூபாய் 25 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

10. கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு கூடுதல் வருவாய் கிடைக்க வழிவகுக்கும் நோக்கத்துடன், நெசவாளர் குடும்பத்தைச் சார்ந்த 1000 பெண்களுக்கு எம்பிராய்டரி மற்றும் மதிப்புக் கூட்டு வேலைப்பாடுகள் பணிகளில் (embroidery and embellishment work) பயிற்சி வழங்கப்படும்.

[2007 ஏப்ரல் 19

*11.* மாநிலத்திற்கென ஜவுளிக் கொள்கை 1998 ஆம் ஆண்டு அரசால் உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலை மேம்படுத்தும் பொருட்டு, ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து ஒரு "மாநில ஜவுளி தொலைநோக்குப் பார்வை 2012" (State Textile Vision 2012) கொள்கை வகுக்கப்படும்.

*12.* கைத்தறித் இரகங்களை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் நேரடியாக ஏற்றுமதி செய்ய நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*13.* கைத்தறித் துணிகளின் விற்பனையினை மேம்படுத்தும்பொருட்டு மைய அரசின் நிதியுதவியுடன் 2007-2008 ஆம் ஆண்டில் வெளி மாநிலங்களில் கண்காட்சிகள் நடத்தப்படுவதோடு, ஒரு தேசிய கைத்தறிக் கண்காட்சியும், ஒரு சிறப்பு கைத்தறிக் கண்காட்சியும், 30 இடங்களில் மாவட்ட அளவிலான கண்காட்சிகளும் நடத்தப்படும்.

*14.* மத்திய அரசின் 2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தினை கைத்தறித் தொழிலில் உபதொழில் புரிபவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என அறிவித்துள்ளதன் அடிப்படையிலும், உபதொழில் புரியும் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும் கைத்தறி நெசவாளர்களுக்கென செயல்படுத்தப்பட்டு வரும் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தினை நெசவுத் தொழிலுக்கு தொடர்புடைய உபதொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

*15.* கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான சம்பள விகிதங்கள் 1-7-1997-ல் மாற்றி அமைக்கப்பட்டது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் சம்பள விகிதத்தை மாற்றி அமைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழு நியமிக்கப்படும்.

*16.* தேசிய ஆடை அலங்கார நிறுவனம் (National Institute of Fashion Technology) அல்லது தேசிய வடிவமைப்பு நிறுவனங்களில் (National Institute of Design) ஆடை அலங்காரத் தொழிற்நுட்பக் கல்வியில் சேரும் கைத்தறி நெசவாளர் குடும்பத்தை சேர்ந்த 2 மாணவ/ மாணவியர்களுக்கு படிப்புக்கான கல்விச் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூபாய் 1.20 இலட்சத்தினை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்றுக் கொள்ளும்.



2007 ஏப்ரல் 19]

*17.* வடிவமைப்புகளை சேகரிக்கவும், நெசவாளர்களுக்கு வடிவமைப்புகளை வழங்கவும், கைத்தறி உற்பத்தி மையங்களான காஞ்சிபுரம், சேலம், கோவை, மதுரை ஆகிய 4 பகுதிகளிலும், சென்னையில் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்திலும் வடிவமைப்பு நூலகங்கள் (Design Library) அமைக்கப்படும்.

*18.* சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பைகள், மெத்தைகள், குழந்தைகளுக்கான ஆடைகள், ஆயத்த ஆடைகள்போன்ற பொருட்களை மாநிலத்திலுள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படும்.

*19.* கைத்தறித் துணிகளின் விற்பனையினை மேம்படுத்தும் முகத்தான் சந்தை நிலவரங்களை அறியவும், நாட்டில் நிலவும் பல்வேறு நெசவுத் தொழில் நுணுக்கங்களைத் தெரிந்துகொள்ளவும், நெசவாளர்களை நாட்டின் முக்கியப் பகுதிகளிலுள்ள 10 கைத்தறி செறிவுப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்று வர ஏற்பாடு செய்யப்படும்.

*20.* கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களுக்கு வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கு நல்ல சூழலை உருவாக்க, தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை (சென்னை), தங்கம் பட்டு மாளிகை (சேலம்), நெல்லிக்கனி விற்பனை நிலையம் (தருமபுரி), வசந்தம் விற்பனை நிலையம் (ஈரோடு), பொதிகை விற்பனை நிலையம் (திருச்சி), வ.உ.சி. விற்பனை நிலையம் (தூத்துக்குடி), காமாட்சி விற்பனை நிலையம் (காஞ்சிபுரம்), பசவங்குடி விற்பனை நிலையம் (பெங்களூர்), எலுரு ரோடு விற்பனை நிலையம் (விஜயவாடா), பூம்புகார் விற்பனை நிலையம் (புதுதில்லி), மகாலெட்சுமி விற்பனை நிலையம் (மும்பை) மற்றும் மூகாம்பிகை விற்பனை நிலையம் (மங்களூர்) ஆகிய 12 விற்பனை நிலையங்கள் ரூபாய் 1.50 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.

*21.* பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உள்ள நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்ய மேற்படி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டு வரும் "இழை" எனப் பெயரிடப்பட்ட இரகங்கள் முதற்கட்டமாக 5 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படும். வரும் ஆண்டுகளில் மேலும் கூடுதலான விற்பனை நிலையங்களின் விற்பனை விரிவுபடுத்தப்படும்.

*22.* தமிழகத்தில், மாவட்டத் தலைநகரங்களில் இயங்கும் 45 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் ரூபாய் 70 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்படும்.

[2007 ஏப்ரல் 19

23. வாடிக்கையாளர்களுக்குத் தேவையான அனைத்து இரகங்களும் கோ-ஆப்டெக்ஸின் அனைத்து விற்பனை நிலையங்களிலும் எல்லா நேரங்களிலும் கிடைப்பதை உறுதி செய்யவும், அதன்மூலம் விற்பனையைப் பெருக்கவும், விற்பனையாகும் இரகங்களை தேவையான அளவு வைத்துக் கொள்ள ஏதுவாகவும், சரக்கு இருப்புபோன்ற விவரங்களை உடனுக்குடன் அறிந்துகொள்ளவும் 100 பெரிய விற்பனை நிலையங்கள் சுமார் ரூபாய் 2 கோடி செலவில் மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்துடன் கணினிமூலம் இணைக்கப்படும்.

24. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் அடிப்படை சம்பளத்தில் 6 விழுக்காடு அகவிலைப் படி உயர்வு 1.4.2007 முதல் வழங்கப்படும்.



2007 ஏப்ரல் 19]

# இணைப்பு IV

(181 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 32—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## அறிவிப்புகள் - 2007-2008

### நல வாரியங்கள்

1. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து தொடர்ந்து 5 வருடங்களுக்குக் குறையாமல் பதிவிலிருக்கும் 60 வயதினைப் பூர்த்தி செய்த கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் நோயின் காரணமாக முடக்கமுற்று இயல்பான வேலை செய்வதற்கு தகுதியற்ற 60 வயது பூர்த்தியடையாத தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.300/-லிருந்து ரூ.400/- ஆக உயர்த்தப்படும். இதனால், வாரியத்திற்கு ரூ.36,21,600/- கூடுதலாக செலவாகும்.

2. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கொத்தனார், குழாய் பொருத்துபவர், வர்ணம் பூசுபவர், மின்பணியாளர் மற்றும் மரத் தச்சர் ஆகிய பிரிவுகளிலுள்ள தொழிலாளர்களின் வேலைத் திறனை மேம்படுத்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்மூலம் பயிற்சி அளிக்கப்படும். இவ்வாண்டு, சென்னை மாவட்டத்தில் 200 தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சிக்காக ரூ.3,00,000/-த்தினை வாரியம் செலவிடும்.

3. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து தொடர்ந்து 5 வருடங்களுக்குக் குறையாமல் பதிவிலிருக்கும் 60 வயதினைப் பூர்த்தி செய்த உடலுழைப்புத் தொழிலாளர்கள், மற்றும் நோயின் காரணமாக முடக்கமுற்று இயல்பான வேலை செய்வதற்கு தகுதியற்ற 60 வயது பூர்த்தியடையாத தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.300/-லிருந்து ரூ.400/- ஆக உயர்த்தப்படும். இதற்காகும் கூடுதல் செலவினம் ரூ.15,84,000/- ஆகும்.

4. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு இலவச சலவைப் பெட்டி வழங்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில், ரூ.4,00,000 அரசு மானியத்தில்,

200 தொழிலாளர்களுக்கு இலவச சலவைப் பெட்டி (Iron Box) வழங்கப்படும்.

5. தமிழ்நாடு முடித்திருத்தும் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு இலவச கருவிக் கலப்பெட்டி வழங்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 1,00,000 அரசு மானியத்தில் 200 தொழிலாளர்களுக்கு இலவச கருவிக் கலப்பெட்டி வழங்கப்படும்.

6. தமிழ்நாடு காலணி, தோல்பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு, இலவச கருவிக் கலப்பெட்டி வழங்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.1,00,000 அரசு மானியத்தில் 200 தொழிலாளர்களுக்கு இலவச கருவிக் கலப்பெட்டி வழங்கப்படும்.

7. தமிழ்நாடு பொற்கொல்லர் நல தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு, இலவச கருவிக் கலப்பெட்டி வழங்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 2,00,000 அரசு மானியத்தில் 200 தொழிலாளர்களுக்கு இலவச கருவிக் கலப்பெட்டி வழங்கப்படும்.

8. பனைபொருட்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடும் தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்/பனைமரத்தொழிலாளர் நல தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள, பனைபொருட்களிலிருந்து கூடைகள், மாலைகள், பொம்மைகள் மற்றும் இதர பொருட்கள் தயாரிக்கும் ஈடுபட்டுள்ள 200 தொழிலாளர்களுக்கு, ரூ. 3,00,000 அரசு மானியத்தில் முறையான பயிற்சி இவ்வாண்டில் தூத்துக்குடி மாவட்டம், மணக்காடு கிராமத்தில் அளிக்கப்படும்.

9. தமிழ்நாடு காலணி, தோல்பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள காலணி மற்றும் தோல்பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 100 தொழிலாளர்களுக்கு ரூ. 1,00,000 அரசு மானியத்தில் முறையான பயிற்சி வேலூர் மாவட்டம் இராணிப்பேட்டையில் அளிக்கப்படும்.

10. தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு மின்சாரத்தினால் இயக்கப்படும் சக்கரங்கள் இலவசமாக வழங்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டில் 100 தொழிலாளர்களுக்கு ரூ. 3,00,000 அரசு மானியத்தில் மின்சாரத்தால் இயக்கப்படும் சக்கரம் இலவசமாக வழங்கப்படும்.



11. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள்/வாரிசுதாரர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து, மரணம் போன்றவற்றிற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் நலத்திட்டங்கள் தொழிலாளர்களை விரைந்து சென்றடைய ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைக்கப்படும்.

12. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர் நல சந்தா செலுத்தும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த நலத் திட்டங்களைப் பெறுவதற்கான ஊதிய உச்ச வரம்பு ரூ. 7,500/-லிருந்து ரூ. 10,000/- ஆக உயர்த்தப்படும். இதற்காகும் கூடுதல் செலவினம் ரூ. 15,00,000.

13. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர் நல சந்தா செலுத்தும் தொழிலாளர்களின் இளநிலைப் பட்டப்படிப்பு மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு படிக்கும் குழந்தைகளுக்கு புத்தக உதவித் தொகை ரூ. 250/- மற்றும் ரூ. 300/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை முறையே ரூ. 500/- மற்றும் ரூ. 750/- ஆக உயர்த்தப்படும். இதனால் வாரியத்திற்கு ரூ. 1,50,000 கூடுதலாக செலவாகும்.

14. தமிழ்நாடு தொழிலாளர் நலவாரிய குழந்தைகள் காப்பகத்தில் கல்விபயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வாரத்திற்கு 2 முட்டைகளுக்குப் பதிலாக 3 முட்டைகள் வழங்கப்படும். இதனால் வாரியத்திற்கு ரூ. 1,45,000 கூடுதலாக செலவாகும்.

## குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதல்

15. குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றும் பணியில் மாவட்டந்தோறும் சிறப்பாகப் பணியாற்றும் 5 கிராமப் பஞ்சாயத்துக்கள், 2 பேரூராட்சிகள், 1 நகராட்சி மற்றும் ஒவ்வொரு மாநகராட்சியிலிருந்தும் ஒரு வார்டு வீதம் 5 மாநகராட்சி வார்டுகளுக்கு கேடயமும், சான்றிதழும் வழங்கப்படும். இதற்காக 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,00,000 செலவாகும்.

16. குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவது குறித்த விழிப்புணர்வினை உள்ளூர் கிராமிய கலை நிகழ்ச்சிகள், செய்தி மற்றும்

மின்னணு சாதனங்கள்மூலமாக ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இச்செயல் திட்டத்தினைத் தீவிரமாக அமல்படுத்துவதற்கு ரூ. 50 இலட்சம் செலவாகும்.

## திருச்சியில் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம் உருவாக்குதல்

17. மாநிலத்தில் சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் மண்டல தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மதுரை, தொழிலாளர் இணை ஆணையர் மண்டலத்தில் மொத்தம் 16 மாவட்டங்கள் உள்ளன. தொழில் உறவை மேம்படுத்தவும், தொழிலாளர் நலச் சட்டங்களை சீரிய முறையில் அமல்படுத்தவும், உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியப் பணிகளை செவ்வனே நடத்திடவும், மதுரை மண்டலத்தின் கீழுள்ள 6 மாவட்டங்களைப் பிரித்து, திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிதாக ஒரு மண்டல தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம் உருவாக்கப்படும். அவ்வலுவலகத்தில் ஒரு தொழிலாளர் இணை ஆணையர் மற்றும் தேவையான பணியாளர் பதவிகள் உருவாக்கப்படும். இதற்காகும் தொடரும் செலவினம் ரூ 20,00,000 மற்றும் தொடராச் செலவினம் ரூ. 7,60,000.

## தொழிற்சாலைகளில் பாதுகாப்பு

18. பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்தில்லா நிலை உருவாகிடவும், தொழிற்சாலை நிர்வாகங்கள் பாதுகாப்பு வழிமுறைகளை சிறப்பாகக் கடைபிடித்திடவும், பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கென்று தனியாக வருடத்திற்கு 5 இலட்சத்திற்கு அதிகமான மனித வேலை நேரம் கொண்ட தொழிற்சாலைகள், வருடத்திற்கு 2 இலட்சத்திற்கு அதிகமாகவும், 5 இலட்சத்திற்குள்ளாகவும் மனித வேலை நேரம் கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் வருடத்திற்கு 2 இலட்சம் வரையில் மனித வேலை நேரம் கொண்ட தொழிற்சாலைகள் என்று வகைப்படுத்தி முறையே ரூ. 15,000, 12,000, 10,000 விலைமதிப்பில் வெள்ளிக் கேடயமாக பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படும். இதற்காக 2007-2008 ஆம் ஆண்டில், ரூ. 1.11 இலட்சம் செலவாகும்.

19. இரசாயனத் தொழிற்சாலைகளில் விபத்துக்களைக் கட்டுப்படுத்தி, உயிரிழப்பினைத் தடுத்திடும் வகையில், தொழிற்சாலைகள் துணைத்



தலைமை ஆய்வாளர் (பதிவு), தொழிற்சாலைகள் ஆய்வாளர் மற்றும் தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் ஆகியோரைக் கொண்ட பாதுகாப்பு பிரச்சாரக் குழு சென்னை மற்றும் கோவையில் அமைக்கப்படும். இப்பாதுகாப்பு பிரச்சாரங்கள் நடத்துவதற்கு ஒரு குழுவிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2,50,000 செலவாகும்.

## தொழிற்பயிற்சி

20. செங்கல்பட்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 10 தொழிற் பிரிவுகளில் 600 பயிற்சியாளர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். இந்தத் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு அருகில் பன்னாட்டு கார் உற்பத்தி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவ்வாகன உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கும், பழுது பார்க்கும் நிறுவனங்களுக்கும் திறமை வாய்ந்த கைவினைஞர்களை அளிக்கும் வகையில் செங்கற்பட்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் (1) இரு சக்கர வாகனங்கள் பழுது பார்ப்பவர் (2) தானியங்கி வாகனங்களுக்கும் மின்சாரம் மற்றும் மின்னணுவியல் கம்மியர் மற்றும் (3) ஓட்டுநருடன் கூடிய கம்மியருக்கான தொழிற் பிரிவுகள் தொடங்கப்படும். இதற்காக ரூ. 53.00 இலட்சம் செலவாகும்.

21. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் இளநிலை பயிற்சி அலுவலர்களுக்கும் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் பணியாற்றும் இளநிலை பயிற்சி அலுவலர்களுக்கும் போதனா வழி முறை பயிற்சி பற்றிய இரு வார பயிற்சி செங்கற்பட்டு, கோவை மற்றும் திருச்சி அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் இருக்கும் கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ. 10.00 இலட்சம் செலவாகும்.

22. தற்போதுள்ள நடைமுறைகளின்படி, மாநிலத்தில் எந்தப் பகுதியிலும் பழைய தொழிற்பிரிவுகளில் புதிய தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் தொடங்கவோ அல்லது கூடுதல் அலகுகள் தற்போதுள்ள தொழிற்பயிற்சி மையங்களில் ஏற்படுத்தவோ அனுமதியில்லை. பெருகி வரும் தொழில் வளர்ச்சி காரணமாக, பல்வேறு பிரிவுகளில் திறன்மிகு மனித சக்தி அதிக அளவில் தேவைப்படுவதால், திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற இளைஞர்களை உருவாக்குவது அவசியமாகிறது. எனவே, அனைத்துப் பகுதிகளிலும் தனியார்கள், புதிய தனியார் தொழிற்பயிற்சி மையத்தினை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தொழிற்பிரிவுகளுடன்

துவங்கவும் மற்றும் ஏற்கெனவே செயல்படும் தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தொழிற்பிரிவுகள்/கூடுதல் அலகுகள் துவங்கவும், தற்போதுள்ள நிபந்தனைகளைத் தளர்த்தி அனுமதி அளிக்கப்படும்.

23. நடப்பு ஆண்டில் ஆடை தைத்தல், இரு சக்கர வாகனம் பழுது பார்ப்பவர், மின் ஒளியினால் பற்ற வைப்பவர், வாயுவினால் பற்ற வைப்பவர் ஆகிய பிரிவுகளில் ஐந்தாண்டு தொழில் அனுபவமும் மற்றும் 21 வயது நிரம்பியவர்களுக்கு இரண்டாண்டுக்கு ஒரு முறை தேர்வு நடத்தி தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவினைப் புதுப்பித்தல்**

24. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பதிவினைப் புதுப்பிக்க வேண்டும். 2006 ஆம் ஆண்டில் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கப்படும். 2006 ஆம் ஆண்டு புதுப்பிக்க தவறியவர்கள் இதற்கான ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் இந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி**

25. தமிழ்நாட்டில் சென்னை-அயனாவரம், கலைஞர் கருணாநிதி நகர், மதுரை, கோயம்புத்தூர், சிவகாசி, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஓசூர் மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. தற்போது திருநெல்வேலி மற்றும் திருப்பூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் தொடங்க, அரசு ஒப்புதல் அளிக்க உள்ளது.

26. தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் இரண்டு மருத்துவர்களைக் கொண்ட புதிய மருந்தகம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதலுடன் தொடங்கப்படும். இதன்மூலம், 4,550 காப்பீட்டாளர்கள் பயன் பெறுவர். இதற்கான செலவினம், ரூ. [illegible]396-ல் மாநில அரசின் பங்கு ரூ. 3,57,300 ஆகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் பங்கு ரூ. 25,54,096 ஆகும்.



27. தொழிலாளர்களின் மருத்துவ வசதியினைக் கருத்திற்கொண்டு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் (1) சிவகாசி புறநகர் (2) தேவகோட்டை, (3) புளியங்குடி, (4) கடையநல்லூர், (5) காரியப்பட்டி, (6) சிவகாசி-II, (7) திருநெல்வேலி, (8) அவினாசி மற்றும் (9) கரூர் ஆகிய 9 புதிய இடங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

227657

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.